B III ; 112

உ

கடவுள் துணை.

# நாலடியார்.

இதற்கு

தமிழ்ப்புலவர் களத்தூர்

## வேதகிரிமுதலியார் அவர்கள்

இயற்றிய உரையுடன்

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1924.

விலை ரூபா 1-8-0.

20730

ஸ்ரீ

# விஷயசூசிகை.


பக்கம்.

## ௧. அறத்துப்பால்.

முகவுரை ௪
கடவுள் வாழ்த்து ௧௨

### ௧. துறவறவியல்.

௧ செல்வநிலையாமை ௧௩
௨ இளமைநிலையாமை ௧௯
௩ யாக்கைநிலையாமை ௨௫
௪ அறன்வலியுறுத்தல் ௩௧
௫ தூய்தன்மை ௩௭
௬ துறவு ௪௩
௭ சினமின்மை ௪௯

### ௨. இல்லறவியல்.

௮ பொறையுடைமை ௫௫
௯ பிறர்மனைநயவாமை ௬௧
௧௦ ஈகை ௬௭
௧௧ பழவினை ௭௭
௧௨ மெய்ம்மை ௭௨
௧௩ தீவினையச்சம் ௮௩

## ௨. பொருட்பால்.

### ௧. அரசியல்.

௧௪ கல்வி ௮௯
௧௫ குடிப்பிறப்பு ௯௫
௧௬ மேன்மக்கள் ௧௦௦
௧௭ பெரியாரைப்பிழையா ௧௦௬
௧௮ நல்லினஞ்சேர்தல் ௧௧௧
௧௯ பெருமை ௧௧௬
௨௦ தாளாண்மை ௧௨௧

பக்கம்.

### ௨. நட்பியல்.

௨௧ சுற்றந்தழால் ௧௨௬
௨௨ நட்பாராய்தல் ௧௩௨
௨௩ நட்பிற்பிழைபொறு ௧௩௮
௨௪ கூடாநட்பு ௧௪௪

### ௩. இன்பவியல்.

௨௫ அறிவுடைமை ௧௪௯
௨௬ அறிவின்மை ௧௫௫
௨௭ நன்றியில்செல்வம் ௧௬௧

### ௪. துன்பவியல்.

௨௮ ஈயாமை ௧௬௭
௨௯ இன்மை ௧௭௩
௩௦ மானம் ௧௭௯
௩௧ இரவச்சம் ௧௮௫

### ௫. பொதுவியல்.

௩௨ அவையறிதல் ௧௯௦

### ௬. பகையியல்.

௩௩ புல்லறிவாண்மை ௧௯௬
௩௪ பேதைமை ௨௦௨
௩௫ கீழ்மை ௨௦௮
௩௬ கயமை ௨௧௪

### ௭. பன்னெறியியல்.

௩௭ பன்னெறி ௨௨௦

## ௩. காமத்துப்பால்.

### ௧. இன்பதுன்பவியல்.

௩௮ பொதுமகளிர் ௨௨௬

### ௨. இன்பவியல்.

௩௯ கற்புடைமகளிர் ௨௩௨
௪௦ காமநுதலியல் ௨௩௮

உ

கடவுள் துணை.

# முகவுரை.

"நாலடியார்" என்பதற்கு நான்கடிகளையுடைய வெண்பாவாலாகிய நூல் என்பது பொருள். ஈரடிகளை யுடைய குறள் வெண்பாக்கள் திருக்குறளை யுணர்த்தின வாறுபோல, நாலடிகளையுடைய வெண்பாக்கள் இந் நூலை யுணர்த்திநின்றது. [இப் பெயர்க் காரணத்தாலும் திருக்குறளோடு இதற்கு ஒற்றுமை தோன்றுமாறு காண்க.] நாலடி – பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப்பெயர்: நான்காகிய அடிகளை யுடையது என விரியும்; இது வெண்பாவை யுணர்த்திற்று; அவ்வெண்பா தன்னாலாகிய நூலுக்குக் கருவி யாகுபெயர். 'நாலடி' என்பது இங்கு நாலடிகளையுடைய பிற பாக்களைக் குறியாமற் சிறப்புப்பற்றி வெண்பாவையே குறித்து நின்றது. சிறப்பாவது – வெண்பாக்களுள், 'அந்தணர் சாதிப்பா' என முதன்மையாக எடுத்தோதப்பட்டமையும், நீதி நூல்களில் மிகுதியும் பயின்றுவருந் தன்மையும், திருக்குறளுக்கு இரண்டாவதாக எண்ணப்படும் பெருமையு முதலாயின என்க. நாலடி எனப் பொதுப் படக் கூறினமையால் இதனுட் பயின்றுள்ள நேரிசை இன்னிசை வெண்பாக்களைக் கொள்க. 'நாலடியார்' என்பதில் 'ஆர்' விகுதி "திருக்கோவையார்," "திருவுந்தியார்," "திருக்களிற்றுப்படியார்," "சிவஞானசித்தியார்," என்பவற்றிற்போல உயர்வு குறிக்க வந்தது. நாலடி வெண்பாக்களை யுடைமையே யன்றி, வையை நதியில் விடப்பட்ட ஏடுகளுள் இந் நானூறு பாடல்களும் நீர் நிலைக்கு மேல் நாலடி உயரம் நின்றன என்னுங் காரணம் பற்றியும், "நாலடியார்" என்னும் பெயர் இந்நூலுக்கு வந்ததெனவுங் கூறுவர். இது சாதாரணமாய் "நாலடி நானூறு" எனவும், "வேளாண் வேதம்" எனவும் வழங்கும்.

இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்றென்பதை,

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணை முப்
பால் கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோடு ஏலாதி யென்பவே
கைந்நிலையொ டாங் கீழ்க் கணக்கு."

என்ற செய்யுளா லறிக.

பதினெண் கீழ்க்கணக்கின் நூல்களாவன:— க. நாலடியார், உ. நான்மணிக்கடிகை, [நால் நாற்பது] ங. இனியவை நாற்பது, ச. இன்னாநாற்பது, ரு. கார்நாற்பது, சு. களவழிநாற்பது, [நால் ஐந்திணை] எ. ஐந்திணை ஐம்பது, அ. ஐந்திணை எழுபது, கூ. திணைமொழி ஐம்பது, க0. திணைமாலை நூற்றைம்பது, கக. முப்பால் [திருக்குறள்] கஉ. திரிகடுகம், கங. கோவை [ஆசாரக்கோவை] கச. பழமொழி, கரு. மாமூலம் [சிறுபஞ்சமூலம்]' கசு. காஞ்சி [முதுமொழிக்காஞ்சி] கஎ. எலாதி, கஅ. கைந்நிலை என்பன.

பன்னிரு பாட்டியல்.

கீழ்க் கணக்கின் இலக்கணம்.

"அடிநிமிர் வில்லாச் செய்யுட் டொகுதி
யறம்பொரு ளின்ப மடுக்கி யவ்வகை
திறம்பட வருவது கீழ்க்கணக் காகும்."

இவற்றுள் கோவை, காஞ்சி என்பன திருக்கோவையாரும்-மதுரைக்காஞ்சியும் எனவும், முப்பால்: திருக்குறளல்லாத மற்றொரு நூல் எனவும், 'ஐந்தொகை' எனப் பாடங் கொண்டு, அவை வேறு ஐந்து நூல்களெனவுங் கூறிப் பதினெண் கீழ்க் கணக்குத் தொகையை முடிப்பாராயினும், அவ்வாறு கூறுதல் பொருந்தாமை மேற்போந்த சூத்திரத்தான் உய்த்துணர்க. இவை கீழ்க்கணக்கு என்றதனால் மேற்கணக்கும் உளதென் றறிக. விரிப்பிற் பெருகும்.

நூலாசிரியர்:—சமண முனிவர்கள். இவர்கள் பாண்டி நாட்டின்கண் மதுரைமாநகரத்து உக்கிரப்பெருவழுதி என்னும் அரசனால் ஆதரிக்கப்பட்ட புலவர்கள்.

இவரது சமயம்:—ஆருகதம்; அஃதாவது; அருகக் கடவுளை வழிபடும் மதம். இஃது இந் நூலுள் ஆருகத மதத்துக்கு இன்றியமையாததாய்த் துறவறவியலை முதற்கண் கூறியுள்ளமையாலும் இனிது விளங்கும்.

இவர்களிருந்த காலம்:—சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், திருக்குறள், பத்துப்பாட்டு, புறநானூறு முதலிய சிறந்த காப்பியங்கட்கு உரை செய்தருளிய நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலிய ஆசிரியர் தத்தம் உரைகளில் இந்நூலினின்று மேற்கோள் எடுத்தாண்டமையானும், பதினெண் கீழ்க்கணக்கு நூற்றொகையுள் இதனைச் சங்கத்தார் சிறப்பாகக் கொண்டிருத்தலானும், இந் நூல் இயற்றியோர் காலம் கடைச் சங்கத்தார் காலம் எனல்

வேண்டும்; எனவே, இற்றைக்குச் சற்றேறத்தாழ இரண்டாயிர வருடங்களிற் குறையாது.

இவரது காலத்திருந்த புலவர்கள்:—கடைச் சங்கத்து நூலாராய்ந்த புலவர் நாற்பத்தொன்பதின்மரும் பிறருமாம்.

நாலடியாரின் வரலாறு:—முன்னொருகாலத்தில் சமணமுனிவர் எண்ணாயிரவர்கள் கொடிய பஞ்சத்தால் தேசம் விட்டுப் பாண்டி நாடடைந்து அந்நாட் டரசனால் ஆதரிக்கப்பட்டு வந்தன ரென்றும், அவர்கள் சிலகாலம் சென்ற பின்பு பஞ்சம் நீங்கித் தேசஞ் செழிப்படைந்த தறிந்து, தங்கள் ஊருக்குப் போக விடை தரல் வேண்டுமென்று பாண்டியனைக் கேட்டன ரென்றும், மகாராஜா பல சாஸ்திரங்களிலும் வல்ல புலவர்கள் இருப்பது தனது இராஜ சபைக்கு ஓர் அணியெனக் கருதியிருந்தன னாதலால், அவர்கள் தன்னை விட்டு நீங்க மன மில்லாதவனாய் அவர்கள் வேண்டுகோளுக் கிணங்கவில்லை யென்றும், அதனால் முனிவர்கள் ஒருநாள் இரவில் யாரு மறியாதபடி பாண்டிநாட்டை விட்டு அகன்றன ரென்றும், பொழுது விடிந்தபின் அம்முனிவர்கள் போன வழி தெரியாமல் திகைத்து அவர்கள் உறைவிடங்களைச் சோதனை செய்யும்போது ஒவ்வொரு முனிவர்களின் ஆசனத்தின்கீழ் ஒவ்வொரு பாட லெழுதிய சீட்டு வைக்கப்பட் டிருந்ததென்றும், அப் பாடல்கள் அநேகமாயும், ஒன்றுக்கொன்று கருத்தில் பொருத்த மில்லாமல் முரணாயு மிருந்தமையால் அவை அரசனது உத்தரவின்படி வைகையில் எறியப்பட்டன என்றும், அவற்றுள் நானூறு பாடல்கள் எதிர் ஏறிக் கரை சேர்ந்தன என்றும், அவற்றைப் பாண்டியன் ஒரு நூலாக்கி "நாலடியார்" எனப் பெயரிட்டு வழங்கின னென்றும், எஞ்சிய பாடல்களில் கரை சேர்ந்தனவாகிய சில, "பழமொழி" "அறநெறிச்சாரம்" என்கிற பெயர்களால் வழங்கி வருகின்றன என்றுஞ் சொல்லுகின்றனர். இதனை,

"மன்னன் வழுதியர்கோன் வையைப் பேராற்றின்
எண்ணி யிருநான்கோ டாயிரவர்—உன்னி
எழுதியிடு மேட்டி லெதிரே நடந்த
பழுதிலா நாலடியைப் பார்."

என்னும் பழைய வெண்பாவான் அறியத்தகும்.

இனி இவ்வாறன்றி, மூன்றுஞ் சங்கம் ஸ்தாபித்ததற்கு முன்பு ஒருகாலத்தில், "எட்டு மலைச்சாரலில் சமண முனிவர்கள் எண்ணாயிரவர்கள் வசித்துவந்தார்கள். அவர்கள் தனித்தனி ஒவ்

வொரு வெண்பாப் பாட அவை பற்பல வாயின. அவற்றைச் சேர்த்துப் பார்க்கும்பொழுது அவைகள் ஒரே விஷயத்தை ஒரே கருத்தால் விரித்துக் காட்டுகிற பல பாடல்கள் காணப்பட்டன. அவற்றுள் ஒரே விஷயத்தினை ஒவ்வொரு கருத்தால் தனித்தனி கூறும் நானூறு பாடல்களைப் பொறுக்கிச் சேர்த்து நாற்பது அதிகாரமாக முடித்ததாம்” எனக் கூறுவது முண்டு.

இந்நூல் நுதலும் பொருள்:—இவ் வுலகத்தில் இல்வாழ்க்கையில் நின்றடையலாகும் இம்மைப் பயன்களையும், இந்திராதி தேவர்களுடைய பதவிகளாகிய சுவர்க்காதி லோகங்களில் நுகரலாகும் மறுமைப் பயன்களையும் அடைவதற்குரிய உயிர்கட்கு உறுதியென உயர்ந்தோராற் கொள்ளப்பட்ட பொருள் நான்கு. அவை: அறம், பொருள், இன்பம், வீடு என்பன. இவையே தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று வடநூலார் கூறும் சதுர்வித புருஷார்த்தங்கள். இவற்றுள் ‘வீடு’ என்பது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாதலின்,

“ நன்றாய ஞாலங் கடந்துபோய் நல்லிந் திரியமெல் லாநீத், தொன்றாய்க் கிடந்த வரும்பெரும்பா லழும்பி லதனையுணர்ந்துணர்ந்து, சென்றாங் கின்ப துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால், அன்றே யப்போ தேவீடு மதுவே வீடு வீடாமே.”

“அற்றது பற்றெனி லுற்றது வீடு.” எனவும்,

“பரனைநினைந் திம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு.”

எனவும் அறிந்தார் உரைத்தருளியபடி, துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதே யன்றி இலக்கண வகையாற் கூறப் படாமையின், நூல்களாற் கூறப்படுவன அஃதொழிந்த ஏனைய மூன்றுமேயாம்.

அவற்றுள் அறமாவது—இம்மை-மறுமை – வீடு என்னும் மும்மையும் தரும் முறை யுடையதாய், மநு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும். இம்மூன்றனையும் முறையே ஆசாரம், வியவகாரம், பிராயச்சித்தம் என்பர் வடநூலார்.

அவற்றுள் ஒழுக்கமாவது—அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று [நிலை-ஆசிரமம்; அவை: பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம்,

ஸந்யாஸம் என்பன] அவ்வவற்றிற்கு ஓதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல்.

வழக்கமாவது—ஒரு பொருளைத் தனித்தனியே எனது என்றிருப்போர், அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப் பொருண்மேற் செல்வது; அது, கடன்கோடன் முதற்பதினெட்டுப் பதத்தாம்.

விவகாரம் பதினெட்டாவன:— க. கடன்கோடல், உ. உபநிதி, ௩. கூடி மேம்படல், ௪. நல்கியதை நல்காவை, ரு. ஒப்பிப் பணி செய்யாமை, சு. கூலிகொடாமை, எ. உடையனல்லான் விற்றல், அ. விற்றுக் கொடாமை, கூ. கொண்டுள்ள மொப்பாமை, க0. கட்டுப்பாடு கடத்தல், கக. நிலவழக்கு, கஉ. மாதராடவர் தருமம், க௩. தாயபாகம், க௪. வன்செய்கை, கரு. சொற்கொடுமை, கசு. தண்டக்கொடுமை, கஎ. சூது, கஅ. ஒழிபு என இவை, இவற்றின் விவரங்களைக் கேட்டுணர்க.

தண்டமாவது-அவ்வொழுக்க நெறியினின்றும் தவறினோரை அந்நெறியில் நிறுத்துதற்பொருட்டு நடுவு நிலைமையாய் ஆராய்ந்து அந்தந்தக் குற்றத்திற்கு தக்கவாறு தண்டித்தல், இவை மூன்றனுள், வழக்குந் தண்டமும் உலகத்தை நல்வழியில் நடத்துதற்கே பயன்படுவனவல்லது, ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு நன்மைசெய்யுஞ் சிறப்புடையன ஆகாமையாலும், அவை தாம் நூல்களாலேயன்றி, அறிவின் மிகுதியாலும் தேசத்தின் இயற்கையாலும் அறியப்படுதலாலும் அவ்வழக்குத் தண்டங்களை யொழித்து, "நாலுமிரண்டுஞ் சொல்லுக் குறுதி" எனவும்,

" நாலடி வள்ளுவ ராமேயிப் பாலை நடந்தபெருங்
காலடி மேலடி மானடி யேகட் டுரவிற்பட்ட
பாலடி சில்வெண் ணெயுண்டோ னரங்கன் பனிவரையில்
வேலடி முள்ளுக் குபாயமிட் டேகும் விரகுநன்றே."

என்னும் உடன்போக்குத் துறைச் செய்யுளில், தலைவியை உடன்கொண்டு சென்ற தலைவன் அவளது காலில் முட்கள் தாக்குறாவண்ணம் தான் முன்னே செல்லத் தனது அடிச்சுவட்டின்மீது தலைவி அடிவைத்து நடக்க, அந் நாலடியும் ஈரடியாய்த் தோன்றியதற்கு நாலடியாரையும் திறக்குறளையும் உவமமெடுத்து, அவரது உள்ளன்பின் ஒற்றுமைநிலையைக் கூறவந்த கவி, அவரது நாலடியும் ஈரடியாயின எனச் சாதுரியம்பட வுரைத்து, 'நாலடி வள்ளுவ ராமே' எனவும், நாலடியாருக்கும் திருக்குறளுக்கும் உள்ள ஒற்றுமையைக் குறிப்பாய்க் குறிப்பாற் கூறினமையாலும், அத் திருக்

குறளிற்போல அதனேடு ஒற்றுமைப்பட்ட இந் நூலினும் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக்கொள்ளப் பட்டது. அவ் அறமும் பிரமசரிய முதலிய நால்வகை நிலையினை யுடையதாய், வருணந்தோறும் வேறுபா டுடைமையாற் சிறுபான்மையாகிய அச் சிறப்பியல்புகளை யொழித்து, எல்லார்க்கும் ஒப்ப முடிதலின் பெரும்பான்மையாகிய பொது வியல்புபற்றி இல்லறம் துறவறம் என இருவகை நிலையாற் கூறப்பட்டது.

அவற்றுள் இல்லறமாவது:—இம்மை மறுமை யின்பங்களைப் பயத்தற்கு உரிய இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறியில் நின்று அவ் இல்வாழ்க்கை நல்வாழ்க்கை யாமாறு அதற்குத் துணையாகிக் கற்புடைய நல்லவளாகிய இல்லவளோடுஞ் செய்யப் படும் தருமமாம்.

துறவறமாவது:—மேற் கூறிய இல்லறத்தின் வழுவாதொழுகி மெய்யுணர்வு உடையராய், பல்வகைத் துன்பத்திற் கிடனாய பிறப்பை அஞ்சி, அந்தமில் பேரின்பத்த தாய்வீடு பெறற்பொருட்டு இருவகைப் பற்றும் முற்றும் அற்றுநின்ற துறவிகட்கு உரித்தாகிய தருமமாம்

இல்லறம் துறவறம் என்னும் இவ் விருவகை நிலையுள் இல்லறம்: துறவறம்போல உண்டிசுருக்கல் முதலிய துன்பமுடையதாகாமல் துறவறத்திற்கும் ஒருவகைக் காரணமா யிருத்தல்பற்றி இல்லறம் முன்னும் துறவறம் பின்னுமாகத் திருக்குறளில் வைத்துக் கூறப்பட்டிருப்பினும், இந் நூலில் அவ்வாறின்றித் துறவறம்: அழிவில்லாததும், அழிவிலின்ப முடையதுமான முத்தி பெறுதற்கு ஏதுவாதலால் அச சிறப்புப்பற்றி அது முன்னும், இல்லறம்: துறவறம்போல வீடு பேற்றிற்குக் காரணம் ஆகாமையால் அச சிறப்பின்மைபற்றி அது பின்னுமாக நிறுத்திக் கூறப்பட்டன. இந் நூலில் அறத்துப்பாலை முதற் பதின்மூன்று அதிகாரங்களாற் கூறத்தொடங்கி (இந்நூலை ஆக்கியோர் சமணராதலின், அவரது சமயக் கோட்பாட்டுக் கிணங்க) முத்திக்குக் கருவியான துறவறத்தை முதல் ஏழதிகாரங்களாலும், அதற்கு எதிர்நிலையாகிய இல்லறத்தை அதன் பின் ஆறு அதிகாரங்களாலுங் கூறிப், பதினன்காம் அதிகாரந் தொடங்கி இருபத்தாறு அதிகாரங்களாற் பொருட்பாலைக் கூறப்புகுந்து, கல்விமுதல் கற்புடை மகளிரீறாக அதனை முடித்து, காமத்துப்பாலை ஓரதிகாரத்தா லமைத்தனர். இது காரண காரிய முறைப்படி ஒத்துமுறை வைக்கப்பட்டது.

இந்நூலின்பயன்:—அரசர், அந்தணர், தாய், தந்தை, ஆசிரியர், நட்பினர், உறவினர், மேலோர், கீழோர் முதலாயினோருடைய தன்மைகளை யறிந்து அவர்மாட்டுத் தக்கவா றொழுகி, இம்மையில் இன்பம் பெறுதலும், உடல் பொருள் நிலையாமையை யுணர்ந்து அவற்றில் நசையற்றுத் துறவொழுக்க நெறி யறிந்து முத்தி பெறுதற்கு உபாயந் தேடிக்கொள்ளலுமாம்.

---

## வேறு குறிப்புகள்

இந் நாலடியாரிற் கூறப்பட்ட விஷயங்கள் பலதேயத்தாரும் பல மதத்தாரும் கொண்டொழுகலாம்படி பொதுவா யிருத்தலால் இந்நூல் வேறு பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு வழங்குகின்றது. இது மநுமுதலிய ஸ்மிருதிகளிற் கூறியுள்ள நீதிகளையும், சமண நூல்களிற் கூறியுள்ள நீதிமுறைகளையுந் தழுவி யிருக்கின்றது. திருக்குறளிற் பகுக்கப்பட்டுள்ளதுபோல் இந் நூலின் இயல் அதிகாரங்களைப் பாகுபாடு செய்தவர் பதுமனார் என்னும் ஒரு சமண வித்வான்; அவர் இந் நூலுக்கு உரையுஞ் செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அவருடைய உரையென இக்காலத்து வழங்கும் ஒரு பொழிப்புரையின் போக்கை நோக்குமிடத்து அஃது அவரதுதான் என்று துணிவதற்குக் கூடவில்லை. இஃதன்றி, அக்காலத்திருந்த மற்றொரு சமண வித்வானும் ஓர் உரை செய்திருப்பதாகக் கேள்வி. இந் நூலை யியற்றியோர் சமணராதலின் அவர் மதத்திற்கு இன்றியமையாதனவாகிய யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வ நிலையாமை, பிறர்மனை நயவாமை முதலியவை இதனுள் வற்புறுத்திக் கூறப்படுகின்றன. இந்நூலினது பெருமை, உலகுய்யத் தோன்றி சிரம்பிய புலமைத் திறம் படைத்த நச்சினார்க்கினியர் பரிமேலழகர் முதலிய பண்டை யுரையாசிரியர்கள் தாம் தாம் இயற்றிய சிறந்த காப்பிய உரைகளில் இந் நூலைப் பல இடங்களில் எடுத்து மேற்கோள் காட்டியுள்ளாமையானும், திருக்குறளோடு ஒரு கோவையாக வைத்து வழங்கப்படலானும் உணர்க. இது நானூறு பாடல்களை யுடைய தென்பதையும், இதனை இயற்றினோர் எண்ணாயிரவ ரென்பதையும், மற்றும் இதன் பெருமைகளையும் அடியில் வரும் செய்யுட்களானும் அறிக.

"எண்ணு யிரவ ரிசைத்தவெண்பா நானூறும்
கண்ணுமின் நாலடியைக் கற்றுணரத்—தண்ணார்
திருக்குருகூர் மாறனையே தேர்ந்துமறை தேர்ந்த
திருக்குருகூர் மாறனையே தேர்."

"நானூறும் வேதமா நானூறு நானூறும்
நானூறுங் கற்றற்கு நற்றுணையா—நானூறும்
பண்மொழியாள் பாகம் பகிர்ந்து சடைக்கரந்த
கண்ணுதலான் பெற்ற களிறு."

"வெள்ளாண் மரபுக்கு வேதமெனச சான்றோர்கள்
எல்லாருங் கூடி யெடுத்துரைத்த—சொல்லாய்ந்த
நாலடி நானூறு நன்கினிதா வென்மனத்தே
சீலமுட னிற்க தெளிந்து"

யான பதார்த்தங்களும் மென்மையான பதார்த்தங்களுமேயாம். சிகை — படைத்த சாதமெனினும், ஒருபிடி சோறெனினும் பொருந்தும் — முற்சிகை நீக்கிப் பிற்சிகை யுண்டாருமெனக் கொள்ளினுமமையும். செல்வம் — எழுவாய், வைக்கற்பாற்றன்று — பயனிலை. ()

2 துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்.

(ப—ரை) அகடு — நடுநிலைமை, உற — பொருந்த, யார்மாட்டும்- யாவரிடத்தும், செல்வம் — ஐசுவரியம், நில்லாது — நிற்காது, சகடம் — தேரின், கால் போல் — உருளையைப் போல, வரும் — கீழ்மேலாய் மேல்கீழாய்) வருமாதலால், துகள் — குற்றம், தீர் — நீங்கிய, பெரும் — பெரிய, செல்வம் — சம்பத்தானது, தோன்றியக்கால்— கிடைத்தால், தொட்டு — (கிடைத்தகாலந்) தொடங்கி, பகடு — ஏர், நடந்த — உழுத, கூழ் — உணவை, பல்லாரோடு — பற்பலருடன், உண்க — நீ யுண்பாயாக.

(க—ரை) செல்வமானது யாவரிடத்து நில்லாது தேர்ச்சக்கரம் போலக் கீழ்மேலாய் மேல்கீழாய் வருமாதலால் செல்வங் கிடைத்தால் பலருட னுண்ணக்கடவாய்.

(வி—ரை) 'தோன்றியக்கால்' என்பது வினையெச்சமே பெயரெச்சமாகில் ஒற்று மிகாது. நீ — தோன்றா எழுவாய், உண்க — பயனிலை, கூழ் — செயப்படுபொருள். இதில் ஐயுருபு தொக்கியது. நல்வழியில் வந்த செல்வமென் றறிதற்குத் 'துகடீர் பெருஞ்செல்வம்' என்றார். (உ)

3 யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும்—ஏனை
வினையுலப்ப வேறாகி வீழ்வர்தாங் கொண்ட
மனையாளை மாற்றார் கொள

(ப—ரை) யானை — யானையினது, எருத்தம் — பிடரியில், பொலிய — பிரகாசிக்க, குடை — வெண்குடையின், நிழல் கீழ் — நீழலின் கீழே, சேனை — சதுரங்க சேனைக்கும், தலைவராய் — முதல்வராய், சென்றோரும் — சென்ற அரசர்களும், ஏனைவினை — தீவினை, உலப்ப — கெடுக்க, வேறாகி — வேறுபட்டு, தாம் — தாங்கள், கொண்ட- இல்வாழ்க்கைக்குத் துணையாகக்கொண்ட, மனையாளை — மனையவளை, மாற்றார்-பகைவர், கொள-கைக்கொள்ள, வீழ்வர்-கெடுவர்.

(க—ரை) சதுரங்க சேனைக்குத் தலைவராய்ச் சென்ற அரசர்களும், தீவினை கெடுக்க வேறுபட்டுத் தங்கள் மனைவியைப் பகைவர் கைக்கொள்ளக் கெடுவர்கள்.

(வி—ரை) சென்றோர் — எழுவாய், வீழ்வர் — பயனிலை. உம்மை— சிறப்பும்மை. (ங)

4 நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்
தொன்றின வொன்றின வல்லே செயிற்செய்க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று.

(ப—ரை) வாழ் நாள் — ஆயுள்கள், சென்றன சென்றன — போயின போயின; செறுத்து — கோபித்து, உடன் — உடனே, கூற்று— இயமன், வந்தது வந்தது — வந்தான் வந்தான்; (ஆதலால்) நின்றன நின்றன — நின்றனவாகிய நின் பொருள்கள், நில்லா என — நிற்காவென, உணர்ந்து — அறிந்து, ஒன்றின ஒன்றின — பொருந்திய ஒருவகை (தருமத்தை), செயின் — செய்வையாகில், வல்லே — சீக்கிரத்தில், செய்க — செய்யக்கடவாய்.

(க—ரை) ஆயுள்கள் போயின. இயமன் வந்தான் வந்தான். நின்றனவான செல்வங்கள் நில்லாவென அறிந்து, பொருந்திய தருமங்களை நீ செய்தால் சீக்கிரஞ் செய்யக்கடவாய். (ச)

(வி—ரை) இலக்கணத்திரட்டு.

"உயர்திணை யீறுபோ லஃறிணை வருதலும்
அஃறிணை யீறுபோ லுயர்திணை வருதலு
மருகல் விதியென வறைந்தன ரான்றோர்."

இவ்விதியால் 'கூற்று' என்னும் அஃறிணை ஈறு உயர்திணைக்கு வந்தது. 'சென்றன சென்றன' 'வந்தன வந்தன' இவை விரைவின்கண் இரட்டித்தன. நீ — தோன்றா எழுவாய், செய்க— பயனிலை.

5 என்னானு மொன்றுதங் கையுறப் பெற்றக்காற்
பின்னாவ தென்று பிடித்திரா—முன்னே
கொடுத்தா ருயப்போவர் கோடிறீக் கூற்றந்
தொடுத்தாறு செல்லுஞ் சுரம்.

(ப—ரை) என் ஆனும் — யாதாகிலும், ஒன்று — ஒருபொருள், தம் — தமது, கை — கையில், உற — பொருந்த, பெற்றக்கால் — பெற்றால்,

பின் ஆவது என்று—பின் கொடுப்போமென்று, பிடித்து இரா—பிடித் திராமல், முன்னே — முற்காலத்தில், கொடுத்தார் — கொடுத்தவர் கள், கோடு — தன் செய்கையிற் கோட்டம், இல் — இல்லாத, தீ— பொல்லாத, கூற்றம் — இயமன், தொடுத்து — பாசத்தாற் கட்டி, செல்லும் — போகும், சுரம் — பாலைவனத்தினது, ஆறு — வழியை நீக்கி, உய போவர் — பிழைத்துப்போவார்கள்.

(க—ரை) யாதாகிலும் ஒரு பொருள் தன் கையிற் பெற்றால், பின் கொடுப்போமென்று வைத்திராது முன் கொடுத்தவர்கள், இயமன் கொண்டு போம் வழியை நீங்கிப்பிழைத்துப்போவார்கள்.

(வி—ரை) கொடுத்தார் — எழுவாய், உயப்போவர் — பயனிலை, ஆறு — செயப்படுபொருள்; இதில்ஐயுருபு தொக்கியது. காலையின் மலர்ந்த மலர் மாலையி னுலர்ந் தழியுமாறுபோற் செல்வம் அழிதல் பற்றி 'முன்னே கொடுத்தார்' என்றார். (ரு)

6 இழைத்தநா ளெல்லை யிகவா பிழைத்தொரீஇக்
கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை—யாற்றப்
பெரும்பொருள் வைத்தீர் வழங்குமி னாளைத்
தழீஇந்தழீஇந் தண்ணம் படும்.

(ப—ரை) இழைத்த — தமக்கு அளவுசெய்த, நாள் — நாள்கள், எல்லை — தம் அளவை, இகவா — கடவா; கூற்றம் — இயமனை, பிழைத்து — தப்பி, ஒரீஇ — நீங்கி, குதித்து — அவன் குறிப்பைக் கடந்து, உய்ந்தார் — பிழைத்தவர்கள், ஈங்கு — இவ்வுலகத்து, இல்லை—இல்லை; நாளை — நாளையே, தழீம் தழீம் — தழீம் தழீம் என்னும் ஓசையு டனே, தண்ணம் — பிணப்பறை, படும் — சாற்றப்படுமாகையால், ஆற்ற — மிகவும், பெரும் — பெரிய, பொருள் — பொருளை, வைத்தீர்- தேடி வைத்தவர்களே! வழங்குமின் — அப்பொருளைத் தானமாகக் கொடுங்கள்.

(க—ரை) தமக்கு அளவுசெய்த நாள்கள் தம் எல்லையைக் கட வா; இயமனைக் கடந்து பிழைத்தவர்கள் இவ்வுலகத்தி லில்லை; நாளையே பிணப்பறை சாற்றப்படும்; பொருளைத் தேடி வைத்தவர் களே! நீங்கள் தானம் செய்யுங்கள்.

(வி—ரை) நீங்கள் — எழுவாய், வழங்குமின் — பயனிலை, பொருள்- செயப்படுபொருள். இதில் ஐயுருபு தொக்கு நின்றது. (சா)

7 தோற்றஞ்சான் ஞாயிறு நாழியா வைகலுங்
கூற்ற மளந்துநந் நாளுண்ணும்—ஆற்ற

அறஞ்செய் தருளுடையீ ராகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதா ரில்.

(ப—ரை) தோற்றம் – உதயம், சால் – மிகுந்த, ஞாயிறு – சூரியனை, நாழி ஆ – அளவுக் கருவியாக, வைகலும் – தினந்தோறும், கூற்றம் – யமன், அளந்து – அளவிட்டு, நும் – உங்களுடைய, நாள் – ஆயுளை, உண்ணும் – உண்பான்; (ஆகையால்), யாரும் – யாவரும், பிறந்தும் – (மக்கட் பிறப்பாய்ப்) பிறந்தும் (வீணாகாமல்), பிறவாதாரில் – பிறவாது மோட்சத்தி லிருப்பவரைப்போல, ஆற்ற – மிகவும், அறம் – தருமத்தை, செய்து – பண்ணி, அருள் உடையீர் ஆகுமின் – கிருபை யுடையீ ராகுங்கள்.

(க—ரை) இயமன் சூரியனைப் படியாகக் கொண்டு உங்கள் நாளை யளந்து உண்ணுகிறான்; ஆகையால், தருமத்தைச் செய்து கிருபையுடையீ ராகுங்கள்.

(வி—ரை) யாரும் – யாவரும், பிறந்தும் – மனிதப் பிறப்பிற் பிறந்தும் அறஞ் செய்யாராகில், பிறவாதாரில் – பிறவாதவர்களில் வைத்தெண்ணப்படுவர் எனினு மமையும். நீங்கள் – தோன்றா எழுவாய், அருளுடையீராகுமின் – பயனிலை. ஆண்பாலும் பெண்பாலும் என்றறிதற்கு 'யாரும்' என்றார். (எ)

8 செல்வர்யா மென்றுதாஞ் செல்வுழி யெண்ணாத
புல்லறி வாளர் பெருஞ்செல்வம்—எல்லிற்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போற் றோன்றி
மருங்கறக் கெட்டு விடும்.

(ப—ரை) செல்வர் – செல்வமுள்ளோர், யாம் என்று – நாமென்று, தாம் – தாங்கள், செல்வுழி – போமிடத்து, எண்ணாத – நினையாத, புல் – அற்ப, அறிவாளர் – அறிவுடையாரது, பெரும் – பெரிய, செல்வம் – ஐசுவரியம், எல்லில் – இராக்காலத்தில், கரும் – கரிய, கொண்மூ – மேகமானது, வாய் திறந்த – வாய் விடப்பட்ட, மின்னு போல் – மின்னலைப்போல, தோன்றி – உண்டாகி, மருங்கு – வழி, அற – முற்றாக, கெட்டுவிடும் – கெட்டுப்போம்.

(க—ரை) செல்வமானது மின்னலைப் போலத் தோன்றி யழியும். செல்வம் – கெட்டுவிடும். (அ)

9 உண்ணா னொளிநிறா னோங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே

வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்.

(ப—ரை) உண்ணான் — உண்ணாதவனாக; ஒளி — பிரகாசத்தை, நிரான் — நிறுத்தாதவனாக; துன் — பெறுதற்கு, அரும் — அரிய, கேளிர் — சுற்றத்தாருடைய, துயர் — துன்பத்தை, களையான் — நீக்காதவனாக; வழங்கான் — கொடாதவனாக; கொன்னே — பயனில்லாமல், பொருள் — திரவியத்தை, காத்து — காத்துக்கொண்டு, இருப்பானேல் — இருப்பானானால், அ ஆ — ஐயோ!, இழந்தான் என்று — (இவன் பொருளை) யிழந்தானென்று, எண்ணப்படும்—(யாவராலும்) எண்ணப்படுவான்.

(க—ரை) பொருளைத் தேடிச் செலவிடாது வைத்துக் காத்திருந்தவன், பொருளை யிழந்தானென்று யாவராலும் நினைக்கப்படுவான்.

(வி—ரை) இவன் — தோன்றா எழுவாய், எண்ணப்படும் — பயனிலை, பொருள் — செயப்படுபொருள். இதில் — ஐயுருபு தொக்கது. அ ஆ என்றது — அருளின்கட் குறிப்பு. நெருங்கிய வுறவினரென்று தோன்றற்குத் 'துன்னருங் கேளிர்' என்றார். (௯)

10 உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
உய்த்தீட்டுந் தேனீக் கரி.

(ப—ரை) உடாதும் — உடுக்காமலும், உண்ணாதும் — உண்ணாமலும், தம் — தங்களுடைய, உடம்பு — உடலை, செற்றும் — வருத்தியும், கெடாத — கெடுதலில்லாத, நல் — நன்மையாகிய, அறமும்-தருமங்களையும், செய்யார் — செய்யாதவர்களாய், கொடாது — யாதுங் கொடாது வைத்து, ஈட்டினார் — பொருளைத் தேடி வைத்தவர்கள், இழப்பர் — இழப்பார்கள்; வான் — ஆகாயத்தை, தோய் — அளாவும், மலை — மலைகளடங்கிய, நாட — நாட்டையுடைய (பாண்டியனே)!, தேன் — மலர்த்தேனை, உய்த்து — ஆராய்ந்து, ஈட்டும் — சம்பாதிக்கும், ஈ — ஈயல்லவோ, கரி — சாட்சி.

(க—ரை) பொருளைத் தேடிக் கொடாது வைத்தவர்கள் தேன் ஈயைப்போல இழந்து விடுவார்கள்.

(வி—ரை) ஈட்டினார்—எழுவாய், இழப்பர்—பயனிலை, பொருளை-செயப்படுபொருள். (௧௦)

செல்வ நிலையாமை முற்றிற்று.

# உ-ஆம் அதிகாரம்-இளமைநிலையாமை

[அஃதாவது, இளமைப்பருவமானது நிலைநில்லாமையாம்.]

11 நரைவரு மென்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார்—புரைதீரா
மன்னா விளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
யின்னாங் கெழுந்திருப் பார்.

(ப—ரை) நரை – நரைதிரை, வரும் என்று – வருமென்று, எண்ணி – நினைத்து, நல் – நல்ல, அறிவாளர் – விவேகிகள், குழவி யிடத்தே – இளமைப் பருவத்தில், துறந்தார் – மனைவாழ்க்கையை விட்டார்; புரை – குற்றம், தீரா – நீங்காத, மன்னா – நிலைபெறாத, இளமை – இளமைப் பருவத்தை, மகிழ்ந்தார் – இச்சித்தார், கோல்-தடியை, ஊன்றி – ஊன்றிக்கொண்டு, இன்னாங்கு—துன்பத்துடன், எழுந்திருப்பார் – எழுந்திருப்பார்.

(க—ரை) அறிவுடையவர்கள் நரை திரை வருமென்று இளமைப்பருவத்தில் இல்வாழ்க்கையை விட்டார்கள்; இளமைப் பருவத்தை விரும்பினவர்கள் துன்பத்துடன் தடி யூன்றி எழுந்திருப்பார்.

(வி—ரை) அறிவாளர் – எழுவாய், துறந்தார் – பயனிலை. மகிழ்ந்தார் – எழுவாய், எழுந்திருப்பார் – பயனிலை. ஏ – அசை. தீயிற் புகை தோன்றி யழிதல் போல, இளமையுமழிதலான் 'மன்னா இளமை' என்றார். (க)

12 நட்புநா ரற்றன நல்லாரு மஃகினார்
அற்புத் தளையு மவிழ்ந்தன—உட்காணாய்
வாழ்தலி னூதிய மென்னுண்டாம் வந்ததே
யாழ்கலத் தன்ன கலி.

(ப—ரை) நட்பு – உறவாகிய, நார் – பாசங்களும், அற்றன – நீங்கின; நல்லாரும் – மகளிரும், அஃகினார் – அன்பிற் குறைந்தார்; அன்பு – அன்பாகிய, தளையும் – பந்தங்களும்,அவிழ்ந்தன – நெகிழ்ந்தன; உள் – உன்னுள்ளே, காணாய் – பாராய்; ஆழ் – முழுகும், கலத்து அன்ன – கப்பலோசைபோல், கலி – உறவினரழுமோசை, வந்ததே – வந்ததல்லவோ! (ஆதலால்) வாழ்தலின் – வாழ்தலினால் ஊதியம் – இலாபம், என் – யாது, உண்டாம் – உண்டாகும்?

(க—ரை) கப்பலோசைபோலச் சுற்றத்தார் அழுகுரலோசை வந்ததல்லவோ? ஆதலால், இல்வாழ்க்கையின் வாழ்தலினாற் பயனென்ன உண்டாகும்?

(வி—ரை) ஊதியம் — எழுவாய், என்னுண்டாம் — பயனிலை. ()

13 சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்
பற்கழன்று பண்டம் பழிகாறு—மிற்செறிந்து [ப்
காம நெறிபடருங் கண்ணினார்க் கில்லையே
யேம நெறிபடரு மாறு.

(ப—ரை) சொல் — சொற்கள், தளர்ந்து — குழறி, கோல் — தடியை, ஊன்றி — ஊன்றிக்கொண்டு, சோர்ந்த — தள்ளாடிய, நடையினர் ஆய் — நடையை யுடையவராய், பல் — பற்கள், கழன்று — உதிர்ந்து, பண்டம் — உடலாகிய பண்டம், பழி காறும் — பழிக்கப்படுமளவும், இல் — இல்வாழ்க்கையில், செறிந்து — நெருங்கி, காம நெறி — ஆசை வழியே, படரும் — நடக்கும், கண்ணினார்க்கு — அறிவுடையார்க்கு, ஏமம் — தமக்குக் கோட்டையாகிய, நெறி — நல்வழியில், படரும் — நடக்கும், ஆறு — வழி, இல்லை — இல்லை.

(க—ரை) இல்வாழ்க்கை வழியிலே நடப்பவர்கள் உயிர்க்கு நல்வாழ்க்கை வழி யில்லை.

(வி—ரை) ஆறு — எழுவாய், இல்லை — பயனிலை. ஏகாரம்-அசை. (௩)

14 தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா
வீழா விறக்கு மிவண்மாட்டுங்—காழிலா
மம்மர்கொண் மாந்தர்க் கணங்காகுந் தன்கைக்கோ
லம்மனைக்கோ லாகிய ஞான்று.

(ப—ரை) அம்மனை கோல் — தன் தாய் கைக்கோலானது, தன் கை கோல் — தன் கையில் கோல், ஆகிய ஞான்று—ஆன காலத்தில், தாழா — தாழ்ந்து, தளரா — தளர்ந்து, தலை — தலையை, நடுங்கா- நடுங்கி, தண்டு — அத்தடியை, ஊன்றா — ஊன்றி, வீழா — வீழ்ந்து, இறக்கும் — மரணமாகும், இவள்மாட்டும் — இவளிடத்தும், காழ்- உறுதி, இலா — இல்லாத, மம்மர் — மயக்கம், கொள் — கொண்ட, மாந்தர்க்கு — மனிதர்க்கு, அணங்கு — துன்பம், ஆகும்—உண்டாகும்.

(க—ரை) தன் தாய் கைக்கோலானது தன் கைக்கோல் ஆன காலத்து வருத்தமுற்று இறக்கு மிவளிடத்து மயக்கங் கொண்டவர்களுக்குத் துன்ப முண்டாகும்.

(வி—ரை) அம்மனைக்கோல் — இவ்விடத்து உயர்திணைக்கண் ஒற்று மிகுந்தது செய்யுள் விகாரம். அணங்கு — எழுவாய், ஆகும்— பயனிலை. 'இவண்மாட்டும்' என்பதை இவ்விடத்தெனப் பொருள் கூறுவாரு முளர். (ச)

15 எனக்குத்தா யாகியா ளென்னையீங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றாள்—தனக்குத்தா
யாகி யவளு மதுவானாற் றாய்தாய்க்கொண்
டேகு மளித்திவ் வுலகு.

(ப—ரை) எனக்கு — எனக்கு, தாய் ஆகியாள் — தாயானவள், என்னை — என்னை, ஈங்கு — இவ்விடத்து, இட்டு — பெற்றுவைத்து, தனக்கு — தனக்கு ஒரு, தாய் — தாயை, நாடி — தேடி, சென்றாள்— இறந்தாள்; தனக்கு — அவளுக்கு, தாய் ஆகியவளும் — தாயானவளும், அது ஆனால் — அத்தன்மையளானால், தாய் தாய்க்கொண்டு— தாயைத் தாயைத் தேடிக்கொண்டு, ஏகும் — போகும், இ உலகு— இவ்வுலகமானது, அளித்து — ஏழைமை யுடையது.

(க—ரை) இவ்வுலகமானது தாயைத் தாயைத் தேடிக்கொண்டுபோகும், ஏழைமை யுடையது.

(வி—ரை) 'தாய்த்தாய்க்கொண்டு' இவ்விடத்து உயர்திணை மெய்யீறு ஒன்றுக்கண் மிக்கன செய்யுள் விகாரம். உலகு — எழுவாய், அளித்து — பயனிலை. ஏ — அசை. அளித்து — பெற்றுவைத்தெனினுமாம். (ரு)

16 வெறியயர் வெங்களத்து வேன்மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி
யறிவுடை யாளர்க ணில்.

(ப—ரை) வெறி — வெறியாடலை, அயர் — செய்கின்ற, வெம்— வெய்ய, களத்து — பலிக்களத்து, வேல் மகன் — பூசாரி, பாணி—கையில், முறி — தளிர், ஆர் — நிறைந்த, நறும் — மணக்கும், கண்ணி— மாலை, முன்னர் — தன் முன்னாக, தயங்க — அசைந்துதொங்க, மறி— ஆடு, குளகு — உணவாக, உண்டன்ன — உண்டாற்போலும், மன்னா— நிலைபெறாத, மகிழ்ச்சி — இளமையி னாகுமகிழ்ச்சி, அறிவுடையாளர் கண் — விவேகிகளிடத்தில், இல் — இல்லை.

(க—ரை) ஆடு கொண்ட மகிழ்ச்சி அறிவுடையார்களிடத்தி லில்லை.

(வி—ரை) மகிழ்ச்சி – எழுவாய், இல் – பயனிலை. மறியின் மகிழ்ச்சி கணப்போதேனு நில்லாமைபற்றி 'மன்னு' என்றார். (சு)

17 பனிபடு சோலைப் பயன்மர மெல்லாங்
கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை—நனிபெரிதும்
வேற்கண்ண ளென்றிவளை வெஃகன்மின் மற்றிவளுங்
கோற்கண்ண ளாகுங் குனிந்து.

(ப—ரை) இளமை – இளமைப் பருவமானது, பனி – குளிர்ச்சி, படு – பொருந்திய, சோலை – சோலையில், பயன் – பலனைத் தரும், மரம் எல்லாம் – எல்லா மரங்களிலும், கனி – பழங்கள், உதிர்ந்து – உதிர்ந்து, வீழ்ந்தற்று – விழுந்தாற்போலும்; (ஆதலால்) நனி – மிக, பெரிதும் – பெரிய, வேல் – வேலை நிகர்த்த, கண்ணள் என்று – கண்களை யுடையவ ளென்று, இவளை – இப்பெண்ணை, வெஃகன் மின் – இச்சியாதிருங்கள்; மற்று இவளும் – பின்பு இப்பெண்ணும், குனிந்து – கூனியாகி, கோல் – கோலையே, கண்ணள் ஆகும் – கண்ணாக வுடையவ ளாவாள்.

(க—ரை) இளமைப் பருவமானது மரங்களிற் பழங்க ளுதிர்ந் தாற்போலும் ஆதலால், வேலொத்த கண்களை யுடையவளென்று இவளை யிச்சியாதிருங்கள்; இவளும் கூனியாகிக் கோலையே கண் ணாகக் கொண்டு திரிவாள்.

தொல்காப்பியம்

(வி—ரை) "வினையின் றொகுதி காலத் தியலும்."

நீவிர் – தோன்றா எழுவாய், வெஃகன்மின்—பயனிலை, இவளை— செயப்படுபொருள். (எ)

18 பருவ மெனைத்துள பல்லின்பா லேனை
யிருசிகையு முண்டேரோ வென்று—வரிசையா
னுண்ணுட்டங் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோ
ளெண்ணு ரறிவுடை யார்.

(ப—ரை) பருவம் – வயது, எனைத்து – எவ்வளவு, உள–உண்டா யிருக்கின்றன?, பல்லின் – பற்களினுடைய, பால் – வலிமைப் பகுதி, ஏனை – எவ்வளவு?, இரு சிகையும் – வண்மையான பதார்த் தங்களையும் மென்மையான பதார்த்தங்களையும், உண்டேரோ என்று-

புசித்தீரோ எனக் கேட்டு,வரிசையால் – முறைமையாக, உள் – உங் களுள்ளம், நாட்டம் – ஆராய்ச்சி, கொள்ளப்படுதலால் – பிறரால் செய்யப்படுதலால், யாக்கை – உடலினது, கோள் – கொள்கையை, அறிவுடையார் – விவேகமுடையார், எண்ணார் – பொருளாக நினை யார்.

(க–ரை) வயது எவ்வளவு? பற்களின் பலன் எவ்வளவு? வலிய பதார்த்தங்களையும் உண்டீரோ என்று கிரமமா யுங்களுள்ளம் பிறரா லாராய்ச்சி கொள்ளப்படுதலால் உடலின் கொள்கையை விவேகிகள் பொருளாக எண்ணார்கள்.

(வி–ரை) அறிவுடையார் – எழுவாய், எண்ணார் – பயனிலை, கோள் – செயப்படுபொருள். (அ)

19 மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியா
னற்கா யுதிர்தலு முண்டு.

(ப–ரை) முற்றி – முதிர்ந்து, இருந்த – இருந்த, கனி – பழங் கள், ஒழிய – நீங்க, தீ வளியால் – தீக்காற்றால், நல் – நல்ல, காய்– காய்கள், உதிர்தலும் – விழுதலும், உண்டு – உண்டாதலால், நல் வினை – தருமத்தை, மற்று – இனிமேல், அறிவாம் – அறிந்து செய் வோம், யாம் – நாம், இளையம் – இளமை வயதுடையோம், என் னாது – என்று நினையாது, கைத்து – திரவியம், உண்டாம்–உண்டா யிருக்கும், போழ்தே – காலத்திலேயே, கரவாது – ஒளிக்காமல், அறம் – தருமத்தை, செய்ம்மின் – செய்யுங்கள்.

(க–ரை) தீக்காற்றால் பழங்களன்றிக் காய்க ளுதிர்தலு முண்டு; ஆகையால், தருமத்தைப் பின் செய்வோமென்று நினை யாது பொருள் உள்ளபொழுதே செய்யுங்கள்.

(வி–ரை) நீங்கள் – தோன்றா எழுவாய், செய்ம்மின் – பய னிலை, அறம் – செயப்படுபொருள். (கூ)

20 ஆட்பார்த் துழலு மருளில்கூற் றுண்மையால்
தோட்கோப்புக் காலத்தாற் கொண்டுய்ம்மின் — பீட்பி
பிள்ளையைத் தாயலறக் கோடலான் மற்றதன் [துக்கிப்
கள்ளங் கடைப்பிடித்த னன்று.

(ப—ரை) ஆள் — ஆளை, பார்த்து — பார்த்து, உழலும் — திரியும், அருள் — தயை, இல் — இல்லாத, கூற்று — இயமன், உண்மையால்— இருக்கின்றுறுதலால், தோள்கோப்பு — கட்டமுதாகிய (தருமத்தை), காலத்தில் — இளமைப் பருவத்தில், கொண்டு — தேடிக்கொண்டு, உய்ம்மின் — பிழையுங்கள்; பீள் — கருப்பத்தை, பிதுக்கி — பிதுங் கச்செய்து, தாய் — தாயானவள், அலற — அழ, பிள்ளையை—சிசுவை, கோடலால் — கொள்ளுதலால், அதன் — அவ் இயமனது, கள்ளம்— வஞ்சத்தை, கடைப்பிடித்தல் — உறுதியா யறிந்துகொள்ளுதல், நன்று — நல்லது.

(க—ரை) இயம னிருக்கிறபடியால் தருமத்தை இளமைப் பரு வத்திற் செய்து பிழையுங்கள்; தாய் அழப் பிள்ளையைக் கொண்டு போதலால் அவன் வஞ்சத்தை யுறுதியாக அறிந்துகொள்ளுதல் உத்தமம்.

அகத்தியம்

(வி—ரை) "மின்னீறு பலர்பால் வினையொடுமுடிமே."

கடைப்பிடித்தல் — எழுவாய், நன்று — பயனிலை. மற்று— அசை.

இளமை நிலையாமை முற்றிற்று.

## ௩-ஆம் அதிகாரம் - யாக்கைநிலையாமை

[அஃதாவது-சரீரமானது நிலைநில்லாமையாம்.]

21 மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர்—நிலமிசைத்
துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினா ரிவ்வுலகத் தில்.

(ப—ரை) மலை — மலையின், மிசை — மேல், தோன்றும் — உதிக்கும், மதியம்போல் — சந்திரனைப்போல, யானை — யானையின், தலைமிசை — தலைமேல், கொண்ட — கவியக்கொண்ட, குடையர்—குடையையுடைய மன்னர்களும், நிலமிசை—பூமிமேல், துஞ்சினார் என்று-இறந்தாரென்று, எடுத்து — பிறராலெடுத்து, தூற்றப்பட்டார்-தூறு சொல்லப்பட்டார்கள், அல்லால் — அல்லாமல், எஞ்சினார்—உயிரோடிருந்தார், இ உலகத்து-இந்த வுலகத்தில், இல்-ஒருவருமில்லை.

(க—ரை) யானைமேல் ஏறிய அரசர்களும் இறந்தார்களென்று சொல்லப்பட்டார்களே யல்லாமல் இவ்வுலகத்து உயிரோடு வாழ்ந்தவர்கள் ஒருவருமில்லை.

(வி—ரை) எஞ்சினார் — எழுவாய், இல் — பயனிலை. (௧)

22 வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅ தெழுதலால்—வாழ்நாள்
உலவாமு னொப்புர வாற்றுமின் யாரு
நிலவார் நிலமிசை மேல்.

(ப—ரை) வாழ்நாட்கு — வாழும் நாள்களுக்கு, அலகு ஆ(க)-அளவு மரக்காலாக, வயங்கு — பிரகாசிக்கும், ஒளி — கிரணங்களையுடைய, மண்டிலம் — சூரியனானவன், வீழ் நாள் — வீழுங் காலம், படாது — உண்டாகாமல், எழுதலால்—உதயமாதலால், வாழ் நாள்—வாழு நாள், உலவா முன் — கெடாமுன், ஒப்புரவு — தருமத்தை, ஆற்றுமின் — செய்யுங்கள்; யாரும்—யாவரும், நிலமிசைமேல்—நிலத்தின்மேல், நிலவார் — நிலைக்கமாட்டார்.

(க—ரை) யாரும் உலகத்தில் நிலைநிற்க மாட்டார்கள்; உங்கள் ஆயுள் கெடு முன்னமே தருமத்தைச் செய்யுங்கள்.

(வி—ரை) நீங்கள் – தோன்று எழுவாய், ஆற்றுமின்–பயனிலை, ஒப்புரவு – செயப்படுபொருள். (உ)

23 மன்றங் கறங்க மணப்பறை யாயின
அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப்—பின்றை
யொலித்தலு முண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமா மாண்டார் மனம்.

(ப—ரை) மன்றம் – சபையில், கறங்க – சத்திக்க, மணப்பறை ஆயின – மணக்கோலத்திற்கான பறைகள், அன்று–அன்றைக்கே, அவர்க்கு – அம் மாப்பிள்ளைக்கு, ஆங்கே – அவ்விடத்தே, பிணப் பறையாய் – பிணக்கோலத்திற்குக் கொட்டும் பறையாய், பின்றை- பின்பு, ஒலித்தலும் – சத்தித்தலும், உண்டாம் என்று – உண்டாகு மென்று நினைத்து, உய்ந்து போம் – பிழைத்துப் போகிற, ஆறு– வழியை, வலிக்கும் – துணிந்து நிற்கும், மாண்டார் – பெரியோர் கள், மனம் – இருதயம்.

(க—ரை) மணத்திற்குக் கொட்டும் பறைகளே பிணத்திற்குக் கொட்டும் பறைகளாமென்று நினைத்துப் பெரியோர்கள் மனம் பிழைக்கும் வழியைத் துணிந்து நிற்கும்.

(வி—ரை) மனம் – எழுவாய், வலிக்கும் – பயனிலை, ஆறு - செயப்படுபொருள். (ந)

24 சென்றே யெறிப வொருகால் சிறுவரை
நின்றே யெறிப பறையினை—நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுண் மூடித்தீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து.

(ப—ரை) சென்று – போய், பறையினை – பிணப் பறையை, ஒருகால் – ஒருமுறை, எறிப – அடிப்பார்கள்; சிறுவரை – சற்று நேரம், நின்று – நிறுத்தி, (அப் பறையினை) எறிப–இரண்டாமுறை யடிப்பார்கள்; முக் காலை – மூன்று முறை, கொட்டினுள் – அடித்த மாத்திரத்தில், உள் – பாடையிடத்து, மூடி – பிணத்தைச் சீலை யால் மூடி, தீ – நெருப்பை, கொண்டு – சட்டியிற் கொண்டு, செத் தாரை – இறந்தவரை, சாவார் – இனி யிறப்பவர்கள், சுமந்து– தோள்களிற் சுமந்து, எழுவர் – மயானத்திற்கு எழுவர், நன்றே காண் – (இவ்வுலக இயற்கையை) நன்றாகப்பார்.

(க—ரை) மூன்று முறை பறை யறைந்தமாத்திரத்தில் பிணத்தைப் பாடையில் வைத்துச் சீலையால் மூடித் தீயுடன் சுடலைக்குக் கொண்டுபோவார்கள்.

தொல்காப்பியம்.

(வி—ரை) "அர்ஆர் பஎன வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே."

சாவார் — எழுவாய், எழுவர் — பயனிலை, செத்தாரை — செயப்படுபொருள். நீ—தோன்றா எழுவாய், காண் — பயனிலை. எ இரண்டும் அசைகள். (ச)

25 கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப் [டீண்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டு—மணங்கொண்
டுண்டுண்டுண் டென்னு முணர்வினாற் சாற்றுமே
டொண்டொண்டொ ணென்னும் பறை.

(ப—ரை) கணம் கொண்டு — கூட்டங் கூடிக்கொண்டு, சுற்றத்தார் — இனத்தார், கல் என்று — கலீலென்னுஞ் சத்த முண்டாக, அலற — புலம்ப, பிணம் — சவத்தை, கொண்டு—எடுத்துக்கொண்டு, காடு — சுடுகாட்டில், உய்ப்பார் — செலுத்துபவரை, கண்டும்—பார்த்திருந்தும், மணம் கொண்டு — விவாகஞ் செய்துகொண்டு, ஈண்டு—இவ்விடத்தில், உண்டு உண்டு உண்டு என்னும் — (இல்வாழ்க்கை) உண்டு உண்டு உண்டு என்னும், உணர்வினான் — அறிவீனனுக்கு, டொண் டொண் டொண் என்னும் — டொண் டொண் டொண் என்னும் (ஓசையுள்ள), பறை — சாப்பறை, சாற்றும் — (சரீர நில்லாமையை) அறிவிக்கும்.

(க—ரை) இனத்தார் அழப் பிணத்தைக் கொண்டுபோவாரைக் கண்டிருந்தும் இல்வாழ்க்கையை விரும்பினவனுக்குச் சரீர நில்லாமையைச் சாப்பறை யறிவிக்கும்.

(வி—ரை) பறை — எழுவாய், சாற்றும் — பயனிலை. (ரு)

26 நார்த்தொடுத் தீர்க்கிலெ னன்றாய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டக் கால்.

(ப—ரை) தோற்பை — உடலாகிய பை, உள்-உள்ளே, நின்று—இருந்து, தொழில் — எத்தொழில்களையும், அற-முற்றாக, செய்து-

பண்ணி, ஊட்டும் — உண்பிக்கும்; கூத்தன் — ஆத்மாவானது, புறப்பட்டக்கால் — வெளிப்பட்டால், நார் — நாரினால், தொடுத்து—(அவ்வுடலைக்) கட்டி, ஈர்க்கில் என் — இழுத்தாலென்ன?; பார் — பூமியின், துழி — வெட்டுப் பள்ளத்தில், பெய்யில் என் — போட்டாலென்ன?; பல்லோர் — பலரும், பழிக்கில் என் — பழித்தாலென்ன?

(க—ரை) உயிர் போன பின்பு உடலை எவ்விதஞ் செய்யினும் பயனென்ன?

(வி—ரை) பிறர் — தோன்றா எழுவாய், இழுத்தல் முதலிய — பயனிலை, உடல் — செயப்படுபொருள்.

தொல்காப்பியம்—வினையியல்—௩௨—ஆம் சூத்திரம்.

"பின்முன் கால்கடை வழியிடத் தென்னு
மன்ன மரபிற் காலங் கண்ணிய
வென்ன கிளவியு மவற்றியல் பினவே."

இவ்விதியால் 'புறப்பட்டக்கால்' வினையெச்சம். பார்த்துழி யென்றதை கண்டுழியென்பாரு முளர்.

27 படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித்—தடுமாற்றந்
தீர்ப்பேம்யா மென்றுணருந் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல்.

(ப—ரை) படு — பெய்கிற, மழை — மழையினது, மொக்குளில்- குமிழியைப்போல, பல் காலும் — பல காலமும், தோன்றி— உண்டாகி, கெடும் — அழியும், இது — இஃது, ஓர்—ஒரு, யாக்கை என்று- உடலென்று, எண்ணி-நினைத்து, தடுமாற்றம்-பிறவித் துன்பத்தை, தீர்ப்போம் — நீக்குவோம், யாம் என்று — நாமென்று, உணரும்—அறியும், திண் — வலிய, அறிவாளரை — விவேகிகளை, நீள் — நீண்ட, நிலத்தின்மேல் — பூமியிடத்து, நேர்ப்பார் — நேரானவர், யார் — எவர்?

(க—ரை) குமிழியைப்போல் தோன்றி யழியும் உடலென் றெண்ணிப் பிறவித் துன்பத்தை நீக்கும் விவேகிகளை யொப்பானவர் யார்?

(வி—ரை) நேர்ப்பார் — எழுவாய், யார் — பயனிலை. (எ)

28 யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையா லாய பயன்கொள்க—யாக்கை

மலையாடு மஞ்சுபோற் றோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்து விடும்.

(ப—ரை) யாக்கையை—உடலை, யாப்பு உடைத்து ஆ—பல முடைத்தாக, பெற்றவர் — அடைந்தவர்கள், தாம்—தாங்கள், பெற்ற—அடைந்த, யாக்கையால்—அவ்வுடலால், ஆய—ஆகிய, பயன்—தருமப் பிரயோசனத்தை, கொள்க—கொள்ளக்கடவர்கள்; யாக்கை—உடலானது, மலை—மலையில், ஆடும்—சஞ்சரிக்கும், மஞ்சு போல்—மேகம்போல, தோன்றி—தோற்றமாகி, நிலையாது—நில்லாமல், நீத்துவிடும்—கெட்டுவிடும்.

(க—ரை) உடலைப் பெற்றவர்கள் தங்கள் உடலாலாகிய தருமப் பயனைக் கொள்ளக்கடவர்கள்; உடலோ மலைமேற் றோன்று மேகம்போல் தோன்றி யழியும்.

(வி—ரை) பெற்றவர்—எழுவாய், கொள்க—பயனிலை, பயன்-செயப்படுபொருள். (அ)

29 புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி
யின்னினியே செய்க வறவினை—இன்னினியே
நின்றா னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச்
சென்றா னெனப்படுத லால்.

(ப—ரை) இன்னினியே—இப்பொழுதே இப்பொழுதே, நின்றான்—நின்றிருந்தான், இருந்தான்—வீற்றிருந்தான், கிடந்தான்—படுத்திருந்தான், தன்—தன்னுடைய, கேள்—இனத்தவர், அலற—புலம்ப, சென்றான்—இறந்தான், எனப்படுதலால்—என்று சொல்லப்படுதலால், புல்—புல்லின், நுனிமேல்—நுனியிடத்து, நீர் போல்-பனிநீரைப்போல, நிலையாமை என்று—சரீர நில்லாதென்று, எண்ணி-நினைத்து, இன்னினியே—இப்பொழுதே இப்பொழுதே, அறம் வினை—தருமத்தை, செய்க—செய்யக்கடவீர்.

(க—ரை) இப்பொழுது இருந்தான், இறந்தான் என்று சொல்லப்படுதலால் சரீர நில்லாதென் றெண்ணி யிப்பொழுதே தருமஞ் செய்யக்கடவீர்கள்.

தொல்காப்பியம்

(வி—ரை) "தானென் கிளவி யொருமைக் குரித்தே."

நீங்கள்—தோன்றா எழுவாய், செய்யக்கடவீர்—பயனிலை, அறவினை—செயப்படுபொருள். (௯)

30 கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து.

(ப—ரை) மாந்தர்கள் – மனிதர்கள், கேளாது – கேளாமல், வந்து – வந்து, கிளைகள்ஆய் – உறவினர்களாய், இல் – மனை வாழ்க்கையில், தோன்றி – பிறந்து, வாளாதே – சொல்லாமலே, மரன்– மரத்தில், சேக்கை – கூட்டை, ஒழிய – விட்டு, சேண் – தூரத்தில், நீங்கு-நீங்கும், புள் போல-பறவையைப்போல, யாக்கை – உடலை, தமர்க்கு-உறவினர்களுக்கு, ஒழிய நீத்து-ஒழித்துவிட்டு, வாளாது– சொல்லாது, போவர் – இறந்துபோவார்கள்.

(க—ரை) மனிதர்கள் மனை வாழ்க்கையிற் பிறந்து தங்கள் உடலை உறவின்முறையார்களுக்கு ஒழித்துவிட்டு இறந்துபோவார்கள்.

(வி—ரை) மாந்தர்கள் – எழுவாய், போவார்கள் – பயனிலை. ()

யாக்கை நிலையாமை முற்றிற்று.

## ச-ஆம் அதிகாரம்-அறன்வலியுறுத்தல்

[அஃதாவது-தருமத்தின் பலனை யறிவித்தலாம்.]

31 அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்
தவத்தாற் றவஞ்செய்யா தார்.

(ப—ரை) மேலை – முற்பிறப்பில், தவத்தால் – தவங் காரணமாக, தவம் – நற்றவம், செய்யாதார்-செய்யாதவர்கள், அகத்தாரே-இல்வாழ்க்கையாரே, வாழ்வார் என்று – வாழ்பவர்கள் என்று, அண்ணாந்து – தலை நிமிர்ந்து, நோக்கி – பார்த்து, தாம் புக – தாம் உள்ளே நுழைய, பெறார்-பெறாதவர்களாய், புறங்கடை – தலைவாயிலை, பற்றி – பிடித்துநின்று, மிக – மிகவும், தாம் – தாங்கள், வருந்தி – வருத்தப்பட்டு, இருப்பர் – இருப்பார்கள்.

(க—ரை) முற்பிறப்பில் தவஞ் செய்யாதார் இப் பிறப்பில் இல்வாழ்க்கையாரே வாழ்பவர்கள் என்று தலைவாயிலைப்பற்றி உள்ளே நுழையாதவர்களாய் வருத்தப்பட் டிருப்பார்கள்.

(வி—ரை) தவஞ் செய்யாதார் – எழுவாய், இருப்பர் – பயனிலை. அண்ணார்த்தலென்னுந் தொழிற்பெயர் வினையாங்கால் அண்ணாருகிறது என்றாகும். அண்ணார்ந்து இதில் ஒற்றுக் கெட்டது.

தொல்காப்பியம்-பெயரியல்-௩0-ஆம் சூத்திரம்

"நாமென் கிளவி பன்மைக் குரித்தே." (க)

32 ஆவாநா மாக்க நசைஇ யறமறந்து
போவாநா மென்னாப் புலைநெஞ்சே—ஓவாது
நின்றாளுற்றி வாழ்தி யெனினுநின் வாழ்நாள்கள்
சென்றன செய்வ துரை.

(ப—ரை) ஆவாம் – வாழக்கடவோம், நாம் – யாமென்று, ஆக்கம் – செல்வத்தை, நசைஇ – இச்சித்து, அறம் – தருமத்தை, மறந்து – மறந்துவிட்டு, போவாம் – இறந்துபோவோம், நாம்என்னா-நாமென்று எண்ணாத, புலை – இழிவான, நெஞ்சே-மனமே!, ஓவாது-இடைவிடாது, நின்று – நிலைபெற்று, உளுற்றி – முயற்சி செய்து, வாழ்தி எனினும் – வாழ்வாயானாலும், நின் – உன்னுடைய, வாழ்

நாள்கள் — ஆயுள்கள், சென்றன — போயின; செய்வது — (இனி நீ) செய்வதென்ன ?, உரை — சொல்.

(க—ரை) மனமே ! பல முயற்சி செய்து வாழ்வாயானாலும் உன்னுடைய ஆயுள்கள் போயின; இனி நீ செய்வதென்ன? சொல்.

(வி—ரை) நீ — எழுவாய், உரை — பயனிலை, செய்வது — செயப்படுபொருள். (உ)

33 வினைப்பயன் வந்தக்கால் வெய்ய வுயிரா
மனத்தி னழியுமாம் பேதை—நினைத்ததனைத்
தொல்லைய தென்றுணர் வாரே தடுமாற்றத்
தெல்லை யிகந்தொருவு வார்.

(ப—ரை) பேதை — அறிவில்லாதவன், வினை பயன் — தீவினைப் பலன், வந்தக்கால் — வந்தால், வெய்ய — கொடிதாக, உயிரா—பெருமூச்செறிந்து, மனத்தின் — மனத்தினால் நினைத்து, அழியும் — அழிவான்; அதனை—அத்தீவினைப்பலனை, நினைத்து—ஆராய்ந்து,தொல்லையது என்று — முற்பிறப்பிற் செய்ததென்று, உணர்வாரே — அறிபவர்களே, தடுமாற்றத்து — பிறவித் துன்பத்தின், எல்லை — பிரமாணத்தை, இகந்து ஒருவுவார் — கடந்து போவார்.

(க—ரை) அறிவில்லாதவன் தீவினை வந்தால் மனத்தில் நினைத்து அழிவான். அத்தீவினை முன்வினையென் றறிந்தவர்களே பிறவித் துன்பத்தளவைக் கடப்பார்கள்.

(வி—ரை) பேதை — எழுவாய், அழியும்-பயனிலை, உணர்வார்-எழுவாய், ஒருவுவார் — பயனிலை.

யாப்பருங்கலம்

"வெண்பா முதலா நால்வகைப் பாவு
மெஞ்சா நாற்பால் வருணர்க் குரிய."

இவ்விதியால் வெண்பா பிராமண சாதியாம். தொன்னூல் விளக்கத்திலுங் காண்க. (௩)

34 அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்
பெரும்பயனு மாற்றவே கொள்க—கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு.

(ப—ரை) பெறல் — பெறுதற்கு, அரும் — அரிய, யாக்கையை-உடலை, பெற்ற — அடைந்த, பயத்தால்—பலனால், பெரும்—பெரிய,

பயனும் – தருமப் பலனையும், ஆற்றவே – மிகவே, கொள்க-கொள் ளக்கடவீர்கள்; கரும்பு – கரும்பிலிருந்து, ஊர்ந்த-(ஆலையாற்) பரவிய, சாறுபோல்-சாற்றைப்போல, சாலவும்-மிகவும், பின் உதவி-(அத் தருமப் பலன்) பிற்காலத்து உதவியாம்; அதன் – அக்கரும் பின், கோது போல் – சக்கை போல; உடம்பு – உடல், போகும்– அழிந்துபோகும்.

(க–ரை) பெறுதற்கரிய உடல் அடைந்த பலனால் தருமப் பலனைக் கொள்ளக்கடவீர்கள்; அப் பலன் கருப்பஞ் சாற்றைப் போலாம்; உடல் அதன் சக்கை போலாம்.

(வி–ரை) (நீங்கள்)-தோன்றா எழுவாய், கொள்க – பயனிலை, பயன் – செயப்படுபொருள். மற்று – அசை. எவ்வகைப் பிறப்பினு மக்கட் பிறப்பு மேலாகையால், 'அரும்பெறல் யாக்கை' என்றார். (ச)

35 கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்.

(ப–ரை) கரும்பு – கரும்பை, ஆட்டி – ஆலையி லாட்டி, கட்டி-வெல்லக் கட்டியை, சிறு காலை – முற்காலத்தில், கொண்டார்– கொண்டவர்கள், துரும்பு – அக்கரும்பின் துரும்பு, எழுந்து-தீயா லெழுந்து, வேம் கால் – வேவுங் காலத்தில், ஆண்டு–அவ்விடத்து, துயர் – துன்பத்தால், உழவார் – வருந்தார்; (அதுபோல) உடம்பின் – உடம்பாலாகிய, பயன் – தருமப் பலனை, வருந்தி – பிரயாசப்பட்டு, கொண்டார் – கைக்கொண்டவர்கள், கூற்றம் – இயமன், வருங்கால் – வரும்போது, பரிவது-வருந்துவது, இலர் – இல்லாதவர்க ளாவார்கள்.

(க–ரை) வெல்லக்கட்டியைக் கொண்டவர்கள் கரும்பின் சக்கை வேங்காலத்து விசனப்படார்கள்; அதுபோல, உடம்பாலாகிய தருமப் பலனைக் கொண்டவர்கள் இயமன் வரும்போது விசனப்படார்கள்.

(வி–ரை) பயன்கொண்டார்–எழுவாய், பரிவதிலர்-பயனிலை.()

36 இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி

பொருவுமின் றீயவை பொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம்.

.. (ப—ரை) இன்றுகொல் – இன்றைக்கோ ?, அன்றுகொல் – நாளைக்கோ ?, என்றுகொல் – என்றைக்கோ ?, என்னாது – வருமென்று எண்ணாது, பின்றையே – பின்னையே, நின்றது – நிற்கின்றது, கூற்றம் என்று – இயமனென்று, எண்ணி-நினைத்து, தீயவை-பாவங்களை, ஒருவுமின் – நீக்குங்கள்; மாண்டார் – பெரியோராற் சொல்லிய, அறம் – தருமங்களை, ஒல்லும் வகையால் – கூடியமாத்திரம், மருவுமின் – பொருந்தும்படி செய்யுங்கள்.

(க—ரை) இயமன், பின்னே நிற்கிறானென் றெண்ணி அதருமத்தை நீக்கித் தருமத்தைச் செய்யுங்கள்.

(வி—ரை) (நீங்கள்)-தோன்றா எழுவாய், ஒருவுமின்-பயனிலை, தீயவை – செயப்படுபொருள். நீங்கள் – எழுவாய், மருவுமின்-பயனிலை, அறம்-செயப்படுபொருள்.

தொல்காப்பியம்

"கொல்லே யையம்"

'அன்றுகொல்' என்றது வாழ்நா ளளவு, முடிவு எனினும் அமையும். (௬)

73 மக்களா லாய பெரும்பயனு மாயுங்கால்
எத்துணையு மாற்றப் பலவானால்—தொக்க
வுடம்பிற்கே யொப்புரவு செய்தொழுகா தும்பர்க்
கிடந்துண்ணப் பண்ணப் படும்.

(ப—ரை) மக்களால் – மனிதர்களால், ஆய – உண்டாகிய, பெரும்-பெரிய, பயனும் – விளைவும், ஆயுங்கால் – ஆராயுமிடத்து, எத் துணையும்-எவ்வளவும், ஆற்ற – மிக, பல ஆனல்-பலவா யிருந்தால், தொக்க-பொருந்திய, உடம்பிற்கே-உடலுக்கே, ஒப்புரவு-தருமத்தை, செய்து – பண்ணி, ஒழுகாது – நடவாமல், உம்பர்–சுவர்க்கத்தில், கிடந்து – இருந்து, உண்ண-அநுபவிக்க, பண்ண–தருமங்கள் செய்ய, படும் – தகும்.

(க—ரை) நீங்கள் உங்கள் உடலுக்குத் தருமத்தைச் செய்யாது சுவர்க்கத்திலிருந் தநுபவிக்கத் தருமத்தைச் செய்யுங்கள்.

(வி—ரை) (நீங்கள்) – தோன்றா எழுவாய், பண்ணப்படும்–பயனிலை, அறங்களை – செயப்படுபொருள். (௭)

38 உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனுந்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

(ப—ரை) உறக்கும் – கிள்ளியெடுக்கும், துணையது – அளவினை யுடையது, ஓர் – ஒரு, ஆலம் வித்து-ஆலம் விதையானது, ஈண்டி— நெருங்கி வளர்ந்து, இறப்ப – மிகவும், நிழல் – நிழலை, பயந்தாங்கு— கொடுத்தாற்போல, அறம் – தருமத்தின், பயனும்-பலனும், தான்— தான், சிறிது ஆயினும்-சிறியதா யிருந்தாலும், தக்கார்-பெரியோர் கள், கை பட்டக்கால் – கையிற் பட்டால், வான்-ஆகாயம், சிறிதா— சிறியதாக, போர்த்துவிடும் – மூடிவிடும்.

(க—ரை) ஒரு ஆலம்விதை வளர்ந்து மிகவும் நிழலைக் கொடுத் தாற்போலத், தருமப்பலன் சிறியதானாலும் பெரியோர் கையிற் கொடுக்கப்பட்டால் அப்பலன் வானிலும் பெரிதா யிருக்கும்.

(வி—ரை) அறப்பயன் – எழுவாய், போர்த்துவிடும் – பயனிலை. 'உறக்கும்' என்றதை உறங்குமெனக் கூறினும் பொருந்தும்.

அரும்பதக்கொத்து

"உறக்கல் கறத்தல் விரலாற் கிள்ளுதல்" (அ)

39 வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலும் வைத்துணரா தார்.

(ப—ரை) வைகலும் – நாள்தோறும், வைகல் – நாள் கழிதலை, தம் – தம்முடைய, வாழ்நாள்மேல் – ஆயுள்களின்மேல், வைகுதல் வைத்து-செலவுநாளாக வைத்து, வைகலை – அந்த நாட்களை, உண ராதார் – அறியாதார், வைகலும் – நாள்தோறும், வைகல் வர—தம் வாழ்நாள் கழிவு வர, கண்டும் – பார்த்தும், அஃது-அதனை, உண ரார் – அறியார், வைகலும் – நாள்தோறும், வைகலை – நாள்களை, வைகும் என்று – கழியுமென்று, இன்புறுவர் – இன்பத்தை யடை வர்.

(க—ரை) நாள்தோறும் நாள் செல்லுதலைத் தம் வாழ்நாள் செலவுவரக் கண்டு அதை யறியாமல் நாள்தோறும் நாள் செல்லு தலுக்கு இன்பத்தை யடைவர்.

(வி—ரை) உணராதார் — எழுவாய், இன்புறுவர் — பயனிலை.

யாப்பருங்கலம்

[அகவல் வெண்பா]

"அகவல் வெண்பா வடிநிலை பெற்றுச்
சீர்நிலை பெறாஉந் தொடைநிலை தெரியாது
நடைவயி னோடி நெய்வார்ந் தன்ன
நயமுடைத் தாகி பொருளொடு புணர்ந்த
வெழுத்தறி யாதே."

என்றது யாப்பருங்கல மேற்கோளாத லறிக. அணியியலி லுங் காண்க. (௯)

40 மான வருங்கல நீக்கி யிரவென்னு
மீன விளிவினால் வாழ்வேன்மன்—ஈனத்தா
லூட்டியக் கண்ணு முறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கு மெனின்.

(ப—ரை) ஈனத்தால் — இழிவால், ஊட்டியக்கண்ணும் — இரந்தூட்டியவிடத்தும், உறுதி — வலிமை, சேர்ந்து — பொருந்தி, இ உடம்பு — இவ்வுடல், நீட்டித்து — நெடுநாள், நிற்கும்எனின் — நிற்குமானால், மானம் — அபிமானமாகிய, அரும் — அரிய, கலம் — ஆபரணத்தை, நீக்கி — தள்ளி, இரவு என்னும்-யாசக மென்னும், ஈனம்— கனவீனயான, இளிவினால் — அவமதிப்பால், வாழ்வேன் — உயிர் வாழ்வேன்.

(க—ரை) இரந்தூட்டியவிடத்து இவ்வுடம்பு நிலைநிற்குமானால் அபிமான மென்கிற ஆபரணத்தைத் தள்ளிக் கனவீனமாகிய அவமதிப்பினால் உயிர் வாழ்வேன்.

(வி—ரை) யான் — எழுவாய், வாழ்வேன் — பயனிலை. மன் — ஒழியிசை. (௧௦)

அறன்வலியுறுத்தல் முற்றிற்று.

## ரு-ஆம் அதிகாரம்-தூய்தன்மை

[அஃதாவது சுத்தமல்லாத தன்மையைச் சொல்லுதலாம்.]

41 மாக்கேழ் மடநல்லா யென்றரற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொ னொய்யதோர் புக்கில்லை-யாக்கைக்கோ
ரீச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்.

(ப—ரை) யாக்கைக்கு — உடலிற்கு, ஓர் — ஒரு, ஈ — ஈயினது, சிறகு - சிறகை, அன்னது — ஒப்பாகியது, ஓர்—ஒரு, தோல்-தோலானது, அறினும் — அறுந்தாலும், காக்கை — காகத்தை, கடிவது—துரத்துதற்கு, ஓர் — ஒரு, கோல் — தடி, வேண்டுமே — வேண்டுமல்லவா!, (ஆதலால்) மா — மாமரத்தின், கேழ் — தளிர் நிறத்தையும், மடம்-இளமையையுமுடைய, நல்லாய் என்று-பெண்ணேயென்று, அரற்றும்-அறிவீனர் பிதற்றும், நொய்யது-அற்பமாகியதாய் விளக்கும், ஓர் — ஒரு, புக்கில்லை — உடலை, சான்றவர் — பெரியோர்கள், நோக்கார் — பார்க்க மாட்டார்கள்.

(க—ரை) அறிவுடையோர்கள் இழிவாகிய உடலைப் பாரார்கள்.

(வி—ரை) சான்றவர் — எழுவாய், நோக்கார் — பயனிலை, புக்கில்லை-செயப்படுபொருள். கொல் — அசை, 'நோக்கார்கொல்' எனறது 'இழிவென்று காணரோ' எனினு மமையும்.

நன்னூல் அரும்பதக்கொத்து
"கொல்லே யைய மசைநிலைக் கூற்றே." (க)

42 தோற்போர்வைமேலுந் துளைபலவாய்ப் பொய்ம்மறைக்கு
மீப்போர்வை மாட்சித் துடம்பானுன்-மீப்போர்வை
பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப்
பைம்மறியாப் பார்க்கப் படும்.

(ப—ரை) தோல் — தோலாகிய, போர்வை-போர்வையானது, மேலும் — உடன்மேலும், துளை — நவதுவாரங்கள், பல ஆழ் — பலவிடமாய், பொய் — மலங்களை, மறைக்கும் — மறைத்து வைத்திருக்கும், மீ போர்வை — மேற் போர்வையால், மாட்சித்து — பெருமை

யுடையது, உடம்பு ஆனுல் – உடலானதால், மீ போர்வை – மேலே போர்த்த போர்வையால், பொய்-மலங்களை, மறையா – மறைக்கும். காமம்-காம நுகர்ச்சியை, புகலாது-இச்சியாது, அதனை-அவ்வுடலை, பை மறி ஆ – உட்புறந் திருப்பிய பையைப்போல, பார்க்கப்படும்– நோக்கத்தகும்.

(க–ரை) மலங்களை மறைத்துத் தோலால் மூடி வைத்திருக்கும் உடலை யுட்புறம் திருப்பிய பையைப்போலப் பார்க்கவேண்டும்.

(வி–ரை) பைம்மறியாப் பார்க்கப்படும்-பாம்பின் கடைவாய்ப் பையுள் மறிபட்ட விடம்போலப் பார்க்கப்படு மென்பாரு முளர். (ீ)-தோன்ரு எழுவாய், பார்க்கப்படும்–பயனிலை, உடம்பினை-செயப்படுபொருள். மற்று – அசை. (உ)

43 தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடிப்
பொய்க்கோலஞ் செய்ய வொழியுமே—யெக்காலும்
உண்டி வினையு ளுறைக்கு மெனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல்.

(ப–ரை) எக்காலும் – எந்நாளும், உண்டி – உணவால் வரும், வினையுள்–தொழிலால், உறைக்கும் என-துர்க்கந்தம் வீசுமென்று, பெரியோர் – பெரியோர்கள், கண்டு – அறிந்து, கைவிட்ட – கை விட்டுவிட்ட, மயல் – உடலான செத்தைக்கு, தக்கோலம் தின்று– தாம்பூலந் தின்று, தலை நிறைய – சிரசு நிறைய, பூ சூடி–பூவைத் தரித்து, பொய் கோலம் – பொய்யாகிய அழகை, செய்ய – செய்தால், ஒழியுமே – உள்ளுள்ள மல நீங்குமோ ?

(க–ரை) பெரியோர்கள் உணவுத் தொழிலால் நாறுமென்று வெறுத்த வுடலுக்குத் தாம்பூலந் தின்று பூவைச் சூடினுல் உள்ளிருக்கு மலங்கள் போய்விடுமோ ?

(வி–ரை) (மலம்) – தோன்ரு எழுவாய், ஒழியுமே – பயனிலை.

தொன்னூல் விளக்கம்

“எல மிளகு வெற்றிலை மூன்றுந்
தக்கோல மென்றே சாற்றப் படுமே.” (௩)

44 தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று
கண்ணில்புன் மாக்கள் கவற்ற விடுவனே

உண்ணீர் களைந்தக்கா னுங்குசூன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன்.

(ப—ரை) உள் — உள்ளிருக்கும், நீர்—சலத்தை, களைந்தக்கால்—எடுத்தால், நுங்கு — நுங்கை, சூன்றிட்டன்ன — தோண்டினாற்போலும், கண் — கண்களுடைய, நீர்மை — குணத்தை, கண்டு — பார்த்து, ஒழுகுவேன் — நடப்பேன்; தெள் — தெளிந்த, நீர் — சலத்திலுள்ள, குவளை — நீலோற்பலத்தையும், கயல்—கெண்டை மீனையும், வேல்—வேலாயுதத்தையும், பொரு என்று—ஒப்பு என்று, கண் இல்-ஞானக் கண் இல்லாத, புல் — அற்பமான, மாக்கள் — மனிதர்கள், கவற்ற—என் மனதைக் கவலைப்படுத்த, விடுவனோ — (யான் துறவறத்தை) விடுவேனு.?

(க—ரை) நுங்குக் கண்களைப்போலப் பெண்கள் கண்களைக் கண்டு நடப்பேன்; அறிவீனர் என் மனதைக் கவலைப்படுத்த யான் துறவறத்தை விடுவனோ ?

(வி—ரை) யான் — எழுவாய், விடுவனோ — பயனிலை.

"தொகுபெயர் வேற்றுமைத் தொடர்பெய ரென்ன
வியற்றிரி பழிவாக்க மியைந்தாந் தொகையே."

இவ் விதியால் 'நீர் களைந்தக்கால்' என்றதில் ஐயுருபுத் தொகையில் இயல்பாயிற்று. [விடுவெனோ என்றும் பாடமுண்டு.]

45 முல்லை முகைமுறுவன் முத்தென் றிவைபிதற்றுங்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவனோ
எல்லாருங் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன்.

(ப—ரை) எல்லாரும் — யாவரும், காண — அறிய, புறங்காட்டு—சுடுகாட்டில், உதிர்ந்து — உதிர்ந்து, உக்க — மக்கிக் கிடக்கிற, பல் என்பு — பல்லாகிய எலும்பை, கண்டு-பார்த்து, ஒழுகுவேன் — நடப்பேன்; முறுவல் — அப்பற்களை, முல்லை முகை என்று — முல்லை அரும்பென்றும், முத்து என்று-முத்தென்றும், இவை-இவைகளை, பிதற்றும் — ஒப்பாகச் சொல்லும், கல்லா — கல்வியறியாத, புல்—அற்பமான, மாக்கள் — மனிதர்கள், கவற்ற-என் மனதைக் கவலைப் படுத்த, விடுவனோ — யான் துறவறத்தை விடுவனோ ?

(க—ரை) சுடுகாட்டி லுதிர்ந்து கிடக்கிற பல்லெலும்பைக் கண்டு நடப்பேன்; அறிவீனர், பெண்கள் வழியில் என் மனதைக் கவலைப்படுத்த யான் துறவறத்தை விடுவேனோ?

20730

(வி—ரை) யான் – எழுவாய், விடுவனே-பயனிலை

"மற்றென்கிளவி வினைமரற் றசைநிலை யப்பா
விரண்டென மொழிமனார் புலவர்." (ரு)

46 குடருங் கொழுவுங் குருதியு மென்புந்
தொடரு நரம்பொடு தோலு—மிடையிடையே
வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்றுள்
எத்திறத்தா ளீர்ங்கோதை யாள்.

(ப—ரை) குடரும் – குடலும், கொழுவும் – மூளையும், குருதியும் – உதிரமும், என்பும் – எலும்பும், தொடரும் – தொடர்ந்த, நரம்பொடு – நரம்புடன், தோலும் – தோலும், இடை இடையே-நடு நடுவாக, வைத்த – வைக்கப்பட்ட, தடியும்-இறைச்சியும், வழும்பும் – நிணமும், ஆம்-ஆகிய, இவற்றுள்-இவைகளுள், ஈர் கோதையாள் – குளிர்ந்த மாலையை யுடையவள், எ திறத்தாள்-எந்தத் திறத்தை யுடையவள்?

(க—ரை) குடல், மூளை, உதிரம், எலும்பு, நரம்பு, தோல், இறைச்சி, நிணம் ஆகிய இவற்றுள் மாலை யணிந்தவள் எத்தன்மை யுடையவள் ?

(வி—ரை) கோதையாள்-எழுவாய், எத்திறத்தாள் – பயனிலை. மற்று-அசை. (சா)

47 ஊறி யுவர்த்தக்க வொன்பது வாய்ப்புலனுங்
கோதிக் குழம்பலைக்குங் கும்பத்தைப்—பேதை
பெருந்தோளி பெய்வளா யென்னுமீப் போர்த்த
கருந்தோலாற் கண்விளக்கப் பட்டு.

(ப—ரை) பேதை – அறிவில்லாதவன், ஊறி – மலங்களூறி, உவர் தக்க – வெறுக்கத்தக்க, ஒன்பது வாய் புலனும்-நவத்துவார விடங்களிலும், கோதி – கொழித்து, குழம்பு – மலக் குழம்பை, அலைக்கும் – ஒதுக்கும், கும்பத்தை-உடலான குடத்தை, மீ போர்த்த – மேலே மூடிய, கரும் – பெருமை பொருந்திய, தோலால்-தோலால், கண்-கண்களுக்கு, விளக்கப்பட்டு-விளக்கம் பொருந்தி, பெரும் – பெரிய, தோளி-தோள்களையுடைவளே! பெய் வளாய்-இடப்பட்ட் வளையல்களை யுடையவளே!, என்னும்-என்றுசொல்லுவான்.

(க—ரை) அறிவீனன், நவத்துவாரங்களிலு மலத்தை யொதுக்கும் உடலை யுடையவளைப் புகழ்ந்து சொல்லுவான்.

(வி—ரை) பேதை-எழுவாய், என்னும்-பயனிலை, கும்பத்தை-செயப்படுபொருள்.

[தொல்காப்பியம் இடைச்சொல்லியல் கஅ-ஆம் சூத்திரம்.]

"பல்லோர் படர்க்கை முன்னிலைத் தன்மை
யவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச்
செய்யு மென்னுங் கிளவியோடு கொள்ளா."

இவ்விதியால் என்னும் என்னுவான் என்றாயிற்று. (எ)

48 பண்ட மறியார் படுசாந்துங் கோதையுங்
கொண்டுபா ராட்டுவார் கண்டிலர்கொல்—மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்து
முடைச்சாகா டச்சிற் றுழி.

(ப—ரை) முடை – நாறுகின்ற, சாகாடு – உடலான பண்டி, அச்சு – உயிரான அச்சு, இற்ற உழி – முறிந்தவிடத்து, மண்டி–நெருங்கி, பெடை – பெட்டையும், சேவல் – சேவலுமான, வல் கழுகு – வலிய கழுகுகள், பேர்த்திட்டு – அடிகள் பேர்த்திட்டு, குத்தும் – குத்தாநிற்கும்; (ஆகையால்) பண்டம்–உடலாகிய பொருளினது தன்மையை, அறியார் – அறியாதவர்களாய், படு-பொருந்திய, சாந்தும் – சந்தனத்தையும், கோதை – மாலையையும், கொண்டு–கைக்கொண்டு, பாராட்டுவார் – உடலைப் பாராட்டுவார், கண்டிலர் கொல்-அக்கழுகுகள் குத்துநிலைக் காணார்களோ?

(க—ரை) உயிர் போனவிடத்து உடலைக் கழுகுகள் குத்துதலை உடலைப் பாராட்டுவோர் காணார்களோ?

(வி—ரை) பாராட்டுவார் – எழுவாய், கண்டிலர்கொல் – பயனிலை. (அ)

49 கழிந்தா ரிடுதலை கண்டார்நெஞ் சுட்நக்
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி—யொழிந்தார
போற்றி நெறிநின்மி னிற்றிதன் பண்பென்று [ரைப்
சாற்றுங்கொல் சாலச் சிரித்து.

(ப—ரை) கழிந்தார் – இறந்தவர்கள், இடு-இடப்பட்ட, தலை–தலைகளானவை, கண்டார் – பார்த்தவர்கள், நெஞ்சு – இதயங்கள்,

உட்க-பயப்பட, குழிந்து ஆழ்ந்த-குழிந்தாழ்ந்திருக்கின்ற, கண்ண ஆய் – கண்களையுடையனவாக, தோன்றி – தோற்றப்பட்டு, ஒழிந்தாரை – சாவாதிருந்தவரை, போற்றி – பாதுகாத்து, நெறி – நன்மார்க்கத்தில், நின்மின் – நில்லுங்கள்: இதன் பண்பு – இவ்வுடலினது தன்மை, இற்று என்று-இத்தன்மையதென்று, சால-மிகவும், சிரித்து – நகைத்து, சாற்றும்கொல் – சொல்வனபோலும்.

(க—ரை) இறந்தவர்கள் தலைகள் இறவாதவர்களை நல்வழியிலே நில்லுங்களென்று சிரித்துச் சொல்வனபோலும்.

(வி—ரை) தலைகள் – எழுவாய், சாற்றும் – பயனிலை. (௯)

50 உயிர்போயார் வெண்டலை யுட்கச் சிரித்துச்
செயிர்தீர்க்குஞ் செம்மாப் பவரைச்—செயிர்தீர்ந்தார்
கண்டிற் றிதன்வண்ண மென்பதனாற் றம்மையோர்
பண்டத்துள் வைப்ப திலர்.

(ப—ரை) உயிர் போயார் – இறந்தவர்களுடைய, வெள் தலை—வெண்மையாகிய தலைகள், உட்க – பார்த்தவர்கள் அஞ்ச, சிரித்து-நகைத்து, செம்மாப்பவரை – இல்வாழ்க்கையி லிறுமாந்தவரை, செயிர் – குற்றத்தை, தீர்க்கும் – நீக்கும்; செயிர்-குற்றம், தீர்ந்தார்-நீங்கினவர்கள், கண்டு – பார்த்து, இதன் வண்ணம் – இவ்வுடம்பின் வகை, இற்று-இத்தன்மையையுடையது, என்பதனால்—என்று சொல்லப்படுதலால், தம்மை – தங்களை, ஓர் பண்டத்துள் – ஒரு பொருளிலே, வைப்பது இலர் – வைத்து எண்ணார்கள்.

(க—ரை) இறந்தவர்கள் தலைகள் இல்வாழ்க்கையில் இறுமாந்தவர்களைக் குற்றத்தை விட்டு நீக்கும்; இதைக் குற்றம் அற்றவர்கள் கண்டு தங்களை ஒரு பொருளாக வையார்கள்.

(வி—ரை) தலைகள் – எழுவாய், தீர்க்கும் – பயனிலை, செயிர்—செயப்படுபொருள். செயிர் தீர்ந்தார் – எழுவாய், வைப்பதிலர்—பயனிலை, தம்மை – செயப்படுபொருள்.

[தொல்காப்பியம்: வினையியல் ௩௦-ஆம் சூத்திரம்]

"தடுமா றுருபுக டாஞ்சில வுளவே."

இவ்விதியால் ஒவ்வோரிடத்து ஐயுங் குவ்வும் பொருந்தும். (௧௦)

யாக்கை நிலையாமை முற்றிற்று.

## ௬-ஆம் அதிகாரம் - துறவு

[அஃதாவது அகப்பற்றும் புறப்பற்றும் நீக்கலாம்.]

51 விளக்குப் புகவிருண் மாய்ந்தாங் கொருவன்
தவத்தின்முன் னில்லாதாம் பாவம்—விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாந் தீது.

(ப—ரை) விளக்கு – தீபம், புக - பிரவேசிக்க, இருள்–இருட்டு, மாய்ந்தாங்கு – கெட்டாற்போல, ஒருவன் – ஒருவன், தவத்தின் முன் – தவத்திற்கு முன், பாவம் – தீவினை, நில்லாது – நிற்காது; விளக்கு – அத்தீபத்தின், நெய் – தைலம், தேய்விடத்து–குறைந்த போது, இருள் – இருட்டு, சென்று – போய், பாய்ந்தாங்கு – பாய்ந்ததுபோல, நல்வினை – புண்ணியம், தீர்விடத்து – நீங்கினபோது, தீது – பாவம், நிற்கும் – வந்து நிற்கும்.

(க—ரை) விளக்கைக் கண்டு இருள் கெட்டாற்போலும், ஒருவன் செய் தவத்தின் முன் பாவங் கெடும்; விளக்கு நெய் அற்ற போது இருள்வந்து சம்பவித்தல்போலும், நல்வினை நீங்கியபோது தீவினை வந்து சம்பவிக்கும்.

(வி—ரை) பாவம் – எழுவாய், நில்லாது – பயனிலை, தீது – எழுவாய், நிற்கும் – பயனிலை. ஆம் இரண்டும் அசை.

[தாதுவிளக்கம்]

"விளக்கஞ் செயலால் விளக்கெனப் படுமே." (க)

52 நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித்
தலையாயார் தங்கருமஞ் செய்வார்—தொலைவில்லாச்
சத்தமுஞ் சோதிடமு மென்றாங் கிவைபிதற்றும்
பித்தரிற் பேதையா ரில்.

(ப—ரை) தலை ஆயார்-பெரியோர்கள், நிலையாமை – (செல்வம், இளமை, சரீரம் இவை) நில்லாமை, என்று-என்றும், நோய்–வியாதியும், மூப்பு – விருத்தாப்பியமும், சாக்காடு – மரணமு' மிருக்கின்றன, என்று – என்றும், எண்ணி – நினைத்து, தம் – தமது, கருமம்-காரியமாகிய தவத்தை, செய்வா-செய்வார்கள்; தொலைவு இல்லா-அளவில்லாத, சத்தமும்–சத்த சாத்திரமும், சோதிடமும்-சோதிட

சாத்திரமும், என்று — என்று சொல்லிய, இவை—இவைகளை, பிதற்றும் — பலகாற் பேசும், பித்தரின் — பித்தர்களைப்போல, பேதையார் — அறிவீனர், இல் — இல்லை.

(க—ரை) பெரியோர்கள்: செல்வம் — இளமை — சரீரம் இவை நில்லா என்றும், பிணி-முதுமை-மரணம் இவை உண்டென்றும் கருதித் தவத்தைச் செய்வார்கள். சத்த சாத்திரமும் சோதிட சாத்திரமுங் கற்றுப் பிதற்றும் பித்தர்களைப்போலும் அறிவீனர்கள் இல்லை.

(வி—ரை) தலையாயார்-எழுவாய், செய்வார்-பயனிலை, கருமம்-செயப்படுபொருள். பேதையார் — எழுவாய், இல்-பயனிலை. ஆங்கு-அசை, என்று இரண்டிடத்து ஒட்டுக.

[இலக்கணக் கொத்து சஙு-ம் சூத்திரம்]
"நீக்க மின்றி நிகழ்த்தலு மின்னே."

இவ் விதியால் 'பித்தரின்' என்றது ஒப்புப்பொருள். இச சூத்திரத்திற்கு இச்செய்யுளே உதாரணங் காட்டினர். (உ)

53 இல்ல மிளமை யெழில்வனப்பு மீக்கூற்றஞ்
செல்வம் வலியென் றிவையெல்லா—மெல்ல
நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்
தலையாயார் தாமுய்யக் கொண்டு.

(ப—ரை) தலை ஆயார் — பெரியோர்கள், இல்லம் — இல்வாழ்க்கையும், இளமை — இளமைப் பருவமும், எழில் — சிறமும், வனப்பு-அழகும், மீக் கூற்றம் — மிகுந்த இனத்தாதரவும், செல்வம் — பாக்கியமும், வலி — பலமும், என்று — என்று சொல்லிய, இவை எல்லாம் — இவைகளெல்லாம், மெல்ல — ஆராயுமிடத்து, நிலையாமை—நில்லாமையை, கண்டு — பார்த்து, தாம் — தாங்கள், உய்ய கொண்டு-கடைத்தேறும் வழியைக் கைக்கொண்டு, நெடியார் — தாமதங் கொள்ளாதவர்களாய், துறப்பர் — இருவகைப் பற்றையும் விடுவர்.

(க—ரை) பெரியோர்கள், இங்ஙனஞ் சொல்லிய யாவும் நில்லா என்று இருவகைப் பற்றும் விடுவர்.

(வி—ரை) தலையாயார் — எழுவாய், துறப்பர் — பயனிலை. (ங)

54 துன்பம் பலநா ளுழந்து மொருநாளை
யின்பமே காமுறுவ ரேழையார்—இன்ப

மிடைதெரிந் தின்னாமை நோக்கி மனையா
றடைவொழிந்தா ரான்றமைந் தார்.

(ப—ரை) ஏழையார் — அறிவில்லார், பல நாள் — பல காலமும், துன்பம் — துயரத்தை, உழந்து — அநுபவித்தும், ஒரு நாளை — ஒரு நாளில் வரும், இன்பமே — சுகத்தையே, காமுறுவர் — இச்சிப்பார்; ஆன்று அமைந்தார் — அறிவுடையார், இன்பம் — இல்வாழ் இன்பத்தின், இடை — வேறுபாட்டை, தெரிந்து — அறிந்து, இன்னாமை— துன்பத்தை, நோக்கி — பார்த்து, மனை ஆறு — இல்வாழ்க்கை வழியின், அடைவு — சம்பந்தத்தை, ஒழிந்தார் — நீங்கினர்.

(க—ரை) அறிவில்லார் இல்வாழ்க்கை இன்பத்தை இச்சிப்பார்; அறிவுடையார் அவ் இல்வாழ்க்கை யின்பத்தை விட்டு நீங்குவர்.

(வி—ரை) ஏழையர் — எழுவாய், காமுறுவர் — பயனிலை, இன்பம் — செயப்படுபொருள். ஆன்றமைந்தார் — எழுவாய், ஒழிந்தார்- பயனிலை, அடைவு — செயப்படுபொருள்.

[காக்கைபாடினியார் சூத்திரம்]

"தனியசை யென்று மிணையசை யென்று
மிரண்டென மொழிமனா ரியல்புணர்ந் தோரே."

இவ்விதியால் இன்பம் — இணையசை. (ச)

55 கொன்னே கழிந்தன் றிளமையு மின்னே
பிணியொடு மூப்பும் வருமால்—துணிவொன்றி
யென்னொடு சூழா தெழுநெஞ்சே போதியோ
நன்னெறி சேர நமக்கு.

(ப—ரை) துணிவு — துணிதலை, ஒன்றி—பொருந்தி, என்னொடு— என்னுடன், சூழாது — ஆலோசியாது, எழும் — எழுகின்ற, ஓ நெஞ்சே-ஓ மனமே!, இளமையும்-இளமைப்பருவமும், கொன்னே- பயனில்லாமல், கழிந்தன்று — நீங்கியது; இன்னே — இப்பொழுதே, பிணியொடு — மூப்பிணியுடன், மூப்பும்-தள்ளாமையும், வரும் ஆல்— வரும் ஆகையால், நமக்கு — நமக்கு, நல் நெறி — பிறப்பறு நல்வழி, சேர — பொருந்த, போதி — வருதி.

(க—ரை) எனக்கு உடன்படா தெழுந்து செல்கின்ற மனமே! இளமை நீங்கி முதுமை வரும் ஆகையால், நமக்குப் பிறப்பறும் வழியில் பொருந்த வா.

(வி—ரை) நெஞ்சம் — எழுவாய், போதி — பயனிலை. போதல்- வருதல்; இதனாற் போதி வருதி யென்றாயிற்று. 'போதியோ'என்றதற்குப் 'போகிறாயா' என்பாரு முளர். (ரு)

56 மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான் கழித்தற் கருமையாற்—பூண்ட
மிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக் கண்ணே
கடியென்றார் கற்றறிந் தார்.

(ப—ரை) மாண்ட — பெருமை பொருந்திய, குணத்தொடு-நற்குணத்தோடு, மக்கள் பேறு — மக்களைப் பெறுதல், இல் எனினும்-(மனைவிக்கு) இல்லையானாலும், பூண்டான் — விவாகஞ் செய்தவன், கழித்தற்கு — அவளை விடுதற்கு, அருமையால் — அரிதாதலால், பூண்ட — தான் கொண்ட, மிடி என்னும் — வறுமை யென்னும், காரணத்தின் — ஏதுவினால், கற்று அறிந்தார் — பெரியோர்கள், மேல் முறைக் கண்ணே — மேலாகிய துறவற வொழுக்கத்தை விரும்பி, கடி என்றார்-(மணஞ் செய்யு முன்னமே யில்வாழ்க்கையை) விட்டு விடு என்றார்கள்.

(க—ரை) நற்குணமு மக்கட்பேறு மனைவிக்கு இல்லாதிருந்தும் கொண்டவன் நீக்குதற்கு அரிதாதலால், தரித்திரமென்னுங் காரணத்தாலேனுந் துறவறத்தை விரும்பி இல்லறத்தை நீக்கென்றார்கள்.

(வி—ரை) கற்றறிந்தார் — எழுவாய், கடியென்றார் — பயனிலை. ()

57 ஊக்கித்தாங் கொண்ட விரதங்க ளுள்ளுடையத்
தாக்கருந் துன்பங்க டாந்தலை வந்தக்கால்
நீக்கி நிறாஉ முரவோரே நல்லொழுக்கங்
காக்குந் திருவத் தவர்.

(ப—ரை) ஊக்கி — உறுதிகொண்டு, தாம்-தாங்கள், கொண்ட- நல்லொழுக்கமாகக்கொண்ட, விரதங்கள்—தவங்கள், உள் உடைய- இருதயங் கலங்க, தாக்கு — தாங்குதற்கு, அரும் — அரிய, துன்பங்கள் — துயரங்கள், தலை - தம்மிடத்தில், வந்தக்கால்-வந்தால், நீக்கி- தள்ளி, நிறாஉம் — தங்களைத் தவத்திலே நிறுத்தும், உரவோரே— அறிவுடையோரே, நல்ஒழுக்கம் — நல்ல தவவொழுக்கத்தை, காக்கும்-காப்பாற்றும், திருவத்தவர் — சிறப்பினை யுடையார்.

(க—ரை) அறிவுடையோர் எத்துன்பம் வரினும் அத்துன்பத்தைச் சகித்துத் தவத்தைக் காப்பார்.

(வி—ரை) உரவோர் — எழுவாய், திருவத்தவர் — பயனிலை. தாம் — அசை, தாக்கு — விகாரம்.

[இலக்கணக்கொத்து ஒழிபியல்—ச-ம் சூத்திரம்]

"இயற்கை யளபெடை செயற்கை யளபெடை
யெழுத்துப்பே றளபெடை யிசைநூ லளபெடை
யொற்றுப்பே றளபெடை யொரோவழிக் கூடி
லைந்தென மொழிப வளபெடை யவைதாங்
குற்றெழுத் தளபெடை நெட்டெழுத் தளபெடை
யொற்றெழுத் தளபெடை யெனவொரு மூன்றாய்
மொழிமுத லிடைகடை மூன்றினும் வருமே."

இவ்விதியால் 'நிறூஉம்' குற்றெழுத் தளபெடை. (எ)

58 தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

(ப—ரை) தம்மை — தங்களை, இகழ்ந்தமை — இகழ்ந்து பேசினவற்றை, தாம் பொறுப்பது அன்றி — தாங்கள் பொறுப்பதல்லாமல், எம்மை — எங்களை, இகழ்ந்த — இகழ்ந்து பேசிய, வினைப்பயத்தால்-தீவினைப் பலனால், உம்மை — மறுபிறப்பில், எரிவாய்-தீயிடமாகிய, நிரயத்து — நரகத்தில், வீழ்வர் என்று — வீழ்வார்களென்று, பரிவதூஉம் — இரக்கங் கொள்வதும், சான்றோர்-பெரியோர்கள், கடன்—கடமை.

(க—ரை) பெரியோர்கள் பிறர் வைதலைப் பொறுப்பதன்றியும், வைதவர்கள் நரகத்தில் விழுவார்களென் றிரங்குவார்கள்.

(வி—ரை) சான்றோர் — எழுவாய், கடன் — பயனிலை. மற்று, கொல் — அசைகள். (அ)

59 மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
வைவாய வேட்கை யவாவினைக்—கைவாய்க்
கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்.

(ப—ரை) மெய் — உடலும், வாய் — வாயும், கண் - நேத்திரமும், மூக்கு — நாசியும், செவி — காதும், என — என்றுசொல்லிய, பேர் பெற்ற — பெயர் கொண்ட, ஐ வாய — ஐந்திடமாகிய, வேட்கை- ஆசையையும், அவாவினை — (உளத்தால் வரும்) ஆசையையும், கை வாய் — ஒழுக்க வழியில், கலங்காமல் — கலக்கமடையாது, காத்து— காப்பாற்றி, உய்க்கும் — தன்னை நடித்தும், ஆற்றல் உடையான்- வல்லமை யுடையான், விலங்காது — தவறாது, வீடு — மோக்ஷ வீட்டை, பெறும் — அடைவான்.

(க—ரை) ஐம்பொறிகளையும் ஐம்புலன்களிற் செல்லாமற் காக்கும் வல்லமை யுடையவன் மோட்சம் அடைவான்.

(வி—ரை) ஆற்றலுடையான் — எழுவாய், பெறும் — பயனிலை, வீடு—செயப்படுபொருள்.

[இலக்கணத்திரட்டு]

"வீடொன் றும்மே விளம்பப் படாப்பொருள்." (கூ)

60 துன்பமே மீதூரக் கண்டுந் துறவுள்ளா
ரின்பமே காமுறுவ ரேழையா—ரின்ப
மிசைதோறு மற்றத னின்னுமை நோக்கிப்
பசைதல் பரியாதா மேல்.

(ப—ரை) ஏழையார்-அறிவில்லார், துன்பமே-துன்பத்தையே, மீது ஊர — மேன்மேலும் வர, கண்டு — பார்த்தும், துறவு — துறவறத்தை, உள்ளார் — நினையாராய், இன்பமே — இன்பத்தையே, காமுறுவர் — இச்சிப்பார்; மேல் — மேலாயினோர், இன்பம்—அவ்வின்பம், இசைதோறும் — இசைந்து வருந்தோறும், அதன் — அவ் இன்பத்தால் வரும், இன்னுமை-துன்பத்தை, நோக்கி — பார்த்து, பசைதல் — அவ்வின்பத்திற் பொருந்துதலை, பரியாது — இச்சியார்.

(க—ரை) அறிவில்லார் இன்பத்தை யிச்சிப்பார்; அறிவுள்ளார் இன்பத்தை யிச்சியார்.

(வி—ரை) ஏழையார் — எழுவாய், காமுறுவர் — பயனிலை, இன்பம் — செயப்படுபொருள். மேல் — எழுவாய், பரியாது — பயனிலை, பசைதல் — செயப்படுபொருள்.

[சங்கத்தார் அரிய விதிச்சூத்திரம்]

"விகுதி குன்றியும் விளங்கு முயர்திணை.

இவ்விதியால் 'மேல்' என்றது விகுதிகுன்றியது. (க0)

துறவு — முற்றிற்று.

## எ-ஆம் அதிகாரம்-சினமின்மை

[அதாவது கோப மில்லாதிருக்குந் தன்மையைச்சொல்லுதலாம்]

61 மதித்திறப் பாரு மிறக்க மதியா
மிதித்திறப் பாரு மிறக்க—மிதித்தேறி
ஈயுந் தலைமே லிருத்தலா லஃதறிவார்
காயுங் கதமின்மை நன்று.

(க—ரை) மதித்து—கனஞ் செய்து, இறப்பாரும் – நடப்பவரும், இறக்க – நடக்கட்டும்; மதியா – மதியாமல், மிதித்து – கனவீனஞ்செய்து, இறப்பாரும்—நடப்பவரும், இறக்க—நடக்கட்டும்; மிதித்து ஏறி—காலால் மிதித்தேறி, ஈயும் – ஈயானதும், தலைமேல்—சிரசின்மேல், இருத்தலால்—இருக்கையால், அஃது – அவ் ஈயினியல்பை, அறிவார் – அறிபவர்கள், காயும் – கோபிக்கும், கதம் இன்மை—கோபமில்லாதிருக்கை, நன்று – நல்லது.

(க—ரை) மதித்து நடப்பவரும் நடக்கட்டும்; மதியாது நடப்பவரும் நடக்கட்டும்; அடிமே லேறிய ஈ முடிமே லேறி யிருத்தலால் அத்தன்மை யறிபவர் பிறர்மேற் கோப மில்லாதிருக்கை நன்று.

(வி—ரை) கதமின்மை – எழுவாய், நன்று – பயனிலை. (க)

62 தண்டாச் சிறப்பிற்றம் மின்னுயிரைத் தாங்காது
கண்டுழி யெல்லாந் துறப்பவோ—மண்டி
யடிபெயரா தாற்ற விளிவந்த போழ்தின்
முடிகிற்கு முள்ளத் தவர்.

(ப—ரை) மண்டி – நெருங்கி, அடி – பாதங்களை, பெயராது—பெயர்த்து வையாமல், ஆற்ற—மிகவும், இளி – இழிவு, வந்த போழ்தில் – வந்தகாலத்தில், முடிகிற்கும் – (எண்ணியவற்றை) முடிக்கும், உள்ளத்தவர் – மனவலி யுள்ளோர், தண்டா – கெடாத, சிறப்பின்—சிறப்புடைய, தம் – தமது, இன் உயிர்—இனிய வுயிரை, தாங்காது—தாங்காமல், கண்ட உழி எல்லாம் – கோபங் கண்டவிட மெல்லாம், துறப்பவோ – உயிரை விடுவார்களோ?

(க—ரை) மிகவும் இழிவு வந்தகாலத்தில் நினைத்தவற்றை முடிக்கு மனவலி யுடையோர் கோபங் கொண்டவிடத்தி லுயிரை விடார்கள்.

(வி—ரை) உள்ளத்தவர் – எழுவாய், துறப்பவோ – பயனிலை.

[தருக்கசங்கிரகம்.]

"உயிர்தா னுடலொரு மும் வெவ்வே ருகும்"

63 காவா தொருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்சொ
லோவாதே தன்னைச் சுடுதலா—லோவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி யறிவுடையா ரெஞ்ஞான்றுங்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து.

(ப—ரை) காவாது – (நாவைக்) காக்காமல், ஒருவன் – ஒருவன், தன் – தனது, வாய்திறந்து – வாயைத் திறந்து, சொல்லும் சொல்-சொல்லுங் கடுஞ் சொற்கள், ஓவாது – ஒழியாமல், தன்னை – வைதவனையே, சுடுதலால் – சுடலால், ஓவாது – ஒழியாமல், ஆய்ந்து—பலநூலாராய்ந்து, அமைந்த – நிரம்பிய, கேள்வி – கல்வி, அறிவு உடையார் – விவேகமுடையார், எ ஞான்றும்-எக்காலத்திலும், காய்ந்து – கோபித்து, அமைந்த – கொடுமை நிறைந்த சொற்களை, கறுத்து – சீறி, சொல்லார் – சொல்லார்கள்.

(க—ரை) ஒருவன், நாவைக் காவாது பிறனை வைத சொல்லானவை தன்னைச் சுடுதலால் கல்வி அறிவுடையார் எக்காலத்திலுங் கோபித்துக் கொடுஞ் சொற்களைச் சொல்லார்.

(வி—ரை) அறிவுடையார் – எழுவாய், சொல்லார் – பயனிலை, அமைந்த – செயப்படுபொருள், எகார மிரண்டும் அசைகள். (௩)

64 நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்—ஓர்த்ததனை
யுள்ளத்தா னுள்ளி யுரைத்துரா யூர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாங் கீழ்.

(ப—ரை) விழுமியோர் – பெரியோரானவர், நிகர் அல்லார்—ஒப்பில்லார்; நேர்த்து – எதிர்த்து, நீர் அல்ல – குணமில்லாச் சொற்களை, சொல்லியக்கால் – சொன்னால், வேர்த்து – மனம் புழுங்கி, வெகுளார் – கோபியார்; கீழ் – கீழ்மகன், ஓர்த்து – ஆராய்ந்து, அதனை – வைததனை, உள்ளத்தால் – மனதால், உள்ளி – நினைத்து.

உராய் — சென்று, ஊர் — ஊரார், கேட்ப — கேட்க, உரைத்து— சொல்லி, துள்ளி — துடித்து, தூண் — தூணில், முட்டும் — முட்டிக் கொள்வான்.

(க—ரை) பெரியோர்கள் தமக்கு ஒப்பில்லார் கொடுஞ் சொற் களைச் சொன்னால் கோபியார்; கீழானவன் பிறன் வைததனை நினைத்து ஊரார்க்குச் சொல்லித் தூணில் முட்டிக்கொள்வான்.

(வி—ரை) விழுமியோர் — எழுவாய், வெகுளார் — பயனிலை. கீழ் — எழுவாய், முட்டும் — பயனிலை. நேர்த்து — ஒத்து விகாரம்.

[நன்னூல்: வினையியல்: உகூ—ம் சூத்திரம்]

"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்
செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே."

இவ்விதியால் முட்டும் என்றது முட்டுவான் என்றாயிற்று. (ச)

65 இளையா னடக்க மடக்கங் கிளைபொரு
ளில்லான் கொடையே கொடைப்பய—னெல்லாம்
ஒறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

(ப—ரை) இளையான் — இளமையுடையவன், அடக்கம் — ஐம் பொறிகளை யடக்குதல், அடக்கம் — அடக்கமாவது; கிளை — வள ரும், பொருள் — திரவியம், இல்லான் — இல்லாதவன், கொடையே- கொடுத்தலே, பயன் — பிரயோசனமுள்ள, கொடை — கொடையா வது, எல்லாம் — யாவும், ஒறுக்கும் — சஞ்சரிக்கும், மதுகை — வெற் றியும், உரன் — பலத்தையும், உடையாளன் — உடைய சுத்தவீரன், பொறுக்கும் — பொறுக்கின்ற, பொறையே — பொறுமையே, பொ றை — பொறுமையாவது.

(க—ரை) இளையவன் ஐம்பொறி யடக்குதலே யடக்கமாகும். இல்லாதவன் கொடுக்கிறதே கொடையாகும். சுத்தவீரன் பொறுக் கிறதே பொறுமை யாகும்.

(வி—ரை) அடக்கம் — எழுவாய், அடக்கம் — பயனிலை. கொ டை — எழுவாய், கொடை — பயனிலை. பொறை — எழுவாய், பொ றை — பயனிலை. (ரு)

66 கல்லெறிந் தன்ன கயவர்வா யின்னச்சொல்
எல்லாருங் காணப் பொறுத்துய்ப்பர்—ஒல்லை
யிடுநீற்றாற் பையவிந்த நாகம்போற் றத்தங்
குடிமையான் வாதிக்கப் பட்டு.

(ப—ரை) இடு — மந்திரித்திடும், நீற்றால் — திருநீற்றால், ஒல்லே— சீக்கிரம், பை — படம், அவிந்த — அடங்கிய, நாகம்போல் — நாகத்தைப்போல், தம் தம் — தங்கள் தங்களுடைய, குடிமையால்— குடிப்பிறப்பால், வாதிக்கப்பட்டு — ஒறுக்கப்பட்டு, கல் — கல்லே, எறிந்தன்ன — எறிந்தாற்போலும், கயவர் — கீழானவர், வாய் — வாயில்வரும், இன்னா சொல்—கொடுஞ்சொற்களே, எல்லாரும் — யாவரும், காண — அறிய, பொறுத்து உய்ப்பர் — சகித்து நடப்பர் (பெரியோர்).

(க—ரை) மந்திரித்த திருநீற்றா லடங்கிய நாகம்போலப் பெரியோர் தங்கள் குல வொழுக்கத்திற்கு அஞ்சிக் கீழ்மக்கள் சொல்லிய கொடுஞ் சொற்களேப் பொறுத்து நடப்பார்.

(வி—ரை) (பெரியோர்) — தோன்றா எழுவாய், உய்ப்பர் — பயனிலே, இன்னாச்சொல் — செயப்படுபொருள். (சு)

67 மாற்றாராய் நின்றுதம் மாறேற்பார்க் கேலாமை
யாற்றாமை யென்னா ரறிவுடையார்—ஆற்றாமை
நேர்த்தின்னா மற்றவர் செய்தக்காற் றாமவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று.

(ப—ரை) மாற்றார் ஆய் — பகைவராய், நின்று — நின்று, தம்— தம்மோடு, மாறு ஏற்பார்க்கு — மாறுபடுமவர்க்கு, ஏலாமை — பொருந்தாமையை, ஆற்றாமை — வல்லமை யில்லாமை, என்னார்-என்று சொல்லார்; அறிவுடையார் — அறிவுளார், ஆற்றாமை — பொறுத்தற் கரியவை, நேர்த்து — எதிர்த்து, இன்னா — துன்பங்களே, அவர்— அப்பகைவர், செய்தக்கால் — செய்தால், தாம் — தாங்கள், அவரை- அப்பகைவரை, பேர்த்து — மீண்டு, இன்னா — தீங்குகளே, செய்யாமை — செய்யாதிருத்தல், நன்று — நல்லது.

(க—ரை) தம்முடன் எதிர்ப்பவர்மேல் எதிராதிருத்தலே வல்லமை யில்லாமையென் றறிவுடையோர் சொல்லார். பகைவர் துன்பஞ்செய்தால் அவர்களுக்குத் துன்பஞ் செய்யாதிருத்தலே நல்லது.

(வி—ரை) அறிவுடையார் — எழுவாய், என்னார் — பயனிலே. மற்று அசை.

[அவிநயம்]

"நெடின்மிக வருத னெடிற்செய்யு னென்ப." (எ)

68 நெடுங்கால மோடினு நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப் பரக்கு—மடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்.

(ப—ரை) நீசர் – கீழ்மக்களுடைய, வெகுளி – கோபமானது, நெடுங் காலம் – அநேக காலம், ஓடினும் – சென்றாலும், கெடும் காலம் – கெட்டுப்போகுங் காலம், இன்றி - இல்லாமல், பரக்கும் – வளர்ந்து நிற்கும், சீர் – சிறப்பை, கொண்ட – கொண்டிருக்கிற, சான்றோர் – பெரியோர், சினம் – கோபமானது, அடும் – காய்ச்சும், காலை – காலத்தில், நீர் – நீரானது, கொண்ட – கொண்டிருக்கிற, வெப்பம்போல் – உஷ்ணம்போல், தானே – தனக்குத்தானே, தணியும் – ஆறும்.

(க—ரை) கீழ்மக்கள் கோபம் நெடுநாட் சென்றாலும் பெருகி நிற்கும்; பெரியோர் கோபம் நீர்கொண்ட வெப்பம்போல் தனக்குத்தானே தணியும்.

(வி—ரை) நீசர் வெகுளி – எழுவாய், பரக்கும் – பயனிலை. சான்றோர் சினம் – எழுவாய், தணியும் – பயனிலை. ஏ – அசை. (அ)

69 உபகாரஞ் செய்ததனை யோராதே தங்கண்
அபகார மாற்றச் செயினும்—உபகாரந்
தாஞ்செய்வ தல்லாற் றவற்றினாற் றீங்கூக்கல்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கில்.

(ப—ரை) உபகாரம் – உதவி, செய்ததனை – செய்ததை, ஓராது – அறியாது, தங்கண் - தம்மிடத்து, அபகாரம் – ஒருவர் அபகாரத்தை, ஆற்ற – மிகவும், செயினும் – செய்தாலும், உபகாரம் – உதவியை, தாம் – தாங்கள், செய்வது அல்லால் -- செய்வதல்லது, தவற்றினால் – (அவர் செய்த) குற்றத்தால், தீங்கு – பொல்லாங்கை, ஊக்கல் – செய்தல், வான் – பெருமை, தோய் – நிறைந்த, குடி பிறந்தார்க்கு – நற்குடியிற் பிறந்தார்க்கு, இல் – இல்லை.

(க—ரை) ஒருவர் உபகாரத்தை யறியாது அபகாரத்தைச் செய்தாலும் நற்குடியிற் பிறந்தார் உபகாரஞ் செய்வதேயல்லாது அபகாரஞ் செய்யார்.

(வி—ரை) ஊக்கல் – எழுவாய், இல் – பயனிலை, தீங்கு-செயப்படுபொருள். வான்றோய் குடி – உயர்ந்த குடி எனினுமாம்.

70 கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்க டம்வாயான் மீட்டு

(ப—ரை) நாய் – நாயானது, கூர்த்து – கோபமிகுந்து, கௌவிக் கொள – கடித்துக்கொள்ள, கண்டும் – பார்த்தும், பேர்த்து— மீண்டு, தம் – தம்முடைய, வாயால் – வாயினால், நாய் – கடித்த நாயை, கௌவினார் – கடித்தவர், ஈங்கு – இவ்வுலகில், இல்லை-இல்லை; நீர்த்து அன்றி – குணமில்லாமல், கீழ் மக்கள் – கீழானவர்கள், கீழாய-இழிவானசொற்களை, சொல்லியக்கால் – சொன்னால், மேல் மக்கள் – மேலானவர்கள், தம் வாயால் – தங்கள் வாயால், மீட்டு– மறுத்து, சொல்பவோ – சொல்வார்களோ ?

(க—ரை) நாய் கடிக்கக் கண்டும், தங்கள் வாயாற் கடித்த நாயைக் கடித்தவர்கள் இவ்வுலகிலில்லை; கீழானவர்கள் இழிவான சொற்களைச்சொன்னால், மேலானவர்கள் ஒன்றுஞ் சொல்லார்கள்.

(வி—ரை) மேன்மக்கள் –'எழுவாய், சொல்பவோ – பயனிலை, கீழானவற்றை – செயப்படுபொருள்.

[அவிநயம்]

"ஒற்றுப் பயில லொற்றியற் செய்யுள்." (௪0)

சினமின்மை முற்றிற்று.

---

## க-வது துறவறவியல் முற்றிற்று.

---

# உ-வது இல்லறவியல்

[அதாவது இம்மை மறுமை ஆகிய இருமை யின்பங் களையும் அனுபவித்தற்குரிய இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறியில் நின்று, அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடுஞ் செய்யப்படும் தருமமாம்.]

## அ-ஆம் அதிகாரம் பொறையுடைமை

[அஃதாவது பொறுமையை யுடைத்தாயிருக்குந் தன்மையாம்.]

71 கோதை யருவிக் குளிர்வரை நன்னாட
பேதையோ டியாது முரையற்க—பேதை
யுரைப்பிற் சிதைந்துரைக்கு மொல்லும் வகையான்
வழுக்கிக் கழிதலே நன்று.

(ப—ரை) கோதை – மாலைபோல் விழும், அருவி – அருவியாற்றைப் பொருந்திய, குளிர் – குளிர்ந்த, வரை – மலைகளையும், நாட— நாட்டையு முடைய பாண்டியனே!, பேதையோடு – அறிவிலானுடன், யாதும் – ஒன்றையும், உரையற்க-சொல்லாதிருப்பாயாக, பேதை – அவ் அறிவில்லான், உரைப்பில் – ஒன்றைச் சொன்னால், சிதைந்து – கெடும்படி, உரைக்கும் – சொல்வான்; (ஆதலால்) ஒல்லும் – பொருந்தும், வகையால் – விதத்தால், வழுக்கி – தப்பி, கழிதல் – (அவனை விட்டு) நீங்குதல், நன்று – நல்லது.

(க—ரை) பாண்டியனே! அறிவீனனுடன் ஒன்றுஞ் சொல்லாதிருப்பாயாக. சொன்னால் சிதைவுபடச் சொல்வான்; ஆகையால், அவனை விட்டு நீங்குதல் நன்று.

(வி—ரை) கழிதல் – எழுவாய், நன்று – பயனிலை, அறிவிலான்- செயப்படுபொருள்.

[தொன்னூல் விளக்கம்]

"எதிர்மறை யேவற் கேலே யல்லே
யன்மோ வற்க வாகு மொருமை
யாமி னன்மி னற்பீர் பன்மை."

இவ்விதியால் 'அற்க' விகுதி ஏவல் ஒருமைக்கண் வந்தது. (க)

72 நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது
தாரித் திருத்த றகுமதிற்—றேரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலம்
சமழ்மையாக் கொண்டு விடும்.

(ப—ரை) நேர் அல்லார் — ஒப்பில்லாதவர், நீர் அல்ல—குணமில் லாச் சொற்களை, சொல்லியக்கால் — சொன்னால், அது — அவ்வாறு சொன்னதை, தாரித்திருத்தல்-பொறுத்திருத்தல், தகுதி — பொறு மை; மற்று — அதைப் பொறுக்காவிட்டால், புகழ்மை ஆ —புகழ்ச்சி யாக, கொள்ளாது — கொள்ளாமல், பொங்கு — மிகுந்த, நீர் — நீர் சூழ்ந்த, ஞாலம் — பூமி, சமழ்மை ஆ — தாழ்மையாக, கொண்டு விடும் — கொள்ளும்.

(க—ரை) தமக்கு ஒப்பில்லார் தாழ்வானவைகளைச் சொன்னால் பொறுத்துக்கொள்ளல் பொறுமையாகும்; பொறாவிட்டால் உல கம் புகழ்ச்சியாகக் கொள்ளாது இகழ்ச்சியாகக் கொள்ளும்.

(வி—ரை) ஞாலம்—எழுவாய், கொண்டுவிடும்-பயனிலை. மற்று, ஓரும் — அசைகள். (உ)

73 காதலார் சொல்லுங் கடுஞ்சொ லுவந்துரைக்கும்
ஏதிலா ரின்சொலிற் றீதாமோ—போதெலா
மாதர்வண் டார்க்கு மலிகடற் றண்சேர்ப்ப
ஆவ தறிவார்ப் பெறின்.

(ப—ரை) போது எலாம் — மலர்களிலெல்லாம், மாதர் — அழ கிய, வண்டு — வண்டுகள், ஆர்க்கும் — சத்திக்கும், மலி — நிறைந்த, கடல் — கடலையும், தண் — குளிர்ந்த, சேர்ப்ப — கரையையுமுடைய பாண்டியனே!, ஆவது — ஆகவேண்டிய நன்மையை, அறிவார்— அறிந்தவரை, பெறின் — பெற்றால், காதலார் — தம்மில் விருப்புள் ளோர், சொல்லும் — சொல்கின்ற, கடுஞ்சொல் — கொடுஞ் சொல் லானது, ஏதிலார் — பகைவர், உவந்து உரைக்கும்-மகிழ்ந்து சொல் லும், இன்சொல்லின் — இனிய சொல்லைப் பார்க்கிலும், தீதாமோ- குற்றமாகுமோ?

(க—ரை) பாண்டியனே! சினேகர் சொல்லுங் கடுஞ் சொல்லா னது பகைவர் சொல்லும் இனிய சொல்லைப் பார்க்கிலும் குற்ற மாகுமோ?

(வி—ரை) கடுஞ்சொல் — எழுவாய், தீதாமோ — பயனிலை. (௩)

74 அறிவ தறிந்தடங்கி யஞ்சுவ தஞ்சி
யுறுவ துலகுவப்பச் செய்து—பெறுவதனு
லின்புற்று வாழு மியல்புடையா ரெஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்த லரிது.

(ப—ரை) அறிவது – அறியத்தக்கதை, அறிந்து – தெரிந்து, அடங்கி – அடங்கி, அஞ்சுவது–அஞ்சத்தகுவதற்கு, அஞ்சி-பயந்து, உறுவது – செய்யத் தகுவதை, உலகு – உலகத்தார், உவப்ப – மகிழ, செய்து – செய்து, பெறுவதனுல் – பெரும் பலனுல், இன்பு உற்று–இன்பமடைந்து, வாழும் – வாழுகின்ற, இயல்பு உடையார்- குணமுடையார், எஞ்ஞான்றும் – எந்நாளும், துன்புற்று – துன்ப மடைந்து, வாழ்தல் அரிது – வாழ்த லில்லை.

(க—ரை) அறியத் தகுவதை யறிந்து, அஞ்சத் தகுவதற்கு அஞ்சிச், செய்யத் தகுவதைச் செய்து, பெறும் பலனுல் இன்பம் பொருந்தி வாழுங் குணமுடையோர் துன்பம் பொருந்தி வாழ்த லில்லை.

(வி—ரை) வாழ்தல் – எழுவாய், இல்லை – பயனிலை.

[அபிநயம்]

"குறிலே மிகுதல் குறிலியற் செய்யுள்."

யாப்பருங்கலத்திலுங் காண்க. (ச)

75 வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்று வொழுக்க மொருவன்க ணுண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்க பொருனயின்
தூற்றுதே தூர விடல்.

(ப—ரை) வேற்றுமை – வேறுபடுங் குணம், இன்றி – இல்லாது, கலந்து – பொருந்தி, இருவர் – இரண்டு பேர், நட்டக்கால் – சிநேகித்தால், தேற்று – தெளியாத, ஒழுக்கம் – நடக்கை, ஒருவன்கண்- ஒருவனிடத்து, உண்டாயின் – உண்டானுல், ஆற்றும் – (கோபம்) அடங்கும், துணையும் – அளவும், பொறுக்க – பொறுக்கக்கடவன்; பொருன் ஆயின் – பொறுக்கானுயின், தூற்றுது – (அவன்) குற்றத்தைத் தூற்றுமல், தூரவிடல் – அவனது நட்பை விடுக.

(க—ரை) வித்தியாச மில்லாமல் இருவர் கலந்து சிநேகஞ்செய்யில் ஒருவனிடத்து நன்னடக்கை இல்லாவிடில் மற்றவன் பொறு

க்குமளவும் பொறுக்கக்கடவன். பொறுவிட்டால் தூற்றுமல் சிநேகத்தை விடக்கடவன்.

(வி—ரை) ஒருவன் – எழுவாய். தூரவிடல் – பயனிலை, நட்பினை – செயப்படுபொருள். ஏ – அசை. (ரு)

76 இன்னா செயினு மினிய வொழிகென்று
தன்னையே தானோவி னல்லது—துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட
விலங்கிற்கும் விள்ள லரிது.

(ப—ரை) கானகம் – காட்டையும், நாட – நாட்டையுமுடைய பாண்டியனே! இன்னா-துன்பங்களை, செயினும்-ஒருவர் செய்தாலும், இனிய – இனியனவாக எண்ணி, ஒழிக என்று – கோபம் நீங்கென்று, தன்னையே தான் – தன்னைத் தானே, நோவின் அல்லது – நோவுவதல்லால், துன்னி – நெருங்கி, கலந்தாரை – சிநேகித்தவரை, கைவிடுதல் – விட்டுவிடுதல், விலங்கிற்கும் – மிருகத்திற்கும், விள்ளல் – வேறுபடல், அரிது – அருமை.

(க—ரை) பாண்டியனே! ஒருவர் துன்பஞ் செயினும் இன்பமாக நினைத்துத் தன்னை நொந்துகொள்வதேயல்லது நேசித்தாரை விட்டுவிடுத லாகாது; மிருகத்திற்கும் பிரிதல் அரிது.

(வி—ரை) கைவிடுதல்-எழுவாய், அரிது-பயனிலை, கலந்தாரை—செயப்படுபொருள். (சு)

77 பெரியார் பெருநட்புக் கோடறாஞ் செய்த
அரிய பொறுப்பவென் றன்றோ—அரியரோ
ஒல்லெ னருவி யுயர்வரை நன்னாட
நல்லசெய் வார்க்குத் தமர்.

(ப—ரை) ஒல் என் – ஒல்லென்னுஞ் சத்தமுள்ள, அருவி-யாற்றைப் பொருந்திய, உயர் – உயர்ந்த,வரை – மலையையும், நல் நாட—நல்ல நாட்டையுமுடைய பாண்டியனே!, தாம் – தாங்கள், செய்த—செய்த, அரிய – அரிய குற்றங்களை, பொறுப்ப – பொறுப்பார்கள், என்று அன்றோ – என்றல்லவோ, பெரியார்-பெரியோர்களுடைய, பெரு நட்பு – பெரிய சிநேகத்தை, கோடல் – கொள்ளுதல், நல்ல—நன்மைகளை, செய்வார்க்கு-செய்பவர்களுக்கு, தமர் – சுற்றத்தார், அரியரோ – கிடையார்களோ ?

(க—ரை) பாண்டியனே ! தாங்கள் செய்த குற்றங்களைப் பொறுப்பார்களென் றல்லவா பெரியோர்களிடம் சினேகஞ் செய்தல்; நன்மைகளைச் செய்பவர்களுக்கு உறவினர் கிடையார்களோ?

(வி—ரை) தமர் – எழுவாய், அரியரோ – பயனிலை.

[தண்டியலங்காரம்]

"இடமெனப் படுமவை மலைநா டியாறே." (எ)

78 வற்றிமற் றுற்றப் பசிப்பினும் பண்பிலார்க்
கற்ற மறிய வுரையற்க—அற்ற
மறைக்குந் துணையார்க் குரைப்பவே தம்மைத்
துறக்குந் துணிவிலா தார்.

(ப—ரை) வற்றி – உடல் மெலிந்து, ஆற்ற – மிகவும், பசிப்பினும்-பசித்தாலும், பண்பு இலார்க்கு – நட்புக்குண மில்லாதார்க்கு, அற்றம் – வறுமையை, அறிய – தெரிய, உரையற்க – சொல்லாதிருப்பாயாக; அற்றம் – வறுமையை, மறைக்கும் – நீக்கும், துணையார்க்கு – அளவினை யுடையார்க்கு, தம்மை – தம் உயிரை, துறக்கும் – விட்டுவிடும், துணிவு இலாதார் – துணிவு கொள்ளாதார், உரைப்ப-சொல்வார்கள்.

(க—ரை) உடல் மெலிந்து மிகப் பசித்தாலும் நட்புக்குண மில்லாதவர்க்கு வறுமையைச் சொல்லாதே; உயிர்விடத் துணியாதவர்கள் வறுமையை நீக்குவார்க்குச் சொல்வார்கள்.

(வி—ரை) துணிவிலாதார் – எழுவாய், உரைப்ப – பயனிலை. ஏ – அசை. (அ)

79 இன்பம் பயந்தாங் கிழிவு தலைவரினும்
இன்பத்தின் பக்க மிருந்தைக்க—இன்பம்
ஒழியாமை கண்டாலு மோங்கருவி நாட
பழியாகா வாறே தலை.

(ப—ரை) ஓங்கு – உயர்ந்த, அருவி – யாற்றைப் பொருந்திய, நாட-நாட்டையுடைய பாண்டியனே !, இன்பம் பயந்து-முன் இன்பத்தைக் கொடுத்து, ஆங்கு – பின் அவ்விடத்து, இழிவு – துன்பம், தலைவரினும்-முதன்மையாக வந்தாலும், இன்பம் – இன்பத்தினது, பக்கம் – பக்ஷம், இருந்தக்கை - நீங்கினாற்போலும், இன்பம் - அவ்வின்பமானது, ஒழியாமை - நீங்காது, கண்டாலும் – தம்மிடத்து

வந்தாலும், பழி ஆகா - தமக்குப் பழியாகாத, ஆறே - நெறியே, தலை - தலைமை.

(க—ரை) பாண்டியனே! முன் இன்பம் வந்து பின் துன்பம் வருமேயானால், அவ்வின்பம் நீங்கினாற்போலும்; இன்பமே நீங்காதிருந்தாலுங் குற்றமற்ற வழியிலே வந்த இன்பமே முதன்மை.

(வி—ரை) ஆறு – எழுவாய், தலை – பயனிலை. (௯)

80 தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பி
னூன்கெடினு முண்ணார்கைத் துண்ணற்க!-வான்கவிந்
வையக மெல்லாம் பெறினு முரையற்க [த
பொய்யோ டிடைமிடைந்த சொல்.

(ப—ரை) தான் கெடினும் - தான் கெட்டாலும், தக்கார்-தன்னைக் கெடுக்குந் தன்மையாருக்கு, கேடு - பொல்லாங்கை, எண்ணற்க-நினையாதிருப்பாயாக; தன் உடம்பின்-தன்னுடலில், ஊன் கெடினும் - மாமிசங் கெட்டாலும், உண்ணார் - உண்ணப்படாதார், கைத்து – கைப் பொருளை, உண்ணற்க – உண்ணாதிருப்பாயாக; வான் கவிந்த – ஆகாய மூடிய, வையகம் எல்லாம்-உலகமெல்லாம், பெறினும் – பெற்றாலும், பொய்யோடு – பொய்யுடன், இடைமிடைந்த - இடையிலே நெருங்கிய, சொல்-சொல்லை, உரையற்க—சொல்லாதிருப்பாயாக.

(க—ரை) தான் கெட்டாலும் பிறர்க்குக் கேடு செய்யாதே; உண்ணத்தகார் வீட்டி லுண்ணாதே; 'உலகமெல்லாம் பெற்றாலும் பொய் சொல்லாதே.

(வி—ரை) ஒருவன்-எழுவாய், எண்ணற்க-பயனிலை, கேட்டை—செயப்படுபொருள். ஒருவன் - எழுவாய், உண்ணற்க - பயனிலை, கைத்தை – செயப்படுபொருள. ஒருவன் - எழுவாய், உரையற்க—பயனிலை, சொல்லை-செயப்படுபொருள்.

[தருக்க சங்கிரகம்]

"கதிரோன் வரைப்பிற் கட்டன வுடம்பு." (௧0)

பொறையுடைமை முற்றிற்று.

## கூ-ஆம் அதிகாரம்-பிறர்மனை நயவாமை

[அஃதாவது பிறருடைய மனைவியை இச்சியாமையாம்.]

81 அச்சம் பெரிதா லதற்கின்பஞ் சிற்றளவால்
நிச்ச நினையுங்காற் கோக்கொலையால்—நிச்சலுங்
கும்பிக்கே கூர்த்த வினையாற் பிறன்றார
நம்பற்க நாணுடை யார்.

(ப—ரை) நாண் உடையார் – நாண முள்ளோரே, அச்சம்—பயம், பெரிது – பெரியது; அதற்கு – அப்பயத்திற்கு, இன்பம்—இன்பமானது, சிறு அளவு – சிறிய அளவினை யுடையது; நிச்சம்—தினமும், நினையுங்கால் – எண்ணுமிடத்து, கோ-அரசனால் வரும், கொலையால் – ஆக்கினையால், நிச்சலும் – தினமும், கும்பிக்கே—நரகத்திற்கே, கூர்த்த – மிகுந்த, வினையால் – தீவினை வருமாதலால்' பிறன் – அயலானுடைய, தாரம் – மனையாளை, நம்பற்க – விரும்பாதிருப்பீர்களாக.

(க—ரை) நாணமுடையவர்களே பயம் பெரியது, அப்பயத்தால் வரும் இன்பம் சிறியது; இராஜ தண்டனை வரும், நரகத்துக் கேதுவாம்; பாவம் வரும்; ஆகையால், பிறர் மனையாளை இச்சியாதிருங்கள்.

(வி—ரை) ஆல் மூன்றும் அசைகள். நாணுடையார் – எழுவாய், அண்மைவிளி, நம்பற்க – பயனிலை, பிறன்றாரம் – செயப்படுபொருள்.

[தொல்காப்பியம்: விளிமரபு: ௪0-ம் சூத்திரம்.]
"அண்மைச் சொல்லே யியற்கை யாகும்." (௧)

82 அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றார நச்சுவார்ச் சேரா—பிறன்றார
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்.

(ப—ரை) பிறன் – அயலானுடைய, தாரம் – மனைவியை, நச்சுவார் – இச்சிப்பவர்களை, அறம் – தருமமும், புகழ் – கீர்த்தியும், கேண்மை – சிநேகமும், பெருமை – மேன்மையும், இ நான்கும்—

இந்த நாற்பொருளும், சேரா — அடையாவாம்; பிறன் — பிறனுடைய, தாரம் — மனைவியை, நச்சுவார் — இச்சிப்பவர்களை, பகை— விரோதமும், பழி — இகழ்ச்சியும், பாவம் — அதருமமும், என்று— என்று சொல்லிய, அச்சத்தோடு — பயத்தோடு, இ நால் பொருள்— இந்த நான்கு பொருள்களும், சேரும் — அடையும்.

(க—ரை) பிறன் மனைவியை இச்சிப்பவரைப், புண்ணியம், கீர்த்தி, சிநேகம், மேன்மை ஆகிய இந்நான்குஞ் சேராவாம். பிறன் மனைவியை இச்சிப்பவரைப் பகை, பழி, பாவம், பயம் ஆகிய இந் நான்குஞ் சேரும்.

(வி—ரை) நான்கும் — எழுவாய், சேரா — பயனிலை. நாற் பொருள் — எழுவாய், சேரும் — பயனிலை.

[தண்டியலங்காரம்.]

"விரவத் தொடுப்பது சமநிலை யாகும்."

இது மூவினங் கலந்த சமநிலையணி. (உ)

83 புக்கவிடத் தச்சம் போதரும்போ தச்சந்
துய்க்குமிடத் தச்சந் தோன்றுமற் காப்பச்சம்
எக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ
உட்கான் பிறனில் புகல்.

(ப—ரை) புக்க இடத்து — பிறன் மனையாளிடத்திற் போகும் போதும், அச்சம்-பயம்; துய்க்கும் இடத்து-அநுபவிக்கும்போதும், அச்சம்-பயம்; தோன்றுமல் — புணர்ச்சி தோன்றுமல், காப்பு-காத்தலும், அச்சம் — பயம்; எ காலும் — எந்நாளும், அச்சம் — பயத்தை, தருமால் — கொடுக்கும் ஆகையால், உட்கான் — அஞ்சாதவனாய், பிறன் இல்-பிறன் மனையாளிடத்து, புகல் — பிரவேசித்தல், எவன் கொல் — என்ன பலன் குறித்தோ ?

(க—ரை) பிறன் மனையாளிடத்துப் போகும்போதும் பயம், வரும்போதும் பயம்,அநுபவிக்கும்போதும் பயம், புணர்ச்சி தோன்றுது காத்தலும் பயம், எந்நாளும் பயமாகையால் அஞ்சாது பிறன் மனையாளிடத்துப் பிரவேசித்த லென்ன பயன் ?

(வி—ரை) புகல்-எழுவாய், எவன்கொல் — பயனிலை, பிறனில்— செயப்படுபொருள். (ங)

84 காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையு
மாணின்மை செய்யுங்கா லச்சமா—நீணிரயத்

துன்பம் பயக்குமாற் றுச்சாரி நீகண்ட
வின்ப மெனக்கெனைத்தாற் கூறு.

(ப—ரை) துச்சாரி-காமுகனே! காணின் – பிறன் மனையாளைக் கூடுகையிற் கண்டால்,குடி – தன் குடிக்கு,பழியாம் – இகழ்ச்சியாம்; கை உறின் – அகப்படில்,கால்குறையும்-கால் வெட்டப்படும்;மாண்-பெருமை, இன்மை-இல்லாமை, செய்யுங்கால்-செய்யுமிடத்து, அச்சமாம்-பயமாகும்; நீள் – நீண்ட, நிரயம்-நரகத்தில், துன்பம் – துயரத்தை, பயக்குமால் – கொடுக்குமாகையால், நீ கண்ட – நீயறிந்த, இன்பம் – இன்பமானது, எனைத்து-எத்தன்மையுடையது? எனக்கு-என்றனுக்கு, கூறு-சொல்லு.

(க—ரை) காமுகனே! பிறன் மனைவியைக் கூடுகையில் பிறர் கண்டால் தன் குடிக்குப் பழிப்பாகும்; அகப்படில் கால் குறைந்து போம்; அநுபவிக்கும்போது பயமாகும்; நரகத்தில் துயரத்தைக் கொடுக்கும்; நீ கண்ட இன்பம் எத்தன்மையுடையது? எனக்குச் சொல்.

(வி—ரை) நீ-எழுவாய், கூறு – பயனிலை, இன்பம் – செயப்படு பொருள், ஆல்—அசை. (௪)

85 செம்மையொன் றின்றிச் சிறியா ரினத்தராய்க்
கொம்மை வரிமுலையா டோண்மரீஇ—உம்மை
வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே யிம்மை
அலியாகி யாடியுண் பார்.

(ப—ரை) செம்மை – நடுவுநிலைமை, ஒன்று இன்றி – சிறிதுமில்லாது, சிறியார் – சிறியார்கள், இனத்தர் ஆய் – இனமுடையவராய், கொம்மை-திரட்சியும்,வரி-தேமலும் பொருந்திய,முலையாள் – முலைகளையுடைய பெண்களின், தோள்-தோள்களை, மரீஇ – பொருந்தி, உம்மை – முற்பிறப்பில், வலியால்-தமது வல்லமையால்,பிறர் – அந்நியருடைய, மனைமேல்-மனையவளிடத்தில், சென்றார் – போனவர்கள், இம்மை-இப்பிறப்பில், அலி ஆகி-பேடிகளாகி, ஆடி-கூத்தாடி, உண்பார்-உண்பார்கள்.

(க—ரை) நன்மன மில்லாது சிறியவர்கள் இயல்பினை யுடையவர்களாய் முற்பிறப்பில் தமது வல்லமையால் பிறர் மனைவியைச் சேர்ந்தவர்கள், இப்பிறப்பில் பேடிகளாய்க் கூத்தாடி உண்பார்கள்.

(வி—ரை) சென்றார்-எழுவாய், உண்பார்-பயனிலை. ஏ-அசை.()

86 பல்லா ரறியப் பறையறைந்து நாட்கேட்டுக்
கல்யாணஞ் செய்து கடிபுக்க—மெல்லியற்
காதன் மனையாளு மில்லாளா வென்னொருவன்
ஏதின் மனையாளை நோக்கு.

(ப—ரை) நாள் – சுபதினத்தை, கேட்டு – கேட்டு, பல்லார் – பலரும், அறிய – அறியும்படி, பறை அறைந்து – மணப்பறை யடித்து, கல்யாணஞ் செய்து – விவாகம் பண்ணி, கடி – காவலில், புக்க-புகுந்த, மெல் – மெல்லிய, இயல் – இயல்பினையுடைய, காதல் – இச சிக்கப்பட்ட, மனையாளும் – மனைவியும், இல்லாள் ஆ – தன்வீட்டில் உள்ளவளாக, ஒருவன் – ஒருவன், ஏதில் – அயலாருடைய, மனையாளை – மனைவியை, நோக்கு – பார்க்கும் பார்வை, என் – யாது?

(க—ரை) ஒருவன் பிறன் மனையாளைத் தன் மனையாளாகப் பார்க்கும் பார்வை என்ன?

(வி—ரை) நோக்கு – எழுவாய், என்-பயனிலை, ஏதின் மனையாளை-செயப்படுபொருள். (௬)

87 அம்ப லயலெடுப்ப வஞ்சித் தமர்பரீஇ
வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று—நம்பு
நிலைமையி னெஞ்சத்தான் துப்புரவு பாம்பின்
தலைநக்கி யன்ன துடைத்து.

(ப—ரை) அயல் – அயலார், அம்பல் எடுப்ப – புறங்கூற, அஞ்சி– பயந்து, தமர்-உறவினர், பரீஇ-வருந்த, வம்பலன்-அயலானுடைய, பெண் – மனையாளை, மரீஇ – தழுவி, மைந்து – மயக்கத்தை, உற்று– பொருந்தி, நம்பும் – நம்பியிருக்கிற, நிலைமை இல் – நிலையில்லாத, நெஞ்சத்தான் – மனமுடையவன், துப்புரவு – அநுபவம், பாம்பின்-பாம்பினது, தலை – தலையை, நக்கி அன்னது – நக்கி யின்ப மடைந்தாற்போலும், உடைத்து – தன்மை யுடையது.

(க—ரை) பிறன் மனைவியைத் தழுவி மயக்க மடைந்து நம்பு மனமுடையவன் அநுபவம், பாம்பின் தலையை நக்கினாற் போலும் உள்ளது.

(வி—ரை) துப்புரவு-எழுவாய், உடைத்து-பயனிலை. (எ)

88 பரவா வெளிப்படாப் பல்லோர்கட் டங்கா
உரவோர்கட் காமநோ யோஓ கொடிதே
விரவாரு ணாணுப் படலஞ்சி யாது
முரையாதுள் ளாறி விடும்.

(ப—ரை) உரவோர்கண் — விவேகிகள், காமம் — காமமானது, பரவா — பரவாது, வெளிப்படா — வெளியாகாது, பல்லோர்கண்- பலரிடத்திலும், தங்கா — தங்காது, நோய் — அக்காமத்தால் வரு நோயானது, ஓ ஓ கொடிது — மிகவுங் கொடிது! விரவாருள் — கல வாதவரிடத்து, நாணுப்படல் — வெட்கமடைந்து, அஞ்சி-பயந்து, யாதும் — யாதொன்றும், உரையாது — சொல்லாது, உள் ஆறிவிடும்- உள்ளுக்குள்ளே தணியும்.

(க—ரை) அறிவுடையோர்கள் காமமானது பரவாமலும், வெளிப்படாமலும், பலரிடத்துத் தங்காமலும், கலவாரிடத்து அஞ்சிச் சொல்லாது உள்ளுக்குள்ளே தணியும்.

(வி—ரை) நோய் — எழுவாய், ஆறிவிடும் — பயனிலை. ஏ-அசை. 'விரவாருள்' என்றது பகைவரிடத் தென்பாரு முளர்.

[காக்கை பாடினியர் சூத்திரம்]

"குறிநெடிலளபெடைக் குறிப்பா கும்மே."

இவ்விதியால் ஓ ஓ கொடிது நெடிலளபெடை. (அ)

89 அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காம
மவற்றினு மஞ்சப் படும்.

(ப—ரை) அம்பும் — அஸ்திரமும், அழலும்-அக்கினியும், அவிர்- பிரகாசிக்கும், கதிர் — கிரணங்களையுடைய, ஞாயிறும் — சூரியனும், வெம்பி — கனன்று, சுடினும் — சுட்டாலும், புறம் சுடும் — மேலே சுடும்; வெம்பி — கனன்று, மனத்தை — இதயத்தை, கவற்றி-கவலைப் படுத்தி, சுடுதலால் — சுடுகின்றபடியால், காமம் — காமமானது, அவற்றினும் — அம்பு நெருப்பு சூரியன் இவற்றைப்பார்க்கிலும், அஞ்சப் படும் — கொடிதென்று அஞ்சப்படும்.

(க—ரை) காமமானது அம்பிலும் அக்கினியிலும் சூரியனிலும் கொடிது என்பதாம்.

(வி—ரை) காமம்-எழுவாய், அஞ்சப்படும்-பயனிலை. (கூ)

90 ஊருள் ளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகு—நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடும்.

(ப—ரை) ஊருள் – ஊரில், எழுந்த – எழும்பிய, உரு – வெப்பம், கெழு – பிரகாசமிருந்த, செம் தீக்கு-செந்நெருப்புக்கு, நீருள்-தண்ணீரில், குளித்தும் – மூழ்கியும், உயல் ஆகும் – பிழைக்கலாம். காமம் – காமமானது, நீருள் – தண்ணீரில், குளிப்பினும் – குளித்தாலும், சுடும் – சுட்டுவிடும்; காமம் – காமமானது, குன்று ஏறி-மலைமேலேறி, ஒளிப்பினும் – ஒளித்தாலும், சுடும் – விட்டுவிடும்.

(க—ரை)தூமத் தீக்குத் தப்பலாம், காமத்தீக்குத் தப்பலாகாது.

(வி—ரை) தூமம் என்பது புகை. காமம்-எழுவாய், சுடும் – பயனிலை. ஏ - அசை.

பிறர்மனை நயவாமை முற்றிற்று.

# க0-ஆம் அதிகாரம்-ஈகை

[அஃதாவது கொடுக்குந் திறங் கூறுதலாம்.]

91 இல்லா விடத்து மியைந்த வளவினு
ளுள்ள விடம்போற் பெரிதுவந்து—மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்
கடையாவா மாண்டைக் கதவு.

(ப—ரை) இல்லா – தமக்கில்லாத, இடத்தும் – காலத்தும், இயைந்த – பொருந்திய, அளவினல் – அளவால், உள்ள இடம் போல் – இருக்கிற காலம்போல, பெரிது – மிகவும், உவந்து – மகிழ்ந்து, மெல்ல – நேராக, கொடையொடு-கொடுத்தலோடு, பட்ட-பொருந்திய, குணன் – நற்குணங்கள், உடை-உடைத்தாகிய, மாந்தர்க்கு – மனிதர்க்கு, ஆண்டை – சுவர்க்க வாசலின், கதவு – கதவுகள், அடையாவாம் – அடைக்காவாம்.

(க—ரை) கொடுத்தவர்கட்குச் சுவர்க்க வாசற் கதவுக ளடைக்காவாம்.

(வி—ரை) கதவு – எழுவாய், அடையாவாம் – பயனிலை. (க)

92 முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள—கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.

(ப—ரை) சாம் நாள் – சாகின்ற நாள், முன்னர் – முன்னது; முனிதக்க – வெறுக்கத்தக்க, மூப்பு உள–விருத்தாப்பிய முண்டு, பின்னரும் – பின்னும், பீடு – பெருமையை, அழிக்கும் – கெடுக்கும், நோய் உள – வியாதி யுண்டு; கொன்னே – பயனில்லாமல், பரவன்மின் – அலையாதிருங்கள்; கைத்து உண்டாம் போழ்து-திரவிய முண்டான காலத்து, பற்றன்மின் – பற்ருதிருங்கள்; பார்த்து-பகுத்து, உண்மின் – உண்ணுங்கள்; யாதும் – யாதொன்றையும், கரவன்மின் – ஒளியாது கொடுங்கள்.

(க—ரை) பொருளுண்டாங்காலத்து ஒளியாது கொடுத்து உண்ணுங்கள்.

(வி—ரை) நீவிர் – தோன்ரு எழுவாய், பரவன்மின் முதலிய-பயனிலை. ஏகாரம் – அசை. (உ)

93 நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்கா லீண்டு
மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்.

(ப—ரை) நடுக்கு — வறுமையால் நடுக்கம், உற்று — பொருந்தி, தன் — தன்னை, சேர்ந்தார் — சேர்ந்தவரது, துன்பம் — துன்பங்களை, துடையார் — நீக்குகின்றிலார்; கொடுத்து — (பிறருக்குக்)கொடுத்து, தான் — தான், துய்ப்பினும் — உண்டாலும், ஈண்டுங்கால் — வளருங் காலமாயின், ஈண்டும் — வளரும்; இடுக்கு — வலிமை, உற்று-பொருந்தி. பற்றினும் — பற்றினாராயினும், வினை — (தான் முன்பு செய்த) நல்வினை, உலந்தக்கால் — நீங்கினால், செல்வம் — செல்வமானது, நில்லாது — நிலையாமல், விடுக்கும் — விட்டுப்போம்.

(க—ரை) கொடாதவர்கள் பிறர்க்குக் கொடுத்துத் தாங்களுண்டாலும் பொருள் வளருங் காலத்தில் வளரும்; நல்வினை நீங்கிற் செல்வங் கெடும்.

(வி—ரை) செல்வம் — எழுவாய், விடுக்கும் — பயனிலை.

[நன்னூல் பொதுவியல்.]

"ஏற்புழி யெடுத்துடன் கூட்டு மடியவும்
யாப்பீ றிடைமுத லாக்கினும் பொருளிசை
மாட்சியு மாறு வடிவுய மடிமறி."

இவ்விதியால் இஃது அடிமறிமாற்றுப் பொருள்கோள். (௩)

94 இம்மி யரிசித் துணையானும் வைகலு
நும்மி லியைவ கொடுத்துண்மின்—உம்மைக்
கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்
தடாஅ வடுப்பி னவர்.

(ப—ரை) இம்மி அரிசி — மத்தங்காய்ப் புல்லரிசி, துணை ஆனும்- அளவாயினும், வைகலும் — நாடோறும், நும் — உம்முடைய, இல்- மனையிடத்து, இயைவ — பொருந்தியவைகளை, கொடுத்து — பிறருக்குக் கொடுத்து, உண்மின் — உண்ணுங்கள்; குண்டு — ஆழ்ந்த, நீர் — கடல் சூழ்ந்த, வையத்து — பூமியில், அடா-சமைக்காத, அடுப்பினவர் — அடுப்பினையுடையவராயிருந்து திரியுமவரை, உம்மை- முற்பிறப்பில், கொடாதவர் — வழங்காதவர், என்பர்-என்று சொல்லுவர் அறிவுடையார்.

(க—ரை) நாடோறும் அணுவளவாவது கொடுத்து உண்ணுங்கள் யாசகரை முற்பிறப்பில் கொடாதவர்களென்று சொல்லுவார்கள்.

(வி—ரை) நீவிர்-எழுவாய், உண்மின்-பயனிலை. (௪)

95 மறுமையு மிம்மையு நோக்கி யொருவர்க்
குறுமா றியைவ கொடுத்தல்—வறுமையால்
ஈத லிசையா தெனினு மிரவாமை
யீத லிரட்டி யுறும்.

(ப—ரை) மறுமையும் – மறுபிறப்பையும், இம்மையும்-இப்பிறப்பையும், நோக்கி – ஆராய்ந்து, ஒருவர்க்கு – ஒருவருக்கு, இயைவ-பொருந்தியவைகளை, கொடுத்தல் – வழங்கல், உறும் ஆறு – பொருந்தும் வழி; வறுமையால் – தரித்திரத்தினால், ஈதல் – கொடுத்தல், இசையாது எனினும் – கூடாதாயினும், இரவாமை – யாசியாதிருத்தல், ஈதல் – கொடுத்தலினும், இரட்டி – இருமடங்காக, உறும் – அடையும்.

(க—ரை) கொடுத்தல் கூடாதிருந்தாலும் தான்போய் இரவாதிருத்தல் கொடுத்தலினும் இரண்டு பங்கு அதிகம்.

(வி—ரை) இரவாமை – எழுவாய், இரட்டியுறும் – பயனிலை.(௫)

96 நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணா மாக்கள்
இடுகாட்டு ளேற்றைப் பனை.

(ப—ரை) நடு ஊருள் – ஊர் நடுவில், வேதிகை – திண்ணை, சுற்றுக்கோள்புக்க – சூழ்ந்திருக்க, படு – பொருந்திய, பனை அன்னர் – காய்த்த பெண்பனை மரத்துக்கு ஒப்பானவர், பலர் நச்ச-பலபேர் விரும்ப, வாழ்வார் – வாழ்பவர்கள், குடி – தங்குடி, கொழுத்தக்கண்ணும் – வளமிருந்தாலும், கொடுத்து-வழங்கி, உண்ணா-உண்ணாத, மாக்கள் – மனிதர்கள், இடுகாட்டுள் – சுடுகாட்டிலிருக்கும், எற்றை பனை – ஆண்பனையை யொப்பாவர்.

(க—ரை) பலரும் இச்சிக்க வாழ்பவர்கள் நடுவூரில் காய்த்த பெண்பனை மரத்திற்கு ஒப்பாவர்; கொடுத்து உண்ணாதவர்கள் சுடுகாட்டிலிருக்கும் ஆண்பனைக்கு ஒப்பாவார்கள்.

(வி—ரை) படுபனை யன்னர் — எழுவாய், வாழ்நார் — பயனிலை. மாக்கள் — எழுவாய், எற்றுப்பனை யன்னர் — பயனிலை. (சு)

97 பெயற்பான் மழைபெய்யாக் கண்ணு முலகம்
செயற்பால செய்யா விடினுங்—கயற்புலால்
புன்னை கடியும் பொருகடற் றண்சேர்ப்ப
என்னை யுலகுய்யு மாறு.

(ப—ரை) கயல் — கயல்மீனையும், புலால் — புலால் நாற்றத்தையும், புன்னை — புன்னைப்பூவின் மணமானது, கடியும் — நீக்கும், பொரு — அலைமோதப்பட்ட, தண் — குளிர்ந்த, கடல் — கடலையும், சேர்ப்ப — கரையையுமுடைய பாண்டியனே! பெயல் — பெய்தல், பால் — பகுப்பாகிய, மழை — மழையானது, பெய்யாக்கண்ணும் — பெய்யாதவிடத்தும், உலகம் — உயர்ந்தோர், செயல்பால — செய்யத் தக்கவைகளை, செய்யாவிடினும் — செய்யாதவிடத்தும், உலகு — உலகமானது, உய்யும் ஆறு — பிழைக்கும் வழி, என்னை — என்ன?

(க—ரை) பாண்டியனே! மழை பெய்யாமலும், பெரியோர்கள் செய்யத்தக்கவைகளைச் செய்யாமலும் விட்டால் உலகம் பிழைக்கும் வழி யில்லை.

(வி—ரை) உய்யுமாறு — எழுவாய், என்னை — பயனிலை.

98 ஏற்றகை மாற்றாமை யென்னானுந் தாம்வரையான்
ஆற்றாதார்க் கீவதா மாண்கடன்—ஆற்றின்
மலிகடற் றண்சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகட னென்னும் பெயர்த்து.

(ப—ரை) ஆற்றின் — யாற்றினால், மலி — நிறைந்த, தண் — குளிர்ச்சிபொருந்திய, கடல் — கடலையும், சேர்ப்ப — கரையையுமுடைய பாண்டியனே!, ஏற்ற — யாசிக்கின்ற, கை — கைக்கு, மாற்றாமை — இல்லையென்னாது, என் ஆனும் — யாதாகிலும், தாம் — தமக்குள்ள, வரையான் — அளவால், ஆற்றாதார்க்கு — தரித்திரருக்கு, ஈவதாம் — கொடுப்பதாம், ஆண் கடன் — ஆண் தகைமையாவது; மாறு ஈவார்க்கு — கைம்மாறு செய்வார்க்கு, ஈதல் — கொடுத்தல், பொலி — பிரகாசம்பொருந்திய, கடன் என்னும் பெயர்த்து — கடனென்று சொல்லும் பெயரினையுடையது.

(க—ரை) பாண்டியனே! வறியார்க்குக் கொடுத்தலே கொடையாகும்; செல்வர்க்குக் கொடுத்தலே கடனாகும்.

(வி—ரை) ஆண்கடன் — எழுவாய், ஈவது — பயனிலே, கடன்—எழுவாய், பெயர்த்து — பயனிலே. (அ)

99 இறப்பச் சிறிதென்னு தில்லென்னு தென்று
மறப்பயன் யார்மாட்டுஞ் செய்க—முறைப்புதவி
னையம் புகூஉந் தவசி கடிஞைபோற்
பையு நிறைத்து விடும்.

(ப—ரை) இறப்ப — மிகவும், சிறிது என்னுது — சிறியதென்று சொல்லாது, இல் என்னுது — இல்லேயென்று சொல்லாது, என்றும் — எப்பொழுதும், அறம் பயன் — தருமப்பலனே, யார்மாட்டும்—யாவரிடத்தும், செய்க — செய்யக்கடவாய்; (அச்சொல்) முறை—முறையாக, புதவின் — வாயில்கடோறும், புகூஉம் — புகுந்து, ஐயம்—பிச்சையேற்கும், தவசி — தவசி கையிலிருக்கும், கடிஞைபோல்—பாத்திரம்போல, பைய — மெல்ல, நிறைத்துவிடும் — பூரணமாக்கும்.

(க—ரை) யாவரிடத்துந் தருமத்தைச் செய்யக்கடவீர்; அத்தருமப்பலன் யாசித்தோர் பாத்திரம்போல நிறைவுபெறும்.

(வி—ரை) (நீவிர்) — தோன்ருஎழுவாய், செய்க — பயனிலே, அறப்பயனே — செயப்படுபொருள். (கூ)

100 கடிப்பிடு கண்முரசங் காதத்தோர் கேட்பர்
இடித்து முழங்கியதோர் யோசனேயோர் கேட்பர்
அடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்ருேர்
கொடுத்தா ரெனப்படுஞ் சொல்.

(ப—ரை) கடிப்பு — குறுந்தடியினல், இடு — அடிக்கப்பட்ட, கண் — இடமகன்ற வாயினையுடைய, முரசம் — பேரிகைச்சத்தம், காதத்தோர் — காதவழியி லுள்ளோர், கேட்பர் — கேட்பார்கள்; இடித்து — இடியிடித்து, முழங்கியது — சத்திப்பது, ஓர் — ஒரு, யோசனையோர் — யோசனை வழியிலுள்ளோர், கேட்பர் — கேட்பார்கள்; சான்ருேர் — பெரியோர்களுக்கு, கொடுத்தார் எனப்படும் சொல்—கொடுத்தாரென்று சொல்லப்படுஞ் சொல்லானது, அடுக்கிய—ஒன்றின்மேலொன்ருக அடுக்கிய, மூ உலகும் — சுவர்க்க மத்திய பாதாளம் என்னு மூவுலகிற்கும்; கேட்கும் — கேட்கும்.

(க—ரை) பெரியோர்களுக்குக் கொடுத்தாரென்று சொல்லப்படுஞ் சொல்லானது திரிலோகங்களிலும் கேட்கும்.

(வி—ரை) சொல் — எழுவாய், கேட்கும் — பயனிலே. ஏகாரம்—அசை. (க0)

ஈகை முற்றிற்று.

## கக-ஆம் அதிகாரம்-பழவினை

(அஃதாவது முற்பிறப்பிற் செய்த வினையாம்.)

101 பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு.

(ப—ரை) பல் ஆவுள் — பல பசுக்களுள், குழ கன்று - இளங் கன்றை, உய்த்துவிடினும் — செலுத்திவிடினும், தாய்-தன் தாயை, நாடி — தேடி, கோடலை — கொள்ளுதலில், வல்லதுஆம் — வல்லமை யுடையதாம்; தொல்லை — முன்செய்த, பழவினையும் — ஊழ்வினை யும், தன் — தன்னை, செய்த — செய்துள்ள, கிழவனை — உரியவனை, நாடி — ஆராய்ந்து, கொளற்கு — பற்றிக்கொள்ளுதற்கு, அன்ன தகைத்தே — அத்தன்மையதாம்.

(க—ரை) கன்று பசுவைத் தேடிக்கொள்ளுதல்போல, வினை யுஞ் செய்தவனைத் தேடிக்கொள்ளும்.

(வி—ரை) பழவினை—எழுவாய், அன்னதகைத்தே-பயனிலை.

102 உருவு மிளமையு மொண்பொருளு முட்கு
மொருவழி நில்லாமை கண்டும்—ஒருவழி
யொன்றேயு மில்லாதான் வாழ்க்கை யுடம்பிட்டு
நின்றுவீழ்ந் தக்க துடைத்து.

(ப—ரை) உருவும் — அழகும், இளமையும் — இளமைப் பருவ மும், ஒள் — ஒளிபொருந்திய, பொருளும் — திரவியமும், ஒருவழி- ஒருபிறப்பினும், நில்லாமை — நில்லாது, உட்கும் — கெடுதலை, கண் டும் — பார்த்தும், ஒன்றேயும் — ஒருநல்வினையும், இல்லாதான் — செய் யாதவன், வாழ்க்கை — உயிர் வாழ்தலானது, உடம்பு-உடம்பினை, இட்டு — எடுத்து, நின்று-நிறைவளவினனாய், வீழ்ம் தக்கது — வீழுந் தகுதியை, உடைத்து — உடையது.

(க—ரை.) ஒரு பிறப்பிலுந் தருமஞ் செய்யாதவன் வாழ்வு கெடும்.

(வி—ரை.) வாழ்க்கை—எழுவாய், உடையது—பயனிலை.

103 வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லைக் களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்.

(ப—ரை) வளம் – செல்வம், பட – உண்டாக, வேண்டாதார்-விரும்பாதார், யார் யாரும் – யாவரும், இல்லை – இல்லை;அவர் அவர்-அவரவர் செய்த, ஆற்றான் – வினையால், போகம் – அவரவர்க்கநு போகம், அளந்தன – கற்பித்துக் கிடந்தன; விள காய் – விளங்க னியை, திரட்டினார் – திரட்டினவர், இல்லை-இல்லை; கள கனியை—களாப்பழத்தை, கார் என – கறுப்பாகும்படி, செய்தாரும் – செய் தவரும், இல் – இல்லை.

(க—ரை) செல்வம் வேண்டாதார் யாவரு மில்லை; அவரவர் வினையின்படி செல்வம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

(வி—ரை) போகம் – எழுவாய், அளந்தன-பயனிலை. (௩)

104 உறற்பால நீக்க லுறுவர்க்கு மாகா
பெறற்பா லனையவு மன்னவா மாரி
வறப்பிற் றருவாரு மில்லை யதனைச்
சிறப்பிற் றணிப்பாரு மில்.

(ப—ரை) உறல் பால – உறும் பகுதியான தீவினைகளை,நீக்கல்—நீக்குதல், உறுவர்க்கும் – தபோதனர்க்கும், ஆகா – இயலாவாம்; பெறல் பால் – பெறும் பகுதியான நல்வினைகள், அனையவும்—எல்லாம், அன்ன ஆம் – அத்தன்மையாம்; (அதுபோல) மாரி – மழை, வறப்பில் – மறுத்த காலத்தில்,தருவாரும் – (அதனைப்) பெய்விப்பாரும், இல்லை – இல்லை; சிறப்பில் – (அம்மழை) பெய்யுங் காலத்தில், அதனை – அதை, தணிப்பாரும் – பெய்யாமல் நிறுத்த வல்லாரும், இல் – இல்லை.

(க—ரை) வந்த துன்பங்களை நீக்குதலும், இருக்கிற இன்பங்களைப் போக்குதலும் பெரியோர்க்கு மரிது.

(வி—ரை) நீக்கல் – எழுவாய், ஆகா – பயனிலை. (௪)

105 தினைத்துணைய ராகித்தந் தேசுள் ளடக்கிப்
பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர்
நினைப்பக் கிடந்த தெவனுண்டா மேலை
வினைப்பய னல்லாற் பிற.

(ப—ரை) தினை – தினையினுடைய,துணை ஆகி – அளவினை யுடையவராய்,தம் – தமது,தேசு – ஒளியை,உள்-உள்ளே,அடக்கி – அடங்கச்செய்து, பனை – பனையினுடைய,துணையார்-அளவினையுடையார், வைகலும்-நாடோறும்,பாடு-பெருமை,அழிந்து – கெட்டு, வாழ்வர்-வாழாநிற்பர்; நினைப்ப – விசாரிக்க,கிடந்தது-தக்கது, எவன் – என், உண்டு ஆம் – உளதாம்?, மேலை – முன்செய்த, வினை பயன் – வினையின் பயன், அல்லால் – அல்லது, பிற – வேறொன்று மில்லை.

(க—ரை) வினைவசத்தால் பனையளவு பெருமையை யுடையவரும் தினையளவு பெருமையினை யுடையவரா யடங்கிநிற்பர்.

(வி—ரை) பனைத்துணையார்-எழுவாய், வாழ்வர்-பயனிலை. (௫)

106 பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவுங்
கல்லாதார் வாழ்வ தறிதிரேற்—கல்லாதார்
சேதன மென்னுமச் சேறகத் தின்மையாற்
கோதென்று கொள்ளாதாங் கூற்று.

(ப—ரை) பல் – பல,நூல்களையும்,ஆன்ற – கற்றமைந்த, கேள்வி—கல்வியால் வரும், பயன் – பயனை, உணர்வார் – அறிவார், வீயவும்-இறக்கவும், கல்லாதார் – கல்லாதவர், வாழ்வதும் – உயிர் வாழ்வதும், அறிதிரேல் – காரண மறிவீராகில், கல்லாதார் – கல்லாதவர், சேதனம் என்னும் – அறிவென்னும், அ சேறு – அந்தச்சாரம், அகத்து – மனதில், இன்மையால் – இல்லாமையால், கூற்று – கூற்றுனது, கோது என்று – அவரைச் சக்கையென்றெண்ணி, கொள்ளாதாம் – கொள்ளமாட்டாது.

(க—ரை) இயமனானவன் கற்றோரைச் சாரமாகவும், மற்றோரைச் சக்கையாகவும் கொள்வான்.

(வி—ரை) கூற்று – எழுவாய், கொள்ளாதாம் – பயனிலை. (௬)

107 இடும்பைகூர் நெஞ்சத்தா ரெல்லாருங் காண
நெடுங்கடை நின்றுழல்வ தெல்லா—மடம்பம்பூ
அன்னங் கிழிக்கு மலைகடற் றண்சேர்ப்ப
முன்னை வினையாய் விடும்.

(ப—ரை) அடம்பம் – அடம்பினுடைய, பூ – பூக்களை, அன்னம்-அன்னங்கள், கிழிக்கும் – கிழித்து விளையாடும், அலை – அலைகள் பொருந்திய, தண் – குளிர்ந்த, கடல் – சமுத்திரத்தையும், சேர்ப்ப கரையையுமுடைய பாண்டியனே!, இடும்பை – துன்பம், கூர்மிக்க,

நெஞ்சத்தார் — நெஞ்சினை யுடையார், எல்லாரும் — எல்லாரும், காண — அறிய, நெடும் — நெடிய, கடை — வாயில்கடோறும், நின்று— (இரந்து) நின்று, உழல்வது — திரிவது, எல்லாம் — யாவும், முன்னை— முன்செய்த, வினை ஆய்விடும் — தீவினைப்பயனாய் விடும்.

(க—ரை) பாண்டியனே! இப்பிறப்பில் யாசிக்குஞ் செய்கை முற்பிறப்பிற் செய்வினையாம்.

(வி—ரை) எல்லாம் — எழுவாய், வினையாய்விடும் — பயனிலை.

[தண்டியலங்காரம் பொதுவணியியல்.]

"தெளிவெனப் படுவது பொருள்புலப் பாடே"

இது தெளிவணி. (எ)

108 அறியாரு மல்ல ரறிவ தறிந்தும்
பழியோடு பட்டவை செய்தல்—வளியோடி
நெய்த னறவுயிர்க்கு நீள்கடற் றண்சேர்ப்ப
செய்த வினையான் வரும்.

(ப—ரை) வளி ஓடி — காற்றின் வழியே யோடி, நெய்தல் — நெய்தற் பூவினது, நறவு — வாசனை, உயிர்க்கும் — கமழாநின்ற, நீள்— நீண்ட, தண் — குளிர்ந்த, கடல் — சமுத்திரத்தையும், சேர்ப்ப — கரையையுமுடைய பாண்டியனே!, அறியாரும் — அறியாதாரும், அல்லர்— அல்லது, அறிவது — அறியத்தக்க நூல்களின் பலனை, அறிந்தும்— அறிந்திருந்தும், பழியோடு — பழியுடனே, பட்டவை — பொருந்தியவை, செய்தல் — சிலர் செய்தல், செய்த — முன்செய்த, வினையால்— தீவினைப்பயனால், வரும் — வரும்.

(க—ரை) பாண்டியனே! நூல்களை யறிந்தும் தீவினைகளைச் செய்தல் முன் செய்வினை வசமாம்.

(வி—ரை) செய்தல் — எழுவாய், வரும் — பயனிலை. (அ)

109 ஈண்டுநீர் வையத்து ளெல்லாரு மெத்துணையும்
வேண்டார்மற் றீய விழைபய னல்லவை
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுத லரிது.

(ப—ரை) ஈண்டு நீர் வையத்துள் — விரிநீர் சூழ்ந்த உலகத்துள், எல்லாரும் — யாவரும், எத்துணையும் — தமக்கு எவ்வளவும், தீய— கொடியவை, விழை — கலந்த, பயன் — துன்பங்களை, வேண்டார்—

வேண்டியிரார்; நல்லவை – நல்வினைப் பயன்களை, வேண்டினும் – விரும்பினாராயினும், வேண்டாவிடினும் – விரும்பா விட்டாலும், உறல் பால – வரும் வினைகள், தீண்டா – அவரைத் தீண்டாமல், விடுதல் – நீங்குதல், அரிது – அரிது.

(க–ரை) யாவரும் நல்வினை தீவினைகளை வேண்டினும் வேண்டாவிடினும் வரும் வினைகள் வாராமலிராவாம்.

(வி–ரை) விடுதல் – எழுவாய், அரிது – பயனிலை, மன் – ஒழிபிசை.

110 சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
வுறுகாலத் தூற்றாகா வாமிடத்தே யாகுஞ்
சிறுகாலைப் பட்ட பொறியு மதனால்
இறுகாலத் தென்னை பரிவு.

(ப–ரை) சிறுகாலை – முற்காலத்து, பட்ட – உண்டாகிய, பொறியும் – நல்வினைகளும், சிறுகா – சிறுகாவாம்; பெருகா – பெருகாவாம்; முறை – வரிசை, பிறழ்ந்து – மாறி, வாரா–வாராவாம்; உறு காலத்து – துன்புறுங் காலத்து, ஊற்று ஆகா – வந்து தங்காவாம்; ஆம் இடத்தே – ஆங்காலத்தே, ஆகும் – ஆகும், அதனால் – (அத்துணையே) ஆதலால், இறு காலத்து – (தீவினைப்பயனால்) கேடுவருங் காலத்து, பரிவு – வருந்துவது, என்னை – யாது?

(க–ரை) நல்வினைகள் சிறுகலும், பெருகலும், முறை மாறி வருதலு மில்லை; வரும்போது வரும்; தீவினைகள் வந்தபோது வருந்துவ தென்ன?

(வி–ரை) பரிவு – எழுவாய், என்னை – பயனிலை.

[தண்டியலங்காரம் பொதுவணியியல்.]

“சொல்லினும் பொருளினுஞ் சுவைப்பட லின்பம்.”

இஃது இன்பவணி. (௧0)

பழவினை முற்றிற்று.

## கஉ-ஆம் அதிகாரம்-மெய்ம்மை

[அஃதாவது உண்மை கூறுதலாம்]

111 இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை—நசையழுங்க
நின்றோடிப் பொய்த்த னிரைதொடீஇ செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்ற முடைத்து.

(ப—ரை) நிரை தொடீஇ – வரிசையாக அணிந்த வளையல்களை யுடையவளே!, இசையா – கிடையாத, ஒரு பொருள் – ஒரு பொருளை, இல் என்றல் – இல்லையென்று சொல்லல், யார்க்கும் – யாவர்க்கும், வசை அன்று – குற்றமல்ல, வையத்து – பூமியில், இயற்கை— இயல்பாகும்; நசை – ஆசை, அழுங்க – கெட, நின்று ஓடி – நெடுங் கால நின்று, பொய்த்தல் – பொய் சொல்லல், செய் நன்றி – பிறர் செய்த வுதவியை, கொன்றாரில் – கொன்றவரைப் பார்க்கிலும், குற்றம் – குற்றம், உடைத்து – உடையதாம்.

(க—ரை) பெண்ணே ! ஒருவரைப் பலகால் திரியவைத்து இல்லையென்று சொல்லல் செய்ந்நன்றி அழித்ததிலுங் குற்றமுடையதாம்.

(வி—ரை) பொய்த்தல் – எழுவாய், குற்றமுடைத்து—பயனிலை.

112 தக்காருந் தக்கவ ரல்லாருந் தந்நீர்மை
எக்காலுங் குன்ற லிலராவர்—அக்காரம்
யாவரே தின்னினுங் கையாதாங் கைக்குமாம்
தேவரே தின்னினும் வேம்பு.

(ப—ரை) தக்காரும் – பெரியோரும், தக்கவர் அல்லாரும்— சிறியோரும், தம் – தமது, நீர்மை – குணங்களில், எக்காலும் – எந்நாளும், குன்றல் – குறைதல், இலர் ஆவர் – இல்லாதவராவர்; அக்காரம் – வெல்லத்தை, யாவர் – எவர், தின்னினும் – தின்றாலும், கையாது – கசக்காது; வேம்பு – வேம்பை, தேவர்-தேவர்கள், தின்னினும் – தின்றாலும், கைக்கும் – கசக்கும்.

(க—ரை) பெரியோரும் சிறியோரும் தங்கள் குணங்களில் குறைவுபடார்கள்.

(வி—ரை) குன்றல் – எழுவாய், இலராவர் – பயனிலை, ஆம், உம், ஏ, உம் – அசைகள்.

113 காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர்—ஏலா
இடரொருவ ருற்றக்கா லீர்ங்குன்ற நாட
தொடர்புடையே மென்பார் சிலர்.

(ப—ரை) ஈர் குன்றம் – குளிர்ந்த மலையையும், நாட – நாட்டை யுமுடைய பாண்டியனே!, ஒருவர் – ஒருவர், கால் ஆடு போழ்தில்– (செல்வமுற்றுச்) சஞ்சரிக்குங்காலத்து, கழி – மிகுந்த, கிளைஞர்– உறவினர், வானத்து – ஆகாயத்து, மேல் ஆடு – மேலே சஞ்சரிக் கும், மீனில் – நட்சத்திரங்களைப்பார்க்கிலும், பலர் ஆவார்-அநேக ராவார்; ஏலா – பொருந்தாத, இடர் – துன்பங்களை, உற்றக்கால்– அடைந்தால், சிலர் – சிலர்மாத்திரம், தொடர்பு – சம்பந்தம், உடை யோம் – உடையோம், என்பார் – என்று சொல்லுவார்கள்.

(க—ரை) பாண்டியனே! ஒருவர் நடந்துதிரியுங்காலத்துப் பல பேர் உறவின ராவார்கள்; அவரே துன்படைந்த காலத்துச் சில பேர் உறவின ராவார்கள்.

(வி—ரை) கிளைஞர் – எழுவாய், ஆவர் – பயனிலை. சிலர் – எழு வாய், என்பார் – பயனிலை. (ங)

114 வடுவிலா வையத்து மன்னிய மூன்றி
னடுவண தெய்த விருதலையு மெய்து
நடுவண தெய்தாதா னெய்தும் உலைப்பெய்
தடுவது போலுந் துயர்.

(ப—ரை) வடு இலா – குற்றமில்லாத, வையத்து – பூமியில், மன்னிய – நிலைபெற்ற, மூன்றில் – (அறம், பொருள், இன்பமென் னும்) மூன்றனுள், நடுவணது – நடுவாகிய பொருள், எய்த – பொ ருந்த, இருதலையும் – தருமமும் காமமும், எய்தும் – அடையும்; நடு வணது – பொருளை, எய்தாதான் – அடையாதவன், உலை – உலை யில், பெய்து – போட்டு, அடுவதுபோலும் – (ஆமையைக்) கொல் லுதல்போலும், துயர் – துன்பத்தை, எய்தும் – அடைவான்.

(க—ரை) பொருளையடைந்தவன் புண்ணியத்தையும், இன்பத் தையும் அடைவான்; பொருளை யடையாதவன் துன்பத்தை யடை வான்.

(வி—ரை) இருதலே — எழுவாய், எய்தும் — பயனிலே, பொருளே — செயப்படுபொருள். எய்தாதான் — எழுவாய், எய்தும் — பயனிலே, துயரத்தை — செயுப்படுபொருள். (௪)

115 நல்லாவின் கன்றாயி னாகும் விலேபெறூஉங்
கல்லாரே யாயினுஞ் செல்வர்வாய்ச் சொற்செல்லும்
புல்லீரப் போழ்தி னுழவேபோன் மீதாடிச்
செல்லாவா நல்கூர்ந்தார் சொல்.

(ப—ரை) நல் — நல்ல, ஆவின் — பசுவின், கன்று ஆயின் — கன்றானல், நாகும் — இளங்கன்றும், விலே பெறூஉம் — விலே பெறும் கல்லாரே ஆயினும் — கல்லாதவரானாலும், செல்வர் வாய் — ஐசுவரியவான்கள் வாக்கிற் பிறக்கும், சொல் செல்லும் — சொற்கள் செல்லும்; நல்கூர்ந்தார்சொல் — வறியவர் வாக்கிற்பிறக்குஞ் சொற்கள், புல் ஈரம் — அற்ப ஈரம் பொருந்திய காலத்தில், (உழும்) உழவே போல் — உழுபடைச் சால்போல, மீது ஆடி — மேலாடி, செல்லா ஆம் — செல்லமாட்டவாம்.

(க—ரை) செல்வவான்கள் சொற்கள் செல்லும்; தரித்திரர் சொற்கள் செல்லாவாம்.

(வி—ரை) சொல்-எழுவாய், செல்லாவாம்—பயனிலே. ஏ-அசை.

116 இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்றும்
அடங்காதா ரென்று மடங்கார்—தடங்கண்ணாய்
உப்பொடு நெய்பா றயிர்காயம் பெய்தடினும்
கைப்பறா பேய்ச்சுரையின் காய்.

(ப—ரை) தட கண்ணாய் — விசாலம் பொருந்திய கண்களேயுடையவளே!, உப்பொடு — உப்புடன், நெய் — நெய்யும், பால் — பாலும், தயிர் — தயிரும், காயம் — பெருங்காயமும், பெய்து — இட்டு, பேய்ச்சுரையின்காய் — பேய்ச்சுரைக்காயை, அடினும் — சமைத்தாலும், கைப்பு அறா — (அதன்) கசப்பு நீங்காது; (அதுபோல) — மெய்ஞானம் — உண்மைஞான நூற்களே, என்றும் — எந்நாளும், இடம்பட — விரிவாக, கற்பினும் — கற்றாலும், அடங்கார் — அடங்காதவர்கள், என்றும் — எந்நாளும், அடங்கார் — அடங்கார்.

(க—ரை) பெண்ணே! அடங்காதவர்கள் எக்காலமும் அடங்கார்.

(வி—ரை) அடங்காதார் — எழுவாய், அடங்கார் — பயனிலே.

[அவிநயர் சூத்திரம்.]

"குறட்பா விரண்டவை நால்வகைத் தொடையாய்
முதற்பா தனிச்சொலி னடிமூஉ யிருவகை
விகற்பி னடப்பது நேரிசை வெண்பா."

இஃது இவ்விதியால் நேரிசை வெண்பா. (சு)

117 தம்மை யிகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க
என்னை யவரொடு பட்டது—புன்னை
விறற்பூங் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப
உறற்பால யார்க்கு முறும்.

(ப—ரை) புன்னை – புன்னையினது, விறல் – மிக்க, பூ – பூக்களின் மணம், கமழ் – பரிமளிக்கின்ற, கானல் – சோலையையும், வீங்கு – நிறைந்த, நீர்-நீரினையும், சேர்ப்ப – கடற்கரையையுமுடைய பாண்டியனே!, உறல் பால – வருபவை, யார்க்கும் – யாவருக்கும், உறும் – வருமாதலால், தம்மை – தங்களை, இகழ்வாரை – இகழ்பவர்களை, தாம் – தாங்கள், அவரின் முன் இகழ்க – அவர்களின் முன்பாக யிகழக்கடவர்கள்; அவரோடு பட்டது – அவர்கள்பின்று லிகழப்பட்ட தன்மை, என்னை – என்ன?

(க—ரை) பாண்டியனே! தங்களை யிகழ்ந்தவர்கள் முன்பாகத் தாங்கள் இகழக்கடவர்கள் அவர்கள் பின் இகழ்வ தென்னை?

(வி—ரை) தாம் – எழுவாய், இகழ்க – பயனிலை. (எ)

.8 ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம்—பால்போல்
ஒருதன்மைத் தாகு மறநெறி யாபோ
லுருவு பலகொள லீங்கு.

(ப—ரை) ஆ – பசுக்கள், வேறு – வேறுபட்ட, உருவின ஆயினும் – உருவங்களை யுடையனவாயினும், ஆ – அப்பசுக்கள், பயந்த – கொடுத்த, பால் – பாலெல்லாம், வேறு – வேறுபட்ட, உருவின – உருவங்களையுடையன, அல்ல ஆம் – அல்லனவாம்; பால்போல் – அப்பால்போல, அறம் – அறத்தினது, நெறி – வழி, ஒருதன்மைத்து – ஒருதன்மையை யுடையது, ஆகும் – ஆம்; ஆ போல் – அப்பசுக்கள்போல, ஈங்கு – ஈங்குண்டாகிய சமயங்களும், பல – பல, உருவு – வேடங்களை, கொளல் – கொண்டிருக்கும்.

(க—ரை) பசுக்க ளெல்லாம் வேறுருவானாலும் பாலெல்லாம் ஓருருவே; அதுபோல, யார் செய்யினுந் தருமமெல்லா மொருவழி யாகும், இப்படியே சமயங்கள்.

(வி—ரை) அறநெறி – எழுவாய், ஆகும்—பயனிலை. சமயங்கள்—எழுவாய், கொளல் – பயனிலை, வேடங்களை – செயப்படுபொருள்.

[அகத்தியச் சூத்திரம்]

“முதலு மூன்று நாற்சீ ராகியும்
இரண்டு மீறு முச்சீ ராகியுந்
தனிச்சொற் சீர்கொளு நேரிசை வெண்பா.” (அ)

119 யாஅ ருலகத்தோர் சொல்லில்லார் தேருங்கால்
யாஅ ருபாயத்தின் வாழாதார்—யாஅர்
இடையாக வின்னாத தெய்தாதார் யாஅர்
கடைபோகச் செல்வமுய்த் தார்.

(ப—ரை) தேரும் கால் – ஆராயுமிடத்து, உலகத்து – உலகில், ஓர் சொல் – ஓர் நிந்தைச் சொல்லை, இல்லார் – இல்லாதவர், யார்-யாவர்?, உபாயத்தின் – (முற்பிறப்பில் தவஞ் செய்த) வுபாயத்தால், வாழாதார் – (இப்பிறப்பில்) வாழாதார், யார் – யாவர்? இடை ஆக-இறக்குமுன், இன்னாதது – துன்பத்தை, எய்தாதார் – அடையாத வர், யார் – யாவர்? கடை போக – முடிவளவும், செல்வம் – செல் வத்தை, உய்த்தார் – செலுத்தினவர், யார் – யார்தாம்? (ஒருவரு மில்லை)

(க—ரை) உலகத்தில் ஓர் நிந்தையேனும் அடையாதார் யார்? வாழாதார் யார்? யார் துன்பம் அடையாதார்? யார் முற்றுஞ் செல் வம் பெற்றார்?

(வி—ரை) யார்-எழுவாய், யார்-பயனிலை.

120 தாஞ்செய் வினையல்லாற் றம்மொடு செல்வதுமற்
றியாங்கணுந் தேரிற் பிறிதில்லை—யாங்குத்தாம்
போற்றிப் புனைந்த வுடம்பும் பயனின்றே
கூற்றங்கொண் டோடும் பொழுது.

(ப—ரை) ஆங்கு – அவ்விடத்து, தாம் – தாங்கள், போற்றி—காத்து, புனைந்த – அழகு செய்த, உடம்பும் – சரீரமும், கூற்றம்-கூற்றுவன், கொண்டு – தமது உயிரைக்கொண்டு, ஓடும்பொழுது-

போங்காலத்தில், பயன் - பிரயோசனம், இன்று - இல்லை; தாம் - தாங்கள், செய் - செய்த, வினை - இருவினையும், அல்லால் - அல்லாது, தம்மொடு - தம்முடனே, செல்வது - கூடப்போவது, யாங்கணும் - எக்காலத்தாயினும், தேரில் - ஆராய்ந்தால், பிறிது இல்லை - வேறொன்றுமில்லை.

(க-ரை) தாங்கள் செய்த நல்வினை தீவினையே தங்களோடு கூட வரும்.

(வி-ரை) வினை - எழுவாய், பிறிதில்லை - பயனிலை. (௧௦)

மெய்ம்மை முற்றிற்று.

## கங-ஆம் அதிகாரம்-தீவினையச்சம்

[அஃதாவது தீவினைக்கு அஞ்சுதலாம்.]

121 துக்கத்துட் டூங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே புலன்கெட்ட
புல்லறி வாளர் வயிறு.

(ப—ரை) துக்கத்துள் – துன்பத்தினிடத்து, தூங்கி – மயங்கி, துறவின்கண் – துறவறத்திலே, சேர்கலா – அடையாத, மக்கள்—மக்களின், பிணத்த – பிணங்களை யுடையன, சுடுகாடு-சுடுகாடுகள்; தொக்க – நெருங்கிய, விலங்கிற்கும் – மிருகங்களுக்கும், புள்ளிற்கும் – பறவைகளுக்கும், காடு – காடுகளாவன, புலன்கெட்ட-அறிவு கெட்ட, புல் அறிவு ஆளர் – அறிவீனருடைய, வயிறு – வயிறுகள்.

(க—ரை) மிருகங்கள் பறவைகள் இவற்றினுக்கு அறிவீனர்களுடைய வயிறுகளே சுடுகாடுகளாம்.

(வி—ரை) வயிறு-எழுவாய், காடு-பயனிலை. (க)

122 இரும்பார்க்குங் காலரா யேதிலார்க் காளாய்க்
கரும்பார் கழனியுட் சேர்வர்—சுரும்பார்க்குங்
காட்டுளாய் வாழுஞ் சிவலும் குறும்பூழுங்
கூட்டுளாய்க் கொண்டுவைப் பார்.

(ப—ரை) சுரும்பு—வண்டுகள், ஆர்க்கும் – சத்திக்கும், காட்டுள் ஆய் – காட்டிடமாய், வாழும் – வாழுகின்ற, சிவலும் – கவுதாரியையும், குறும் பூழும் – காடையையும், கூட்டுள் ஆய் – கூட்டிடமாய், கொண்டு வைப்பார – கொண்டுபோய் அடைப்பவர்கள், இரும்பு-இரும்புவிலங்கு, ஆர்க்கும் – சத்திக்கும், காலர் ஆய் – கால்களை யுடையவராய், ஏதிலார்க்கு – பகைவருக்கு, ஆள் ஆய் – அடிமையாய், கரும் பார் – இருட் பூமியாகிய, கழனியுள் – வயலிடத்தில், சேர்வர் – அடைவார்கள்.

(க—ரை) இப்பிறப்பில் காடை கவுதாரி முதலானவற்றைக் கூட்டில் அடைப்பவர்கள் மறுபிறப்பில் விலங்கு பூண்டு நரகத்திலடைவார்கள்.

(வி—ரை) வைப்பார் – எழுவாய், சேர்வர் – பயனிலை. (உ)

123 அங்கேபோ லங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோ யெழுபவே—அக்கால்
அலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்.

(ப—ரை) அ கால்—முற்பிறப்பில், அலவனை — நண்டுகளை, காதலித்து — இச்சித்து, கால் முரித்து — கால்களை ஒடித்து, தின்ற— உண்ட, பழவினை — பழைய வினை, வந்து அடைந்தக்கால் — வந்தால், அக்கே போல் — சங்குமணிபோல், அகம் கை — அகங்கை, ஒழிய — தவிர, விரல் — விரல்கள், அழுகி — அழுகி, தொழு நோய்— குஷ்டநோயில், துக்கம் — துன்பமடைந்து, எழுப — திரிவார்கள்.

(க—ரை) முற்பிறப்பில் நண்டுகளைத் தின்றவர்கள் இப்பிறப்பில் குஷ்ட வியாதி கொண்டு திரிவார்கள்.

(வி—ரை) தொழுநோய்—எழுவாய், எழுப — பயனிலை. ஏ—அசை.

[நன்னூல்]

"அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும்."

இவ்விதியால் அகங்கை — அங்கை யாயிற்று. (௩)

124 நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல் வதூஉ
மெரிப்பச்சுட் டெவ்வநோ யாக்கும்—பரப்பக்
கொடுவினைய ராகுவர் கோடாருங் கோடிக்
கடுவினைய ராகியார்ச் சார்ந்து.

(ப—ரை) நெருப்பு — நெருப்பினது, அழல் — வெம்மையை, சேர்ந்தக்கால் — சேர்ந்தால், நெய் போல்வதூஉம் — நெய்போலக் குளிர்ச்சியையுடையதும், எரிப்ப — எரிக்கும்படி, சுட்டு — கொளுத்தி, எவ்வம் — துன்பமாகிய, நோய் — நோயை, ஆக்கும் — உண்டாக்கும்; (அதுபோல) கோடாரும் — நன்னடை பிறழாதவர்களும், கடு வினையர் ஆகியார் — கொடியவர்களை, சார்ந்து — சேர்ந்து, கோடி — நன்னடை பிறழ்ந்து, பரப்ப — மிகவும், கொடு — கொடிய, வினையர் ஆகுவர் — வினையுடையவராவார்கள்.

(க—ரை) துன்மார்க்கரைச் சேர்ந்த நன்மார்க்கரும் துன்மார்க்கராவார்கள்.

(வி—ரை) கோடார் — எழுவாய், ஆகுவர் — பயனிலை. (௪)

125 பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு.

(ப—ரை) பெரியவர் – பெரியோர்கள், கேண்மை – சினேகம், பிறைபோல – இளம்பிறைபோல, நாளும் – எந்நாளும், வரிசை வரிசை ஆ-கிரமங் கிரமமாக, நந்தும் – வளரும்; சிறியார் – சிறியோர்கள், தொடர்பு – சினேகம், வான் – ஆகாயத்திலே, ஊர் – செல்லும், மதியம்போல் – பூர்ணசந்திரன்போல், வைகலும் – தினந்தோறும், வரிசையால் – கிரமமாய், தானே – தனக்குத்தானே, தேயும்– குறைந்துபோகும்.

(க—ரை) பெரியோர்கள் சினேகம் பிறைபோல் வளரும்; சிறியோர்கள் சினேகம் நிறை சந்திரன் குறைதல்போற் குறையும்.

(வி—ரை) கேண்மை – எழுவாய், நந்தும் – பயனிலை. தொடர்பு – எழுவாய், தேயும் – பயனிலை. ஏகாரம்—அசை. (ரு)

126 சான்றோ ரெனமதித்துச் சார்ந்தாய்மற் சார்ந்தாய்க்குச்
சான்றாண்மை சார்ந்தார்க ணில்லாயிற்—சார்ந்தோய்கேள்
சாந்தகத் துண்டென்று செப்புத் திறந்தொருவன்
பாம்பகத்துக் கண்ட துடைத்து.

(ப—ரை) சான்றோர் என – பெரியோரென, மதித்து – எண்ணி, சார்ந்தாய் – சேர்ந்தவனே!, சார்ந்தாய்க்கு – சேர்ந்த வுனக்கு, சான்றாண்மை – பெருந்தன்மை, சார்ந்தார்கண்-நீ சேரப்பட்டவரிடத்து, இல் ஆயின் – இல்லாவிடில், சார்ந்தோய் – சேர்ந்தவனே!, கேள்– கேட்பாயாக, சாந்து – கலவைச் சாந்து, அகத்து – உள்ளிடத்து, உண்டு என்று – இருக்கிறதென்று, செப்பு – செப்பை, திறந்து– திறந்து, ஒருவன் – ஒருவன், அகத்து – உள்ளே, பாம்பு – பாம்பை, கண்டது உடைத்து – கண்டதுபோலும்.

(க—ரை) நன்மார்க்க முண்டென்று நீ சேரப்பட்டவரிடத்துத் துன்மார்க்க முண்டாயிருத்தல் எதுபோலெனில், ஒருவன் செப்பினுள்ளே சாந்து உண்டென்று திறந்து பாம்பைக் கண்டாற்போலும்.

(வி—ரை) ஒருவன் — எழுவாய், உடைத்து — பயனிலை, தன்மையை — செயப்படுபொருள். மன் — அசை. (சு)

127 யாஅ ரொருவ ரொருவர்த முள்ளத்தைத்
தேருந் துணைமை யுடையவர்—சாரற்
கனமணி நின்றிமைக்கு நாடகேண் மக்கள்
மனம்வேறு செய்கையும் வேறு.

(ப—ரை) சாரல் — மலைச்சாரலிலே, கனம் — பொன்னும், மணி-அரதநங்களும், நின்று — இருந்து, இமைக்கும் — பிரகாசிக்கும், நாட — நாட்டையுடைய பாண்டியனே!, கேள் — கேட்பாயாக: மக்கள் — மனிதர்கள், மனம் — மனத்தி லெண்ணுவதும், வேறு — வேறு, செய்கையும் — நடக்கையும். வேறு — வேறு; (ஆதலால்) — ஒருவர்— ஒருவர், ஒருவர்தம் — மற்றொருவருடைய, உள்ளத்தை — மனதை, தேரும் — அறியும், துணைமை உடையவர் — அளவினையுடையவர், யார் — யாவர் ?

(க—ரை) பாண்டியனே! ஒருவர் மனதை மற்றொருவ ரறியார்.

(வி—ரை) உடையவர் — எழுவாய், யார் — பயனிலை. (எ)

128 உள்ளத்தா னள்ளா துறுதித் தொழிலராய்க்
கள்ளத்தா னட்டார் கழிகேண்மை—தெள்ளிப்
புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட
மனத்துக்கண் மாசாய் விடும்.

(ப—ரை) தெள்ளி — மணிகளைக் கொழித்து, புனல் — அருவி நீரானது, செதும்பு நின்று — சேறு பொருந்தி, அலைக்கும் — ஒதுக்கும், பூ — அழகிய, குன்றம் — மலையையும், நாட — நாட்டையுமுடைய பாண்டியனே!, உள்ளத்தால் — மனதால், நள்ளாது — சினேகியாது, உறுதி தொழிலர் ஆய் — பலம் பொருந்திய செய்கையை யுடையராய், கள்ளத்தால் — வஞ்சத்தால், நட்டார் — சினேகித்தவரது, கழி- மிகுந்த, கேண்மை — சினேகம், மனத்துக்கண் — மனதினிடத்தில், மாசு ஆய் விடும் — குற்றமாய் முடியும்.

(க—ரை) பாண்டியனே ! மனங் கலந்து உறவு செய்யாது வஞ்சகமாக உறவு செய்தல் மனதிடத்திற் குற்றமாம்.

(வி—ரை) கேண்மை — எழுவாய், மாசாய்விடும் — பயனிலை.(அ)

129 ஓங்கிய வொள்வாடன் னொன்னார்கைப் பட்டக்கால்
ஊக்க மழிப்பதூஉ மெய்யாகு—மாக்கம்
இருமையுஞ் சென்று சுடுதலா னல்ல
கருமமே கல்லார்கட் டீர்வு.

(ப—ரை) ஒக்கிய – ஓங்கிய, ஒள் – ஒளி பொருந்திய, வாள்—தன் வாளாயுதம், தன் ஒன்னார் – தன் சத்துருக்கள், கை – கையில், பட்டக்கால் – அகப்பட்டால், ஊக்கம் – மனத் தைரியத்தை, அழிப்பதூஉம் – கெடுப்பதும், மெய் ஆகும் – உண்மையாகும்; ஆக்கம்— தீவினைப் பலன், இருமையும் – இம்மைய மறுமையும், சென்று— தன்னுடன் சென்று, சுடுதலால் – வருத்துதலால், கல்லார்கண்— தீவினையாளரிடத்து, தீர்வு – சினேகம் நீங்குதல், நல்ல கருமமே- நல்ல காரியமேயாம்.

(க—ரை) தீவினையாளரிடத்துச் சினேக நீங்குதல் நல்லது.

(வி—ரை) தீர்வு – எழுவாய், கருமம் – பயனிலை. ஏ – அசை.

[நன்னூல்]

"வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்த றொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி."

இவ்விதியால் 'ஒக்கிய' என வலித்தல் விகாரமாயிற்று. (கூ)

130 மனைப்பாசங் கைவிடாய் மக்கட்கென் றேங்கி
யெனைத்தூழி வாழ்தியோ நெஞ்சே—எனைத்துஞ்
சிறுவரையே யாயினுஞ் செய்தநன் றல்லா
லுறுபயனோ வில்லை யுயிர்க்கு.

(ப—ரை) நெஞ்சே – மனமே!, மனை – இல்வாழ்க்கையின், பாசம் – ஆசையை, கைவிடாய் – விட்டுவிடாய்; மக்கட்கு என்று— மக்களுக்கென்று, ஏங்கி – இரங்கி, எனைத்து ஊழி – எவ்வளவு காலம், வாழ்தியோ – வாழ்வாயோ?; சிறுவரை – சிறுபொழுது, ஆயினும் – ஆனாலும், செய்த – தான் செய்த, நன்று – தருமப்பலன், அல்லால் – அல்லது, எனைத்தும் – எவ்வளவும், உயிர்க்கு – (நம்) உயிர்க்கு, உறு பயன் – பொருந்திய பலன், இல்லை – இல்லை.

(க—ரை) மனமே! நம்முயிர்க்குத் தருமத்தையன்றிப் பல னில்லை.

(வி—ரை) உறுபயன் – எழுவாய், இல்லை – பயனில்லை. ஏ ஓ- அசைகள். (கO)

தீவினையச்சம் முற்றிற்று.

ஆக அதிகாரம் கா-க்குச் செய்யுள்-காO.

இல்லறவியல் முற்றிற்று.

---

அறத்துப்பால் முற்றுப்பெற்றது.

---

# இரண்டாவது பொருட்பால்

[அஃதாவது பொருளினுடைய பகுப்பாம்.]

## கச-ஆம் அதிகாரம் கல்வி

[அஃதாவது கல்வியைப்பற்றிச் சொல்லியது.]

131 குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு.

(ப—ரை) குஞ்சி – மயிரினுடைய, அழகும் – அழகும், கொடும்– மடிப்புள்ள, தானை-ஆடையினுடைய, கோடு – கரைக்கோட்டினது, அழகும் – அழகும், மஞ்சள் – மஞ்சளினுடைய, அழகும் – அழகும், அழகு அல்ல – அழகல்லவாம்; நெஞ்சத்து – மனதில், நடுவு நிலைமையால் – நடுவு நிலையால், நல்லம் – நன்மையுடையோம், யாம் என்னும் – யாமென்று சொல்லும், கல்வி – வித்தையினுடைய, அழகே – அழகே, அழகு – ஒருவர்க்கு அழகாகும்.

(க—ரை) ஒருவர்க்குக் கல்வி அழகே அழகாகும்; மற்றை அழகுகள் அழகல்லவாம்.

(வி—ரை) அழகு – எழுவாய், கல்வி அழகு – பயனிலை.

"ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப."

இவ்விதியால் ஒருவர் என்றது ஆண்பாற்கும் பெண்பாற்குங் கொள்க. மஞ்சள் பெண்பாற்கும், மஞ்சள் கலந்த சந்தனம் ஆண் பாற்குமாம். கல்வி பெண்பாற்கும் வேண்டுவ தென்பதாயிற்று.

132 இம்மை பயக்குமா லீயக் குறைவின்றால்
தம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றா
லெம்மை யுலகத்தும் யாங்காணோங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து.

(ப—ரை) இம்மை – இப்பிறப்பில், பயக்கும் – பயன் கொடுக்கும்; ஈய – (பிறர்க்குக்)கொடுக்க, குறைவு இன்று – குறைத லில்லை;

தம்மை — கற்றவர் தங்களை, விளக்கும் — விளங்கச் செய்யும்; தாம் உளர் ஆ — தாம் உயிருள்ளவராக வாழுமளவும், கேடு இன்று — கேடில்லை; ஆல் — ஆதலால், எம்மை உலகத்தும் — எவ்வுலகத்தும், யாம்— நாம், கல்வி போல் — வித்தையைப் போல, மம்மர் — மயக்கத்தை, அறுக்கும் — தீர்க்கும், மருந்து — மருந்தை, காணேம் — கண்டறியோம்.

(க—ரை) கல்விக்கு மேலான தொன்றில்லை.

(வி—ரை) யாம் — எழுவாய், காணேம் — பயனிலை, மருந்து— செயப்படுபொருள். (உ)

133 களர்நிலத் துப்பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

(ப—ரை) களர் நிலத்து — உவர் நிலத்தில், பிறந்த — உண்டான, உப்பினை — உப்பை, சான்றோர் — பெரியோர், விளை — விளைகின்ற, நிலத்து — வயல் நிலத்துப் பிறந்த, நெல்லின் — நெல்லைப் பார்க்கிலும், விழுமிது ஆ — சிறப்பாக, கொள்வர் — கொள்வார்கள்; (அது போல), கடை — கடையான, நிலத்தோர் ஆயினும் — சாதியிற் பிறந்தாராயினும், கற்று அறிந்தோரை — கற்றுணர்ந்தவரை, தலை நிலத்து — முதன்மையான இடத்து, வைக்கப்படும் — வைக்கத்தகும்.

(க—ரை) தாழ்ந்த நிலத்திற் பிறந்த வுப்பை உயர்ந்த நிலத்திற் பிறந்த நெல்லினுஞ் சிறப்பாகக்கொள்வர்; அதுபோலக் கீழ்குலத்தோராயினுங் கற்றோரை மேலிடத்து வைக்கத்தகும்.

(வி—ரை) சான்றோர் — எழுவாய், கொள்வர் — பயனிலை. (ஙு)

134 வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர் செறின்வவ்வார்
எச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.

(ப—ரை) வைப்பு உழி — வைத்தவிடத்தில், கோள்படா — பிறரால் கொள்ளப்படாது; வாய்த்து — பொருந்தி, ஈயின் — கொடுத்தால், கேடு இல்லை — குறைவில்லை; மிக்க — மிகுந்த, சிறப்பின் — சிறப்புடைய, அரசர் — அரசர்கள், செறின் — கோபித்தால், வவ்வார் - கவரார்; (ஆகையால்) ஒருவன் - ஒருவன், மக்கட்கு — தன் புதல்வர்க்கு,

எச்சம் என — (தேடியிடும்) பிள்ளையென, செய்வன — செய்யத் தகுவன, விச்சை — கல்விகளே; பிற — பிறவெல்லாம், அல்ல — தேடி வைக்குஞ் செல்வங்களல்ல.

(க—ரை) ஒருவன் தன் பிள்ளைக்குத் தேடியிடும் பிள்ளையாகக் கல்வி யொன்றே கற்பிக்கவேண்டும்.

(வி—ரை) விச்சை — எழுவாய், செய்வன — பயனிலை. மற்று — அசை. (ச)

135 கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து.

(ப—ரை) கல்வி — கல்விகள், கரை இல — அளவில; கற்பவர் — கற்பவர்களுக்கு, நாள் — வாழ்நாள்கள், சில — சிலவுள; மெல்ல — மெதுவாக, நினைக்கில் — ஆராய்ந்தால், பிணி — நோய்கள், பல — பலவுள; தெள்ளிதின் — தெளிவுள்ள அறிவால், ஆராய்ந்து — விசாரித்து, அமைவு உடைய — நிறைவுடைய நூல்களை, நீர் ஒழிய — சலநீங்க, பால் — பாலை, உண் — உண்ணும், குருகில் — அன்னம்போல, தெரிந்து — அறிந்து, கற்ப — (அறிவுடையோர்கள்) கற்பார்கள்.

(க—ரை) அன்னம் நீரை நீக்கிப் பாலைக் கொள்ளுதல்போல, அறிவுடையோர்கள் பொய்ந்நூலைத் தள்ளி மெய்ந்நூலைக் கற்பார்கள்.

(வி—ரை) (அறிவுடையோர்) — தோன்றா எழுவாய், கற்ப — பயனிலை, அமைவுடைய — செயப்படுபொருள். ஏ — அசை. (ரு)

136 தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்—காணா
யவன்றுணையா வாறுபோ யற்றேநூல் கற்ற
மகன்றுணையா நல்ல கொளல்.

(ப—ரை) தொல்லை — பழைய, வருணத்து — சாதிகளுள், காணில் — ஆராயில், தோணி — தோணியை, இயக்குவான் — ஓட்டுவான், கடை — கீழ்ச்சாதியில், பட்டான் என்று — பிறந்தவனென்று, இகழார் — இகழார்கள்; அவன் — அவனையே, துணையா — துணையாக,

ஆறு — ஆற்றை, போய் அற்றே-கடந்துபோவது போலும், காணுய்-பாராய், நூல் — நூல்களை, கற்ற மகன் — கற்றவன் இழிவானவனுகினும், துணை ஆ — அவனே துணையாக, நல்ல — நல்ல நூற்பொருள்களை, கொளல் — (ஒருவன்) கற்றுக்கொள்ளல் வேண்டும்.

(க—ரை.) ஒருவன் இழிந்தோனிடத்துங் கல்வியைக் கற்க வேண்டும்.

(வி—ரை) (ஒருவன்) — தோன் எழுவாய், கொளல் — பயனிலை, நல்ல — செயப்படுபொருள். (கூ)

137 தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி.

(ப—ரை) தவல் அரு — கேடில்லாத, தொல்—பழைய, கேள்வி-கல்விகளால் வரும், தன்மை — குணங்களை, உடையார் — உடையவர்களும், இகல் இலர் — பகை யில்லாதவர்களும், எஃகு உடையார் — கூரிய புத்திக்கூர்மையுடையவர்களும், தம்முள் — தங்களிடத்தில், குழீஇ — கூடவிருந்து, நகலின் — மகிழ்தலைப் பார்க்கினும், அகல் — அகன்ற, வானத்து — வானத்தில், உம்பர் — தேவர்கள், உறை — வாசம்பண்ணும், வார் பதி — நெடும் கதி, இனிது ஆயின்-இனிதாயிருந்தால், காண்பாம் — (யாம்) காணக்கடவோம்.

(க—ரை) அறிவுடையோரிடத்துக் கூடி மகிழ்தலைப் பார்க்கினும், தேவருலகம் இனிதா யிருக்குமாறு காண்போம்.

(வி—ரை.) யாம் — எழுவாய், காண்பாம் — பயனிலை, பதி — செயப்படுபொருள். (எ)

138 கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
வீர மிலாளர் தொடர்பு.

(ப—ரை) கனை — சத்திக்கும், தண் — குளிர்ந்த, கடல் — கடலினது, சேர்ப்ப — கரையையுடைய பாண்டியனே!, கற்று அறிந்தார்-கற்றுணர்ந்தோர், கேண்மை — சினேகமானது, கரும்பு — கரும்பை,

நுனியில் — நுனியிலிருந்து, தின்று அற்று — தின்றாற் போலும்; பண்பு இலா — நற்குணங்க ளில்லாத, ஈரம் இலாளர் — அன்பில்லா தவர்கள், தொடர்பு — சினேகமானது, நுனி — கரும்பினுனியை, நீக்கி — விட்டு, தூரில் — அடியிலிருந்து, தின்று அன்ன — தின்றாற் போலும், தகைத்து — தன்மை யுடையது.

(க—ரை) கற்றோர் சினேகம் கரும்பை நுனியிலிருந்து தின் றாற்போலும்; மற்றோர் சினேகம் கரும்பை அடியிலிருந்து தின்றாற் போலும்.

(வி—ரை) கேண்மை — எழுவாய், தின்றற்று — பயனிலை. தொ டர்பு — எழுவாய், தகைத்து — பயனிலை. ஏ, அரோ — அசைகள். ()

139 கல்லாரே யாயினுங் கற்றாரைச் சேர்ந்தொழுகி
னல்லறிவு நாளுந் தலைப்படுவர்—தொல்சிறப்பி
னொண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

(ப—ரை) ஒள் — ஒள்ளிய, நிறம் — நிறமுடைய, பாதிரி பூ — பாதி ரிப்பூவின், புது ஓடு — புதிய விதழ்களானவை, சேர்தலால் — அடை தலால், தண் நீர்க்கு — சலத்திற்கு, தான் — வாசனைதான், பயந்து ஆங்கு — பயன்பட்டாற்போலும், கல்லாரே ஆயினும் — கற்றிலராயினு லும், கற்றாரை — கற்றவரை, சேர்ந்து — சார்ந்து, ஒழுகின் — நடப் பாராயின், தொல் — பழைய, சிறப்பின் — சிறப்புடைய, நல் — நல்ல, அறிவு — அறிவில், நாளும் — நாடோறும், தலைப்படுவர் — முதன்மை யுடையவர்.

(க—ரை) பாதிரிப்பூக்களின் இதழ்களானவை தண்ணீர்க்கு வாசம் தந்தாற் போலும், கல்லாதவருங் கற்றோரைச் சார்ந்தால் அறிவில் முதன்மையாவர்.

(வி—ரை) ஒருவர் — எழுவாய், தலைப்படுவர் — பயனிலை ஏ — அசை. (௯)

140 அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லா
துலகநூ லோதுவ தெல்லாங்—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்.

(ப—ரை) அலகு — அளவு, சால் — மிக்க, கற்பின் — நூல்களைக் கற்றால், அறிவு நூல் — ஞானநூல்களை, கல்லாது — கற்காமல், உலக

நூல் — உலகத்திற்குரிய நூல்களை, ஓதுவது எல்லாம் — கற்பதெல்லாம், கலகல — கலகலவென்னு மோசையாய், கூஉம் துணை — கூவுமளவு, அல்லால் — அல்லது, தமெற்றம் — பிறவித் துன்பத்தை விட்டு, கொண்டு — நல்வழியைக் கொண்டு, போம் துணை — போகுமளவை, அறிவார் — அறியவல்லவர், இல் — இல்லை.

(க—ரை) ஞானத்திற்குரிய நூல்களைக் கற்காமல் உலகத்திற்குரிய நூல்களைக் கற்குதல் வீண் என்பதாம்.

(வி—ரை) அறிவார் — எழுவாய், இல் — பயனிலை. (௧0)

கல்வி முற்றிற்று.

# கரு-ஆம் அதிகாரம்-குடிப்பிறப்பு

[அஃதாவது நற்குடியிற் பிறத்தலாம்.]

141 உடுக்கை யுலறி யுடம்பழிந்தக் கண்ணுங்
குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்றார்
இடுக்கண் டலைவந்தக் கண்ணு மரிமா
கொடிப்புற் கறிக்குமோ மற்று.

(ப—ரை) குடி பிறப்பு ஆளர் — நற்குலத்திற் பிறந்தோர், உடுக்கை — ஆடை, உலறி — கெட்டு; உடம்பு — உடலானது, அழிந்தக் கண்ணும் — அழிந்தாலும், தம் — தங்களுடைய, கொள்கையின்-நன்னடக்கையில், குன்றார் — குறைவுபடார்; அரிமா — சிங்கமானது, இடுக்கண் — பசித்துன்பம், தலைவந்தக்கண்ணும் — முதன்மையாக வந்தாலும், கொடி புல் — கொடிகளையுடைய புல்லை, கறிக்குமோ-தின்னுமோ?

(க—ரை) நற்குடியிற் பிறந்தார், துன்பம் வந்தாலும் நன்னடக்கையிற் குறையார்; சிங்கம் பசித்தாலும் புல்லைத் தின்னாது.

(வி—ரை) குடிப்பிறப்பாளர் — எழுவாய், குன்றார் — பயனிலை.()

142 சான்றாண்மை சாய லொழுக்க மிவைமூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது—வான்றோயு
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு.

(ப—ரை) வான் — ஆகாயத்தை, தோயும் — அளாவும், மை— மேகம், தவழ் — தவழும், வெற்ப — மலையையுடைய பாண்டியனே!, சான்றாண்மை — பெருந்தன்மை, சாயல் — மேன்மை, ஒழுக்கம்-நன்னடக்கை, இவை மூன்றும் — இம் முக்குணங்களும், வான் — பெருமை, தோய் — நிறைந்த, குடி பிறந்தார்க்கு — நற்குடியிற் பிறந்தார்க்கு, அல்லது — அல்லாமல், பிறர்க்கு — நற்குடியிற் பிறவாதார்க்கு, பெருஞ் செல்வம் — பெரிய செல்வம், எய்தியக்கண்ணும் — வந்தாலும், படா — (அம்முக்குணங்கள்) உண்டாகாவாம்.

(க—ரை) பாண்டியனே! பெருந்தன்மை, மேன்மை, நன்னடக்கை ஆகிய இவை நற்குடியிற் பிறந்தார்க்கல்லது அக்குடியிற் பிறவாதாருக்கு இல்லை.

(வி—ரை) இவை — எழுவாய், படா — பயனிலை. (உ)

143 இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன—குடிப்பிறந்தார்
குன்றா வொழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்றா வுணரற்பாற் றன்று.

(ப—ரை) குடி பிறந்தார் — நற்குடியிற் பிறந்தார், இருக்கை எழலும் — (பெரியோரைக் கண்டு) இருக்குமிடம்விட்டு எழுதலும், எதிர் செலவும் — எதிராகப் போதலும், ஏனை — இவை நீங்க, விடுப்ப — வழி விடுதலும், ஒழிதல் — நீங்கலும், ஓடு — இவற்றுடன், இன்ன — இவை போல்வன உபசாரங்களை, குன்றா — குறையாத, ஒழுக்கம் ஆ — நன்னடக்கையாக, கொண்டார் — கொண்டார்கள்; (ஆதலால்) கயவரோடு — கீழ்மக்களோடு, ஒன்று ஆ — அக்குணங்கள் பொருந்தாவாம்; உணரல் பாற்று — அறியுந்தன்மை, அன்று-கீழோர்க்கல்ல.

(க—ரை) நற்குடியிற் பிறந்தோர் ஆசார உபசாரங்களை விடார்; அக்குடியிற் பிறவாதார்க்கு ஆசார வுபசாரங்க ளில்லை.

(வி—ரை) குடிப்பிறந்தார் — எழுவாய், கொண்டார் — பயனிலை.

144 நல்லவை செய்யி னியல்பாகுந் தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகு—மெல்லா
முணருங் குடிப்பிறப்பி னூதிய மென்னோ
புணரு மொருவர்க் கெனின்.

(ப—ரை) நல்லவை — நன்மைகளை, செய்யின் — செய்தால், இயல்பு ஆகும் — இயற்கையாகும்; தீயவை — துன்பங்களைச் செய்தால், பல்லவர் — பலரும், தூற்றும் — தூற்றத்தக்க, பழி ஆகும்-பழிப்பாகும்; எல்லாம் — நற்குணமெல்லாம், உணரும் — அறியும், குடி பிறப்பு — நற்குடிப் பிறப்பு, ஒருவர்க்கு — ஒருவருக்கு, இன்— இனிதாக, புணரும் எனின் — கூடுமானால், ஊதியம் என் — இதிலு மிலாபம் யாது?

(க—ரை) ஒருவருக்கு நற்குடிப் பிறப்புப் பொருந்துமானால் இதைவிட லாபமென்ன?

(வி—ரை) ஊதியம் — எழுவாய், என் — பயனிலை. ஓ — அசை.

145 கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சஞ்
சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்சம்—எல்லாம்
இரப்பார்க்கொன் றீயாமை யச்ச மரத்தாரிம்
மாணாக் குடிப்பிறந் தார்.

(ப—ரை) கல்லாமை — கற்காதிருக்கை, அச்சம் — அச்சம்; கயவர் — கீழ்மக்கள், தொழில் — தொழில்களைச் செய்தல், அச்சம்— அச்சம்; சொல்லாமையுள்ளும் — பொய்சொல்லாமையிடத்தும்,ஓர்— ஒரு, சோர்வு — சொற்சோர்வு படல், அச்சம் — அச்சம்; எல்லாம்— யாவும், இரப்பார்க்கு — யாசிப்பவர்க்கு, ஒன்று — ஒரு பொருள், ஈயாமை — கொடாமை, அச்சம் — அச்சம்; (ஆதலால்) அ மாணுகுடி பிறந்தார் — பெருமையில்லாத அக்குடியிற் பிறந்தார், மரத்தார்— மரத்தோடொத்தவர்.

(க—ரை) கல்லாமையும், இழிதொழிலும், சொற்சோர்வும், ஈயாமையும் உடையவர்கள் மரத்திற்கு ஒப்பானவர்.

(வி—ரை) குடிப்பிறந்தார் — எழுவாய், மரத்தார் — பயனிலை. ['மரத்தாரிம்' என்றும் பாடம்.] (ரு)

146 இனநன்மை யின்சொலொன் றீதன்மற் றேனை
மனநன்மை யென்றிவை யெல்லாங்—கனமணி
முத்தோ டிமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப
இற்பிறந்தார் கண்ணே யுள

(ப—ரை) கனம் — பொன்னையும், மணி — அரதநங்களையும், முத்தோடு — முத்துக்களுடன், இமைக்கும் — பிரகாசிக்கச் செய்யும், முழங்கு — சத்திக்கின்ற, தண் — குளிர்ந்த, உவரி — கடலையும், சேர்ப்ப — கரையையுமுடைய பாண்டியனே!, இனம் நன்மை— இனநன்மையும், இன்சொல் — இனிய சொற்களும், ஒன்று — ஒரு பொருளை, ஈதல் — கொடுத்தலும், ஏனை — ஒழிந்த, மனம் நன்மை- மனத்தினன்மையும், என்ற இவை எல்லாம் — என்று மிவையெல்லாம், இல் பிறந்தார் — நற்குடியிற் பிறந்தார், கண்ணே — இடத்தே, உள — இருக்கின்றன.

(க—ரை) பாண்டியனே! நல்லினம், நற்சொல், ஈகை, நன்மனம் இவையெல்லாம் குடிப்பிறந்தார்க்கே வுளவாம்.

(வி—ரை) எல்லாம் — எழுவாய், உள — பயனிலை. மற்று—அசை.

147 செய்கை யழிந்து சிதன்மண்டிற் றாயினும்
பெய்யா வொருசிறை பேரி லுடைத்தாகும்
எவ்வ முழந்தக் கடைத்துங் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை.

(ப—ரை) செய்கை — செய்கைகள், அழிந்து — கெட்டு, சிதல்— கறையான், மண்டிற்று ஆயினும் — பற்றியதாயினும், பெய்யா— (மழைநீர்) ஒழுகாத, ஒரு சிறை — ஓரிடமுள்ள, பேர் இல் — பெரிய வீடு, உடைத்தாகும் — உண்டாயிருக்கும்; (அதுபோல) எவ்வம்— துன்பம், உழந்தக்கடைத்தும் — வருத்தினலும், குடி பிறந்தார்— நற்குடியிற் பிறந்தோர், செயல் பாலவை — செய்யத் தக்கவைகளை, செய்வர் — செய்வார்கள்.

(க—ரை) நற்குடியிற் பிறந்தோர் துன்பத்தால் வருந்தினுஞ் செய்யத்தக்க தருமங்களைச் செய்வர்.

(வி—ரை) குடிப்பிறந்தார் — எழுவாய், செய்வர் — பயனிலை, செயற்பாலவை — செயப்படுபொருள். (எ)

148 ஒருபுடை பாம்பு கொளினு மொருபுடை
யங்கண்மா ஞாலம் விளங்குறூஉந் — திங்கள்போல்
செல்லாமை செவ்வனேர் நிற்பினு மொப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார்.

(ப—ரை) ஒரு புடை — ஒரு பக்கம், பாம்பு — பாம்பு, கொளினும் — பற்றிக்கொள்ளினும், ஒரு புடை — ஒருபக்கம், அம் — அழகிய, கண் — இடமகன்ற, மா — பெரிய, ஞாலம் — பூமியை, விளக்குறூஉம் — விளக்கும், திங்கள் போல் — சந்திரன்போல, குடி பிறந்தார் — நற்குடியிற் பிறந்தார், செல்லாமை — வறுமை, செவ்வன் நேர் — செவ்வையாக, நிற்பினும் — நின்றாலும், ஒப்புரவிற்கு — (பிறர்க்கு) தருமஞ் செய்தற்கு, ஒல்கார் — தளரார்.

(க—ரை) நற்குடியிற் பிறந்தார் வறுமை யடைந்தாலும் தருமஞ் செய்தற்குத் தளரார்.

(வி—ரை) குடிப்பிறந்தார் — எழுவாய், ஒல்கார் — பயனிலை. (அ)

149 செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர் — புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோற்
பொருமுரண் ணாற்றுத லின்று.

(ப—ரை) குடி பிறந்தார் — நற்குடியிற் பிறந்தார், செல்லா இடத்தும் — வறுமையிடத்தும், செய்வன — செய்யும் தருமங்களை, சிறியவர் — கீழ்மக்கள், செல்லிடத்தும் — செல்வமுள்ளவிடத்தும், செய்

யார் — செய்யார்கள்; புல்வாய் — கலைமான், பருமம் — கல்லணையை, பொறுப்பினும் — சுமந்தாலும், பாய் — பாயும், பரிமா போல் — குதிரையைப்போல, பொரு — தாக்கும், முரண் — சண்டையை, ஆற்றுதல் — செய்தல், இன்று — இல்லை.

(க—ரை) மேன்மக்கள் வறுமையிடத்துஞ் செய்யும் தருமங்களைக் கீழ்மக்கள் செல்வமுள்ளவிடத்துஞ் செய்யார்கள்.

(வி—ரை) சிறியவர் — எழுவாய், செய்யார் — பயனிலை. (கூ)

150 எற்றொன்று மில்லா விடத்துங் குடிப்பிறந்தார்
அற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றுவர்
அற்றக் கடைத்து மகல்யா றகழ்ந்தக்கால்
நெற்றெனத் தெண்ணீர் படும்.

(ப—ரை) அகல் — அகன்ற, ஆறு — ஆறுனது, அற்றக்கடைத்தும் — நீர்வற்றினாலும், அகழ்ந்தக்கால் — தோண்டினால், நெற்றென — அலைப்பொடு, தெள் நீர் — தெளிந்த நீர், படும் — தரும்; (அதுபோல) குடிப்பிறந்தார் — நற்குடியிற் பிறந்தவர், எற்று ஒன்றும் — யாதொன்றும், இல்லா இடத்தும் — இல்லாதிருந்தும், அற்று — பொருளிழந்து, தன் சேர்ந்தார்க்கு — தம்மை யடுத்தார்க்கு, அசைவு இடத்து — தளர்ந்தவிடத்து, ஊற்று ஆவர் — உதவியாவார்.

(க—ரை) நற்குடியிற் பிறந்தார் வறுமையிலும் தம்மை யடுத்தவர்க்கு உதவி செய்வார்கள்.

(வி—ரை) குடிப்பிறந்தார் — எழுவாய், ஊற்றுவர் — பயனிலை.

குடிப்பிறப்பு முற்றிற்று.

## கசு-ஆம் அதிகாரம்-மேன்மக்கள்

[அஃதாவது மேன்மக்கள் தன்மையைச் சொல்லுதலாம்.]

151 அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்—றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்.

(ப—ரை) அம் – அழகிய, கண் – இடமகன்ற, விசும்பின்–ஆகாயத்தில், அகல் – பிரிவான, நிலா – கிரணங்களை, பாரிக்கும் – பரப்பும், திங்களும் – சந்திரனும், சான்றோரும் – பெரியோர்களும், ஒப்பர் – தம்மி லொப்பாவார்; திங்கள் – சந்திரன், மறு – களங்கத்தை, ஆற்றும் – பொறுத்துக்கொள்வான்; சான்றோர் – பெரியோர்கள், அஃது – அக்களங்கத்தை, ஆற்றார் – பொறுத்துக்கொள்ளார்; ஒரு – (தமக்கு) ஒரு, மாசு – குற்றம், உறின் – வந்தால், தெருமந்து- மயக்கமடைந்து, தேய்வர் – மாய்வர்.

(க—ரை) சந்திரன் களங்கத்தைச் சகிக்கினும் பெரியோர்கள் அக்களங்கத்தைச் சகியார்.

(வி—ரை) சான்றோர் – எழுவாய், தேய்வர் – பயனிலை. மன்- அசை.

[நன்னூல்]

"திணைபால் பொருள்பல விரவின சிறப்பினு
மிகவினு மிழிபினு மொருமுடி பினவே."

இவ்விதியால் சந்திரனாகிய அஃறிணை உயர்திணை முடிபெற்றது.

152 இசையு மெனினு மிசையா தெனினும்
வசைதீர வெண்ணுவர் சான்றோர்—விசையி
னரிமா வுளங்கிழித்த வம்பினிற் றீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல்.

(ப—ரை) இசையும் எனினும் – கூடுமாயினும், இசையாது எனினும் – கூடாதாயினும், வசை – குற்றம்; தீர – நீங்க, எண்ணுவர்– நினைப்பார்கள், சான்றோர் – பெரியோர்கள்; விசையின் – விசை

யால், நரி மா – நரியினது, உளம் – நெஞ்சத்தை, கிழித்த-பிளந்த, அம்பினில் – கணையைப்பார்க்கிலும், அரி மா – சிங்கத்தை, பிழைப்பு – பிழைக்க, எய்த – தொடுத்த, கோல் – கணையானது, தீதோ-பொல்லாதோ?

(க–ரை) பெரியோர்கள் பிறராற் பொருள் கிடைத்தாலுங் கிடையாவிட்டாலுங் குற்ற நினையார்கள்.

(வி–ரை) சான்றோர் – எழுவாய், எண்ணுவர் – பயனிலை. நரிமே லெய்த அம்பிலும் அரிமே லெய்த அம்பு உயர்வு. (உ)

153 நரம்பெழுந்து நல்கூர்ந்தா ராயினுஞ் சான்றோர்
குரம்பெழுந்து குற்றங்கொண் டேறார்—உரங்கவறா
வுள்ளமெனு நாரினாற் கட்டி யுளவரையாற்
செய்வர் செயற்பா லவை.

(ப–ரை) சான்றோர் – பெரியோர்கள், நரம்பு – நரம்புகள், எழுந்து – தோன்றி, நல்கூர்ந்தார் ஆயினும் – வறுமைப்பட்டாராயினும், குரம்பு – வரம்பு, எழுந்து – கடந்து, குற்றம் கொண்டு – குற்றத்தைக் கொண்டு, ஏறார் – (யாசிக்கச்) செல்லார்; உரம் – அறிவே, கவறு ஆக – கவறாகக் கொண்டு, உள்ளம் எனும் – முயற்சி யென்கிற, நாரினால் – நாரால், கட்டி – (மனதைக்) கட்டி, உளவரையால்-(தமக்கு) உள்ள பொருளளவால், செயற்பாலவை – செய்யத்தக்க தருமங்களை, செய்வர் – செய்வார்கள்.

(க–ரை) பெரியோர்கள் வறுமை யடைந்தாராலும் யாசிக்கார்கள்; உள்ளமட்டுந் தருமஞ் செய்வார்கள்.

(வி–ரை) சான்றோர் – எழுவாய், செய்வர் – பயனிலை, செயற்பாலவை – செயப்படுபொருள். 'கவறு' என்றது இருபிளவாகிய பனையின் அடிமட்டை. இம்மட்டை மரத்தைக் கவியப் பற்றியது போல, மனதை அறிவு கவியப் பற்றுதலாம். (ங)

154 செல்வழிக் கண்ணொருநாட் காணினுஞ் சான்றவர்
தொல்வழிக் கேண்மைபிற் றோன்றப் புரிந்தியாப்பர்
நல்வரை நாட சிலநா ளடிப்படிற்
கல்வரையு முண்டா நெறி.

(ப–ரை) நல் – நல்ல, வரை – மலையையும், நாட – நாட்டையுமுடைய பாண்டியனே!, செல்வழிக்கண் – போகின்ற வழியிடத்து,

ஒருநாள் — ஒருநாள், காணினும் — (ஒருவரைக்) கண்டாலும், சான்றவர் — பெரியோர்கள், தொல் — பழைய, வழி — வழியில் வந்த, கேண்மையில் — உறவைப்போல், தோன்ற — விளங்க, புரிந்து-விரும்பி, யாப்பர் — சிநேகஞ் செய்வர்; கல் வரையும் — கன்மலையும், சிலநாள் — சிலகாலம், அடி படில் — காலடிப்பட்டால், நெறி — வழி, உண்டு ஆம் — உண்டாகும்.

(க—ரை) பாண்டியனே! பெரியோர்கள் புதியவரைக் கண்டாலும் பழையவரைப் போலவே சிநேகஞ் செய்வர்.

(வி—ரை) சான்றவர் — எழுவாய், யாப்பர் — பயனிலை. (ச)

155 புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி
கல்லா வொருவ னுரைப்பவுங் கண்ணோடி
நல்லார் வருந்தியுங் கேட்பரே மற்றவன்
பல்லாரு ணாணல் பரிந்து.

(ப—ரை) புல்லா — இலக்கணம் பொருந்தாத, எழுத்தில்-எழுத்தினையுடைய, பொருள் இல் — பொருளறிவில்லாத, வறும்-வீணாகிய, கோட்டி — சபையில், கல்லா ஒருவன் — கற்காத வொருவன், உரைப்பவும் — ஒன்றைச் சொல்லவும், நல்லார் — மேன்மக்கள், கண் ஓடி — தாட்சணியங் கொண்டு, வருந்தியும் — வருத்தமடைந்தும், அவன் — அவ்வறிவில்லான், பல்லாருள் — பலர் முன், நாணல்-நாணுதற்கு, பரிந்து — இரங்கி, கேட்பர் — கேட்பார்கள்.

(க—ரை) பெரியோர்கள், கல்லார் சபையில் விவேக சூனியன் ஒன்றைச் சொல்லினும் அவன் நாணுதலுக்கு இரங்கிக் கேட்பார்.

(வி—ரை) நல்லார் — எழுவாய், கேட்பர் — பயனிலை. ஏ, மற்று-அசைகள். (ரு)

156 கடித்துக் கரும்பினைக் கண்டகர நூறி
யிடித்துநீர் கொள்ளினு மின்சுவைத்தே யாகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணுங் குடிப்பிறந்தார்
கூறுர்தம் வாயிற் சிதைந்து.

(ப—ரை) கரும்பினை — கரும்பை, கடித்து — தரித்து, கண்—கணுக்கள் — தகர — உடைய, நூறி — நெறித்து, இடித்து — (ஆலையில்) ஆடி, நீர் — இரசத்தை, கொள்ளினும் — கொண்டாலும், (அக்

கரும்பு) இன் – இனிய, சுவைத்தே – மதுர முடையதே, ஆகும்-ஆம்; (அதுபோல) வடு பட – குற்றமுண்டாக, வைது – ஒருவர் வைது, இறந்தக்கண்ணும் – போனாலும், குடி பிறந்தார் – நற்குடியிற் பிறந்தார், தம் – தம்முடைய, வாயின் – வாயினாலே, சிதைந்து-சிதைய, கூறார் – சொல்லார்.

(க–ரை) கரும்பை வருத்தினும் இனிய சாற்றைக் கொடுக்கும்; அதுபோல, ஒருவர் வைதாலும் நற்குடியிற் பிறந்தார் கூட வையமாட்டார்.

(வி–ரை) குடிப்பிறந்தார் – எழுவாய், கூறார் – பயனிலை. (சு)

157 கள்ளார்கள் ளுண்ணார் கடிவ கடிந்தொரீஇ
எள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயிற்பொய் கூறார் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர்.

(ப–ரை) வடு – குற்றம், அறு – அற்ற, காட்சியார் – அறிவுடையார், கள்ளார் – திருடார்; கள் உண்ணார் – கள்ளைக் குடியார்; கடிவ – நீக்கத் தக்கவைகளை, கடிந்து – நீங்கி, ஒரீஇ – தீமையினீங்கி, பிறரை – அயலாரை, எள்ளி – அவமதித்து, இகழ்ந்து – நிந்தித்து, உரையார் – சொல்லார்; தள்ளியும் – தவறியும், வாயில் – வாயால், பொய் கூறார் – பொய்சொல்லார்; சாயில் – துன்பம்வந்தால், பரிவது இலர் – விசனப்படார்.

(க–ரை) மேன்மக்கள் திருடார், கள்ளுண்ணார், பிறரை யிகழார், பொய் சொல்லார், வறுமை வந்தால் விசனப்படார்.

(வி–ரை) காட்சியார் – எழுவாய், பரிவதிலர் – பயனிலை. (எ)

158 பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலா ரிற்கட் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா வவற்கு.

(ப–ரை) பிறர் – அயலாருடைய, மறையின்கண் – இரகசியச் சொல்லிடத்து, செவிடு ஆய் – செவிடனாகவும், திறன் அறிந்து-நல்லொழுக்கத் திறமறிந்து, ஏதிலார் – அயலாருடைய, இல் – மனையாள், கண் – இடத்து, குருடனாய் – குருடனாகவும், தீய – கொடிய,

புறம் கூற்றில் – பொருமைச் சொல்லிடத்து, மூங்கையாய்–ஊமையாகவும், நிற்பான் எல் – இருப்பானுனல், அவற்கு – அவனுக்கு, யாதும் – யாதொரு, அறம் – தருமமும், கூற வேண்டா – சொல்ல வேண்டாவாம்.

(க–ரை) பிறர் இரகசியத்திற் செவிடனுகவும் பிறர் மனையாளிடத்துக் குருடனுகவும், பொருமை சொல்வோரிடத்து ஊமையாகவும் ஒருவ னிருந்தானுனல் அவனுக்கு இதுவே பெரிய தருமம்.

(வி–ரை) ஒருவன் – எழுவாய், கூறவேண்டா – பயனிலை. (அ)

159 பன்னுளுஞ் சென்றக்காற் பண்பிலார் தம்முழை
யென்னுனும் வேண்டுப வென்றிகழ்ப—என்னுனும்
வேண்டினு நன்றுமற் றென்று விழுமியோர்
காண்டொறுஞ் செய்வர் சிறப்பு.

(ப–ரை) பண்பு இலார் – நற்குண மில்லார், தம் உழை – தம்மிடத்து, பல் நாளும் – பல நாளும், சென்றக்கால் – ஒருவர் சென்ருல், என் ஆனும் – யாதாகிலும், வேண்டுப – வேண்டுவார்கள், என்று – என்று சொல்லி, இகழ்ப – இகழ்வார்கள்; விழுமியோர்-மேன்மக்கள், என் ஆனும் – யாதாகிலும், வேண்டினும் – வேண்டினுலும், நன்று – நல்லது, என்று – என்றுசொல்லி, காண்தொறும்-காணுந்தோறும், சிறப்பு – சிறப்பை, செய்வர் – செய்வார்கள்.

(க–ரை) கீழ்மக்கள் தங்களிடத்து ஒருவர் வந்தால் யாவதொன்றைக் கேட்பர்களென் றிகழ்வார்கள்; மேன்மக்கள் தங்களிடத்து வந்தவருக்குக் காணுந்தோறுஞ் சிறப்புச் செய்வார்கள்.

(வி–ரை) பண்பிலார் – எழுவாய், இகழ்ப – பயனிலை. விழுமியோர் – எழுவாய், செய்வர் – பயனிலை, சிறப்பினை – செயப்படுபொருள். மற்று – அசை. (கூ)

160 உடையா ரிவரென் ரெருதலையாப் பற்றிக்
கடையாயார் பின்னுசென்று வாழ்வ—துடைய
பிலந்தலைப் பட்டது போலாதே நல்ல
குலந்தலைப் பட்ட விடத்து.

(ப–ரை) உடையார் – செல்வ முள்ளார், இவர் என்று-இவர்களென்று, ஒருதலை ஆ – ஒரு துணிவாக, பற்றி – பிடித்து, கடை

யாயார் – கீழ்மக்கள், பின் சென்று – பின் போய், வாழ்வர் – சிலர் வாழ்வார்கள்; நல்ல – நல்ல, குலம் – குலத்திற் பிறந்தாரை, தலைப் பட்ட – முதன்மையாகச் சேரப்பட்ட, இடத்து – இடத்திலே, உடைய – எல்லாப் பொருளுமுடைய, பிலம் – குகையை, தலைப் பட்டது போலாதே – தலைப்பட்டது போலுமல்லவோ?

(க—ரை) கீழ்மக்கள் பின்சென்று சிலர் வாழ்ந்திருப்பர்; மேன் மக்களைச் சேர்தல் எப்பொருளுமுள்ள குகை அகப்பட்டது போலும்.

(வி—ரை) (சிலர்) – தோன்றா எழுவாய், வாழ்வர் – பயனிலை.()

மேன்மக்கள் முற்றிற்று.

## கள-ஆம் அதிகாரம்-பெரியாரைப்பிழையாமை

[அஃதாவது பெரியோர்களைப் பிழை சொல்லாமையாம்.]

161 பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார்மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபின்
ஆர்க்கு மருவி யணிமலை நன்னாட
பேர்க்குதல் யார்க்கு மரிது.

(ப—ரை) ஆர்க்கும் – சத்திக்கும், அருவி – வையையாற்றையும், அணி – அழகிய, மலை – பொதிய மலையையும், நல் – நல்ல, நாட— பாண்டி நாட்டையு முடைய பாண்டியனே!, பொறுப்பர் என்று— குற்றம் பொறுப்பாரென்று, எண்ணி – நினைத்து, புரை தீர்ந்தார்— குற்றமற்றவர், மாட்டும் – இடத்தும், வெறுப்பன – வெறுக்கத்தக்கவைகளை, செய்யாமை வேண்டும் – செய்யாதிருக்கவேண்டும்;வெறுத்த பின் – வெறுத்த பின்பு, பேர்க்குதல் – (அவர் கோபத்தை) நீக்கல், யார்க்கும் – யாவர்க்கும், அரிது – அருமை.

(க—ரை) பாண்டியனே! குற்றமற்றவரிடத்தும் குற்றஞ் செய்யாதிருப்பாயாக; அவர்கள் கோபித்தபின் கோபத்தை நீக்குதல் யார்க்கு மரிது.

(வி—ரை) பேர்க்குதல் – எழுவாய், அரிது – பயனிலை (க)

162 பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும்—அன்னோ
பயனில் பொழுதாக் கழிப்பரே நல்ல
நயமி லறிவி னவர்.

(ப—ரை) பொன் – பொன்னை, கொடுத்தும் – ஈந்தும், புணர்தற்கு – சேர்தற்கு, அரியாரை – அரிய பெரியோரை, கொன்னே— பயனில்லாமல், தலைக்கூட – சினேகிக்க, பெற்றிருந்தும் – பெற்றுவைத்தும், அன்னோ – ஐயோ, நல்ல – நல்ல, நயம் இல் – நயமில்லாத, அறிவினவர் – அறுவுடையார், பயன் இல் – பிரயோசன மில்லாத, பொழுது ஆ – காலமாக, கழிப்பர் – போக்குவர்.

(க—ரை) அறிவிலார் அறிவுடையாரைப் பெற்றிருந்தும் வீண் காலங் கழிப்பார்.

(வி—ரை) நயமிலறிவினவர் — எழுவாய், கழிப்பர் — பயனிலை. ஏ — மூன்றும் அசைகள். (உ)

163 அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டு
மிகைமக்க ளான்மதிக்கற் பால—நயமுணராக்
கையறியா மாக்க ளிழிப்பு மெடுத்தேத்தும்
வையார் வடித்தநூ லார்.

(ப—ரை) அவ மதிப்பும் — இகழ்வாக மதித்தலும், ஆன்ற மதிப்பும் — புகழ்வாக மதித்தலும், இரண்டும் — இவ்விரண்டும், மிகை மக்களால் — மேன்மக்களால், மதிக்கல் பால — மதிக்கத்தக்க தன்மையை யுடையனவாம்; நயம் — நீதியை, உணரா — அறியாத, கை — கை ஒழுக்கத்தை, அறியா — தெரியாத, மாக்கள் — மனிதர்கள், இழிப்பும் — பழிப்பையும், எடுத்து — எடுத்து, ஏத்தும் — புகழ்தலையும், வடித்த நூலோர் — ஆராய்ந்த நூலறிவுள்ளார், வையார் — மனதில் வையார்.

(க—ரை) ஒருவரை இகழ்தலும் புகழ்தலும் பெரியோர்க்கு இல்லை. பிறர் இகழினும் அவர்க்கு மனக்குறை யில்லை.

(வி—ரை) நூலார் — எழுவாய், வையார் — பயனிலை.

[இலக்கணத்திரட்டு]

"எதிர்மறைப் பெயரெசசத் திசைவலி யியல்பு
மீறு கெடுங்கான் மிகுதலு மியல்பாம்."

இவ்விதியால் உணராத என்னும் எதிர்மறைப் பெயரெசசம் ஈறு கெட்டு ஒற்று மிக்கது. (ந)

164 விரிநிற நாகம் விடருள தேனும்
உருமின் கடுஞ்சினஞ் சேணின்று முட்கும்
அருமை யுடைய வரண்சேர்ந்து முய்யார்
பெருமை யுடையார் செறின்.

(ப—ரை) விரி — மிக்க, நிறம் — நிறமுள்ள, நாகம் — பாம்பானது, விடர் — மலைப் பிளப்பில், உளதேனும் — உள்ளதானாலும், உருமின் — இடியின், கடும் — கடிய, சினம் — உக்கிரம், சேண்நின்றும் — ஆகாயத்தில் இருக்கவும், உட்கும் — பயப்படும்; (அதுபோல) பெருமை உடையார்-பெரியோர்கள், செறின்-கோபித்தால்,அருமை உடைய-

அரிய, அரண் சேர்ந்தும் – கோட்டையைச் சேர்ந்தும், உய்யார் – பகைவர் பிழையார்.

(க–ரை) பாம்பானது வெடிப்புள் இருப்பினும் இடியைக் கேட்டு அஞ்சும்; அதுபோல, பகைவர், பெரியோர் கோபிக்கில் கோட்டையைச் சார்ந்தும் பிழையார்.

(வி–ரை) பகைவர் – தோன்றா எழுவாய், உய்யார் – பயனிலை.

165 எம்மை யறிந்திலி ரெம்போல்வா ரில்லென்று
தம்மைத்தாங் கொள்வது கோளன்று—தம்மை
யரியரா நோக்கி யறனறியுஞ் சான்றோர்
பெரியராக் கொள்வது கோள்.

(ப–ரை) எம்மை – எங்களை, அறிந்திலிர் – அறியீர், எம் போல்வார் – எங்களை நிகர்த்தவர், இல் என்று – இல்லை யென்று, தம்மை தாம் – தங்களைத் தாமே, கொள்வது – உயர்த்திக்கொள்வது, கோள் அன்று – கொள்கை யன்று; தம்மை – தங்களை, அரியர் ஆ – எளியராக், நோக்கி – பார்த்து, அறன் – தருமத்தை, அறியும் – உணரும், சான்றோர் – மேன்மக்களால், பெரியர் ஆ – பெரியோராக, கொள்வது – மதித்துக்கொள்வது, கோள் – கொள்கை.

(க–ரை) தங்களைத் தாங்களே புகழ்ந்துகொள்வது கொள்கை யல்ல; தங்களை எளியராகத் தாழ்த்திக்கொள்வது பெரியோர் கொள்கை.

(வி–ரை) கொள்வது – எழுவாய், கோள் – பயனிலை. (நு)

166 நளிகடற் றண்சேர்ப்ப நாணிழற் போல
விளியுஞ் சிறியவர் கேண்மை—விளிவின்றி
அல்கு நிழற்போ லகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு.

(ப–ரை) நளி – அகன்ற, கடல் – கடலையும், தண் – குளிர்ந்த, சேர்ப்ப – கரையையுமுடைய பாண்டியனே!, சிறியவர் – சிறியோர்கள், கேண்மை – சினேகம், நாள் – முற்பகல், நிழல்போல – நிழலைப் போல, விளியும் – வரவரக்குறையும்; தொல் – பழைய, புகழ் ஆளர் – பெரியோர்கள், தொடர்பு – சினேகம், விளிவு இன்றி – கேடில்லாது, அல்கு – பிற்பகல், நிழற்போல் – நிழலைப்போல, அகன்று அகன்று – வளர்ந்து வளர்ந்து, ஓடும் – செல்லும்.

(க—ரை) பாண்டியனே! சிறியவர்சிநேகம் முற்பகல் நிழலைப் போற் குறையும்; பெரியவர் சிநேகம் பிற்பகல் நிழலைப்போல் வளரும்.

(வி—ரை) கேண்மை — எழுவாய், விளியும் — பயனிலை. தொடர்பு — எழுவாய், ஓடும் — பயனிலை. ஏ — அசை. (சு)

167 மன்னர் திருவு மகளி ரெழினலமுந்
துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா—துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மர மெல்லா
முழைதங்கட் சென்றார்க் கொருங்கு.

(ப—ரை) துன்னி — நெருங்கி, குழை கொண்டு — தளிர் கொண்டு, தாழ்ந்த — தாழ்ந்த, தளிர் — குளிர்ந்த, மரம் எல்லாம் — மரங்களெல்லாம், தங்கண் - தம்மிடத்து, சென்றார்க்கு — வந்தவர்க்கு, ஒருங்கு — ஒருமிக்க, உழை — புகலிடமாவதுபோல; மன்னர் — அரசர், திருவும் — செல்வமும், மகளிர் — பெண்களுடைய, எழில் — அழகின், நலமும் — நன்மையும், துன்னியார் — சேர்ந்தவர், தகல் வேண்டா — தடையில்லாமல், துய்ப்பர் — அனுபவிப்பர்.

(க—ரை) அரசர் செல்வத்தையும், பெண்கள் நலத்தையும் அருகிருந்தோர் அநுபவிப்பார்.

(வி—ரை) துன்னியார் — எழுவாய், துய்ப்பர் — பயனிலை. (எ)

168 தெரியத் தெரியுந் தெரிவிலார் கண்ணும்
பிரியப் பெரும்படர்நோய் செய்யும்—பெரிய
வுலவா விருங்கழிச் சேர்ப்பயார் மாட்டும்
கலவாமை கோடி யுறும்.

(ப—ரை) பெரிய — பெரிதாகிய, உலவா — வற்றாத, இரும்மிக்க, கழி — கழியையும், சேர்ப்ப — கரையையுமுடைய பாண்டியனே!, தெரிவு இலார்கண்ணும் — தெரிவில்லாரிடத்தும், தெரிய-சிநேகஞ் செய்தறிய, தெரியும் — அவர் குணகுணந்தெரியும்; பிரிய-அவர் சிநேகம் பிரிய, பெரும் — பெரிய, படர்நோய் — துன்பநோய், செய்யும் — செய்யும்; (ஆதலால்) யார்மாட்டும் — யாவரிடத்தும், கலவாமை — சிநேகியாமையே, கோடி உறும் — (சிநேகஞ்செய்து பிரிதலினும்) கோடிபங்கதிகம்.

(க—ரை) பாண்டியனே! தெளிவிலார் நட்புச் சிநேகஞ் செய்தறியத் தெரியும்; யாவரிடத்துஞ் சிநேகஞ் செய்யாதிருக்கை நல்லது என்பதாம்.

(வி—ரை) கல்லாமை — எழுவாய், கோடியுறும் — பயனிலை. (அ)

169 கல்லாது போகிய நாளும் பெரியவர்கட்
செல்லாது வைகிய வைகலும்—ஒல்வ
கொடாஅது தொழிந்த பகலு முரைப்பிற்
படாஅவாம் பண்புடையார் கண்.

(ப—ரை) பண்பு உடையார்கண் — நற்குண முடையாரிடத்து, கல்லாது — நூலைக் கற்காது, போகிய — கழிந்த, நாளும் — நாள்களும், பெரியவர்கண் — பெரியோரிடத்து, செல்லாது — போகாது, வைகிய — இருந்த, வைகலும் — நாள்களும், ஒல்வ — பொருந்தியவற்றை, கொடாது — கொடுக்காது, ஒழிந்த — கழிந்த, பகலும் — நாள்களும், உரைப்பில் — சொல்லில், படா ஆம் — இவை பொருந்தாவாம்.

(க—ரை) பெரியோர்களிடத்தில் கற்காத காலமும், தம்மிற் பெரியோரிடத்திற் செல்லாத காலமும், கொடாத காலமும் உண்டாகாவாம்.

(வி—ரை) நாள், வைகல், பகல்-எழுவாய்,படாவாம் — பயனிலை.

170 பெரியார் பெருமை சிறுதகைமை யொன்றிற்
குரியா ருரிமை யடக்கந்—தெரியுங்காற்
செல்வ முடையாருஞ் செல்வரே தற்சேர்ந்தார்
அல்லல் களைப வெனின்.

(ப—ரை) பெரியார் — பெரியோர்க்கு, பெருமை — பெருமையாவது, சிறு தகைமை — பணிந்து நடக்குதல், ஒன்றிற்கு — ஒருகல்விக்கு, உரியார் — உரியவர்களுக்கு, உரிமை — தகுதியாவது, அடக்கம் — அடங்கி யிருக்கை, தெரியுங்கால் — ஆராய்ந்தால், தன் சேர்ந்தார் — தன்னைச்சேர்ந்தவர்கள், அல்லல் — துன்பங்களை, களைப— நீக்குவர், எனின் — என்றால், செல்வம் உடையாரும் — செல்வ முள்ளவரும், செல்வரே — செல்வ முள்ளவர்களே.

(க—ரை) பெரியோர்க்குப் பணிவும், கற்றோர்க்கு அடக்கமும், செல்வர்க்கு ஈகையும் வேண்டும்.

(வி—ரை) செல்வமுடையார் — எழுவாய், செல்வர் — பயனிலை, ஏ — அசை. (க0)

பெரியாரைப் பிழையாமை முற்றிற்று.

# கஅ-ஆம் அதிகாரம்-நல்லினஞ்சேர்தல்

[அஃதாவது நன்மையாகிய இனத்தைச்சேர்தல்.]

171 அறியாப் பருவத் தடங்காரோ டொன்றி
நெறியல்ல செய்தொழுகி யவ்வு—நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே வெயின்முறுகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு.

(ப—ரை) வெயில் – வெயிலானது, முறுக – அதிகரிக்க, புல்— புல்லை, பனிபற்று-பனியின் பற்று, விட்டு ஆங்கு-விட்டாற்போல, அறியா பருவத்து – சிறுவயதில், அடங்காரோடு – அடக்க மில்லாருடன், ஒன்றி – பொருந்தி, நெறி அல்ல – தீமைகளை, செய்துஒழுகியவ்வும் – செய்து நடந்தவையும், நெறி அறிந்த – நன்மார்க்க மறிந்த, நல்சார்வு – நல்லினங்களை, சார – சேர, கெடும் – கெட்டுவிடும்.

(க—ரை) வெயிலைக் கண்டு பனி நீங்கினாற்போல, துன்மார்க்கரைச்சேர்ந்த துர்நடக்கைகள் நன்மார்க்கரைச் சேரக் கெடும்.

(வி—ரை) ஒழுகியவ்வும்—எழுவாய், கெடும் – பயனிலை. ஏ—அசை.

172 அறிமி னறநெறி யஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொற் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மையெஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.

(ப—ரை) அறம் – தருமத்தின், நெறி – வழியை, அறிமின்—அறியுங்கள்; கூற்றம் – யமனுக்கு, அஞ்சுமின் – பயப்படுங்கள்; பிறர்-அயலாருடைய, கடு சொல் – கொடுஞ் சொல்லை, பொறுமின் – பொறுத்துக்கொள்ளுங்கள்; வஞ்சம் – வஞ்சத்தை, போற்றுமின்—வாராது போற்றுங்கள்; வினை – தீவினையுள்ள, தீயார் – கொடியவர், கேண்மை – சிநேகத்தை, வெறுமின் – வெறுத்து விடுங்கள்; எஞ் ஞான்றும்-எந்நாளும், பெரியார் – பெரியோர்கள், வாய் சொல் – வாயிற் பிறக்குஞ்சொல்லை, பெறுமின் – பெறுங்கள்.

(க—ரை) தருமத்தை யறியுங்கள்; இயமனுக்கு அஞ்சுங்கள்; கொடுஞ் சொல்லைப் பொறுங்கள்; வஞ்சனை வாராது காத்துக் கொள்ளுங்கள்; தீயவர் நட்பை விடுங்கள்; பெரியோர் சொல்லைப் பெறுங்கள்.

(வி—ரை) (நீங்கள்) — தோன்றா எழுவாய், பெறுமின்-பயனிலை.

173 அடைந்தார்ப் பிரிவு மரும்பிணியுங் கேடு
முடங்குடம்பு கொண்டார்க் குறலாற்—றொடங்கிப்
பிறப்பின்னா தென்றுணரும் பேரறிவி னாரை
யுறப்புணர்க வம்மாவென் னெஞ்சு.

(ப—ரை) அடைந்தார் — அடைந்தவரை, பிரிவும் — பிரிதலும், அரும் — அரிய, பிணியும் — நோய்களும், கேடும் — மரணமும், உடம்பு — உடம்பை, கொண்டார்க்கு — கொண்டவர்க்கு, உடங்கு—உடனே, உறலால் — வரலால், தொடங்கி — வினை தொடங்கி, பிறப்பு—வரும்பிறப்பு, இன்னாது என்று — துன்பமென்று, உணரும் — அறியும், பேர் அறிவினாரை — பெரியோரை, என் நெஞ்சு — என் மனம், உற — சிக்கென, புணர்க — பிணிப்பதாக.

(க—ரை) பெரியோரை என் மனம் பிணிக்கக்கடவது.

(வி—ரை) நெஞ்சு — எழுவாய், புணர்க — பயனிலை, பேரறிவினாரை — செயப்படுபொருள்.

[இலக்கணத்திரட்டு.]

அம்ம வுரையசை கேளென் றாகும். (ந)

174 இறப்ப நினையுங்கா லின்னா தெனினும்
பிறப்பினை யாரு முனியார்—பிறப்பினுட்
பண்பாற்று நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்று
நண்பாற்றி நட்கப் பெறின்.

(ப—ரை) பிறப்பினுள் — பிறப்புள், பண்பு — நற்குணங்களை, ஆற்றும் — சுமந்திருக்கும், நெஞ்சத்தவர்களோடு — மணமுள்ள நல்லோருடன், எஞ் ஞான்றும் — என்னாளும், நண்பு ஆற்றி — சிநேகஞ் செய்து, நட்க பெறின் — சிநேகிக்கப்பெற்றால், இறப்ப — மிகவும், நினையுங்கால் — நினைந்தால், இன்னாது எனினும் — துன்பமானாலும், பிறப்பினை — பிறவியை, யாரும் — யாவரும், முனியார் — வெறுக்கார்.

(க—ரை) பிறப்புத் துன்பமாயினும் பெரியோரைச் சிநேகித்தால் அப்பிறப்பை வெறுக்கார்.

(வி—ரை) யாரும் — எழுவாய், முனியார்—பயனிலை, பிறப்பினை—செயப்படுபொருள்.

175 ஊரங் கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக்காற்
பேரும் பிறிதாகித் தீர்த்தமா—மோரும்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

(ப—ரை) ஊர் – ஊரில், அங்கணம் நீர் – சலதாரை நீர், உரவு நீர் – மிகுந்த நீரை, சேர்ந்தக்கால் – சேர்ந்தால், பேரும் – பெயரும், பிறிது ஆகி – வேறாகி, தீர்த்தம் ஆம் – தீர்த்தமாகும்; (அதுபோல) குலம் மாட்சி – குலப்பெருமை, இல்லாரும் – இல்லாதவரும், நலம் மாட்சி – நற்பெருமையுள்ள, நல்லாரை – நல்லோரை, சார்ந்து-சேர்ந்து, குன்றுபோல் – மலைபோல், நிற்பர் – உயர்ந்து நிற்பர்.

(க—ரை) சலதாரைநீர் பெருவெள்ளத்தைச் சேர்ந்து தீர்த்தமாகும்; அதுபோல, உயர்ந்தோரைச் சேர்ந்த தாழ்ந்தோரும் உயர்ந்தோராவர்.

(வி—ரை) குலமாட்சி யில்லார் – எழுவாய், நிற்பர் – பயனிலை. ஓரும் – அசை. (ரு)

176 ஒண்கதிர் வாண்மதியஞ் சேர்தலா லோங்கிய
வங்கண் விசும்பின் முயலுந் தொழப்படூஉங்
குன்றிய சீர்மைய ராயினுஞ் சீர்பெறுவர்
குன்றன்னார் கேண்மை கொளின்.

(ப—ரை) ஒள் – ஒள்ளிய, கதிர் – கிரணங்களையுடைய, வாள்-பிரகாசிக்கும், மதியம் – சந்திரனை, சேர்தலால் – அடைதலால், ஓங்கிய – உயர்ந்த, அம் – அழகிய, கண் – இடமுடைய, விசும்பின்-ஆகாயத்துள்ள, முயலும் – முயலும், தொழப்படூஉம்–(யாவராலும்) வணங்கப்படும்; (அதுபோல) குன்றிய – குறைந்த, சீர்மையர் ஆயினும் – சிறப்புடையராயினும், குன்று அன்னார் – மலையையொத்த பெரியோர், கேண்மை – சிநேகத்தை, கொளின் – கொண்டால், சீர் பெறுவர் – சிறப்படைவர்.

(க—ரை) சந்திரனைச் சேர்ந்த களங்கமுந் தொழப்படும்; அதுபோல, பெரியோரைச் சேர்ந்த சிறியோருஞ் சிறப்படைவர்.

(வி—ரை) (கேண்மை கொள்பவர்) – தோன்றா எழுவாய், பெறுவர் – பயனிலை, சீரை – செயப்படுபொருள். (சு)

177 பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம்—தேரிற்
சிறியார் சிறுமையுந் தோன்றாதா நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

(ப—ரை) பாலோடு – பாலுடன், அளாய – கலந்த, நீர் – நீரானது, பால் ஆகும் – பால்போலாம், அல்லது – அல்லாமல், நீர் ஆய்- நீர்போலாம், நிறம் – நிறம், தெரிந்து – விளங்கி, தோன்றாது–தெரியாது, (அதுபோல) தேரில் – ஆராயில், நல்ல – நல்ல, பெரியார்– பெரியோர், பெருமையை – பெருந்தன்மையை, சார்ந்து – சேர்ந்து, சிறியார் – சிறியோருடைய, சிறுமையும் – இழிதன்மையும், தோன்றாது – தெரியாது.

(க—ரை) பாலைச்சேர்ந்த நீரும் பால்போலாம்; அதுபோல், பெரியோரைச் சேர்ந்த சிறியோர் இழிவுந் தோன்றாது.

(வி—ரை) சிறுமை – எழுவாய், தோன்றாது – பயனிலை. ஆம் இரண்டும் அசைகள். (எ)

178 கொல்லை யிரும்புனத்துக் குற்றி யடைந்தபுல்
ஒல்காவே யாகு முழவ ருழுபடைக்கு
மெல்லியரே யாயினு நற்சார்வு சார்ந்தார்மேற்
செல்லாவாஞ் செற்றார் சினம்.

(ப—ரை) கொல்லை – கொல்லையில், இரு – பெரிய, புனத்து- புனத்திலே, குற்றி – மரக்கட்டையை, அடைந்த – சேர்ந்த, புல்-புல்லானது, உழவர் – பயிர்செய்வோர், உழு – உழுகிற, படைக்கு- கலப்பைக்கு, ஒல்காவாம் – அசையாவாகும் (அதுபோல) மெல்லியர் ஆயினும் – மெல்லியரானாலும், நல் சார்வு – நல்ல சார்வை, சார்ந்தார்மேல் – சேர்ந்தவரிடத்து, செற்றார் – பகைவருடைய, சினம் – கோபம், செல்லா – செல்லமாட்டாவாம்.

(க—ரை) மரக்கட்டையைச் சார்ந்த புல் கலப்பைக்கு அசையாது; அதுபோல, வலியாரைச் சேர்ந்த மெலியாரிடத்துப் பகைவர் கோபஞ் செல்லாது.

(வி—ரை) சினம் – எழுவாய், செல்லா – பயனிலை. ஏ இரண்டும், ஆம் ஒன்றும் அசை.

[இலக்கணத் திரட்டு]

"ஆவென் விகுதி பன்மைமுற் றெதிர்மறை." (அ)

197 நிலநலத்தா னந்திய நெல்லேபோற் றத்தங்
குலநலத்தா லாகுவர் சான்றோர்-கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை
தீயினஞ் சேரக் கெடும்.

(ப—ரை) நிலம் – நிலத்தினது, நலத்தால் – நன்மையால், நந்திய – வளர்ந்த, நெல்லே போல் – நெல்லைப்போல, தம்தம் – அவரவருடைய, குலம் – குலத்தின், நலத்தால் – நன்மையால், சான்றோர்- பெரியோர், ஆகுவர் – ஆவர்; கலம் – கப்பலின், நலத்தை – நன்மையை, தீ வளி – தீக்காற்று, சென்று – போய், சிதைத்து ஆங்கு–கெடுத்தாற்போல, சான்றாண்மை – பெரியோர்தன்மை, தீ இனம் – தீயவினத்தை, சேர – அடைய, கெடும் – கெட்டுவிடும்.

(க—ரை) கடுங் காற்றானது கப்பலைக் கெடுத்தாற்போல, நல்லினந் தீயினத்தைச் சேரக்கெடும்.

180 மனத்தான் மறுவில ரேனுந்தாஞ் சேர்ந்த
வினத்தா லிகழப் படுவர்—புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
யெறிபுனந் தீப்பட்டக் கால்.

(ப—ரை) எறி புனம் – வெட்டப்பட்ட வனம், தீ பட்டக்கால்– தீப்பட்டால், புனத்து – வனத்தில், வெறி – வாசனை, கமழ் – வீசுகின்ற, சந்தனமும் – சந்தனமரமும், வேங்கையும் – வேங்கை மரமும், வேம் – வேகும்; (அதுபோல) மனத்தால் – மனதால், மறு இலர் எனும் – குற்றமிலரானாலும், தாம் சேர்ந்த – தாங்கள் சேரப்பட்ட, இனத்தால் – தீய இனத்தால், இகழப்படுவர் – இகழப்படுவார்கள்.

(க—ரை) காடு தீப்பட்டால் அதைச்சார்ந்த மரங்கள் வேகும்; அதுபோல, குற்றமற்றவரானாலும் தீய இனத்தைச் சேர்ந்தால் இகழப்படுவார்கள்.

(வி—ரை) மறுவிலர் – எழுவாய், இகழப்படுவர் – பயனிலை. ஏ– அசை.

நல்லினஞ் சேர்தல் முற்றிற்று.

---

## கக-ஆம் அதிகாரம்-பெருமை

[அஃதாவது பெருந் தன்மையைச் சொல்லுதலாம்.]

181 ஈத லிசையா திளமைசே ணீங்குதலாற்
காத லவருங் கருத்தல்லர்—காதலித்
தாதுநா மென்னு மவாவினைக் கைவிட்டுப்
போவதே போலும் பொருள்.

(ப-ரை) ஈதல் – கொடுத்தல், இசையாது – பொருந்தாது, இளமை – இளமைப் பருவம், சேண் – தூரத்தில், நீங்குதலால் – நீங்கலால், காதலவரும் – (நம்மேல்) இச்சையுள்ள பெண்களும், கருத்து அல்லர் – கருத்துள்ளவரல்லர்; காதலித்து – இச்சித்து, நாம் ஆதும் என்னும் – நாம் வாழக்கடவோமென்னும், அவாவினை – ஆசையை, கைவிட்டு போவது – துறந்துபோவது, பொருள் – பொருளாம்.

(க-ரை) ஆசையை விட்டுத் துறப்பதே பொருளாகும்.

(வி-ரை) பொருள் – எழுவாய், போவது – பயனிலை. போலும், ஏ – அசைகள். (க)

182 இற்சார்வி னேமாந்தே மீங்கமைந்தே தென்றெண்ணிப்
பொச்சாந் தொழுகுவர் பேதையா—ரச்சார்வு
நின்றன போன்று நிலையா வெனவுணர்ந்தா
ரென்றும் பரிவ திலர்.

(ப-ரை) பேதையார் – அறிவில்லார், இல் சார்வின் – இல்வாழ்க்கையில், ஏமாந்தேம் – மகிழ்ச்சியடைந்தோம், ஈங்கு – இவ்விடத்து, அமைந்தேம் என்று – யாவும் நிறைவுற்றோமென்று, எண்ணி-நினைத்து, பொச்சாந்து – (பின்வருந்துன்பத்தை)மறந்து, ஒழுகுவர்-நடப்பர்; அ சார்வு – அவ் இல்வாழ்க்கை, நின்றன போன்று – நின்றன போலானவை, நிலையா என – நில்லாவென, உணர்ந்தார் – அறிந்த பெரியோர்கள், என்றும் – எந்நாளும், பரிவது இலர் – விசனப்படார்.

(க-ரை) அறிவீனர் இல்வாழ்க்கையை யிச்சித்து நடப்பார், அறிவுள்ளோர் அவ்வாழ்க்கையைச் சிந்தித்துத் துன்பமடையார்.

(வி-ரை) பேதையார் – எழுவாய், ஒழுகுவர் – பயனிலை. உணர்ந்தார் – எழுவாய், பரிவதிலர் – பயனிலை. (உ)

183 மறுமைக்கு வித்து மயலின்றிச் செய்து
சிறுமைப் படாதேநீர் வாழ்மின்—அறிஞராய்
நின்றுழி நின்றே நிறம்வேறுங் காரண
மின்றிப் பலவு முள.

(ப—ரை) நீர் – நீங்கள், அறிஞர் ஆய் – விவேகிகளாய், மறுமைக்கு – மறுபிறப்பிற்கு, வித்து – வித்தான தருமங்களை, மயல் இன்றி-மயக்கமில்லாமல், செய்து – துணிந்துசெய்து, சிறுமை – துன்பம், படாது – உண்டாகாமல், வாழ்மின் – வாழுங்கள்; (ஏனெனில்) நின்றுழி நின்று – நின்ற நிலையிலே நின்று, நிறம் – குணம், வேறு ஆம் காரணம் – வேறுபடு முகாந்திரம், இன்றி – இல்லாமல், பலவும் உள – பலவுமுள்ளன.

(க—ரை) நீங்கள் அறிவாளிகளாயிருந்து தருமத்தைச் செய்து வாழுங்கள்; தருமஞ்செய்யாது குணம் வேறுபடுதல் பலவிருக்கின்றன.

(வி—ரை) நீர் – எழுவாய், வாழ்மின் – பயனிலை. பலவும் – எழுவாய், உள – பயனிலை. ஏ, உம் – அசைகள். (௩)

184 உறைப்பருங் காலத்து மூற்றுநீர்க் கேணி [ஞ்
யிறைத்துணினு மூராற்று மென்பர்—கொடைக்கடனு
சாஅயக் கண்ணும் பெரியார்போன் மற்றையா
ராஅயக் கண்ணு மரிது.

(ப—ரை) உறைப்பு – மழை, அரு காலத்து – இல்லாக் காலத்து, ஊற்றுநீர் – ஊற்றுநீருள்ள, கேணி – குளமானது, இறைத்து-நீரை இறைத்து, உணினும் – உண்டாலும், ஊர் ஆற்றும் – ஊரைக் காப்பாற்றும், என்பர் – என்று சொல்வர், (அதுபோல்) கொடை-தியாகத்தின், கடனும் – முறைமையும், சாயக்கண்ணும் – (வறுமையால்) தளர்ந்தவிடத்தும், பெரியார் போல் – பெரியோர்களைப் போல், மற்றையார் – சிறியோர், ஆயக்கண்ணும் – செல்வமுண்டாயினும், அரிது – செய்தல் அரிது.

(க—ரை) பெரியோா செய்தல்போலச் சிறியோர் செய்தல் அரிது.

(வி—ரை) (செய்தல்) – தோன்று எழுவாய், அரிது – பயனிலை.

185 உறுபுன றந்துல கூட்டி யறுமிடத்துங்
கல்லூற் றுழியூறு மாறேபோற்—செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணுஞ் சிலர்க்காற்றிச்
செய்வர் செயற்பா லவை.

(ப—ரை) உறு — மிக்க, புனல் — நீரை, தந்து — கொடுத்து, உலகு — உலகத்தை, ஊட்டி — உண்பித்து, அறும் இடத்தும் — நீர் அற்ற காலத்தும், கல் — தோண்டின, ஊற்று உழி — ஊற்றுக்குழி யிடத்து, ஊறும் — ஊறுகின்ற, ஆறேபோல் — ஆறுபோல, செல்வம் — பாக்கியத்தை, பலர்க்கு — பலருக்கும், ஆற்றி — கொடுத்து, கெட்டு — கெட்டு, உலந்தக்கண்ணும் — அழிந்தாலும், சிலர்க்கு—சிலருக்கு, ஆற்றி — கொடுத்து, செயற்பாலவை — செய்யத்தக்க தருமங்களை, செய்வர் — (பெரியோர்) செய்வார்.

(க—ரை) மழையில்லாத நாளிலும் ஆறு ஊற்றுநீர் கொடுக்கும்; அதுபோல, செல்வம் அழிந்தாலும் பெரியோர் செய்யுந் தருமங்களைச் செய்வார்.

(வி—ரை) (பெரியோர்) — தோன்றா எழுவாய், செய்வர் — பயனிலை, செயற்பாலவை — செயப்படுபொருள். ஏகாரம் அசை. (ரு)

186 பெருவரை நாட பெரியார்கட் டீமை
கருநரைமேற் சூடேபோற் றோன்றுங்—கருநரையைக்
கொன்றன்ன வின்னா செயினுஞ் சிறியார்மே
லொன்றானுந் தோன்றாக் கெடும்.

(ப—ரை) பெரு — பெரிய, வரை — மலையையும், நாட — நாட்டையுமுடைய பாண்டியனே!, பெரியோர்கண் — பெரியோரிடத்துண்டான, தீமை — குற்றம், கரு — பெரிய, நரை — இடபத்தின், மேல் — முதுகின்மேலிருக்கும், சூடே போல் — திமிலைப் போல, தோன்றும் — காணப்படும், கரு — பெரிய, நரையை — இடபத்தை, கொன்று அன்ன — கொன்றாற்போலும், இன்னா — குற்றங்களை, செயினும் — செய்தாலும், சிறியார்மேல் — சிறியவரிடத்து, ஒன்றானும்—ஒரு குற்றமும், தோன்றா-தோன்றாயல், கெடும்-கெட்டுவிடும்.

(க—ரை) பாண்டியனே! பெரியோர்கள் செய்த குற்றம் பிரகாசமாய்க் காணப்படும்; சிறியோர்கள் செய்த குற்றம் காணப்படாது.

(வி—ரை) தீமை – எழுவாய், தோன்றும் – பயனிலை.(குற்றம்-) தோன்றா எழுவாய், கெடும் – பயனிலை. (௬)

187 இசைந்த சிறுமை யியல்பிலா தார்கட்
பசைந்த துணையும் பரிவா—மசைந்த
நகையேயும் வேண்டாத நல்லறிவி னார்கட்
பகையேயும் பாடு பெறும்.

(ப—ரை) சிறுமை – அற்பமும், இசைந்த – பொருந்திய, இயல்பு – நற்குணம், இலாதார்கண் – இல்லாதாரிடத்து, பசைந்த-நட்புக்கொண்ட, துணையும் – அளவும், பரிவாம் – துன்பமாகும்; அசைந்த – தளர்ந்த, நகையேயும் – மகிழ்ச்சியிலும்,வேண்டாத-தீமையை விரும்பாத, நல் அறிவினார்கண் – நல்ல அறிவையுடைய பெரியோரிடத்து, பகையேயும் – விரோதமும், பாடு பெறும் – பெருமை யடையும்.

(க—ரை) சிறியவர்களிடத்திற் கொண்ட சினேகம் துன்பந் தரும்; பெரியவர்களிடத்திற் கொண்ட பகையும் பெருமை தரும்.

(வி—ரை) பசைந்ததுணை – எழுவாய், பரிவாம் – பயனிலை. பகை – எழுவாய், பெறும்–பயனிலை. (எ)

188 மெல்லிய நல்லாருண் மேன்மை யதுவிறந்
தொன்னாருட் கூற்றுட்கு முட்குடைமை யெல்லாஞ்
சலவருட் சாலச் சலமே நலவரு
ணன்மை வரம்பாய் விடல்.

(ப—ரை) மெல் – மெல்லிய, இய – நற்குணமுடைய, நல்லாருள் – பெண்களிடத்து, மேன்மை – மேன்மை செலுத்துக, அது இறந்து – அஃதொழிந்து, ஒன்னாருள் – பகைவரிடத்து, கூற்று–யமன், உட்கும் – அச்சந்தரும், உட்கு உடைமை – அச்சத்தைச் செலுத்துக;எல்லாம் – முற்றும், சலவருள் – பொய்யரிடத்து,சால-மிகவும், சலமே – பொய்யே செலுத்துக; நலவருள் – நல்லவரிடத்து, நன்மை – நன்மையை, வரம் ஆய் – அளவாய், விடல் – செலுத்துக.

(க—ரை) பெண்களிடத்து மேன்மையையும், பகைவரிடத்து அச்சத்தையும், பொய்யரிடத்துப் பொய்யையும், நல்லவர்களிடத்து நன்மையும் செலுத்தக்கடவாய்.

(வி—ரை) (நீவிர்) – தோன்றா எழுவாய்,செலுத்துக–பயனிலை. ['மென்மை' என்றும் பாடமுண்டு.] (அ)

189 கடுக்கி யொருவன் கடுங்குறளை பேசி
மயக்கி விடினு மனப்பிரிப்பொன் றின்றித்
துளக்க மிலாதவர் தூய மனத்தார்
விளக்கினு ளொண்சுடரே போன்று.

(ப—ரை) கடுக்கி – கடுமையாகி, ஒருவன் – ஒருவன், கடு குறளை – பொல்லாத சொற்களை, பேசி – சொல்லி, மயக்கிவிடினும் – மயக்கினாலும், மனம் – தம்மனத்து, பிரிப்பு – வேறுபாடு, ஒன்று இன்றி – சிறிதும் இல்லாமல், விளக்கினுள் – தீபத்துள், ஒள் – ஒள்ளிய, சுடரேபோன்று – தீபம்போலாகி, துளக்கம் இல்லாதவர் – அசைவில்லாதவர், தூய மனத்தார் – பரிசுத்த மனமுடையவராவர்.

(க—ரை) ஒருவன் கொடுஞ் சொற்களைச் சொல்லி மயக்கினாலும் வேறுபடாமல் நிற்பவரே பரிசுத்த மனமுடையவர்.

(வி—ரை) துளக்கமிலாதவர் – எழுவாய், தூய மனத்தவர் – பயனிலை. (கூ)

190 முற்றுத்துந் துத்தினை நாளு மறஞ்செய்து
பிற்றுத்துத் துத்துவர் சான்றவர்—அத்துத்து
முக்குற்ற நீக்கி முடியு மளவெல்லாந்
துக்கத்து ணீக்கி விடும்.

(ப—ரை) முன் துத்தும் – முன்பு உண்ணும், துத்தினை-உணவை, நாளும் – எந்நாளும், அறம் – தருமம், செய்து – செய்து, பின் துத்து – பின்பு உண்ணும் உணவை, துத்துவர் – உண்ணுவர், சான்றவர் – பெரியோர்; அதுத்து – அவ்வுணவு, மு குற்றம் – மூன்று குற்றங்களையும், நீக்கி – தள்ளி, முடியும் அளவு எல்லாம் – கிடைக்கும் அளவெல்லாம், துக்கத்துள் – துன்பத்திலிருந்து, நீக்கிவிடும் – நீங்கச்செய்யும்.

(க—ரை) முக்குற்றம் அற்று வந்த உணவு துக்கத்தை விட்டு நீங்கச்செய்யும்.

(வி—ரை) குற்றம் மூன்று – களவு செய்தல், வஞ்சித்தல், யாசித்தல். அத்துத்து – எழுவாய், நீக்கிவிடும் – பயனிலை. (க0)

பெருமை முற்றிற்று.

## உ0-ஆம் அதிகாரம்-தாளாண்மை

[அதாவது முயற்சி செய்தலாம்.]

191 கோளாற்றக் கொள்ளாக் குளத்தின்கீழ்ப் பைங்கூழ்
கேளீவ துண்டு கிளைகளோ துஞ்சுப [போற்
வாளாடு கூத்தியர் கண்போற் றடுமாறுந்
தாளாளர்க் குண்டோ தவறு.

(ப—ரை) கோள் — நீர் கொள்ளுதல், ஆற்ற — மிகவும், கொள்ளா-கொள்ளாத, குளத்தின் கீழ் — குளத்தின் கீழே, பைங்கூழ் போல்- பசிய பயிர்போல, கேள் — இனத்தார், ஈவது — கொடுப்பதை, உண்டு — புசித்து, கிளைகள் — இனத்தார், துஞ்சுப — வருந்துவர்; வாள் ஆடு — வாள்கொண்டு சுழற்றும், கூத்தியர் — கூத்தாடுவோர், கண் போல் — கண்களைப்போல், தடுமாறும் — புடைபெயர்ந்து நிற்கும், தாள் ஆளர்க்கு — முயற்சி செய்வார்க்கு, தவறு — பொருள் முட்டுப்பாடு, உண்டோ — உண்டோ? இல்லை.

(க—ரை) முயற்சி செய்வார்க்கு யாதொரு குறைவு மில்லை.

(வி—ரை) கிளைகள் — எழுவாய், துஞ்சுப — பயனிலை. தவறு— எழுவாய், உண்டோ — பயனிலை. ஓ அசை. (க)

192 ஆடுகோ டாகி யதரிடை நின்றதூஉங்
காழ்கொண்ட கண்ணே களிறணைக்குங் கந்தாகும்
வாழ்தலு மன்ன தகைத்தே யொருவன்றான்
றாழ்வின்றித் தன்னைச் செயின்.

(ப—ரை) ஆடு — அசைகின்ற, கோடு ஆகி — கொம்பாகி, அதரிடை — வழியிடத்து, நின்றதூஉம் — நின்ற இளமரமும், காழ்கொண்ட — வைரம் கொண்ட, கண்ணே — இடத்தே, களிறு—யானையை, அணைக்கும் — சேர்த்துக் கட்டும், கந்து ஆகும் — தறியாகிவிடும்; ஒருவன் — ஒருவன், தாழ்வு — தாழ்ச்சி, இன்றி — இல்லாமல், தன்னை செயின் — (முயற்சியில்) தன்னை யாக்கிக்கொண்டால், வாழ்தலும்— செல்வமுடையனுதலும், அன்ன தகைத்தே — அத்தன்மையாம்.

(க—ரை) இளையமர முற்றினுல் அதனைக்கொண்டு யானையைக் கட்டலாகும்; ஒருவன் முயற்சி செய்வானுனுல் வாழலாம்.

(வி—ரை) வாழ்தல் — எழுவாய், தகைத்து — பயனிலை. கான்— அசை. வைரத்தின் பகுதி வேரம்; இதனை வீரசோழியத்திற் காண்க. (௨)

193 உறுபுலி யூனிரை யின்றி யொருநாட்
சிறுதேரை பற்றியுந் தின்னு—மறிவினாற்
காற்றொழி லென்று கருதற்க கையினான்
மேற்றொழிலு மாங்கே மிகும்

(ப—ரை) உறு — பலமுற்ற, புலி — புலியானது, ஊன் — இறைச்சியாகிய, இரை — உணவு, இன்றி — இல்லாமல், ஒருநாள் — ஒரு தினம், சிறு தேரை — சிறிய தவளையை, பற்றியும் — பிடித்தும், தின்னும் — உண்ணும்; (ஆதலால்) அறிவினால் — அறிவால், கால் தொழில் என்று — அற்பத் தொழிலென்று, கருதற்க — நினையாதிருக்கக் கடவன்; கையினால் — முயற்சியால், மேல்தொழிலும் — மேலான தொழிலும், மிகும் — மிகும்.

(க—ரை) புலி, இரை இல்லாவிடில், சிறு தவளையையுந் தின்னும்; ஆகையால், அற்பத் தொழிலென் றெண்ணாதே; அதுவே பெரிய தொழிலாகும்.

(வி—ரை) மேற்றொழில் — எழுவாய், மிகும் — பயனிலை; ஆங்கு, ஏ — அசைகள். (௩)

194 இசையா தெனினு மியற்றியோ ராற்றா
லசையாது நிற்பதா மாண்மை—யிசையுங்காற்
கண்ட றிரையலைக்குங் கானலந் தண்சேர்ப்ப
பெண்டிரும் வாழாரோ மற்று.

(ப—ரை) கண்டல் — முள்ளிச் செடியை, திரை — அலைகள், அலைக்கும் — ஒதுக்கும், கானலம் — உப்பளத்தையும், தண் — குளிர்ந்த, சேர்ப்ப — கடற்கரையையு முடைய பாண்டியனே!, இசையாது எனினும் — முயற்சி பொருந்தாவிடினும், இயற்றி — முயற்சி செய்து, ஓர் ஆற்றால் — ஒருவழியால், அசையாது — தளராமல், நிற்பதாம் — நிற்பதாகும்; ஆண்மை — ஆண்மைத்திறம், இசையும்கால் — முயற்சி பொருந்துமாகில், பெண்டிரும் — பெண்பிள்ளைகளும், வாழாரோ — (ஆடவர்போல) வாழமாட்டார்களோ?

(க—ரை) பாண்டியனே! முயற்சி பொருந்தாவிடினும் மேன் மேலும் முயற்சி செய்து வாழ்தல் ஆண்மைத்திறம், முயற்சி பொருந்துமானால் பெண்பிள்ளைகளும் வாழ்வார்கள்.

(வி—ரை) ஆண்மை — எழுவாய், நிற்பதாம் — பயனிலை, மற்று— அசை. (௪)

195 நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ்
சொல்லள வல்லாற் பொருளில்லைத்—தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ தவங்கல்வி யாள்வினை
யென்றிவற்றா னாகுங் குலம்.

(ப—ரை) நல்ல குலம் என்றும் — நல்ல குலமென்றும், தீய குலம் என்றும் — கெட்ட குலமென்றும், சொல் அளவு அல்லால்- சொல்லும் அளவல்லாமல், பொருள் இல்லை — யாதொரு பொருளு. மில்லை; தொல் — பழைய, சிறப்பின் — சிறப்பையுடைய, ஒள் — ஒள் ளிய, பொருள் — பொருளும், தவம் — தவமும், கல்வி — கல்வியும், ஆள் வினை — முயற்சியும், என்ற இவற்றான் — என்று சொல்லிய இவைகளால், குலம் — குலம், ஆகும் — மேன்மையடையும்.

(க—ரை) பொருள், தவம், கல்வி, தொழில் ஆகிய இவற்றால் குலம் மேன்மை யடையும்.

(வி—ரை) குலம் — எழுவாய், ஆகும் — பயனிலை, ஒன்றோ— இடைச்சொல். (௫)

196 ஆற்றுந் துணையு மறிவினை யுள்ளடங்கி
யூக்க முரையா ருணர்வுடையார்—ஊக்கம்
உறுப்பினா லாராயு மொண்மை யுடையார்
குறிப்பின்கீழ்ப் பட்ட துலகு.

(ப—ரை) ஆற்றும் — செய்யுங் காரியம், துணையும் — முடியுமள வும், அறிவினை — அறிவை, உள் அடக்கி — தம்முளடக்கி, ஊக்கம்— தன் வலிமையை, உணர்வு உடையார் — அறிவுடையார், உரையார்- பிறரறியச் சொல்லார்; ஊக்கம் — பிறர் வலிமையை, உறுப்பினால்— அவயவத்தால், ஆராயும் — விசாரிக்கும், ஒண்மை உடையார்- அறிவை யுடையவர், குறிப்பின் கீழ் — அவர் குறிப்பினிடத்து, உலகு — உலகமானது, பட்டது — தங்கியது.

(க—ரை) அறிவுடையோர் தமது காரிய முடியுமளவும் தமது வலிமையைச் சொல்லார்கள். உலகு அறிவுடையோர் குறிப்பிற் றங்கியது.

(வி—ரை) உணர்வுடையார் — எழுவாய், உரையார் — பயனிலை, ஊக்கம் — செயப்படுபொருள். (சு)

197 சிதலை தினப்பட்ட வால மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைகட் டோன்றிற்றான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்.

(ப—ரை) சிதலை — செல், தினப்பட்ட — தின்னப்பட்ட, ஆல மரத்தை — ஆலமரத்தை, அதன் — அம்மரத்தில், வீழ் — வீழ்ந்த விழுது, மதலை ஆய் — பற்றுக்கோடாய், ஊன்றி ஆங்கு — தாங்கினாற் போல, தந்தைகண் — தன் பிதாவிடத்து, குதலைமை — தளர்ச்சி, தோன்றின் — தோன்றினால், தான் பெற்ற — தான் ஈன்ற, புதல்வன் — பிள்ளை, மறைப்ப — தன் முயற்சியால் மறைக்க, கெடும்— கெட்டுவிடும்.

(க—ரை) ஆலமரத்தை அதன்விழுது தாங்கினாற்போலப், பிதா விடத்துத் தளர்ச்சி தோன்றில் பிள்ளை தாங்குவான்.

(வி—ரை) குதலைமை — எழுவாய், கெடும் — பயனிலை. மற்று— அசை. (எ)

198 ஈனமா யில்லிருந் தின்றி விளியினு
மானந் தலைவருவ செய்பவோ—யானை
வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றா
ளரிமா மதுகை யவர்.

(ப—ரை) யானை — யானையினது, வரி முகம் — புள்ளியையுடைய முகத்தை, புண் படுக்கும் — புண் செய்யும், வள் — கூரிய, உகிர்— நகத்தையும், நோன் தாள் — வலிய காலையுமுடைய, அரிமா — சிங் கத்தினது, மதுகையவர் — வலியுள்ளவர், ஈனம் ஆய் — இழிவாய், இல் இருந்து — வீட்டிலிருந்து, இன்றி — முயற்சி யில்லாது, விளியி னும் — இறந்தாலும், மானம் — குற்றம், தலை — தம்மிடத்து, வருவ— வருங் காரியங்களை, செய்பவோ — செய்வாரோ?

(க—ரை) சிங்கம்போலும் வலிமை யுள்ளவர் முயற்சி யில்லாது வீட்டிலிருந் தழியினும் குற்றமுள்ள காரியங்களைச் செய்யார்கள்.

(வி—ரை) மதுகையவர் — எழுவாய், செய்பவோ — பயனிலை. ()

199 தீங்கரும் பீன்ற திரள்கா லுளைபலரி
தேங்கமழ் நாற்ற மிழந்தாஅங்—கோங்கு

முயர்குடி யுட்பிறப்பி னென்னும் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை.

(ப—ரை) தீம் கரும்பு—மதுரமாகிய கரும்பு, ஈன்ற—தந்த, திரள்—திரண்ட, கால்—தாளினையும், உளை—மென்மயிர்போற் கற்றையுமுடைய, அலரி—பூ, தேன் கமழ்—இனிய பரிமளமாகிய, நாற்றம்—வாசனையை, இழந்து ஆங்கு—இழந்தாற்போல, பெயர்—தன் பெயரை, பொறிக்கும்—எங்கும் நாட்டும், பேர் ஆண்மை—பெரிய முயற்சி, இல்லாக்கடை—இல்லாவிடில், ஓங்கும்—ஓங்கி, உயர்—உயர்ந்த, குடியுள்—நற்குடியில், பிறப்பின்—பிறந்ததனல், என்—என்ன, ஆம்—பயனுண்டாம்?

(க—ரை) முயற்சியினுல் தன் பெயரை யெங்கும் நாட்டாதவன் உயர்ந்த குடியிற் பிறந்து என்ன பலன்?

(வி—ரை) என்—எழுவாய், ஆம்—பயனிலை. (கூ)

200 பெருமுத் தரையர் பெரிதுவந் தீயுங்
கருனைச்சோ றார்வர் கயவர்—கருனையைப்
பேரு மறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரு மமிழ்தாய் விடும்.

(ப—ரை) பெரு—பெரிய, முத்தரையர்—மும்மண்டலங்களில் வசிப்பவர்கள், பெரிது—மிகவும், உவந்து—மகிழ்ந்து, ஈயும்-இடும், கருனை—பொறிக்கறியையும், சோறு—சோற்றையும், ஆர்வர்—புசிப்பார், கயவர்—கீழ்மக்கள்; கருனையை—பொறிக்கறியை, பேரும்—பெயரும், அறியார்—அறியாதவர், நனி—மிகவும், விரும்பு—இச்சிக்கத்தக்க, தாளாண்மை—முயற்சியில் வரும், நீரும்—(புல்லரிசிக் கூழ்) நீரும், அமிழ்து ஆய்விடும்—(தமக்கு)அமிருத்தை ஒத்ததாகும்.

(க—ரை) கீழ்மக்கள் பிறரிடத்து உண்பர்; மேன்மக்கள் முயற்சி செய்து உண்பர்.

(வி—ரை) 'முத்தரையர்' என்பதற்கு 'முத்தரைய ரென்னும் பெரிய அரசனென்றுவது' சேர சோழ பாண்டிய மண்டலங்களில் வசிப்போரென்றுவது பொருள் கொள்க. கயவர்—எழுவாய், ஆர்வர்—பயனிலை, சோறு—செயப்படுபொருள். நீர்—எழுவாய், அமிழ்தாய்விடும்—பயனிலை. (௨0)

தாளாண்மை முற்றிற்று.

---

அரசியல் முற்றுப்பெற்றது.

இரண்டாவது

# நட்பியல்.

[உற்றுழி உதவுபவராகிய நண்பரின் தன்மையைக் கூறும் பாகம்.]

## உக-ஆம் அதிகாரம்-சுற்றந்தழால்

[அஃதாவது தன்னினத்தைத் தழுவிக்கொள்ளுதலாம்.]

201 வயாவும் வருத்தமு மீன்றக்கா னோவுங்
கவானன் மகற்கண்டு தாய்மறந் தாஅங்
கசாஅத்தா னுற்ற வருத்த முசாஅத்தன்
கேளிரைக் காணக் கெடும்.

(ப—ரை) வயாவும் — கருக்கொண்ட நோவும், வருத்தமும்-அக் கருவைச் சுமக்கு நோவும், ஈன்றக்கால் — பெற்றால், நோவும் — சம்பவிக்கு நோவும், கவான் — தொடையில், மகன் கண்டு — பிள்ளையைக் கண்டு, தாய் — தாயானவள், மறந்துஆங்கு — மறந்தாற்போல, அசா — தளர்ச்சியால், தான் உற்ற — தான்பெற்ற, வருத்தம்-நோவு, உசா — சூழ்ச்சியுடைய, தன் கேளிரை — தன்னினத்தாரை, காண- பார்க்க, கெடும் — நீங்கும்.

(க—ரை) தொடைமேற் பிள்ளையைக் கண்டு தாயானவள் தனது வருத்தத்தை மறந்தாற்போல, ஒருவன் தனது சுற்றத்தாரைக்காணத் தானடைந்த வருத்தம் நீங்கும்.

(வி—ரை) வருத்தம் — எழுவாய், கெடும் — பயனிலை. (க)

202 அழன்மண்டு போழ்தி னடைந்தவர்கட் கெல்லா
நிழன்மரம்போ னேரொப்பத் தாங்கிப்—பழுமரம்போற்
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.

(ப—ரை) அழல் — உஷ்ணம், மண்டு — நெருங்கும், போழ்தின்- கோடைகாலத்தில், அடைந்தவர்கட்கு எல்லாம் — தன்னைச்சேர்ந்தவர்க்கெல்லாம், நிழல் — நிழலைத் தரும், மரம் போல் — விருட்சம் போல, நேர் ஒப்ப — ஒரு சமமாக, தாங்கி — காத்து, பழு மரம் போல — பழுத்த மரம்போல, பல்லார் — பலரும், பயன் — பயனை, துய்ப்ப — அநுபவிக்க, தான் வருந்தி — தான் வருத்தமடைந்து, வாழ்வது — வாழுவது, நல் — நல்ல, ஆண் மகற்கு — ஆண்மகனுக்கு, கடன் — கடமை.

(க—ரை) தன்னைச் சார்ந்தவர்க்கு நிழலைக் கொடுக்கு மரம் போலப் பலர்க்கும் பயன்பட வாழ்தல் ஆண்மகனுக்குக் கடமை.

(வி—ரை) பழுமரம் ஆலமரமுமாம். வாழ்வது – எழுவாய், கடன் – பயனிலை. ஏ – அசை. (உ)

203 அடுக்கன் மலைநாட தற்சேர்ந் தவரை
எடுக்கல மென்னார் பெரியோர்—அடுத்தடுத்து
வன்காய் பலபல காய்ப்பினு மில்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு.

(ப—ரை) அடுக்கல் – அணி அணியான, மலை – மலைகளையும், நாட – நாடுகளையுமுடைய பாண்டியனே! பெரியோர் – பெரியோர்கள், தன் சேர்ந்தவரை – தம்மைச் சேர்ந்தாரை, எடுக்கலம் என்னார் – தாங்கோமென்று சொல்லார்; (எதுபோலெனில்) – அடுத்து அடுத்து – மேன்மேலும், வல் காய் – வலிய காய்கள், பலபல – பற்பலவாக, காய்ப்பினும் – காய்த்தாலும், தன் காய் – தன் காய்களை, பொறுக்கலா – தாங்காத, கொம்பு – கொம்புகள், இல்லை – இல்லை.

(க—ரை) பாண்டியனே! மரக் கொம்புகள் பற்பல காய்களைக் காய்த்தாலும் தாங்கும்; அதுபோல பெரியோர்கள் தம்மை யடுத்தவர்களைத் தாங்குவார்கள்.

(வி—ரை) பெரியோர் – எழுவாய், என்னார்–பயனிலை, சேர்ந்தவரை – செயப்படுபொருள். ஏ – அசை. (ங)

204 உலகறியத் தீரக் கலப்பினு நில்லா
சிலபகலாஞ் சிற்றினத்தார் கேண்மை—நிலைதிரியா
நிற்கும் பெரியோர் நெறியடைய நின்றனைத்தால்
ஒற்க மிலாளர் தொடர்பு.

(ப—ரை) சிறு இனத்தார் – கீழ்மக்கள், கேண்மை – சிநேகமானது, உலகு அறிய – உலகமறிய, தீர – முற்றாக, கலப்பினும் – கலந்தாலும், நில்லா – நில்லாவாம்: சில பகல் ஆம் – சில நாளளவாம்; ஒற்கம் இல் ஆளர் – வறுமை யில்லாதவர், தொடர்பு – சிநேகம், நிலை திரியா – நன்னிலை தவறாமல், நிற்கும் பெரியோர் – நிற்கின்ற பெரியோர்கள், நெறி அடைய – நல்வழி யடைய, நின்ற அனைத்து – நின்றாற்போலும்.

(க—ரை) கீழ்மக்கள் சிநேகம் சிலகால மிருக்கும்; மேன்மக்கள் சிநேகம் பலகால மிருக்கும்.

(வி—ரை) கேண்மை — எழுவாய், சில பகலாம் — பயனிலை, தொடர்பு — எழுவாய், நின்றனைத்து — பயனிலை, ஆல் — ஈற்றசை.

205 இன்ன ரினைய ரெமர்பிற ரென்னுஞ்சொல்
என்னு மிலரா மியல்பினாற் — றுன்னித்
தொலைமக்க டுன்பந்தீர்ப் பாரேயார் மாட்டுந்
தலைமக்க ளாகற்பா லார்.

(ப—ரை) இன்னர் — நல்லவர், இனையவர் — தீயவர், எமர் — உறவினர், பிறர் — அயலார், என்னும் சொல்—என்று சொல்லுஞ்சொல், என்னும் — யாதாகிலும், இலர் ஆம் — இல்லாதவர்களாகின்ற, இயல்பினால் — இயற்கையால், துன்னி — சேர்ந்து, தொலை — (துன்பத்தால்) தளர்ந்த, மக்கள் — மனிதர்களுடைய, துன்பம் — துன்பங்களை, தீர்ப்பாரே — நீக்குபவர்களே, யார்மாட்டும் — யாவரிடத்தும், தலைமக்கள் — மேன்மக்கள், ஆகல் பாலார் — ஆகுந் தன்மை யுடையார்.

(க—ரை) மேன்மக்கள், யாவர் துன்பங்களையு நீக்குவார்கள்.

(வி—ரை) தலைமக்கள் — எழுவாய், தீர்ப்பார் — பயனிலை, துன்பம் — செயப்படுபொருள். ஏகாரம் — அசை. (ரு)

206 பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்கல்
அக்காரம் பாலோ டமரார்கைத் துண்டலின்
உப்பிலிப் புற்கை யுயிர்போற் கிளைஞர்மாட்
டெக்கலத் தானு மினிது.

(ப—ரை) பொன் கலத்து — பொன்னின் கலத்தில், பெய்த — இட்ட, புலி உகிர் — புலிநகம் போன்ற, வான் புழுக்கல் — வெண் சோற்றை, அக்காரம் — சருக்கரையும், பால் — பாலும், ஓடு — இவற்றோடு, அமரார் — பகைவர், கைத்து — கையால் வந்ததை, உண்டலின் — உண்பதைப்பார்க்கிலும், உப்பு இலி — உப்பில்லாத, புற்கை — புல்லரிசிக் கூழை, உயிர் போல் — தன்னுயிர்போலும், கிளைஞர் மாட்டு — இனத்தாரிடத்து, எக் கலத்து ஆனும் — எந்தக் கலத்திலாகினும், உண்டல் இனிது — உண்பது இன்பம்.

(க—ரை) பகைவரிடத்துப் பொற்கலத்திற் பாலுஞ் சோறு உண்பதிலும் உயிர்போலு மினத்தாரிடத்துப் புல்லரிசிக்கூழ் உண்ணுத லின்பம்.

(வி—ரை) உண்டல் – எழுவாய், இனிது – பயனிலை. கிளைஞர்,

[தொன்னூல்]

"ஞாவிடைப் பகுபத நண்ணலு நெறியே." (சு)

207 நாள்வாய்ப் பெறினுந்தந் நள்ளாதா ரில்லத்து
வேளாண்மை வெங்கருனை வேம்பாகும்—கேளாய்
அபரானப் போழ்தி னடகிடுவ ரேனுந்
தமராயார் மாட்டே யினிது.

(ப—ரை) கேளாய் – மனதே கேட்பாயாக; நாள்வாய் – காலத்திலே, தம் – தமது, நள்ளாதார் – பகைவர், இல்லத்து – வீட்டில், வேளாண்மை – உபகாரமாக, வெம் கருனை – விருப்பந்தரும் பொரிக்கறிச் சோற்றை, பெறினும் – பெற்றாலும், வேம்பு ஆகும் – வேம்புக்கு ஒப்பாகும்; அபரானப் போழ்தின் – அகாலத்தில், அடகு – இலைக்கறியை, இடுவரேனும் – இடுவாராயினும், தமர் ஆயார்மாட்டே – சுற்றத்தாரிடத்துண்ணல், இனிது – இன்பமாம்.

(க—ரை) காலத்தில் பகைவரிடத்தில் பொரிக்கறிச் சோற்றைப் பெற்றாலும் வேம்பாகும்; அகாலத்தில் இலைக்கறிச் சோறிடுவாராகிலும் இனத்தாரிடத்தி லுண்ட லின்பம்.

(வி—ரை) கருனை – எழுவாய், வேம்பாகும் – பயனிலை. (உண்டல்) – தோன்றா எழுவாய், இனிது – பயனிலை. (எ)

208 முட்டிகை போல முனியாது வைகலுங்
கொட்டியுண் பாருங் குறடுபோற் கைவிடுவர்
சுட்டுக்கோல் போல வெரியும் புகுவரே
நட்டா ரெனப்படு வார்.

(ப—ரை) முட்டிகை போல – கொல்லன் சம்மட்டிபோல, முனியாது – வெறுக்காது, வைகலும் – நாடோறும், கொட்டி – அடைத்து, உண்பாரும் – உண்பவரும், குறடுபோல் – அவன் குறட்டைப்போல, கைவிடுவர் – விட்டு நீங்குவர்; நட்டார் – உறவினர், எனப்படுவார் – என்று சொல்லப்படுவார், சுட்டுக்கோல் போல – உலையாணிக்கோல்போல, எரியும் – துன்ப நெருப்பிலும், புகுவர் – பிரவேசிப்பர்.

(க—ரை) சம்மட்டிபோ லடித்துண்ணு நட்பில்லார் குறட்டைப்போற் கைவிடுவர்; உறவினரென்று சொல்லப்படுவோர் உலையாணிக் கோல்போலத் துன்பத்திலு முடனிருப்பார்.

(வி—ரை) உண்பார் – எழுவாய், கைவிடுவர் – பயனிலை. நட்டார் – எழுவாய், புகுவர் – பயனிலை. ஏ – அசை. (அ)

209 நறுமலர்த் தண்கோதாய் நட்டார்க்கு நட்டார்
மறுமையுஞ் செய்வதொன் றுண்டோ—இறுமளவும்
இன்புறுவ வின்புற றெழீஇ யவரோடு
துன்புறுவ துன்புறாக் கால்.

(ப—ரை) நறு மலர் – வாசம் வீசு மலராற் றொடுத்த, தண் – குளிர்ந்த, கோதாய் – மாலையையுடையவளே!, நட்டார்க்கு – உறவினர்க்கு, நட்டார் – உறவினர், இறும் அளவும் – சாமளவும், இன்பு உறுவ – இன்படைவனவற்றில், இன்பு உற்று – இன்பமடைந்து, எழீஇ – நல்வழியினடந்து, அவரோடு – அவருடன், துன்பு உறுவ – துன்பமடைவனவற்றில், துன்பு உறாக்கால் – துன்ப மடையாவிடில், மறுமையும் – மறுபிறப்பிலும், செய்வது – செய்யத்தக்கது, ஒன்று உண்டோ – ஒருதவி (உலகத்தில்) உண்டோ?

(க—ரை) மாலையை யுடையவளே! உறவினர்க்கு உறவினர் மரணபரியந்தம் இன்பங்களையுந் துன்பங்களையு மநுபவிக்காவிட்டால் மறுபிறப்பிலுஞ் செய்யத்தக்க ஒருதவிக்கடன் உண்டோ?

(வி—ரை) ஒன்று – எழுவாய், உண்டு – பயனிலை. (கூ)

210 விருப்பிலா ரில்லத்து வேறிருந் துண்ணும்
வெருக்குக்கண் வெங்கருனை வேம்பாம்—விருப்புடை
தன்போல்வா ரில்லுட் டயங்குநீர்த் தண்புற்கை [த்
என்போ டியைந்த வமிழ்து.

(ப—ரை) விருப்பு இலார் – தம்மில் ஆசை யில்லாதவர், இல்லத்து – வீட்டில், வேறு இருந்து – வேறாகவிருந்து, உண்ணும் – உண்கிற, வெருக்குக்கண் – பூனைக்கண்போலு நிறமுடைய, வெம் கருனை – விருப்பந்தரும் பொரிக்கறி போசனம்,வேம்பு ஆம் – வேம்புக்கு ஒப்பாகும்; விருப்பு உடை – தன்மே லாசையுடைய, தன் போல்வார் – தன்னை நிகர்த்தவர், இல்லுள் – வீட்டில், (உண்ணப்படுகின்ற) தயங்கு – தெளிந்த, நீர் – நீரையுடைய, தண் – குளிர்ந்த, புற்கை – புல்லரிசிக் கூழானது, என்போடு – எலும்புடனே, இயைந்த – பொருந்திய, அமிழ்து – அமுதுக்கொப்பாம்.

(க—ரை) விருப்பில்லார் வீட்டி லுண்ணும் பொறிக்கறி யுணவு வேம்புக்கு ஒப்பாகும்; விருப்புள்ளார் வீட்டி லுண்ணும் புல்லரிசிக் கூழ் அமிழ்துக்கு ஒப்பாகும்.

(வி—ரை.) கருணை – எழுவாய், வேம்பாம் – பயனிலை. புற்கை – எழுவாய், அமிழ்து – பயனிலை. (௧0)

சுற்றந்தழால் முற்றிற்று.

## உஉ-ஆம். அதிகாரம் - நட்பாராய்தல்.

[அஃதாவது சிநேகத்தை யாராய்தலாகும்]

211 கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்
குருத்திற் கரும்புதின் றற்றே—குருத்திற் [றுங்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ வென்று
மதுர மிலாளர் தொடர்பு.

(ப—ரை) கருத்து – கருத்தால், உணர்ந்து – அறிந்து, கற்று அறிந்தார் – பல நூல்களை யறிந்தவர், கேண்மை – நட்பானது, எஞ்ஞான்றும் – எந்நாளும், கரும்பு – கரும்பை, குருத்தின் – குருத்திலிருந்து, தின்று அற்று – தின்றாற்போலும்; மதுரம் இல ஆளர் – கல்வி மதுர மில்லாதவர், தொடர்பு – நட்பானது, என்றும் – எந்நாளும், குருத்திற்கு – கரும்பின் குருத்திற்கு, எதிர் செல – எதிராக அடியிலிருந்து, தின்ற தகைத்து – தின்றதுபோலும்.

(க—ரை) கற்றோர் சிநேகமானது கரும்பை நுனியிலிருந்து தின்றாற்போலும்; மற்றோர் சிநேகம் அக்கரும்பை யடியிலிருந்து தின்றாற்போலும்.

(வி—ரை) கேண்மை – எழுவாய், தின்றற்று – பயனிலை. தொடர்பு – எழுவாய், தின்றதகைத்து – பயனிலை. அரோ, ஏ – அசைகள். (க)

212. இற்பிறப் பெண்ணி யிடைதிரியா ரென்பதோர்
நற்புடை கொண்டமை யல்லது—பொற்கேழ்
புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட
மனமறியப் பட்டதொன் றன்று.

(ப—ரை) பொன் கேழ் – பொன்னிறம்போலும், புனல் – அருவிச்சலம், ஒழுக – விழுக, புள் – பறவைகள், இரியும் – பறக்கும், பூ – அழகிய, குன்றம் – மலையையும், நாட – நாட்டையுமுடைய பாண்டியனே!, இல் பிறப்பு – நற்குடிப் பிறப்பை, எண்ணி – நினைத்து, இடை – நடுவில், திரியார் – வேறுபடார், என்பது – என்று சொல்வது, ஓர் – ஒரு, நல் புடை – நல்லிடம் பற்றி, கொண்டமை – நட்புக்கொண்டமை, அல்லது – அல்லாமல், மனம் – அவர் மன

மானது, அறியப்பட்டது — பிறரா லறியப்பட்டது, ஒன்று அன்று— ஒன்றல்ல.

(க—ரை) பாண்டியனே! நற்குடிப் பிறப்பை நினைத்து நடு விலே வேறுபடாதென்று ஒருவரைச் சிநேகஞ் செய்ததல்லாது அவர் மனநிலை யறியப்பட்டதல்ல.

(வி—ரை) மனம் — எழுவாய், பட்டதன்று — பயனிலை. (உ)

213 யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல்வேண்டும்—யானை
யறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேன்
மெய்யதா வால்குழைக்கு நாய்.

(ப—ரை) யானை — யானையை, அனையவர் — ஒப்பானவர், நண்பு- சிநேகத்தை, ஒரீஇ — நீக்கி, நாய்—(நன்றியறிதலுள்ள) நாயை, அனையார் — ஒப்பானவர், கேண்மை — நட்பை, தழீஇக்கொளல் — தழுவிக்கொள்ளுதல், வேண்டும் — வேண்டும்: (எனெனில்), யானை- யானையானது, அறிந்து அறிந்தும் — (இரைதருவோனென்று) அறிந்தும், பாகனையே — பாகனையே, கொல்லும் — கொலை செய்யும்; நாய் — நாயானது, எறிந்த — எசமானெறிந்த, வேல் — வேலானது, மெய்யது ஆ — தன்னுடலி லிருக்க, வால் — வாலை, குழைக்கும்- ஆட்டும்.

(க—ரை) யானைக்கு ஒப்பானவர் சிநேகத்தைவிட்டு நாய்க்கு ஒப்பானவர் சிநேகத்தைக் கொள்ளவேண்டும்.

(வி—ரை) (நீவிர்) — தோன்றா எழுவாய், கொளல்வேண்டும்— பயனிலை, கேண்மையை — செயப்படுபொருள். ஏ — அசை. (ங)

214 பலநாளும் பக்கத்தா ராயினு நெஞ்சிற்
சிலநாளு மொட்டாரோ டொட்டார்—பலநாளு
நீத்தா ரெனக்கை விடலுண்டோ தந்நெஞ்சத்
தியாத்தாரோ டியாத்த தொடர்பு.

(ப—ரை) பல நாளும் — எந்நாளும், பக்கத்தார் ஆயினும்-அருகிலிருந்தாராகினும், நெஞ்சில் — மனதில், ஒட்டாரோடு — பொருத்தமில்லாருடன், சில நாளும் — சிலநாளாயினும், ஒட்டார் — சிநேகியார் (அறிவுடையோர்); தம் — தமது, நெஞ்சத்து — மனத்தில், யாத்தாரோடு — சம்பந்தப்பட்டாருடன், யாத்த — கட்டுப்பட்ட

தொடர்பு — சிநேகத்தை, பல நாளும் — பலநாளும், நீத்தார் என — நீக்கினரென்று, கைவிடல் உண்டோ — கைவிடக்கடவதோ?

(க—ரை) பலகாலும் பழகினவராகிலு மனப் பொருத்தமில்லாருடன் சிலகாலமுஞ் சிநேகஞ் செய்யார்; மனப்பொருத்த முடையார் சிநேகத்தை விடுவார்களோ?

(வி—ரை) ஒருவர் — எழுவாய், ஒட்டார் — பயனிலை. ஒருவர் - எழுவாய், கைவிடலுண்டோ — பயனிலை, தொடர்பை — செயப்படு பொருள். (ச)

215 கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதா நட்பாட்சி—தோட்ட
கயப்பூப்போன் மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரு நட்பாரு மில்.

(ப—ரை) கோடு — கொம்பிற்பூத்த, பூ போல — பூவைப்போல, மலர்ந்து — அலர்ந்து, பின் — பின்பு, கூம்பாது — முகங் குவியாது, வேட்டதே — இச்சித்ததே, வேட்டதாம் — இச்சித்ததாகும், நட்பு ஆட்சி — சிநேக வுரிமை, தோட்ட — தோண்டிய, கயம் — குளத்தின், பூ போல் — பூவைப்போல, முன் — முன்னே, மலர்ந்து — அலர்ந்து, பின் — பின்னே, கூம்புவாரை — முகங் குவிப்பாரை, நயப்பாரும் — இச்சிப்பாரும், நட்பாரும் — நேசிப்பாரும், இல் — இல்லை.

(க—ரை) மரத்திற் பூத்த பூவைப்போல முகமலர்ந்து சிநேகித்ததே சிநேகம்; குளத்திற் பூத்த பூவைப்போல முகங்குவிப்பார் சிநேகம் சிநேகமல்ல.

(வி—ரை) நட்பாட்சி — எழுவாய், வேட்டதாம் — பயனிலை. நயப்பார், நட்பார் — எழுவாய், இல் — பயனிலை. (ரு)

216 கடையாயார் நட்பிற் கமுகனைய ரேனை
யிடையாயார் தெங்கி னனையர்—தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு.

(ப—ரை) கடை ஆயார் — கடையானவர், நட்பில் — சிநேகத்தில், கமுகு அனையர் — பாக்குமரத்தை யொப்பாவர்; ஏனை — மற்றை, இடை ஆயார் — இடையானவர், தெங்கின் அனையர் — தென்னைமரத்தை யொப்பாவார்; தலை ஆயார் — தலையானவர், எண்

அரும் — நினைத்தற்கரிய, பெண்ணை போன்று — பனைமரத்தை ஒத்து, இட்ட ஞான்று — இட்டகாலத்தில், இட்டதே — இடப்பட்டதே, தொன்மை உடையார் — பழைமையுடையார், தொடர்பு — சிநேகம்.

(க—ரை) சிநேகத்தில் உத்தமர் பனைமரத்தை யொப்பாவர், மத்திமர் தென்னைமரத்தை யொப்பாவர், அதமர் பாக்குமரத்தை யொப்பாவர்.

(வி—ரை) கடையாயார், இடையாயார், தலையாயார் — எழுவாய், அனையர் — பயனிலை. (சு)

217 கழுநீருட் காரட கேனு மொருவன்
விழுமிதாக் கொள்ளி னமிழ்தாம்—விழுமிய
குய்த்துவையார் வெண்சோறே யாயினு மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய்.

(ப—ரை) கழு நீருள் — அரிசி கழுவிய நீரில் வெந்த, கார் — பசிய, அடகு எனும் — இலைக்கறியாகிலும், ஒருவன் — ஒருவன், விழுமிது ஆ — சிறப்பாக, கொள்ளின் — சிநேகரிடத்துக் கொண்டால், அமிழ்து ஆ — (அது) அமுதுக்கொப்பாகும்; விழுமிய — சிறந்த, குய் — தாளித்த, துவை — புளிக்கறி, ஆர் — நிறைந்த, வெள் சோறே ஆயினும் — வெண்சோறாகிலும், மேவாதார் — பகைவர், கைத்து — பொருளை, உண்டல் — புசித்தல், காஞ்சிரம் காய் — எட்டிக்காயோ டொக்கும்.

(க—ரை) ஒருவன், இலைக்கறியாகினும், சிநேகரிடத்துண்ணல் அமிழ்துக்கு ஒப்பாம், ஒருவன் சிறந்த கறியோடு பகைவரிடத்து உண்ணல் எட்டிக்காய்க்கு ஒப்பாகும்.

(வி—ரை) அடகு — எழுவாய், அமிழ்தாம் — பயனிலை. கைத்து — எழுவாய், காஞ்சிரங்காய் — பயனிலை. (எ)

218 நாய்க்காற் சிறுவிரல்போ னன்கணிய ராயினு
மீக்காற் றுணையு முதவாதார் நட்பென்னும்
சேய்த்தாலுஞ் சென்று கொளல்வேண்டுஞ்செய்வினைக்
வாய்க்கா லனையார் தொடர்பு. [கும்

(ப—ரை) நாய் கால் — நாய்க்காலின், சிறு விரல் போல் — சிறு விரல்களைப்போல், நன்கு அணியர் ஆயினும் — மிகவு நெருக்க

முடையராகிலும், ஈ கால் — ஈயினது கால், துணையும் — அளவும், உதவாதார் — உதவி செய்யாதவர்களது, நட்பு என் ஆம் — சிநேக மென்ன பலனுடைத்தாம்? செய் — கழனியை, விளைக்கும் — விளை விக்கும், வாய்க்கால் — நீர்வாய்க்காலை, அனையார் — ஒப்பானவர், தொடர்பு — நட்பை, சேய்த்து ஆனும் — தூரத்திலாகிலும், சென்று — போய், கொளல் வேண்டும் — பெறவேண்டும்.

(க—ரை) ஈயினது காலளவு உதவி செய்யாதார் நட்புச் சமீபத்திருந்து என்ன பலன்? கொடுப்போர் சிநேகத்தைத் தூரத்திற் சென்றாவது கொளல்வேண்டும்.

(வி—ரை) நட்பு — எழுவாய், என்னும் — பயனிலை. ஒருவர் — எழுவாய், கொளல்வேண்டும் — பயனிலை, தொடர்பை — செயப்படு பொருள். (அ)

219 தெளிவிலார் நட்பிற் பகைநன்று சாதல்
விளியா வருநோயி னன்று—லளிய
விகழ்தலிற் கோற லினிதேமற் றில்ல
புகழ்தலின் வைதலே நன்று.

(ப—ரை) தெளிவு இலார் — விவேகமில்லார், நட்பின் — சினேகத்தைப் பார்க்கிலும், பகை நன்று — பகை நன்மையாம்; விளியா-சாவாமலிருக்க, வரும் — வரப்பட்ட, நோயின் — வியாதியைப் பார்க்கிலும், சாதல் — இறத்தல், நன்று — நன்மையாம்; அளிய — ஒருவன் வருந்த, இகழ்தலின் — இகழ்தலைப்பார்க்கிலும், கோறல் — கொல்லுதல், இனிது — நன்மையாம்; இல்ல — இல்லாதனவற்றைச் சொல்லி, புகழ்தலின் — புகழ்தலைப்பார்க்கிலும், வைதலே நன்று—வைகிறதே நன்மையாம்.

(க—ரை) அறிவில்லார் சினேகத்திலும் பகை நல்லது; வியாதியினும் மரணம் நல்லது; இகழ்தலினுங் கொல்லுதல் நல்லது, வீணாகப் புகழ்தலினும் வைதல் நல்லது.

(வி—ரை) பகை, சாதல், கோறல், வைதல் — எழுவாய், நன்று- பயனிலை. ஆல், ஏ, மற்று — அசைகள்.

[அகத்தியச் சூத்திரம்]

"பலவெழு வாயு மொருபய னிலைபெறும்." (கூ)

220 மரீஇப் பலரோடு பன்னாண் முயங்கிப்
பொரீஇப் பொருட்டக்கார்க் கோடலே வேண்டும்

பரீஇ யுயிர்செகுக்கும் பாம்பொடு மின்னா
மரீஇப் பின்னைப் பிரிவு.

(ப—ரை) பலரோடு — பலருடன், மரீஇ — மருவி, பல நாள்—பல நாள், முயங்கி — கலந்து, பொரீஇ — இருவர் குணமு மொப்பாகி, பொருள் — பொருளாக, தக்கார் — பெரியோரை, கோடல் வேண்டும் — சினேகமாகக் கொள்ளவேண்டும்; மரீஇ — ஒருவரைச் சிநேகித்து, பின்னை — பின்பு, பிரிவு — அவரைவிட்டுப் பிரிதல், பரீஇ- பல்லாற் கடித்து, உயிர் — உயிரை, செகுக்கும் — நீக்கும், பாம்பொடும் — பாம்பொடு கொண்ட நட்பிலும், இன்னா — துன்பந் தருவதாம்.

(க—ரை) ஒருவர் பெரியோரைச் சினேகமாகக்கொள்ளவேண்டும்; சினேகங் கொண்டு பிரிதல் துன்பம்.

(வி—ரை) ஒருவர் — எழுவாய், கோடல்வேண்டும் — பயனிலை. தக்கார் — செயப்படுபொருள். பிரிவு — எழுவாய், இன்னா — பயனிலை, ஏ — அசை. (க0)

நட்பாராய்தல் முற்றிற்று.

# உ௲-ஆம் அதிகாரம்-நட்பிற்பிழைபொறுத்தல்

[அஃதாவது நட்பால் வருங் குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளலாம்.]

221 நல்லா ரெனத்தா நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லா ரெனினு மடக்கிக் கொளல்வேண்டு
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு.

(ப—ரை) நல்லார் என – நல்லவரென்று, தாம் – தாம், நனி- மிகவும், விரும்பி – இச்சித்து, கொண்டாரை – நட்புக்கொள்ளப் பட்டவரை, அல்லார் எனினும் – பொல்லாதவராகிலும், அடக்கி- (குற்றத்தை) யடக்கி, கொளல் வேண்டும் – கொள்ளல்வேண்டும்; நெல்லுக்கு – நெல்லுக்கு, உமி உண்டு – உமியுண்டு; நீர்க்கு – சலத் திற்கு, நுரை உண்டு – நுரையுண்டு; புல் இதழ் – புறவிதழ், பூவிற் கும் – மலருக்கும், உண்டு – உண்டு.

(க—ரை) நல்லவரென்று சிநேகிக்கப்பட்டவரைப் பொல் லாதவரானாலும் குற்றத்தை நீக்கிச் சிநேகித்துக் கொள்ளவேண் டும்.

(வி—ரை) (ஒருவர்) – தோன்றா எழுவாய், கொளல்வேண்டும்- பயனிலை, கொண்டாரை – செயப்படுபொருள். (க)

222 செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டூடார்
மறுத்துஞ் சிறைசெய்வர் நீர்நசைஇ வாழ்நர்
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு.

(ப—ரை) செறு தோறு – அடைக்குந்தோறும், உடைப்பினும்- உடைத்தாலும், செம் – நல்ல, புனலோடு – நீருடன், ஊடார் – பிண ங்காதவர்களாய், மறுத்து – மீண்டும், சிறை செய்வர் – அணைகட்டு வர்; நீர் – சலத்தை, நசை – இச்சித்து, வாழ்நர் – வாழ்பவர்; (அது போல) தாம் – தாங்கள், வேண்டி – விரும்பி, தொடர்பு – நட்பு, கொண்டார் – கொள்ளப்பட்டவர், வெறுப்ப – வெறுக்கத்தக்கவை களை, செயினும் – செய்தாலும், பொறுப்பர் – பொறுத்துக்கொள் வர்.

(க—ரை) சினேகிக்கப்பட்டவர் வெறுப்பானவைகளைச் செய்தாலும் சினேகித்தவர் பொறுத்துக்கொள்வர்.

(வி—ரை) கொண்டார் — எழுவாய், பொறுப்பர் — பயனிலை, ஏ— அசை. (உ)

2 23 இறப்பவே தீய செயினுந்தன் னட்டார்
பொறுத்த றகுவதொன் றன்றே—நிறக்கோங்
குருவ வண்டார்க்கு முயர்வரை நாட
வொருவர் பொறையிருவர் நட்பு.

(ப—உரை) நிறம் — நிறமுடைய, கோங்கு — கோங்குமலரில், உருவம் — வடிவுள்ள, வண்டு — வண்டினங்கள், ஆர்க்கும் — சத்திக்கும், உயர்வரை — உயர்ந்தமலையையும், நாட — நாட்டையுமுடைய பாண்டியனே!, தன் — தன்னோடு, நட்டார் — சிநேகித்தவர், இறப்ப — மிகவும், தீய — பொல்லாங்குகளை, செயினும் — செய்தாலும், பொறுத்தல் — பொறுத்துக்கொள்ளுதல், இருவர் நட்பு — இருவர்க்குஞ் சிநேகமாம்.

(க—ரை) பாண்டியனே! தம்முடைய சினேகர் மிகவுங் குற்றங்களைச் செய்தாலும் பொறுத்துக் கொள்ளவேண்டும். ஒருவர் பொறுத்தல் இருவருக்குஞ் சினேகமாம்.

(வி—ரை) நட்பு — எழுவாய், (ஆம்) என்னும் பயனிலை தொக்கியது. ஏகாரம் — அசை. (ங)

224 மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தங்
கடுவிசை நாவாய் கரையலைக்குஞ் சேர்ப்ப
விடுதற் கரியா ரியல்பிலரே னெஞ்சஞ்
சுடுதற்கு மூட்டிய தீ.

(ப—ரை) மடி — மடிந்து விழுகின்ற, திரை — அலைகள், தந்திட்ட — ஒதுக்கிய, வான் — வெள்ளிய, கதிர் — கிரணங்களையுடைய, முத்தம் — முத்துக்களையும், கடு விசை — மிகுந்த வேகத்தையுமுடைய, நாவாய் — கப்பலையும், கரை — கரையிலே, அலைக்கும் — ஒதுக்கும், சேர்ப்ப — கரையையுடைய பாண்டியனே! விடுதற்கு — சினேகம் விடுதற்கு, அரியார் — அரிதானவர்கள், இயல்பு இலரேல் — நற்குண மில்லாரேயானால், நெஞ்சம் — மனதை, சுடுதற்கு — சுடுகிறதற்கு, மூட்டிய — மூட்டப்பட்ட, தீ — நெருப்புக்கு ஒப்பாவார்.

(க—ரை) பாண்டியனே! சினேகஞ் செய்யப்பட்டவர் நற்குண மில்லாதவராஞல் சினேகித்தவர் மனதைச் சுடுநெருப்புக் கொப் பாவார்.

(வி—ரை) அரியார் — எழுவாய், தீ — பயனிலை. (ச)

225 இன்னா செயினும் விடற்பால ரல்லாரைப்
பொன்னாகப் போற்றிக் கொளல்வேண்டும்-பொன்னொ
நல்லிற் சிதைத்ததீ நாடொறு நாடித்தம் [டு
இல்லத்தி லாக்குத லால்.

(ப—ரை) பொன்னொடு — பொன்னுடன், நல் இல் — நல்ல வீட்டை, சிதைத்த — சுட்ட, தீ — நெருப்பை, நாள்தோறும் — நாள் தோறும், நாடி — தேடி, தம் — தமது, இல்லத்தில் — வீட்டில், ஆக்கு தலால் — (சமையற்கு) வளர்த்தலால், இன்னா — துன்பங்களை, செயி னும் — செய்தாலும், விடல் பாலர் அல்லாரை — விடத் தகுதியல் லாதவர்களை, பொன் ஆக — பொன்னைப்போல், போற்றி — காப் பாற்றி, கொளல் வேண்டும் — நட்புக் கொளல்வேண்டும்.

(க—ரை) வீட்டைச் சுட்ட தீயை வீட்டிலே தேடி வைத்துக் கொள்ளுதலால், துன்பஞ் செயினும் விடத் தகுதியில்லாதவர் களைச் சினேகித்துக் கொள்ளல்வேண்டும்.

(வி—ரை) ஒருவர் — எழுவாய், கொளல்வேண்டும் — பயனிலை.

226 இன்னா செயினும் விடுதற் கரியாரைத்
துன்னாத் துறத்த றகுவதோ—துன்னருஞ்சீர்
விண்குத்து நீள்வரை வெற்ப களைபவோ
கண்குத்திற் றென்றுதங் கை.

(ப—ரை) துன் அரு — நெருங்குதற்கரிய, சீர் — சிறப்பையுடைய, விண் — ஆகாயத்தை, குத்தும் — அளாவிய, நீள் — நீண்ட, வரை — மூங்கிலைப்பொருந்திய, வெற்ப — மலையையுடைய பாண்டியனே!, இன்னா — குற்றங்களை, செயினும் — செய்தாலும், விடுதற்கு — விட்டு விடுதற்கு, அரியாரை — அரிய சினேகரை, துன்னா — சினேகியாமல், துறத்தல் — கைவிடுதல், தகுவதோ — தக்கதோ?, தம் — தம்மு டைய, கை — கையானது, கண் — தமதுகண்ணை, குத்திற்று என்று- குத்தியதென்று, களைபவோ — தறிப்பாரோ?

(க—ரை) பாண்டியனே! குற்றங்களைச் செய்தாலும் விடுதற்கரிய சிநேகிதரைச் சிநேகியாது விடுதல் தகாது.

(வி—ரை) துறத்தல் – எழுவாய், தகுவதோ – பயனிலை. (சு)

227 இலங்குநீர்த் தண்சேர்ப்ப வின்னா செயினும்
கலந்து பழிகாணார் சான்றோர்—கலந்தபின்
தீமை யெடுத்துரைக்குந் திண்ணறி வில்லாதார்
தாமு மவரிற் கடை.

(ப—ரை) இலங்கு – விளங்குகின்ற, நீர் – நீரையும், தண் – குளிர்ச்சியையும் பொருந்திய,சேர்ப்ப – கரையையுடைய பாண்டியனே!, இன்னா – குற்றங்களை, செயினும் –(ஒருவர்) செய்தாலும், சான்றோர் – பெரியோர், கலந்து – சிநேகித்து, பழி – குற்றங்களை, காணார் – பாரார்; கலந்தபின் – சிநேகித்தபின், தீமை – குற்றங்களை, எடுத்து உரைக்கும் – எடுத்துச் சொல்லும், திண் – வலிய, அறிவு இலாதார் – அறிவிலாதவர், தாமும் – தாங்களும், அவரின்- அவரைப் பார்க்கிலும், கடை – கடையானவர்.

(க—ரை) பாண்டியனே! பெரியோர்கள் தம்முடைய சிநேகர் குற்றங்களைச் செய்தாலும் அவர் குற்றங்களைப் பாரார்; குற்றங்களைச் சொல்பவர் குற்றஞ் செய்தவரிலுங் கடையாவர்.

(வி—ரை) சான்றோர் – எழுவாய், காணார் – பயனிலை, பழி– செயப்படுபொருள். அறிவில்லாதார் – எழுவாய், கடையாவர் – பயனிலை. (எ)

228 ஏதிலார் செய்த திறப்பவே தீதெனினு
நோதக்க தென்னுண்டா நோக்குங்கால்—காதல்
கழுமியார் செய்த கறங்கருவி நாட
விழுமிதா நெஞ்சத்து ணின்று.

(ப—ரை) கறங்கு – சத்திக்கும், அருவி – யாற்றையும், நாட— நாட்டையுமுடைய பாண்டியனே!, ஏதிலார் – அயலார், செய்தது- செய்த குற்றம், இறப்ப – மிகவும், தீது எனினும் – குற்றமாகிலும், நோக்குங்கால் – பார்க்குமிடத்தில், நோதக்கது – நோவத்தக்கது, என் உண்டாம் – என்ன வுண்டாம்?,காதல் – தம்மி லாசையுடைய, கழுமியார் – சிநேகர், செய்த – செய்த குற்றம், நெஞ்சத்துள் மனதுள், நின்று – இருந்து, விழுமிது ஆம் – சிறப்பை யுடையதாம்.

(க—ரை) பாண்டியனே! அரிய சினேகர் செய்த குற்றம் மனதிலிருந்து சிறப்புடையதாகும்; அயலார் செய்தது மிகவுங் குற்றமாயினும் வருந்தத்தக்கதென்ன?

(வி—ரை) குற்றம் — எழுவாய், விழுமிதாம் — பயனிலை. (அ)

229 தமரென்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தா ராயி னவரைத்
தமரினு நன்கு மதித்துத் தமரன்மை
தம்மு ளடக்கிக் கொளல்.

(ப—ரை) தமர் என்று — உறவென்று, தாம் — தாம், கொள்ளப் பட்டவர் — சினேகிக்கப்பட்டவர், தம்மை — தம்மை, தமர் அன்மை— உறவில்லாமையை, தாம் அறிந்தார் ஆயின் — தாம் கண்டாராகில், அவரை — அவர்களை, தமரினும் — உறவினும், நன்கு — நன்றாக, மதித்து — எண்ணி, தமர் அன்மை — உறவில்லாமையை, தம்முள்— தமக்குள்ளே, அடக்கிக்கொளல் — அடக்கிக்கொள்ளவேண்டும்.

(க—ரை) சினேகிக்கப்பட்டவரிடத்துச் சினேக மில்லாமையைக் கண்டால் அவரைச் சினேகிதரிலும் அகமாகக் கொள்ள வேண்டும்.

(வி—ரை) ஒருவர் — எழுவாய், அடக்கிக்கொளல் — பயனிலை, தமரன்மை — செயப்படுபொருள். (கூ)

230 குற்றமு மேனைக் குணமு மொருவனை
நட்டபி னாடித் திரிவேனேல்—நட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க
வறைகடல்சூழ் வைய நக.

(ப—ரை) குற்றமும் — குற்றத்தையும், ஏனை — மற்றை, குணமும் — குணத்தையும், ஒருவனை நட்டபின் — சினேகித்தபின், நாடி— தேடி, திரிவேனேல் — திரிவேனாகில், அறை — சத்திக்கும், கடல் சூழ் — கடலாற் சூழப்பட்ட, வையம் — உலகம், நக — (என்னை) நகைக்கும்படி, (யான்) நட்டான் — சிநேகித்தவன், மறை — இரகசியத்தை, காவா விட்டவன் — வெளிப்படுத்தினவன், செல்வுழி— செல்லு நரகத்தில், செல்க — நான் போவேனாக.

(௧-ரை) ஒருவன் குற்றத்தையுங் குணத்தையும் சிநேகித்த பின் ஆராய்வேனாகில் சிநேகன் இரகசியத்தைச் சொன்னவன் போகு நரகத்திற் போவேனாக.

(வி-ரை) யான் – எழுவாய், செல்க – பயனிலை. (௰)

நட்பிற் பிழைபொறுத்தல் முற்றிற்று.

## உச-ஆம் அதிகாரம்-கூடா நட்பு

[அஃதாவது பொருந்தாத சிநேகமாம்.]

231 செறிப்பில் பழங்கூரை சேறணை யாக
விறைத்துநீ ரேற்றுங் கிடப்பர்—கறைக்குன்றம்
பொங்கருவி தாழும் புனல்வரை நன்னாட
தங்கரும முற்றுந் துணை.

(ப—ரை) கறை — இருண்ட, குன்றம் — மலையில், பொங்கு-மிகுந்த, அருவி — யாறு, தாழும் — வீழும், புனல் — நீரையுடைய, நல்-நல்ல, வரை நாட — மலைமீது நாட்டையுடைய பாண்டியனே! செறிப்பு இல் — கட்டவிழ்ந்த, பழம் — பழைய, கூரை—கூரையையுடைய வீட்டில், சேறு — சேற்றை, அணை ஆக — அணைகட்டி, இறைத்தும்-(அணையுள்வீழ்) நீரை யிறைத்தும், நீர் — (ஒழுகு) நீரை, ஏற்றும்-மேலே தாங்கியும், தம் — தமது, கருமம் — காரியம், முற்றும் துணை-முடியுமளவும், கிடப்பர் — இருப்பார்.

(க—ரை) பாண்டியனே! மழை விடுமளவும் ஒழுக்கு வீட்டிலிருப்பார்.

(வி—ரை) (சிலர்) — தோன்றா எழுவாய், கிடப்பர் — பயனிலை.

232 சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோன் மாண்ட பயத்ததா—மாரி
வறந்தக்காற் போலுமே வாலருவி நாட
சிறந்தக்கால் சீரிலார் நட்பு.

(ப—ரை) வால் — வெள்ளிய, அருவி — ஆற்றையும், நாட — நாட்டையுமுடைய பாண்டியனே! சீரியார் — நல்லவர், கேண்மை-சிநேகமானது, சிறந்த — மிகுந்த, சிறப்புற்று ஆய் — சிறப்புடையதாய், மாரிபோல் — மழைபோல, மாண்ட — மாட்சிமைப்பட்ட, பயத்தது ஆம் — பயனை யுடையதாம்; சீர் இலார் — கெட்டவர்கள், நட்பு — சிநேகமானது, சிறந்தக்கால் — மிக்கவிடத்து, மாரி — அம்மழை, வறந்தக்கால் போலும் — பெய்யாவிட்டாற்போலும்.

(க—ரை) பாண்டியனே! நல்லவர் சிநேகம் மழை பெய்தாற்போற் பயனுடையதாம்; கெட்டவர் சிநேகம் அம்மழை பெய்யாவிட்டாற்போற் பயனற்றதாம்.

(வி—ரை) கேண்மை — எழுவாய், பயத்ததாம் — பயனிலை. நட்பு-எழுவாய், வறந்தக்காற்போலும் — பயனிலை. (உ)

233 நுண்ணுணர்வி னாரோடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்று—நுண்ணூல்
உணர்வில ராகிய வூதிய மில்லார்ப்
புணர்த னிரயத்து ளொன்று.

(ப—ரை) நுண் — நுட்ப, உணர்வினாரொடு — அறிவுளாருடன், கூடி — சேர்ந்து, நுகர்வு உடைமை — அனுபவிக்கு மனுபவம், விண் உலகு — தேவருலகை,ஒக்கும் — நிகர்க்கும்,விழைவிற்று — பயனுடையது; நுண் — நுட்ப, நூல் — நூலை, உணர்வு இலர் ஆகிய — அறியாதவராகிய, ஊதியம் — பயன், இல்லார் — இல்லாதவரை, புணர்தல்—சினேகித்தல், நிரயத்துள் — நரகங்களுள்ளே, ஒன்று — ஒரு நரகத்துக்கொப்பாம்.

(க—ரை) அறிவுள்ளாரோடு சினேகித்தல் சுவர்க்கத்துக்கு ஒப்பாம்; அறிவில்லாரோடு சினேகித்தல் நரகத்துக்கு ஒப்பாம்.

(வி—ரை) நுகர்வுடைமை — எழுவாய், விழைவிற்று — பயனிலை. புணர்தல் — எழுவாய், ஒன்று — பயனிலை. ஏ, ஆல்—அசைகள். (ங)

234 பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போ
லொருபொழுதுஞ் செல்லாதே நந்து—மருகெல்லாஞ்
சந்தன நீள்சோலைச் சாரன் மலைநாட
பந்த மிலாளர் தொடர்பு.

(ப—ரை) அருகு — பக்கம், எல்லாம் — யாவும், நீள் — நீண்ட, சந்தனச்சோலை — சந்தனச் சோலைகளையும், சாரல் — குளிர்காற்றையுமுடைய, மலைநாட—மலைநாட்டையாளும்பாண்டியனே!, பந்தம் இல் ஆளர் — உட்சினேக மில்லாதவர், தொடர்பு — சினேகமானது,பெருகுவது போல — வளர்வதுபோல, தோன்றி — தோற்றி, வை — வைக்கோல், தீ போல் — தீயைப்போல, ஒருபொழுதும் — ஒருநாளும், செல்லாது — செல்லாமல், நந்தும் — கெடும்.

(க—ரை) பாண்டியனே! உள்ளன்பிலார் சினேகம் வைக்கோலின் தீயைப்போலத் தோன்றி யழியும்.

(வி—ரை) தொடர்பு — எழுவாய், நந்தும் — பயனிலை. ஏ—அசை.

235 செய்யாத செய்துநா மென்றலுஞ் செய்வதனைச்
செய்யாது தாழ்த்துக்கொண் டோட்டலு-மெய்யாக
வின்புறாஉம் பெற்றி யிகழ்ந்தார்க்கு மந்நிலையே
துன்புறாஉம் பெற்றி தரும்.

(ப—ரை) செய்யாத — செய்யத்தகாத காரியத்தை, நாம் செய்தும் என்றலும் — நாம் செய்வோமென்று சொல்லலும், செய்வதனை- செய்யுங் காரியத்தை, செய்யாது — செய்யாமல், தாழ்த்துக்கொண்டு — நீட்டிக்கவிட்டு, ஓட்டலும் — வைத்தலும், மெய் ஆக — உண்மையாக, இன்பு உறாஉம் — இன்பமடையத்தக்க, பெற்றி — பெருமையை, இகழ்ந்தார்க்கும் — இகழ்ந்தவர்களுக்கும், அந் நிலையே—அப்பொழுதே, துன்பு உறாஉம் — துன்பமடையத்தக்க, பெற்றி — பெருமையை, தரும் — கொடுக்கும்.

(க—ரை) செய்யத்தகாத காரியத்தைச் செய்வோமென்று சொல்லுதலும், செய்யுங் காரியத்தைச் செய்யாது விடுதலுந் துன்பமாம்.

(வி—ரை) காரியங்கள் – எழுவாய், தரும் — பயனிலை, பெற்றி— செயப்படுபொருள். (ரு)

236 ஒருநீர்ப் பிறந்தொருங்கு நீண்டக் கடைத்தும்
விரிநீர்க் குவளையை யாம்ப லொக்கல்லா
பெருநீரார் கேண்மை கொளினுநீ ரல்லார்
கருமங்கள் வேறு படும்.

(ப—ரை) ஒரு நீர் — ஒரு குளத்து நீரில், பிறந்து — தோன்றி, ஒருங்கு — ஒருவழிப்பட, நீண்டக் கடைத்தும் — வளர்ந்தாலும், விரி- மலர்ந்த, நீர் — குணமுடைய, குவளையை — செங்கழுநீரை, ஆம்பல்— அல்லி, ஒக்கல்லா — ஒவ்வாது; (அதுபோல) பெரு — மிகவும், நீரார்— நற்குண முடையார், கேண்மை — நட்பை, கொளினும் — கொண்டாலும், நீர் அல்லார் — நற்குண மில்லார், கருமங்கள் — செய்காரியங்கள், வேறுபடும் — வித்தியாசப்படும்.

(க—ரை) செங்கழுநீரை அல்லி ஒவ்வாததுபோல, நற்குண முடையாரது நட்பைக் கொண்டாலும் துர்க்குண முடையார் செய்காரியங்கள் வேறுபடும்.

(வி—ரை) கருமங்கள் — எழுவாய், வேறுபடும் — பயனிலை. (சு)

237 முற்றற் சிறுமந்தி முற்பட்ட தந்தையை
நெற்றுக்கண் டன்ன விரலான் ஞெமிர்த்திட்டுக்
குற்றிப் பறிக்கு மலைநாட இன்னாதே
யொற்றுமை கொள்ளாதார் நட்பு.

(ப—ரை) முற்று அல் — முதிர்ச்சி யல்லாத, சிறு மந்தி — சிறு குரங்கு, முன் — தன் முன், பட்ட — வரப்பட்ட, தந்தையை—(இரை கொண்டுவந்த) தந்தையை, நெற்று — பயற்ற நெற்றை, கண்டு அன்ன — கண்டதொத்த, விரலால் — விரல்களால், ஞெமிர்த்திட்டு-ஒடித்து, குற்றி — குத்தி, பறிக்கும் — இரையைப் பிடுங்கும், மலை நாட — மலையையு நாட்டையுமுடைய பாண்டியனே!, ஒற்றுமை—மனவுரிமை, கொள்ளாதார் — கொள்ளாதவரது, நட்பு — சினேகமானது, இன்னாது — பொல்லாது.

(க—ரை) பாண்டியனே! மனவுரிமை யில்லாதார் சினேகம பொல்லாது.

(வி—ரை) நட்பு — எழுவாய், இன்னாது — பயனிலை. ஏகாரம் அசை. (எ)

238 முட்டுற்ற போழ்தின் முடுகியென் னாருயிரை
நட்டா னொருவன்கை நீட்டேனேல்—நட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க
நெடுமொழி வைய நக.

(ப—ரை) முட்டு — துன்பம், உற்ற போழ்தில் — வந்தபோது, முடுகி — விரைவாக, என் — எனது, ஆர் உயிரை — அருமையான உயிரை, நட்டான் ஒருவன் — சினேகஞ் செய்த வொருவன், கை—கையில், நீட்டேனேல் — கொடேனாகில், நட்டான் — சினேகனுடைய, கடி — காவல் பொருந்திய, மனை — மனையவளை, கட்டு—கற்பு, அழித்தான் — அழித்தவன், செல் உழி — போகு நரகத்தில், நெடு—மிக்க, மொழி — புகழையுடைய, வையம் — உலகம், நக — என்னை நகைக்கும்படி, செல்க — யான் போகக்கடவேன்.

(க—ரை) சினேகனுக்கு ஆபத்து வந்தபோது என் உயிரை அவன் கையிற் கொடேனாகில் சினேகன் பெண்சாதியின் கற்பை அழித்தவன் போகு நரகத்திற் போகக்கடவேன்.

(வி—ரை) (யான்) — தோன்றா எழுவாய், செல்க — பயனிலை.

239 ஆன்படு நெய்பெய் கலனு ளதுகளைந்து
வேம்படு நெய்பெய் தனைத்தரோ—தேன்படு
நல்வரை நாட நயமுணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி னாரொடு நட்பு

(ப—ரை) தேன்—தேன் கூடுகள், படு—பொருந்திய, நல்—நல்ல, வரை—மலையையும், நாட—நாட்டையுமுடைய பாண்டியனே!, நயம்—நீதியை, உணர்வார்—அறிபவரது, நண்பு—சினேகத்தை, ஒரீஇ—விட்டு, புல்—அற்ப, அறிவினாரொடு—அறிவாளருடன், நட்பு—(கொண்ட) நட்பானது, ஆன்—பசுவினிடத்து, படு—உண்டான, நெய்-நெய்யை, பெய்—வார்த்திருந்த, கலனுள்—கலத்துள், அது—அந்த நெய்யை, களைந்து—எடுத்து, வேம்பு அடு-வேம்பிலுண்டான, நெய்—நெய்யை, பெய்து அனைத்து—வார்த்து வைத்தாற்போலும்.

(க—ரை) பாண்டியனே! அறிவுடையார் சினேகத்தை விட்டு அறிவில்லார் சினேகத்தைக் கொள்ளுதல் கலசத்தில் பசுவின் நெய்யை நீக்கி வேம்பின் நெய்யை விட்டாற்போலும்.

(வி—ரை) நட்பு—எழுவாய், அனைத்து-பயனிலை. அரோ-அசை.

240 உருவிற் கமைந்தான்க ணூராண்மை யின்மை
பருகற் கமைந்தபா னீரளா யற்றே
தெரிவுடையார் தீயினத்தா ராகுத னாகம்
விரிபெடையோ டாடிவிட் டற்று.

(ப—ரை) உருவிற்கு—வடிவினுக்கு,அமைந்தான்கண்—(அழகு) பொருந்தியவனிடத்து, ஊர் ஆண்மை—சினேகத் தன்மை, இன்மை—இல்லாமையானது, பருகற்கு—குடித்தற்கு,அமைந்த—பொருந்திய, பால்-பாலில்,நீர்—சலத்தை,அளாய் அற்று-கலந்தாற்போலும்; தெரிவு உடையார்—அறிவுடையார், தீ இனத்தார்—கொடிய நண்பரை, ஆகுதல்—உடையராதல், நாகம்—நாகமானது, விரி—விரியன்பாம்பின், பெடையோடு—பெட்டையுடன், ஆடிவிட்டு அற்று-கூடிப் புணர்ந்தாற்போலும்.

(க—ரை) அழகுள்ளவனிடத்துச் சினேக மில்லாமையானது பாலிலே நீர் கலந்தாற்போலும்; நல்லவர்கள் கொடிய நண்பரையுடையவர்க ளாகுதல் நாகமானது விரியன் பெட்டையோடு சேர்ந்தாற்போலும்.

(வி—ரை) இன்மை—எழுவாய், அளாயற்று—பயனிலை. நாகம் எழுவாய், ஆடிவிட்டற்று—பயனிலை. (கo)

கூடாநட்பு முற்றிற்று.

---

நட்பியல் முற்றிற்று.

# மூன்றாவது இன்பவியல்

[மனிதர் மனத்திற்கு மகிழ்ச்சி யுண்டாதலைப்பற்றிக் கூறும் பிரிவாம்.]

## உரு-ஆம் அதிகாரம்-அறிவுடைமை

[அஃதாவது அறிவுடையானாயிருக்குந் தன்மையாம்.]

241 பகைவர் பணிவிட நோக்கித் தகவுடையார்
தாமேயு நாணித் தலைச்செல்லார் காணா
யிளம்பிறை யாயக்காற் றிங்களைச் சேரா
தணங்கருந் துப்பி னரா.

(ப-ரை) இளம் பிறை - இளைய பிறை, ஆயக்கால் - ஆனல், திங்களை - சந்திரனை, அணங்கு - வருத்தஞ் செய்யும், அரு-அரிய, துப்பின் - வலியுடைய, அரா - பாம்பானது, சேராது - அடையாது; (அதுபோல) பகைவர் - பகையாளிகள், பணிவு இடம்- தளர்ந்தவிடம், நோக்கி - பார்த்து, தகவு உடையார் - அறிவுடையார், தாமேயும் - தாங்கள், நாணி - அவர்க்கிரங்கி, தலைச்செல்லார்- (கொடுக்க) முதன்மையாகப் போகார், காணாய் - பாராய்.

(க-ரை) இளம்பிறையாகிற் சந்திரனைப் பாம்பு சேராது; அது போல, பகைவர் தளர்ந்தவிடத்து அறிவுடையோர் அவரை வெல்லச் செல்லார்.

• (வி-ரை) தகவுடையார் - எழுவாய், செல்லார் - பயனிலை.(க)

242 நளிகடற் றண்சேர்ப்ப நல்கூர்ந்த மக்கட்
கணிகல மாவ தடக்கம்—பணிவில்சீர்
மாத்திரை யின்றி நடக்குமேல் வாழுமூர்
கோத்திரங் கூறப் படும்.

(ப-ரை) நளி - பெரிய, தண் - குளிர்ந்த, கடல் - கடலையும், சேர்ப்ப - கரையையுமுடைய பாண்டியனே! நல்கூர்ந்த - வறுமையடைந்த, மக்கட்கு - மனிதர்க்கு, அணிகலம் ஆவது - ஆபரணமாவது, அடக்கம் - அடங்கியிருத்தலாம்; பணிவு இல் - அடக்க மில்லாத, சீர் - சிறப்பையுடைய, மாத்திரை இன்றி - அளவு கடந்து

நடக்கும் எல் — நடப்பானாகில், வாழும் — தான் வாழும், ஊர்-ஊராரால், கோத்திரம் — தன் குலத்திற்குக் குற்றம், கூறப்படும்-சொல்லப்படுவான்.

(க—ரை) பாண்டியனே! தரித்திரர்களுக்கு ஆபரணமாவது அடக்கமாம். ஒருவன் அளவு கடந்து நடப்பானாகில் ஊராரால் பழிக்கப்படுவான்.

(வி—ரை) அணிகலம் — எழுவாய், அடக்கம் — பயனிலை.

[நன்னூல்]

"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே."

இவ்விதியால் செய்யுமென்னும் வாய்ப்பாட்டு முற்றுபடுவ னென்றாயிற்று. (உ)

243 எந்நிலத்து வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகா
தென்னாட் டவருஞ் சுவர்க்கம் புகுதலால்
தன்னாற்றா னாகு மறுமை வடதிசையுங்
கொன்னாளர் சாலப் பலர்.

(ப—ரை) எந் நிலத்து — எந்தநிலத்தில், வித்து இடினும்-விதை போட்டாலும், காஞ்சிரம் — எட்டியின், காழ் — விதை, தெங்கு ஆகா — தென்னமர மாகாது; தென் நாட்டவரும் — தெற்கிலுள்ளவரும், சுவர்க்கம் புகுதலால் — (தருமஞ் செய்து) சுவர்க்கத்தில் பிரவேசித்தலால், தன் — தனது, ஆற்றான் — (தரும)வழியால், மறுமை-மறுபிறப்பு, ஆகும் — ஆம்; வடதிசையும் — வடதிக்கிலும், கொன் ஆளர் — தருமப்பய னில்லாதார், சால பலர் — மிகவும் பலர்.

(க—ரை) எட்டிவிதை நட அது தென்னமரமாகாது; தெற்கே உள்ளவருஞ் சுவர்க்கத்திற் போவர்; வடக்கே உள்ளவரும் நரகத்திற் போவார்.

(வி—ரை) மறுமை — எழுவாய், ஆகும் — பயனிலை. தெற்கு—யமதிசை; வடக்கு — தெய்வதிசை. உயர்ந்தவிடத் திருப்பினும் பாவிகள் புண்ணியர்களாகார். தாழ்ந்தவிடத் திருப்பினும் புண்ணியர்கள் பாவிகளாகார். (ந)

244 வேம்பி னிலையுட் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதுந் திரியாதாம்—ஆங்கே
யினநன்றி தெனினு மியல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்க மரிது.

(ப—ரை) வேம்பின் — வேம்பினுடைய, இலையுள் — இலையில், வாழை — வாழைக்காய், கனியினும் — பழுத்தாலும், தன் — தனது, தீம் சுவை — இனிய மதுரம், யாதும் — எவ்வளவும், திரியாது-வேறு படாது; ஆங்கு — அதுபோல, இனம் — தன்னினம், தீது எனினும்— குற்றமாகிலும், இயல்பு உடையார் — நற்குண முடையார், கேண்மை — உறவானது, மனம் — இருதயம், தீது ஆம் — குற்றமாகும், பக்கம் — தன்மை, அரிது — அருமை.

(க—ரை) வாழை வேப்பிலையிற் பழுத்தாலு மதுரங் கெடாது; அதுபோல, நல்லவர் தீயவருடன் சேரினும் அவர் மனங்கெடாது.

(வி—ரை) மனம் — எழுவாய், அரிது — பயனிலை. ஆம், ஏ- அசை. (ச)

245 கடல்சார்ந்து மின்னீர் பிறக்கு மலைசார்ந்து
முப்பீண் டுவரி பிறத்தலாற் றத்த
மினத்தனைய ரல்ல ரெறிகடற்றண் சேர்ப்ப
மனத்தனையர் மக்களென் பார்.

(ப—ரை) எறி — அலைகளை யெறியும், கடல் — கடலையும், தண்- குளிர்ந்த, சேர்ப்ப — இறங்கு துறையையுமுடைய பாண்டியனே! கடல் — சமுத்திரம், சார்ந்தும் — சார்ந்தவிடத்தும், இன் நீர்—இனிய நீரானது, பிறக்கும் — உண்டாம்; மலை — மலையை, சார்ந்தும் — சார்ந்த விடத்தும், உப்பு — உப்பு, ஈண்டு — மிகுந்த, உவரி — உவர்நீர், பிறத்தலால் — பிறத்தலால், மக்கள் என்பார் — மக்களென்று சொல்லப்படுவோர், தம்தம் — தந்தம், இனத்து — கூடினவினத்தின், அனையர் அல்லர் — ஒப்பானவ ரல்லர்; மனத்து — மனத்தின், அனையர்- ஒப்பானவராவர்.

(க—ரை) பாண்டியனே! கடல் சார்ந்தவிடத்திலும் நல்ல நீருண்டாம்; மலை சார்ந்தவிடத்திலும் உப்புநீ ருண்டாம். ஆதலால், அறிவுளோர், மனத்தா லொத்தவ ரல்லது இனத்தா லொத்தவ ரல்லர்.

(வி—ரை) மக்களென்பார் — எழுவாய், மனத்தனையர் — பயனிலை.

246 பராஅரைப் புன்னை படுகடற்றண் சேர்ப்ப
ஒராஅலு மொட்டலுஞ் செய்பவோ நல்ல
மரூஉச்செய்தி யார்மாட்டுந் தங்கு மனத்தார்
விராஅஅய்ச் செய்யாமை நன்று.

(ப—ரை) பரு அரை — பருத்த வடிவினையுடைய, புன்னை— புன்னை மரங்கள், படு — பொருந்திய, தண் — குளிர்ந்த, கடல் சேர்ப்ப — கடற்கரையையுடைய பாண்டியனே! தங்கும் — (சுத்தர்) தங்கும், மனத்தார் — மனமுடையவர், நல்ல — நன்மைகள், மருஉ — மருவிய, செய்தியார் மாட்டும் — ஒழுக்கமுடையாரிடத்தும், ஒராலும்— நீங்கலும், ஒட்டலும் — கூடுதலும், செய்பவோ — செய்வார்களோ? விராய் — ஒருவருடன் கலந்து, செய்யாமை — சினேகியாதிருத்தல், நன்று — நல்லது.

(க—ரை) பாண்டியனே! சுத்த மனமுள்ளோர் நல்லவரிடத்து நட்புக் கொள்ளலும் நட்பு விடுதலுஞ் செய்யார்; யாவரிடத்துங் கலந்து சினேகியாமை நல்லது.

(வி—ரை) செய்யாமை — எழுவாய், நன்று — பயனிலை. (சு)

247 உணர வுணரு முணர்வுடை யாரைப்
புணரப் புணருமா மின்பம்—புணரின்
தெரியத் தெரியுந் தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமா நோய்.

(ப—ரை) உணர — (சினேகஞ்) செய்தறிய, உணரும் — சினேகநிலையறியும், உணர்வு உடையாரை — அறிவுடையாரை, புணர— சினேகிக்க, இன்பம் — இன்பயானது, புணரும் — பொருந்தும்; புணரின் — சினேகிக்கில், தெரிய — சினேகஞ் செய்தறிய, தெரியும்— சினேகநிலை தெரியும்; தெரிவு இலாதாரை — அறிவிலாதவரை, பிரிய — சினேகம் விட்டுப் பிரிய, நோய் — துன்பமானது, பிரியும்— நீக்கும்.

(க—ரை) அறிவுடையாரைச சினேகித்தா லின்ப முண்டாகும்; அறிவில்லார் சினேகத்தை விட்டா லின்ப முண்டாகும்.

(வி—ரை) இன்பம் — எழுவாய், புணரும் — பயனிலை. நோய்— எழுவாய், பிரியும் — பயனிலை. ஆம் இரண்டும் அசைகள். (எ)

248 நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானு—நிலையினு
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்.

(ப—ரை) நல் — நல்ல, நிலைக்கண் — நிலையிடத்து, தன்னை—, நிறப்பானும் — நிறுத்திக்கொள்பவனும், தன்னை—, நிலை கலக்கி— அந்நிலை கெடுத்து, கீழ் இடுவானும் — கீழாக்கிக் கொள்பவனும்,

நிலையினும் — முன்னிருந்த நிலையிலும், மேல் மேல் — தன்னை மேலு மேலும், உயர்த்து — உயரப்பண்ணி, நிறுப்பானும் — நிறுத்திக்கொள் பவனும், தன்னை — தன்னை, தலை ஆக — தலைமையாக, செய்வானும்- செய்துகொள்பவனும், தான் — தானே.

(க—ரை) ஒருவன் தன்னை நல்ல நிலையில் நிறுத்திக்கொள்ள லும், அந்நிலைக்குக் கீழாக்கிக் கொள்ளலும், முன் இருந்த நிலையி லும் மேலாக்கிக் கொள்ளலும் தன்னாலேதான்.

(வி—ரை) தான் — எழுவாய், நிறுப்பான் முதலிய — பயனிலை.

249 கருமவரிசையாற் கல்லாதார் பின்னும்
பெருமை யுடையாருஞ் சேற—லருமரபின்
ஓத மாற்று மொலிகடற் றண்சேர்ப்ப
பேதைமை யன்ற தறிவு.

(ப—ரை) ஓதம் — அலைகள், அரற்றும் — சத்திக்கும், ஒலி — சத் தத்தையுடைய, தண் — குளிர்ந்த, கடல் சேர்ப்ப — கடற்கரையை யுடைய பாண்டியனே!, கரும வரிசையால் — காரியமுறைமையால், கல்லாதார் — கற்காதவர், பின்னும் — பின்னாகவும், அரும் — அரிய, மரபின் — குலமுள்ள, பெருமை உடையாரும் — பெருமையுடைய அறிவாளிகளும், சேறல் — செல்லுதல், பேதைமை அன்று — அறி யாமை யன்று; அது அறிவு — அஃது அறிவுடைமை.

(க—ரை) பாண்டியனே! கல்லாதவர் பின்னுங் கற்றவருஞ் செல்லுதல் அறியாமையன்று; அது காரியமாகும், அறிவுடைமை யாம்.

(வி—ரை) அது — எழுவாய், அறிவு — பயனிலை. (க)

250 கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா—வொருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமே லஃதென்ப
பட்டினம் பெற்ற கலம்.

(ப—ரை) கருமமும் — காரியங்களும், உள்படா — உட்பட்டு, போகமும் — போகத்தையும், துவ்வா — அநுபவித்து, தருமமும் — தருமத்தையும், தக்கார்க்கே — பெரியோர்க்கே, செய்யா — செய்து, ஒரு நிலையே — ஒரு பிறப்பில், முட்டு இன்றி — தடை யில்லாமல், மூன்றும் — இம் முச்செய்கைகளும், முடியும் எல் — ஒருவனுக்கு

வாய்க்குமாகில், அஃது — அம் முடிவு, பட்டினம் — தன் பட்டின த்தை, பெற்ற — அடைந்த, கலம் — பொருள் கொண்டுவந்த மரக் கலம், என்க — என்பார்கள்.

(க—ரை) ஒருவனுக்குக் காரியங்களும், போகமும், தருமமும் கைகூடுமோகில் அது பொருள் கொண்டுவந்த கப்பலுக்கு ஒப்பா கும்.

(வி—ரை) அஃது — எழுவாய், கலமென்ப — பயனிலை. (கO)

அறிவுடைமை முற்றிற்று.

## உகூ-ஆம் அதிகாரம்-அறிவின்மை

[அஃதாவது அறிவில்லாமையைச் சொல்லுதலாம்.]

251 நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வ—மெண்ணுங்காற்
பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ
கண்ணவாத் தக்க கலம்.

(ப—ரை) நுண் — நுட்பமாகிய, உணர்வு இன்மை — அறிவில்லாமையே, வறுமை — தரித்திரமாம்; அஃது உடைமை — அவ்வறிவுடைமையே, பண்ண — செய்ய, பணைத்த — வளர்ந்த, பெரு — பெரிய, செல்வம் — செல்வமாம்; எண்ணுங்கால் — ஆராயுமிடத்து, பெண் — பெண்ணின்வடிவை, அவாய் — இச்சித்து, ஆண் — ஆணின் வடிவை, இழந்த — நீங்கிய, பேடி — பேடியானவள், கண் — கண்ணுக்கு, அவா தக்க — இச்சிக்கத்தக்க, கலம் — ஆபரணங்களை, அணியாளோ — அணியமாட்டாளோ?

(க—ரை) அறிவில்லாமையே தரித்திரம்; அறிவுடைமையே செல்வம்; ஆகையால், பெண்ணழகை இசசித்து ஆணழகை விட்ட பேடி ஆபரணங்களை அணியாளோ?

(வி—ரை) உணர்வின்மை — எழுவாய், வறுமை — பயனிலை. உணர்வுடைமை — எழுவாய், செல்வம் — பயனிலை. (க)

252 பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்
தல்ல லுழப்ப தறிதிரே—தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து.

(ப—ரை) பல் ஆன்ற — பலவிதமாக நிரம்பிய, கேள்வி பயன் — கல்விப் பயனை, உணர்வார் — அறிபவர், பாடு — தம் பெருமை, அழிந்து — கெட்டு, அல்லல் — துன்பத்தில், உழப்பது — வருந்துவது; அறிதிரே — அறிவீரன்றோ?, தொல் — பழைய, சிறப்பின் — சிறப்புடைய, நாவின் கிழத்தி — சரஸ்வதி, உறைதலால் — வாசம் பண்ணலால், பூவின் கிழத்தி — இலக்குமி, புலந்து — பிணங்கி, சேராள் — அடையாள்.

(க—ரை) சரஸ்வதி வாசம் பண்ணுமிடத்தில் இலக்குமி வாசம் பண்ணாள்.

(வி—ரை) பூவின்கிழத்தி — எழுவாய், சேராள் — பயனிலை. ஏ — அசை. ['அறிதிரேல்' என்றும் பாடம்; இதற்கு, 'ஆராய்ந்தறிய விரும்புவீராயின்' என்பது பொருள்.] (உ)

253 கல்லென்று தந்தை கழற வதனையோர்
சொல்லென்று கொள்ளா திகழ்ந்தவன்—மெல்ல
எழுத்தோலை பல்லார்முன் னீட்ட விளியா
வழுக்கோலைக் கொண்டு விடும்.

(ப—ரை) தந்தை — பிதாவானவன், கல் என்று — நூல்களைக் கற்றுக்கொள்ளென்று, கழற — சொல்ல, அதனை — அச்சொல்லை, ஓர் சொல் என்று — ஒரு சொல்லென்று, கொள்ளாது — கொள்ளாமல், இகழ்ந்தவன்—பழித்தவன், மெல்ல — மெதுவாக, எழுத்து ஓலை—ஒருவனெழுதிய ஓலையை வாசியென்று, பல்லார் முன்-பலபேர் முன், நீட்ட — கொடுக்க, இளியா — அவமதித்து, வழு — கெடுதியாக, கோலை — அடிப்பதற்குக் கோலை, கொண்டுவிடும் — எடுத்துக் கொள்வான்.

(க—ரை) பிதா "படி" என்று சொல்ல, அச் சொல்லைக் கொள்ளாது பழித்தவன் கையில் வேறொருவன் "எழுத்தோலை வாசி" என்று பலர் முன் கொடுக்க, அவன் இகழ்ந்து அடிக்கத் தடியெடுத்துக்கொள்வான்.

(வி—ரை) இகழ்ந்தவன் — எழுவாய், கொண்டுவிடும் — பயனிலை, கோலை — செயப்படுபொருள். (ங)

254 கல்லாது நீண்ட வொருவ னுலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு—மெல்ல
விருப்பினு நாயிருந் தற்றே யிராஅ
துரைப்பினு நாய்குரைத் தற்று.

(ப—ரை) கல்லாது — கற்காது, நீண்ட—வளர்ந்த, ஒருவன்—ஒருத்தன், உலகத்து—உலகத்தில், நல் அறிவாளர் — நல்லறிவுடையார், இடை — நடுவே, புக்கு — பிரவேசித்து, மெல்ல — மெல்ல, இருப்பினும்—இருந்தாலும், (அந்த இருப்பு) நாய் இருந்து அற்றே — நாயிருந்தாற்போலும்; இராது — இருக்காமல், உரைப்பினும் — ஒன்றைச் சொன்னாலும், நாய் குரைத்து அற்று — நாய் குரைத்தாற் போலும்.

(க—ரை) கற்றவர் சபையில் கல்லாதவனிருந்தால் நாயிருந்தாற் போலும்; அவன் ஒன்றைச் சொன்னால் நாய் குறைத்தாற் போலும்.

(வி—ரை.) இருப்பு, உரைப்பு — எழுவாய்; இருந்தற்று, குரைத்தற்று — பயனிலை. ஏ — அசை. (ச)

255 புல்லாப்புன் கோட்டிப் புலவ ரிடைப்புக்குக்
கல்லாத சொல்லும் கடையெல்லாங் கற்ற
கடாஅயினுஞ் சான்றவர் சொல்லார் பொருண்மேற்
படாஅ விடுபாக் கறிந்து.

(ப—ரை) கடை — கடையானவன், புல்லா — (இலக்கணத்தோடு) பொருந்தாத, புல் — அற்ப, கோட்டி — சபைகூடியிருக்கும், புலவர்— புன்புலவர், இடை — நடுவே, புக்கு — பிரவேசித்து, கல்லாத — கற்காதவற்றை, சொல்லும் — சொல்வான்; சான்றவர் — பெரியோர், எல்லாம் — எல்லாம், கற்ற — கற்றவற்றை, கடாயினும் — பிறர் கேட்பினும், பொருள்மேல் — சொல்லும் பொருண்மேல், படா — அவர் புத்தி சாராமல், விடுபாக்கு — விடும்பொருட்டு, அறிந்து — தெரிந்து, சொல்லார் — சொல்லார்.

(க—ரை) கடையானவன் கல்லார் சபையிற் கல்லாதனவற்றைச் சொல்லுவான்; கற்றோர் பிறர் கேட்பினுங் கற்றவற்றைச சொல்வார்.

(வி—ரை) கடை — எழுவாய், சொல்லும் — பயனிலை, கல்லாத— செயப்படுபொருள். சான்றவர் — எழுவாய், சொல்லார் — பயனிலை, கற்ற — செயப்படுபொருள். (ரு)

256 கற்றறிந்த நாவினர் சொல்லார்தஞ் சோர்வஞ்சி
மற்றைய ராவார் பகர்வர் பனையின்மேல்
வற்றிய வோலை கலகலக்கு மெஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை யொலி.

(ப—ரை) பனையின் மேல் — பனைமரத்தின்மேல், வற்றிய ஓலை — உலர்ந்த ஓலை, கலகலக்கும் — கலகலவென்று சத்திக்கும்; எஞ்ஞான்றும் — எந்நாளும், பசு ஓலைக்கு — பசுமையுள்ள ஓலைக்கு, ஒலி — சத்தம், இல்லை — இல்லை; (அதுபோல) கற்று — கற்று, அறிந்த—உணர்ந்த, நாவினர் — நாவினையுடையார், தம்—தமது, சோர்வு— சொற்சோர்வுக்கு, அஞ்சி — பயந்து, சொல்லார் — ஒன்றுஞ் சொல்லார்; மற்றையராவார்—கல்லாதவர், பகர்வர்—ஆராயாது சொல்வார்.

(க—ரை) காய்ந்த ஓலை சத்திக்கும்; பச்சை ஓலை சத்திக்காது; அதுபோல, கற்றோர் சொற்சோர்வுக்கு அஞ்சி ஒன்றும் சொல்லார்; மற்றோர் சொற்சோர்வுக்கு அஞ்சாமற் சொல்லுவார்.

(வி—ரை) நாவினர் — எழுவாய், சொல்லார் — பயனிலை. மற்றையராவார் — எழுவாய், பகர்வர் — பயனிலை. (சு)

257 பன்றிக்கூழ்ப் பத்தரிற் றேமா வடித்தற்றா
னன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்காற்
குன்றின்மேற் கொட்டுந் தறிபோற் றலைதகர்ந்து
சென்றிசையா வாகுஞ் செவிக்கு.

(ப—ரை) பன்றி — பன்றிக்கு, கூழ் — கூழ்வார்க்கும், பத்தரில் — தொட்டியில், தேமா — மதுரமாங்கனியை, வடித்தற்று — பிழிந்தாற் போலும்; நன்று — நன்மையை, அறியா — அறியாத, மாந்தர்க்கு — மனிதர்க்கு, அறத்து — தருமத்தினது, ஆறு — வழியை, உரைக்குங்கால் — சொல்லுமிடத்து, குன்றின்மேல் — மலைமேல், கொட்டும் — அடிக்கும், தறி போல் — கட்டுத்தறிபோல, தலை தகர்ந்து — தலை சிதறி, செவிக்கு — காதுக்கு, சென்று — போய், இசையா ஆகும் — ஏறுவாகும்.

(க—ரை) நன்மை யறியாத மனிதர்களுக்குத் தருமத்தின் வழியைச சொல்லுதல், பன்றித் தொட்டியில் மாங்கனியைப் பிழிந்தாற்போலும்; மலைமே லடிக்குந் தறிபோல்வர் காதுக் கேறாது.

(வி—ரை) அறத்தாறு — எழுவாய், இசையாவாகும் — பயனிலை. ஆல் — அசை.

258 பாலாற் கழீஇப் பலநா ளுணக்கினும்
வாலிதாம் பக்க மிருந்தைக் கிருந்தன்றா
கோலாற் கடாஅய்க் குறினும் புகலொல்லா
நோலா வுடம்பிற் கறிவு.

(ப—ரை) பல நாள் — பலகாலமும், பாலால் — பாலினால், கழீஇ — கழுவி, உணக்கினும் — உலர்த்தினாலும், வாலிது ஆம் — வெள்ளிதாகிய, பக்கம் — தன்மை, இருந்தைக்கு — கரிக்கு, இருந்தன்று — இருந்ததில்லை; (அதுபோல)கோலால் — கோலினால், கடாஅய் — அடித்து, குறினும் — கூறினாலும், நோலா — (முற்பிறப்பில்) தவஞ்செய்யாத, உடம்பிற்கு — உடலிற்கு, அறிவு — உணர்வு, புகல் ஒல்லா — பிரவேசியாது.

(க—ரை) கரியைப் "பாலிற் கழுவி யுலர்த்தினாலும் வெள்ளையாகாது; அதுபோல, முன் செய் தவமில்லார்க்குச் சொல்லினும் அறிவு பிரவேசியாது.

(வி—ரை) அறிவு — எழுவாய், புகல் ஒல்லா — பயனில்லை குறி னும் என்றது குறக்கல் விகாரம். (அ)

259 பொழிந்தினுது நாறினும் பூமிசைதல் செல்லா
திழிந்தவை காமுறூஉ மீப்போ—லிழிந்தவை
தாங்கலந்த நெஞ்சினூர்க் கென்னுகுந் தக்கார்வாய்த்
தேன்கலந்த தேற்றச்சொற் றேர்வு.

(ப—ரை) பொழிந்து — தேன் பொழிந்து, இனிது — இனிதாக, நாறினும் — பரிமளித்தாலும், பூ — பூவின்தேனை, மிசைதல் — உண்ணுதற்கு, செல்லாது — போகாது, இழிந்தவை — இழிவான மலங்களை, காமுறூஉம் — இச்சிக்கும், ஈ போல — ஈயைப்போல, இழிந்தவை — இழிந்த செய்கைகள், கலந்த — பொருந்திய, நெஞ்சினூர்க்கு — மனமுடையார்க்கு, தக்கார் — பெரியோர், வாய் — வாயில், தேன் — தேனை, கலந்த — கலந்தாற்போலும், தேற்றம் — தெளிந்த, சொல் — சொற்களுடைய, தேர்வு — ஆராய்ச்சி, என் ஆகும் — என்ன பயனுகும்?

(க—ரை) இழிவான மலங்களை இச்சிக்கும் ஈயை நிகர்த்தவர்களுக்குப் பெரியோர் சொல்லும் வாக்கியம் என்ன பலன் பெறும்?

(வி—ரை) தேர்வு — எழுவாய், என்னுகும் — பயனில்லை. தாம் — அசை. (கூ)

260 கற்றூ ருரைக்குங் கசடறு நுண்கேள்வி
பற்றூது தன்னெஞ் சுதைத்தலான்—மற்றுமோர்
தன்போ லொருவன் முகநோக்கித் தானுமோர்
புன்கோட்டி கொள்ளுமாங் கீழ்.

(ப—ரை) கற்றூர் — கற்றோர், உரைக்கும் — சொல்லும், கசடு — குற்றம், அறு — அற்ற, நுண் — நுட்பமான, கேள்வி — சொற்களை, பற்றூது — கொள்ளாது, தன் நெஞ்சு — தன் மனது, உதைத்தலால் — உதைத்துப்போதலால், மற்றும் — பின்னும், தன்போல் ஒருவன் — தன்னைப்போ லொருவன், முகம் நோக்கி — முகத்தைப் பார்த்து, தானும் ஓர் — தானொரு, புன் — அற்ப, கோட்டி — சபையை, கொள்ளும் — கொண்டிருப்பான், கீழ் — கீழ்மகன்.

(க-ரை) கீழானவன் கற்றோர் சொல்லு நுட்பமான சொற்க ளைக் கொள்ளாமல் தன்போல் ஒருவனுடன் சேர்ந்து அற்ப சபை யிற் சேருவான்.

(வி-ரை.) கீழ் - எழுவாய், கொள்ளும் - பயனிலை, புன் கோட்டி - செயப்படுபொருள். ஆல், ஓர், ஆம் - அசைகள். (சo)

அறிவின்மை முற்றிற்று.

## உரு-ஆம். அதிகாரம்-நன்றியில்செல்வம்

[அஃதாவது நன்மை யில்லாத செல்வமாம்.]

261 அருகல தாகிப் பலபழுத்தக் கண்ணும்
பொரிதாள் விளவினை வாவல் குறுகா
பெரிதணிய ராயினும் பீடிலார் செல்வங்
கருதுங் கடப்பாட்ட தன்று.

(ப—ரை) அருகலது ஆகி — தானிருக்கு மிடத்திற்கு அயலாகி, பல — அநேகம், பழுத்தக் கண்ணும் — பழுத்தாலும், பொரி-பொரிந்த, தாள் — தாள்களையுடைய, விளவினை — விளாமரத்தை, வாவல்-வௌவால்கள், குறுகா — சேரா; (அதுபோல) பெரிது — மிகவும், அணியர் ஆயினும் — சமீபராயினும், பீடு — பெருமை, இல்லார்-இல்லாதவர், செல்வம் — ஐசுவரியம், கருதும் — (எளியவர்களால் தமக்குக் கிடைக்குமென்று) நினைக்கத்தக்க, கடப்பாட்டது அன்று-முறைமையுடைய தன்று.

(க—ரை) வௌவால்கள் விளாமரம் பழுத்தாலும் அதிற் சேராவாம்; அதுபோல, பெருமையிலார் பக்கலி லிருப்பாராயினும் அவர் செல்வம் பயன்படாது.

(வி—ரை) செல்வம் — எழுவாய், கடப்பாட்டதன்று — பயனிலை.

262 அள்ளிக்கொள் வன்ன குறுமுகிழ வாயினும்
கள்ளிமேற் கைநீட்டார் சூடும்பூ வன்மையாற்
செல்வம் பெரிதுடைய ராயினுங் கீழ்களை
நள்ளா ரறிவுடை யார்.

(ப—ரை) அள்ளி கொள்வ அன்ன — அள்ளிக்கொள்வதுபோலும், குறு — குறிய, முகிழ ஆயினும் — அரும்புகளை யுடையனவாயினும், சூடும் — அணியத்தகும், பூ அன்மையால் — மலரல்லாமையால், கள்ளிமேல் — கள்ளியின்மேல், கை நீட்டார் — கைகளை நீட்டார்; (அதுபோல) செல்வம் — பாக்கியம், பெரிது — மிகவும், உடையர் ஆயினும் — உடையராணலும், கீழ்களை — கீழ்மக்களை, அறிவு உடையார் — விவேகமுடையார், நள்ளார் — சேரார்.

(க—ரை) கள்ளிப்பூவை எவரும் பறிக்கமாட்டார்; அதுபோல், அறிவுடையோர் கீழ்மக்களைச் சேரமாட்டார்.

(வி—ரை) அறிவுடையார் – எழுவாய், ஈள்ளார் – பயனிலை, கீழ் மக்களை – செயப்படுபொருள். (உ)

263 மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும்
வல்லூற் றுவரில் கிணற்றின்கட் சென்றுண்பர்
செல்வம் பெரிதுடைய ராயினுஞ் சேட்சென்று
நல்குவார் கட்டே நசை.

(ப—ரை) மல்கு – மிக்க, திரைய – அலைகளையுடைய, கடல்- சமுத்திரத்தின், கோடு – கரையில், இருப்பினும் – இருந்தாலும், வல் ஊற்று – வலிய ஊற்றையுடைய, உவர் இல் – உப்பில்லாத, கிணற்றின்கண் – கிணற்றினிடத்து, சென்று – போய், உண்பர்- நீரைக் குடிப்பார்கள்; (அதுபோல) செல்வம் – (அருகிருந்தோர்) பாக்கியம், பெரிது – மிகவும், உடையர் ஆயினும் – உடையவராலு லும், சேண் – தூரத்தில், சென்று – போய், நல்குவார்கட்டே - கொடுப்பவரிடத்தே, நசை – ஒருவர்க்கு இச்சை யிருக்கும்.

(க—ரை) நல்ல நீர்க்கிணறு கடற்கரையி லிருந்தாலும் அவ் விடத்திற் சென்று நீரைக் குடிப்பார்கள்; அதுபோல, கொடுப்பவர் தூரத்திலிருந்தாலும் அவரிடத்தே யொருவர்க்கு இச்சை யிருக் கும்.

(வி—ரை) நசை – எழுவாய், (இருக்கும்)-தோன்றாப் பயனிலை.

264 புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே
யுணர்வ துடையா ரிருப்ப—வுணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரே
பட்டுந் துகிலு முடுத்து.

(ப—ரை) உணர்வது–அறியவேண்டுவனவற்றை யெல்லாம் அறி யும், உடையார்–அறிவுடையார், இருப்ப – தரித்திரராயிருக்க, உண ர்வு இலா – அறிவு இல்லாத, வட்டும் – பனைவட்டும், வழுதுணையும்- வழுதுணங்காயும், போல்வாரும் – ஒத்தவரும், பட்டும் – பட்டா டையும், துகிலும் – வஸ்திரத்தையும், உடுத்து – தரித்து, வாழ்வர்- வாழ்வார்கள்; (ஆதலால்) புணர் – பொருந்திய, கடல் – சமுத்திரம், சூழ் – சூழ்ந்த, வையத்து – பூமியில், புண்ணியம் – புண்ணியமா னது, வேறு – வேறுபட்டிருக்கும்.

(க—ரை) கற்றோர் வருந்தி யிருப்ப, மற்றோர், செல்வத்தை யநுபவிப்பர்; அது புண்ணியவசம்.

(வி—ரை) புண்ணியம் – எழுவாய், வேறு – பயனிலை. எ, உம், ஏ, ஒ, உம் – அசைகள். (௪)

265 நல்லார் நயவ ரிருப்ப நயமிலாக்
கல்லார்க்கொன் றாகிய காரணந்—தொல்லை
வினைப்பய னல்லது வேனெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்.

(ப—ரை) வேல் – வேல்போலும், நெடு – நீண்ட, கண்ணாய்- கண்களையுடையவளே!; நல்லார் – நல்லவர்கள், நயவர் – நீதியை யுடையவர்கள், இருப்ப – தரித்திரராயிருக்க, நயம் இலா – நற்குண மில்லாத, கல்லார்க்கு – விவேகமில்லார்க்கு, ஒன்று ஆகிய – ஒரு பொருளுண்டாகிய, காரணம் – முகாந்தரம், (என்னவெனில்) தொல்லை – பழைய, வினை – நல்வினையினது, பயன் அல்லது – பய னல்லாமல், நினைப்ப – ஒருவன் நினைக்க, வருவது – வரத்தக்கது, ஒன்று – ஒன்று, இல் – இல்லை.

(க—ரை) பெண்ணே! நல்லவர்களும், நீதியுள்ளவர்களும் தரித் திரப்பட்டிருக்கக் கல்லாதவர்களுக்குச செல்வ முண்டான கார ணம் என்னவெனில் முன் செய்த நல்வினைப் பலனாகும்.

(வி—ரை) ஒன்று – எழுவாய், இல் – பயனிலை. (ரு)

266 நாறாத் தகடேபோ னன்மலர்மேற் பொற்பாவாய்
நீறாய் நிலத்து விளியரோ—வேறாய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலு
நன்மக்கள் பக்கந் துறந்து.

(ப—ரை) நாறா – பரிமளியாத, தகடு – புற விதழ்களையுடைய, நல் மலர் மேல் – நல்ல பொற்றாமரை மலர்மேலிருக்கும், பொன் பாவாய் – பொற்பதுமை போன்று அழகிய இலக்குமியே!, பொன் போலும் – பொன்னை நிகர்த்த, நல் மக்கள் – நல்ல மனிதர்கள், பக்கம் – இடத்தை, துறந்து – விட்டு, வேறு ஆய – குணம் வேறான, புல் மக்கள் பக்கம் – புல்லிய மனிதர்களிடத்து, புகுவாய் – பிரவே சிப்பாய்; (ஆகையால்) நீறு ஆய் – பொடியாய், நிலத்து – பூமியில், நீ – நீ, விளி – கெடுவாயாக.

(க—ரை) இலக்குமியே! நன்மக்களை விட்டு நீங்கிப் புன்மக்க ளிடத்திற் பிரவேசிக்கிறாய்; ஆகையால், நீ நீறாய் வெந்துபோகக் கடவாய்.

(வி—ரை) ஏ — எழுவாய், விளி — பயனிலை, அரோ, போல — அசைகள். (௬)

267 நயவார்க ணல்குரவு நாணின்று கொல்லோ
பயவார்கட் செல்வம் பரம்பப்—பயின்கொல்
வியவாய்காண் வேற்கண்ணா யிவ்விரண்டு மாங்கே
நயவாது நிற்கு நிலை.

(ப—ரை) வேல் கண்ணாய் — வேல்போன்ற கண்களை யுடையவளே!, நயவார்கண் — நன்மையுள்ளவரிடத்திலிருக்கும், நல்குரவு — வறுமைக்கு, நாண் — வெட்கம், இன்று ஓ — இல்லையோ?, பயவார் கண் — (ஒருவர்க்கும்) கொடாதவரிடத்திருக்கும், செல்வம் — செல்வமானது, பரம்ப — அதிகரிக்க, பயின் கொல் — (ஒட்டும்) பிசினோ?, இ இரண்டும் — இந்த இரண்டும், ஆங்கே — அங்கங்கே, நயவாது — (தாரதரம்) விரும்பாது, நிற்கும் நிலை — நிற்கின்ற நிலையை, வியவாய் — அதிசயமாய், காண் — நீ அறி.

(க—ரை) பெண்ணே! நல்லோரிடத்துத் தரித்திரமும், உதவியில்லோரிடத்துச் செல்வமும், தாரதர மறியாது நிற்கின்ற நிலையை நீ அறி.

(வி—ரை) ஏ — எழுவாய், காண் — பயனிலை, நிலை — செயப்படு பொருள். கொல் — அசை. (௭)

268 வலவைக ளல்லாதார் காலாறு சென்று
கலவைக ளுண்டு கழிப்பர்—வலவைகள்
காலாறுஞ் செல்லார் கருனையாற் றுய்ப்பவே
மேலாறு பாய விருந்து.

(ப—ரை) வலவைகள் அல்லாதார் — வல்லமைக ளில்லாதவர்கள், கால் ஆறு சென்று — தூர தேயங்களிற் போய், கலவைகள் — (பலவகைப்) போசனங்களை, உண்டு — சாப்பிட்டு, கழிப்பர் — (காலம்) போக்குவார்; வலவைகள் — வல்லமை யுடையவர்கள், கால் ஆறும் செல்லார் — தூர தேயங்களிற் போகார்; மேல் — உடலில், ஆறு பாய — வியர்வு நீர் வர, இருந்து — ஊரிலிருந்து, கருனையான் — பொரிக்கறியுடன் போசனத்தை, துய்ப்ப — உண்பார்கள்.

(க—ரை) வல்லமை யில்லார் தூரதேயங்களிற் சென்று இரந்துண்பர்; வல்லமை யுள்ளார் உள்ளூரிலிருந்து முயற்சி செய்து உண்பர்.

(வி—ரை) அல்லாதார் — எழுவாய், கழிப்பர் — பயனிலை. வல வைகள் — எழுவாய், துய்ப்ப — பயனிலை. ஏ — அசை. (அ)

269 பொன்னிறச் செந்நெற் பொதியொடு பீள்வாட
மின்னொளிர் வானங் கடலுள்ளுங் கான்றுகுக்கும்
வெண்மை யுடையார் விழுச்செல்வ மெய்தியக்கால்
வண்மையு மன்ன தகைத்து.

(ப—ரை) பொன் நிறம் — பொன்போலு நிறமுடைய, செந்நெல்— செந்நெற்பயிர்கள், பொதியொடு — பொதிதலுடன், பீள் வாட—கரு வாட, மின் — மின்னல், ஒளிர் — பிரகாசிக்கும், வானம் — மேகமா னது, கடலுள்ளும் — கடலிடத்தும், கான்று — கக்கி, உகுக்கும்— நீரைச்சொரியும்; வெண்மை உடையார் — அறிவில்லார், விழு செல் வம் — சிறந்த செல்வம், எய்தியக்கால் — பெற்றால், வண்மையும்— (அவர்கள்) உபகாரமும், அன்ன தகைத்து — அத்தன்மையாம்.

(க—ரை) மேகமானது நெற்பயிர் வாடச் சமுத்திரத்திலே நீரைச் சொரியும்; அதுபோல, அறிவில்லார் செல்வம் பெற்றால் நன்மார்க்கர் வருத்தப்படத் துன்மார்க்கருக்குக் கொடுப்பார்கள்.

(வி—ரை) வண்மை — எழுவாய், அன்னதகைத்து — பயனிலை.

270 ஓதியு மோதா ருணர்விலா ரோதாது
மோதி யனையா ருணர்வுடையார்—தூய்தாக
நல்கூர்ந்துஞ் செல்வ ரிரவாதார் செல்வரு
நல்கூர்ந்தா ரீயா ரெனின்.

(ப—ரை) உணர்வு இலார் — அறிவிலார், ஓதியும் — பல நூல்க ளைப் படித்தும், ஓதார் — படியாதா ராவர்; உணர்வு உடையார்— அறிவுடையார், ஓதாதும் — படியாதிருந்தும், ஓதி அனையார் — படித் தவராவர்; இரவாதார் — யாசியாதவர், தூய்து ஆக — பரிசுத்தமாக, நல்கூர்ந்தும் — தரித்திரப்பட்டிருந்தும், செல்வர் — செல்வராவார் கள்; செல்வரும் — செல்வமுடையாரும், ஈயார் எனின் — கொடா ராகில், நல்கூர்ந்தார் — தரித்திரராவர்.

(க—ரை) அறிவிலார் படித்தும் படியாதவரே; அறிவுடையார் படியாதிருந்தும் படித்தவரே. இரவாதார் வறுமை யடைந்துஞ் செல்வர்களே; செல்வருங் கொடாராகில் வறியவர்களே.

(வி—ரை) உணர்விலார், உணர்வுடையார், இரவாதார், செல்வர்—எழுவாய்; ஓதாதார், ஓதியனையார், செல்வர், நல்கூர்ந்தார்—பயனிலை. (க0)

நன்றியில் செல்வம் முற்றிற்று.

---

மூன்றாவது இன்பவியல் முற்றிற்று.

---

# நான்காவது துன்பவியல்

[அஃதாவது மனிதர் மனத்திற்குத் துன்பமுண்டாதலைப் பற்றிக் கூறும் பிரிவு.]

## உஅ-ஆம் அதிகாரம்-ஈயாமை

[அஃதாவது கொடாம லிருக்கும் தன்மையாம்.]

271 நட்டார்க்கு நள்ளா தவர்க்கு முளவரையால்
அட்டது பாத்துண்ட லட்டுண்ட—லட்ட
தடைத்திருந் துண்டொழுகு மாவதின் மாக்கட்
கடைக்குமா மாண்டைந் கதவு.

(ப—ரை) அட்டு உண்டல் – சமைத்துண்டு வாழ்தலாவது, நட்டார்க்கும் – சிநேகர்க்கும், நள்ளாதவர்க்கும் – சிநேகியாதவர்க்கும், உள – தமக்குள்ள, வரையால் – அளவால், அட்டது – சமைத்ததை, பாத்து உண்டல் – பகுத்துண்ணலாம்; (அங்ஙனமின்றி) அட்டது– சமைத்ததை, அடைத்து இருந்து – கதவை யடைத்திருந்து, உண்டு- புசித்து, ஒழுகும் – நடக்கும், ஆவது – செல்வம், இல் – இல்லாத, மாக்கட்கு – மனிதர்க்கு, ஆண்டை கதவு – சுவர்க்கவாயிற் கதவு, அடைக்கும் – (உள்ளே பிரவேசித்தற் கியலாமல்) மூடப்பட்டிருக்கும்.

(க—ரை) சிநேகருக்கும் சிநேகியாதவருக்கும் இருக்குமளவால் இட்டுண்ணுதலே உண்ணுதலாம்; இட்டு உண்ணாதவர்க்குச் சுவர்க்கவாயிற் கதவு மூடப்பட்டிருக்கும்.

(வி—ரை) அட்டுண்டல் – எழுவாய், பாத்துண்டல் – பயனிலை. கதவு – எழுவாய், அடைக்கும் – பயனிலை. ஆம் – அசை. (க)

272 எத்துணை யானு மியைந்த வளவினாற்
சிற்றறஞ் செய்தார் தலைப்படுவர்—மற்றைப்
பெருஞ்செல்வ மெய்தியக்காற் பின்னறிது மென்பா
ரழிந்தார் பழிகடலத் துள்.

(ப—ரை) எ துணை ஆனும் – எவ்வளவாகினும், இயைந்த– பொருந்திய, அளவினால் – அளவால், சிறு அறம் – சிறிய தருமத்தை,

செய்தார் — செய்தவர்கள், தலைப்படுவர் — முதன்மை யடைவர்; பெரும் — பெரிய, செல்வம் — ஐசுவரியத்தை, எய்தியக்கால்—அடைந்தால், பின் — பின்பு, அறிதும் — தருமஞ் செய்வோம், என்பார்—என்று சொல்வோர், பழி — பழிக்கப்பட்டு, கடலத்துள் — கடல் சூழ்ந்த பூமியில், அழிந்தார் — கெட்டார்.

(க—ரை) எவ்வளவாகிலுஞ் சிறிய தருமத்தைச் செய்தவர்கள் சுவர்க்கத்தை யடைவர்; பெருஞ் செல்வங் கிடைத்தால் தருமஞ் செய்வோமென்பவர் அழிந்தவர்களே.

(வி—ரை) செய்தார் — எழுவாய், தலைப்படுவர் — பயனிலை. அறிதுமென்பார் — எழுவாய், அழிந்தார் — பயனிலை. மற்று, ஏ— அசைகள். (உ)

273 துய்த்துக் கழியான் றுறவோர்க்கொன் றீகலான்
வைத்துக் கழியு மடவோனை—வைத்த
பொருளு மவனை நகுமே யுலகத்
தருளு மவனை நகும்.

(ப—ரை) துய்த்து — உண்டு, கழியான் — நாளைக்கழியாதவனாகவும், துறவோர்க்கு — துறவிகளுக்கு, ஒன்று — ஒருபொருளையும், ஈகலான் — கொடாதவனாகவும், வைத்து — பொருளைத் தேடி வைத்து, கழியும் — இறக்கும், மடவோனை — அறிவில்லாதவனை, வைத்த — தேடிவைத்த, பொருளும் — திரவியமும், அவனை—அந்த லோபியை, நகும் — சிரிக்கும்.

(க—ரை) தான் உண்ணாது பொருளைத் தேடிவைத்தவனைப் பொருளுஞ் சிரிக்கும், உலகத்தருளுஞ் சிரிக்கும்.

(வி—ரை) பொருள், அருள் — எழுவாய், நகும் — பயனிலை, மடவோனை — செயப்படுபொருள். ஏ — அசை. (ங)

274 கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்றா விடுக்குடை
யுள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வ மில்லத்
துருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தால்
ஏதிலான் றுய்க்கப் படும்.

(ப—ரை) கொடுத்தலும் — ஈதலும், துய்த்தலும் — உண்டலும், தேற்றா — தெளியாத, இடுக்கு உடை — உலுத்தகுணமுள்ள, உள்ளத்தான் — மனமுடையவன், பெற்ற — அடைந்த, பெரு செல்வம்—

பெரிய செல்வமானது, இல்லத்து — மனைவியிடத்து, உரு உடை— வடிவுற்ற, கன்னியரே — பெண்மகளைப்போல, பருவத்தால் — அநுபவிக்குங் காலத்து, ஏதிலான் — அயலானால், துய்க்கப்படும் — அநுபவிக்கப்படும்.

(க—ரை) வீட்டிற் பிறந்த பெண்ணை அயலான் அநுபவிப்பது போலக், கொடாதவன் பொருளைப் பிறன் அநுபவிப்பான்.

(வி—ரை) செல்வம் — எழுவாய், துய்க்கப்படும் — பயனிலை. (ச)

275 எறிநீர்ப் பெருங்கட லெய்தி யிருந்து
மறுநீர்ச் சிறுகிணற் றூறல்பார்த் துண்பர்
மறுமை யறியாதா ராக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

(ப—ரை) எறி — (அலைகளை) எறியும், நீர் — நீரையுடைய, பெரு· பெரிய, கடல் சமுத்திரத்தை,எய்தி இருந்தும் — அடைந்திருந்தும்- அறு நீர் — நீரற்ற, சிறு — சிறிய, கிணறு — கிணற்றின், ஊறல்— நீரூற்றை, பார்த்து — கண்டு, உண்பர் — (அந்நீரைக்) குடிப்பார்கள்; (அதுபோல) மறுமை — மறுபிறப்பிற்குரிய தருமங்களை, அறியாதார் — செய்யாதவர்கள், ஆக்கத்தின் — செல்வத்திலும், சான்றோர்— பெரியோர்களுடைய, கழி — மிக்க, நல்குரவே — தரித்திரமே,தலை— முதன்மை யுடையது.

(க—ரை) தருமஞ் செய்யாதார் செல்வத்தைப்பார்க்கிலும் பெரியோர்கள் தரித்திரம் மேலானது.

(வி—ரை) நல்குரவு — எழுவாய், உடைத்து — பயனிலை. (ரு)

276 எனதென தென்றிருக்கு மேழை பொருளை
யெனதென தென்றிருப்பன் யானுந்—தனதாயிற்
றானு மதனை வழங்கான் பயன்றுவ்வான்
யானு மதனை யது.

(ப—ரை) ஏழை — அறிவில்லாத லோபி, பொருளை — திரவியத்தை,எனது எனது என்று — என்னுடையது என்னுடையது என்று, இருக்கும் — நினைந்திருப்பான்; யானும் — நானும், எனது எனது என்று — என்னுடையது என்னுடையது என்று, இருப்பன் — நினைந்திருப்பேன்; தனது ஆயின் — அப்பொருள் தன்னுடையதாகில், தானும் — அவ் ஏழைதானும், அதனை — அப்பொருளை, வழங்கான்-

கொடான், பயன் — அதனால் வரும் பலனை, துவ்வான் — அநுபவி யான்; யானும் — நானும், அதனை — அப்பொருளை, அது — அப்படிக் (கொடேன் அனுபவியேன்.)

(க—ரை) அறிவிலாத லோபி, பொருளைத் தன்னுடையதென் றிருப்பான்; யானும் என்னுடையதென் றிருப்பேன்; தன்னுடைய தாகில், கொடுக்கான் அநுபவிக்கான்: என்னுடையதாகில், யானுங் கொடேன் அநுபவியேன்.

(வி—ரை) யான் — எழுவாய், அது — பயனிலை, அதனை — செயப் படுபொருள். (௬)

277 வழங்காத செல்வரி னல்கூர்ந்தா ருய்ந்தார்
இழந்தா ரெனப்படுத லுய்ந்தா—ருழந்ததனைக்
காப்புய்ந்தார் கல்லுதலு முய்ந்தார்தங் கைந்நோவ
யாப்புய்ந்தா ருய்ந்த பல.

(ப—ரை) வழங்காத — கொடாத, செல்வரின் — செல்வரினும், நல்கூர்ந்தார் — தரித்திரர், உய்ந்தார் — பிழைத்தார்; (அது எது போலுமெனில்) இழந்தார் எனப்படுதல் — பொருளை யிழந்தாரெ ன்று சொல்லப்படுதலினும், உய்ந்தார் — பிழைத்தார்; உழந்து—வரு ந்தி, அதனை — அப்பொருளை, காப்பு — காத்தலினும், உய்ந்தார்— பிழைத்தார்; கல்லுதலும் — (அப்பணத்தைப் புதைத்துவைத்தற் பொருட்டு நிலத்தைத்) தோண்டுகிற வருத்தத்தினும், உய்ந்தார்- தப்பினார்; தம்கை — தமது கைகள், நோவ — வருந்த, யாப்பு — கட்டு தலினும், உய்ந்தார் — பிழைத்தார்கள்; உய்ந்த பல — (இங்ஙனம் அவர்கள்) பல முறையாலும் பிழைத்தார்கள்.

(க—ரை) கொடாத செல்வர்களைப் பார்க்கிலும் தரித்திரர்கள் பல முறையாலும் பிழைத்தார்கள்.

(வி—ரை) நல்கூர்ந்தார் — எழுவாய், உய்ந்தார் — பயனிலை. (எ)

278 தனதாகத் தான்கொடான் றாயத் தவருந்
தமதாய போழ்தே கொடா அர்—தனதாக
முன்னே கொடுப்பி னவர்கடியார் தான்கடியான்
பின்னை யவர்கொடுக்கும் போழ்து.

(ப—ரை) தனது ஆக — தன்னுடையதாக, தான் — தான், கொடான் — (அப்பொருளைக்) கொடான்; தாயத்தவரும் — தாயாதி களும், தமது ஆய போழ்தே — (அப்பொருள்) தங்களுடையதான

காலத்தே,கொடார் — கொடுக்கார்; தனது ஆக — தன்னுடையதாக, முன்னே — தானிறக்குமுன், கொடுப்பின் — கொடுத்தால், அவர் — அத்தாயாதிகள், கடியார் — கோபியார்; பின்னை — (தான் இறந்த) பின், அவர் — அத்தாயாதிகள், கொடுக்கும் போழ்து — கொடுக்குங் காலத்தில், தான் கடியான் — தான் கோபியான்.

(க—ரை) பொருள் தன்னுடையதாயிருக்கத் தான் கொடான்; அது உறவினர்க்கு ஆனகாலத்து அவர் கொடார்; இறக்குமுன்னே தான் கொடுத்தால் உறவினர் கோபியார்; இறந்த பின் உறவினர் கொடுத்தால் தான் கோபியான்.

(வி—ரை) தான் — எழுவாய், கொடான் — பயனிலை. தாயத்தவர் — எழுவாய், கொடார் — பயனிலை. அவர் — எழுவாய், கடியார் — பயனிலை. தான் — எழுவாய், கடியான் — பயனிலை. (அ)

279 இரவலர் கன்றாக வீவாரா வாக
விரகிற் சுரப்பதாம் வண்மை—விரகின்றி
வல்லவ ரூன்ற வடியாபோல் வாய்வைத்துக்
கொல்லச் சுரப்பதாங் கீழ்.

(ப—ரை) இரவலர் — யாசகரே, கன்று ஆக — கன்றை ஒப்பாகவும், ஈவார் — கொடுப்பவரே, ஆ ஆக — பசுவுக்கு ஒப்பாகவும், விரகில் — சீக்கிரத்தில், சுரப்பது — கொடுப்பது, வண்மை — கொடையாகும்; விரகு இன்றி — மெதுவாக, வல்லவர் — வலிமையை யுடையோர், ஊன்ற — சிதைய, அடி — அடிக்கும்,ஆ போல் — பசுப்போல, வாய் — அவயவங்களிடத்து, வைத்து — கருவிகளை வைத்து, கொல்ல — வருத்த, சுரப்பது ஆம் — கொடுப்பான், கீழ் — கீழ்மகன்.

(க—ரை) யாசகர் கன்றாகவுங், கொடுப்பவர் பசுவாகவும்,விரைவிற் கொடுப்பதே கொடை, கீழ்மகனை வருத்தினாற் கொடுப்பான்.

(வி—ரை) வண்மை — எழுவாய், சுரப்பது — பயனிலை. கீழ் — எழுவாய், சுரப்பது — பயனிலை. ஆம் — அசை. (க)

280 ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலு மாங்கே கடுந்துன்பங்—காத்த
குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்.

(ப—ரை) ஈட்டலும் — பொருளைத் தேடலும், துன்பம் — துயரமாம்; ஈட்டிய — தேடிய,ஒண் பொருளை — ஒள்ளிய பொருளை,காத்தலும் — காப்பாற்றுதலும், கடு — மிகவும், துன்பம் — துயரமாம்,

காத்த — காக்கப்பட்ட பொருள், குறைபடின் — குறைபட்டால், துன்பம் — துயரமாம்; கெடில் — (அச்செல்வம்) கெட்டால், துன்பம்-துயரமாம்; மற்றை பொருள் — மேற்சொல் பொருள், துன்பக்கு-துயரத்திற்கெல்லாம், உறைபதி-இருப்பிடமாம்.

(க—ரை) பொருளைத் தேடலும் வருத்தம், காத்தலும் வருத்தம், அது குறைபட்டால் வருத்தம், கெட்டால் வருத்தம்.

(வி—ரை) பொருள் — எழுவாய், உறைபதி — பயனிலை. மற்று, ஆங்கு, ஏ — அசைகள். ['காத்தல்' என்றும் பாடமுண்டு. மற்றை அசையுமாம்.] (க0)

ஈயாமை முற்றிற்று.

## ௨௯-ஆம் அதிகாரம்-இன்மை

[அஃதாவது இல்லாத தன்மையைச் சொல்லுதலாம்.]

281 அத்திட்ட கூறை யரைச்சுற்றி வாழினும்
பத்தெட் டுடைமை பலருள்ளும் பாடெய்தும்
ஒத்த குடிப்பிறந்தக் கண்ணுமொன் றில்லாதார்
செத்த பிணத்திற் கடை.

(ப—ரை) அத்து — சிவப்பு, இட்ட — கரையிலிட்ட, கூறை- ஆடையை, அரை — இடையில், சுற்றி — உடுத்தி, வாழினும் — வாழ்ந்தாலும், பத்து எட்டு உடைமை — பத்துப் பொன்னுகிலும் எட்டுப் பொன்னுகிலு முடையவனென்று, பலருள்ளும் — பலரிடத்தும், பாடு — பெருமை, எய்தும் — அடைவான்; ஒத்த — நலமொத்த, குடி- குலத்தில், பிறந்தக்கண்ணும் — பிறந்தாலும், ஒன்று இல்லாதார்— சிறிதும் பொருளில்லாதவர், செத்த பிணத்தின் — செத்த பிணத்தைப்பார்க்கிலும், கடை — கடையாவார்.

(க—ரை) ஒருவன் நல்லாடையுடுத்தி வாழ்ந்தால் பொருளுடையவனென்று மதிக்கப்படுவான்; உயர்குலத்திற் பிறந்தாலும் பணமில்லாவிடில் பிணமாவார்.

(வி—ரை) (ஒருவன்) — தோன்றா எழுவாய்,எய்தும் — பயனிலை. இல்லாதார் — எழுவாய், கடையாவர் — பயனிலை. (க)

282 நீரினு நுண்ணிது நெய்யென்பர் நெய்யினும்
யாரு மறிவர் புகைநுட்பந்—தேரின்
இரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து.

(ப—ரை) நீரினும் — நீரைப்பார்க்கிலும், நெய் — நெய்யை, நுண்ணிது — நுட்பமுடையது, என்பர் — என்று சொல்வர்; நெய்யினும்- நெய்யைப் பார்க்கிலும், புகை — புகையானது, நுட்பம் — நுட்பமுடையதென்று, யாரும் — யாவரும், அறிவர் — அறிவார்கள்; தேரின் — ஆராயில், புகையும் — புகைதானும், புகற்கு — புகுதற்கு, அரிய — அரிதான, பூழை — வாயில்களை, நுழைந்து — நுழைந்து, இரப்பு இடும்பை ஆளன் — தரித்திரமுடையவன், புகும்-புகுவான்.

(க—ரை) நீரிலு நெய் நுட்பம்; நெய்யிலும் புகை நுட்பம்; புகைநுழையா வாயில்களிலுந் தரித்திர னுழைவான்.

(வி—ரை) இடும்பையாளன் — எழுவாய், புகும் — பயனிலை. ஏ- அசை.

[அகத்தியம்]

"கையு மாவியு மேனோக்குப் பொருள்."

283 கல்லோங் குயர்வரைமேற் காந்தண் மலராக்காற்
செல்லாவாஞ் செம்பொறி வண்டினங்—கொல்லைக்
கலாஅற் கிளிகடியுங் கானக நாட
விலாஅஅர்க் கில்லைத் தமர்.

(ப—ரை) கொல்லை — கொல்லைகளில், கிளி — கிளிகளை, கலால்- கல்லால், கடியும் — ஓட்டும், கானகம் — காட்டையும், நாட — நாட்டையுமுடைய பாண்டியனே!, கல் — கற்கள், ஓங்கு — மிகுந்த,உயர்- உயர்ந்த,வரைமேல் — மலைமேல், காந்தள் — காந்தட்பூ,மலராக்கால்- மலராவிடில்,செம்பொறி — சிவந்த புள்ளிகளையுடைய,வண்டுஇனம்- வண்டுக் கூட்டங்கள், செல்லா ஆம் — போகாவாம்; (அதுபோல)- இலார்க்கு — பொரு ளில்லாதவர்க்கு, தமர் — உறவினர், இல்லை- இல்லை.

(க—ரை) பாண்டியனே! காந்தள் மலராவிடில் வண்டுகள் சேராவாம்; அதுபோலப் பொருளில்லாதவர்க்கு உறவினரில்லை.

(வி—ரை) தமர் — எழுவாய், இல்லை — பயனிலை. (௩)

284 உண்டாய போழ்தி னுடைந்துழிக் காகம்போற்
றொண்டா யிரவர் தொகுபவே—வண்டாய்த்
திரிதருங் காலத்துத் தீதிலிரோ வென்பா
ரொருவரு மிவ்வுலகத் தில்.

(ப—ரை) உண்டு ஆய — செல்வ முண்டான, போழ்தின்- காலத்து, உடைந்த உழி — தேகம் அழியில்,காகம்போல் — காக்கை போல, தொண்டு — அடிமையாக, ஆயிரவர் — ஆயிரம்பேர்,தொகுப- கூடுவார்கள்; (அவ்வொருவர்தாமே) வண்டு ஆய் — வண்டுபோல, திரிதரும் காலத்து — திரியும்போது, தீது இலிரோ — (வறுமைக்) குற்றம் அற்றீரோ?, என் — என்றுபார் கேட்பார், ஒருவரும் — ஒருவரும், இ உலகத்து — இவ்வுலகில், இல் — இல்லை.

(க—ரை) பொருளுண்டான காலத்துக் காக்கைக் கூட்டம் போல் அனேகர் வந்து கூடுவார்கள்; பொருளில்லாக் காலத்து, ஒருவரும் வரமாட்டார்கள்.

(வி—ரை) ஆயிரவர் – எழுவாய், தொகுப – பயனிலை. ஒருவர்-எழுவாய், இல் – பயனிலை. (ச)

285 பிறந்த குலமாயும் பேராண்மை மாயும்
சிறந்ததங் கல்வியு மாயுங்—கறங்கருவி
கன்மேற் கழூஉங் கணமலை நன்னாட
இன்மை தழுவப்பட் டார்க்கு.

(ப—ரை) கறங்கு – சத்திக்கும், அருவி – ஆறானது, கல்மேல்-கல்லின்மேல்(விழுந்து), கழூஉம் – மாசைக்கழுவும், கணம் – கூட்டமான, மலை – மலைகளையும், நல் – நல்ல, நாட – நாட்டையுமுடைய பாண்டியனே!, இன்மை – தரித்திரம், தழுவப்பட்டார்க்கு – அடையப்பட்டார்க்கு, பிறந்த – தாம் பிறந்த, குலம் – குலப் பெருமையும், மாயும் – கெடும்; பேர் – பெரிய, ஆண்மை – ஆண் தன்மையும், மாயும் – கெடும்; சிறந்த – மிகுந்த, தம் – தமது, கல்வியும் – வித்தையும், மாயும் – கெடும்.

(க—ரை) பாண்டியனே! தரித்திரம் பிடிக்கப்பட்டவர்க்குக் குலப்பெருமையும், ஆண்தன்மையும், கல்வியுங் கெடும்.

[அகத்தியம்]

"கறங்கல் சுழல லொலித்த லாமே."

(வி—ரை) குலம், ஆண்மை, கல்வி – எழுவாய், மாயும் – பயனிலை.

286 உள்கூர் பசியா லுழைநசைஇச் சென்றார்கட்
குள்ளூ ரிருந்துமொன் றாற்றாதான்—உள்ளூர்
இருந்துயிர் கொன்னே கழியாது தான்போய்
விருந்தின னாதலே நன்று.

(ப—ரை) உள் – வயிற்றுள், கூர் – மிக்க, பசியால் – பசி நோயால், உழை – தன்னிடத்து, நசை – ஒன்றை யிச்சித்து, சென்றார்கட்கு – வந்து அடைந்தவர்களுக்கு, உள் ஊர் – உள்ளூரில், இருந்தும் – இருந்தும், ஒன்று – ஒருபொருளை, ஆற்றாதான் – உதவி செய்யாதவன், உள் ஊர் – உள்ளூரில், இருந்து – இருந்து, உயிர்-தன் உயிரை, கொன்னே – பயனில்லாமல், கழியாது – நீங்காமல்,

தான் போய் – தான் தூரதேசத்திற் போய், விருந்தினன் ஆதலே– (ஒருவனுக்கு) விருந்தாளி யாகுதல், நன்று – நல்லது.

(க–ரை) தன்னிடத்து வந்தவர்க்கு ஒருபொருள் உதவா தான் உள்ளூரிலிருந்து இரவாது பிற வூரார்க்கு விருந்தினன் ஆகு தல் நல்லது.

(வி–ரை) ஆற்றுதான் – எழுவாய், ஆதல் – பயனிலை. (சு)

287 நீர்மையே யன்றி நிரம்ப வெழுந்ததந்
கூர்மையு மெல்லா மொருங்கிழப்பர்—கூர்மையின்
முல்லை யலைக்கு மெயிற்றாய் நிரப்பென்னும்
அல்ல லடையப்பட் டார்.

(ப–ரை) கூர்மையின் – கூர்மையையுடைய, முல்லை – முல்லை யரும்பை, அலைக்கும் – வருத்தும், எயிற்றாய் – பற்களையுடைய வளே!, நிரப்பு என்னும் – வறுமை யென்னும், அல்லல் – துன்பம், அடையப்பட்டார் – சேரப்பட்டவர், நீர்மையே அன்றி – நற்குணங் களே யல்லாமல், நிரம்ப – நிறைய, எழுந்த – உள்ளெழுந்த, தம்– தம்முடைய, கூர்மையும் – நுட்பபுத்தியும், எல்லாம் – மற்ற யாவும், ஒருங்கு – ஒருமிக்க, இழப்பர் – இழந்துவிடுவர்.

(க–ரை) பெண்ணே! வறுமை யடையப்பட்டவர் குணங்களை யும், புத்தியையு மற்றுள்ளவற்றையு மிழப்பார்கள்.

(வி–ரை) அடையப்பட்டார் – எழுவாய், இழப்பர் – பயனிலை.

288 இட்டாற்றுப் பட்டொன் றிரந்தவர்க் காற்றாது
முட்டாற்றுப் பட்டு முயன்றுள்ளூர் வாழ்தலின்
எட்டாற்றுச் சென்று நிரைமனையிற் கைநீட்டுங்
கெட்டாற்று வாழ்க்கையே நன்று.

(ப–ரை) இட்டு ஆறுபட்டு – முன்கொடுத்து வழிபட்டு, ஒன்று இரந்தவர்க்கு – பின் ஒரு பொருள் இரந்தவர்க்கு, ஆற்றாது – உதவி செய்யாது, முட்டு ஆறு பட்டு – வறுமை வழியிற் பொருந்தி, முய ன்று – முயற்சி செய்து, உள் ஊர் வாழ்தலின் – உள்ளூரில் வாழ் தலைக்காட்டிலும், நெடு ஆறு சென்று – தூர தேசங்களிற் போய், நிரை மனையில் – வரிசையாகிய வீடுகளில், கை நீட்டும் – (பிச்சைக் குக்) கையை நீட்டும், கெடு ஆறு வாழ்க்கையே – கெடுவழியான வாழ்க்கையே, நன்று – நல்லது.

(க—ரை) முன் கொடுத்து வழிபட்டுப் பின் கொடுப்பதற் கில்லாமல் உள்ளூரில் வாழ்வதிலும் பிறவூரிற் போய்ப் பிச்சை யெடுப்பது நலம்.

(வி—ரை) வாழ்க்கை — எழுவாய், நன்று — பயனிலை. (அ)

289 கடகஞ் செறிந்ததங் கைகளால் வாங்கி
அடகு பறித்துக்கொண் டட்டுக்—குடைகலனா
உப்பிலி வெந்தைதின் றுள்ளற்று வாழ்பவே
துப்புரவு சென்றுலந்தக் கால்.

(ப—ரை) துப்புரவு — செல்வ மெல்லாம், சென்று — (பல வழியிற்) போய், உலந்தக்கால் — கெட்டால், கடகம் செறிந்த — பொற் கடக நெருங்கிய, தம் கைகளால் — தங்கள் கைகளால், வாங்கி- வணங்கி, அடகு — இலைகளை, பறித்துக்கொண்டு — பறித்துக்கொண்டு போய், அட்டு — சமைத்து, குடை கலன் ஆ — நுங்கு எடுக்கப் பட்ட பனங்காயே பாத்திரமாக, உப்பு இலி — உப்பில்லாத, வெந்தை — வெந்ததை, தின்று — புசித்து, உள் — மனம், அற்று — உடைபட்டு, வாழ்ப — வாழ்வார்கள்.

(க—ரை) செல்வ மெல்லாங் கெட்டால் இலைகளைப் பறித்துப் பனங்காயைப் பாத்திரமாக வைத்துச் சமைத்துண்பர்.

(வி—ரை) (இல்லார்) — தோன்றா எழுவாய், வாழ்ப — பயனிலை. ஏ — அசை. வெந்தை — நடுக்குறை. (கூ)

290 ஆர்த்த பொறிய வணிகிளர் வண்டினம்
பூத்தொழி கொம்பின்மேற் செல்லாவா—நீர்த்தருவி
தாழா வுயர்சிறப்பிற் றண்குன்ற நன்னாட
வாழாதார்க் கில்லைத் தமர்.

(ப—ரை) நீர்த்து — நீரை யுடையதாகிய, அருவி — ஆறானது, தாழா — தாழும், உயர் சிறப்பின் — உயர்ந்த சிறப்பைப்பொருந்திய, தண் — குளிர்ந்த, குன்றம் — மலையையும், நல் — நல்ல, நாட — நாட்டையுமுடைய பாண்டியனே!, ஆர்த்த — நிரம்பிய, பொறிய — புள்ளிகளையுடைய, அணி — அழகு, கிளர் — பிரகாசிக்கும், வண்டு இனம்- வண்டுக் கூட்டங்கள், பூத்து — மலர்ந்து, ஒழி — நீங்கிய, கொம்பின் மேல் — கொம்புகளின் மேல், செல்லா ஆம் — போகாவாம், (அது போல) — வாழாதார்க்கு — பொருள் பெற்று வாழாதவர்க்கு, தமர்- இனத்தார், இல்லை — இல்லை.

(க-ரை) பாண்டியனே! மலர்ந்தெழுந்த மரங்களில் வண்டுகள் செல்லாவாம்; அதுபோல, வறியவரிடத்தில் உறவினர் செல்லார்கள்.

(வி-ரை) தமர் - எழுவாய், இல்லை - பயனிலை. (௧0)

இன்மை முற்றிற்று.

---

# ௩0-ஆம் அதிகாரம்-மானம்

[அஃதாவது மானங் கெடாது வாழ்தலைச்

சொல்லுதலாம்.]

291 திருமதுகை யாகத் திறனிலார் செய்யும்
பெருமிதங் கண்டக் கடைத்தும்—எரிமண்டிக்
கானந் தலைப்பட்ட தீப்போற் கனலுமே.
மான முடையார் மனம்.

(ப—ரை) திரு – செல்வம், மதுகை ஆக – உறுதியாக, (அச்செருக்கினால்) திறன் – திறமை, இலார் – இல்லாதவர்கள், செய்யும் – செய்கின்ற, பெருமிதம் – வரம்புகடந்த நடத்தையை, கண்டக் கடைத்தும் – கண்டவிடத்து, எரி – தீ, மண்டி – நெருங்கி, கானம் – காட்டில், தலைப்பட்ட – முதன்மையாக வுண்டான, தீபோல் – தீயைப்போல, மானம் – மானத்தை, உடையார் – உடையவரது, மனம் – மனது, கனலும் – கொதித்து நிற்கும்.

(க—ரை) செல்வ மிகுதியால் அறிவிலார் செய்யும் வரம்பு கடந்த நடத்தையைக் காணில் மானமுடையவர் மனமானது தீப்போலெரியும்.

(வி—ரை) மனம் – எழுவாய், கனலும் – பயனிலை. ஏ – அசை.

[அகத்தியம்]

"ஐந்தறி வினமே லதிகமா மனமே." (க)

292 என்பா யுகினு மியல்பிலார் பின்சென்று
தம்பா டுரைப்பரோ தம்முடையார்—தம்பா
டுரையாமை முன்னுணரு மொண்மை யுடையார்க்
குரையாரோ தாமுற்ற நோய்.

(ப—ரை) என்பு ஆய் – எலும்பாகி, உகினும் – உடல் கெடினும், இயல்பு இலார் – நற்குண மில்லார், பின் சென்று – பின்போய், தம்பாடு – தமது குறையை, உரைப்பரோ–சொல்லுவாரோ? (கூறார்); தம் உடையார் – மானமுடையார், தம் பாடு – தமது குறையை, உரையாமை – முன் சொல்லுமுன், உணரும் – அறியும், ஒண்மை யுடையார்க்கு – கூரறிவு யுடையார்க்கு, தாம் உற்ற-

தாமடைந்த, நோய் – வறுமை நோயை, உரையாரோ – சொல்லாரோ? (கூறுவர்.)

(க–ரை) மான முடையவர் நற்குண மில்லார் பின்சென்று தமது வருத்தத்தைச் சொல்லார்; தமது வருத்தத்தைச் சொல்லு முன் அறியும் அறிவுடையார்க்குச் சொல்லுவார்.

(வி–ரை) தம்முடையார் – எழுவாய், உரையாரோ – பயனிலை, நோயை – செயப்படுபொருள். (உ)

293 யாமாயி னெம்மில்லங் காட்டுதுந் தாமாயிற்
காணவே கற்பழியு மென்பார்போல்—நாணிப்
புறங்கடை வைத்தீவர் சோறு மதனால்
மறந்திடுக செல்வர் தொடர்பு.

(ப–ரை) யாம் ஆயின் – நாமானால், எம் இல்லம் – எமது மனையை, காட்டுதும் – காட்டுவோம்; தாம் ஆயின் – தாமானால், காணவே –(பிறர்) காணவே, கற்பு – கற்பானது, அழியும் – கெடும், என்பார் போல் – என்று சொல்வார்போல், நாணி – வெட்கி, புறங்கடை வைத்து – தலைவாயிலில் வைத்து, சோறு – சோற்றை, ஈவர் – இடுவர், அதனால் – அதனாலே, செல்வர் – செல்வருடைய, தொடர்பு – சிநேகத்தை, மறந்திடுக – மறந்துவிடக்கடவாய்.

(க–ரை) செல்வர்கள் வறியவர்க்குத் தலைவாயிலில் வைத்துச் சோறிடுவர்; அவர் சிநேகத்தை விட்டுவிடக் கடவாய்.

(வி–ரை) (நீவிர்) – தோன்றா எழுவாய், மறந்திடுக – பயனிலை, தொடர்பு – செயப்படுபொருள்.

[அகத்தியம்]

"கயவது கயவட்டு ரவ்விறு வியங்கோள்." (ந)

294 இம்மையு நன்றா மியனெறியுங் கைவிடா
தும்மையு நல்ல பயத்தலாற்—செம்மையி
னாணங் கமழுங் கதுப்பினாய் நன்றேகாண்
மான முடையார் மதிப்பு.

(ப–ரை) செம்மையின் – செம்மையுடைய, நாணம் – புழுகு, கமழும் – மணக்கும், கதுப்பினாய் – கூந்தலையுடையவளே!, மானம் உடையார் – மான முடையோர், மதிப்பு – மதிக்குந் தன்மையானது, இம்மையும் – இப்பிறப்பிலும், நன்றாம் – நன்மை யுண்டாம்;

இயல்பாகிய, நெறியும் — ஒழுக்க வழியும், கைவிடாது — நீங்காது நிற்கும், உம்மையும் — மறுபிறப்பிலும், நல்ல — நன்மைகளை, பயத்தலால் — கொடுத்தலால், நன்று — நன்மை.

(க—ரை) பெண்ணே! மான முள்ளவர் மதிப்பானது இரு பிறப்பிலு நன்மையைத் தரும்.

(வி—ரை) மதிப்பு — எழுவாய், நன்று — பயனிலை. ஏ — அசை. காண் — முன்னிலை. (௪)

295 பாவமு மேனைப் பழியும் படவருவ
சாயினுஞ் சான்றவர் செய்கலார்—சாத
லொருநா ளொருபொழுதைத் துன்ப மவைபோல்
அருநவை யாற்றுத லின்று.

(ப—ரை) பாவமும் — தீவினையும், ஏனை — மற்றை, பழியும்- உலகநிந்தனையும், பட — உண்டாக, வருவ — வருவனவற்றை, சாயினும் — தாம் இறப்பினும், சான்றவர் — பெரியோர், செய்கலார்- செய்யார்; (ஏனெனில்), சாதல் — இறத்தல், ஒருநாள் — இறக்கிற நாளில், ஒருபொழுதை — அவ் வொருபொழுதில் மாத்திரமே, துன்பம் — துன்பமாம்; அவைபோல் — அந்த இழிதொழில்களைப்போல், அரு — அரிய, நவை — துன்பத்தை, ஆற்றுதல் — செய்தல், இன்று- வேறொன்றில்லை.

(க—ரை) பெரியோர், பாவமும் பழியுஞ் செய்யார்; மரணம் ஒருநாள் ஒருபொழுது துன்பமாம்; பாவமும் பழியும் பலநாளுந் துன்பமாம்.

(வி—ரை) சான்றவர் — எழுவாய், செய்கலார் — பயனிலை, வருவ — செயப்படுபொருள். ஐ — சாரியை. (௫)

296 மல்லன்மா ஞாலத்து வாழ்ப வருளெல்லாஞ்
செல்வ ரெனினுங் கொடாதவர்—நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார்.

(ப—ரை) மல்லல் — வளப்பமுடைய, மா ஞாலத்து — பெரிய உலகத்து, வாழ்பவருள் எல்லாம் — வாழ்பவ ரெல்லாருள்ளும், செல்வர் எனினும் — செல்வமுள்ளவ ராயினும், கொடாதவர்- கொடாதவர், நல்கூர்ந்தார் — தரித்திரமுடையவரே யாவர்; நல்கூர்

ந்தக்கண்ணும் — தரித்திர மடைந்தும், செல்வரை — செல்வ முடையாரிடத்து, சென்று — போய், இரவாதார் — யாசியாதவர், பெருமுத்தரையரே — பரிசுத்தமுடையவரே.

(க—ரை) செல்வர்களாகிலுங் கொடாதவர்கள் தரித்திரர்களே; தரித்திரப்பட்டும் இரவாதவர்கள் செல்வமுடையவர்களே.

(வி—ரை) கொடாதவர் — எழுவாய், நல்கூர்ந்தார் — பயனிலை. இரவாதார் — எழுவாய், பெருமுத்தரையர் — பயனிலை. (சு)

297 கடையெலாங் காய்பசி யஞ்சுமற் றேனை
யிடையெலா மின்னாமை யஞ்சும்—புடைபரந்த
விற்புருவ வேனெடுங் கண்ணாய் தலையெல்லாஞ்
சொற்பழி யஞ்சி விடும்.

(ப—ரை) புடை — பக்கங்களில், பரந்த — பரவியிருக்கின்ற, வில் — வில்லையொத்த, புருவம் — புருவங்களையும், வேல் — வேலையொத்த, நெடு — நீண்ட, கண்ணாய் — கண்களையு முடையவளே!, எலாம் — முற்றும், கடை — கடையானவன், காய் — வருத்தும், பசி- பசிக்கு, அஞ்சும் — பயப்படுவான்; ஏனை — ஒழிந்த, எலாம் — முற்றும், இடை — இடையானவன், இன்னாமை — துன்பத்திற்கு, அஞ்சும் — பயப்படுவான்; எல்லாம் — முற்றும், தலை — தலையானவன், சொல் பழி — சொற்குற்றத்திற்கு, அஞ்சிவிடும் — பயப்படுவான்.

(க—ரை) பெண்ணே! கடையானவன் பழிக்கு அஞ்சுவான், இடையானவன் துன்பத்திற்கு அஞ்சுவான். தலையானவன் சொற்குற்றத்திற்கு அஞ்சுவான்.

(வி—ரை) கடை,இடை, தலை — எழுவாய், அஞ்சும் — பயனிலை. மற்று — இடைச்சொல் (எ)

298 நல்லர் பெரிதளியர் நல்கூர்ந்தா ரென்றெள்ளிச்
செல்வர் சிறுநோக்கு நோக்குங்கால்—கொல்லன்
உலையூதுந் தீயேபோ லுள்கன லுங்கொல்லோ
தலையாய சான்றோர் மனம்.

(ப—ரை) நல்லர் — இவர் நல்லவர், பெரிது — மிகவும், அளியர்- கொடுத்தவர், நல்கூர்ந்தார் என்று — தரித்திரமடைந்தா ரென்று கூறி, எள்ளி — இகழ்ந்து, செல்வர் — செல்வமுடையவர், சிறு நோக்கு — குறும் பார்வையாக, நோக்குங்கால் — பார்க்கும்போது, தலை

ஆய-தலைமையாகிய, சான்றோர் – பெரியோர், மனம் – மனமானது, கொல்லன் – கருமானுடைய, உலை – உலைக்களத்து, ஊதும்—ஊது கின்ற, தீயேபோல் – தீயைப்போல, உள் – உள்ளுக்குள்ளே, கனலும் – எரியும்.

(க—ரை) செல்வர்கள் நல்லவர்களை இகழ்ந்து வறுமை யடைந் தாரெனக் கூறிக் குறும்பார்வை பார்க்கும்போது அவர்கள் மனம் உலைக்களத்துத் தீயைப்போ லெரியும்.

(வி—ரை) மனம் – எழுவாய், கனலும் – பயனிலை. கொல்–ஓ – அசைகள். (அ)

299 நச்சியார்க் கீயாமை நாணன்று நாணும்
அச்சத்தா ஞணுத ஞணன்றும்—எச்சத்தின்
மெல்லிய ராகித்தம் மேலாயார் செய்தது
சொல்லா திருப்பது நாண்.

(ப—ரை) நச்சியார்க்கு – விரும்பியவர்க்கு, ஈயாமை – கொடாமை, நாண் அன்று – நாணமன்று; நாள்நாளும் – நாளுநாளும், அச்சத்தால் – பயத்தால், நாணுதல் – நாணுதல், நாண் அன்று – நாண மாகாது; எச்சத்தின் – குறைவினையுடைய, மெல்லியர் ஆகி – எளியவராகி, தம்மேல் – தம்மிடத்து, ஆயார் – விரோதமானவர், செய்தது – செய்ததை, சொல்லாது இருப்பது – சொல்லாமலிருப்பது, நாண் – நாண முடைமையாம்.

(க—ரை) சத்துருக்கள் செய்த குறையைச் சொல்லாதிருப் பதே மனிதர்க்கு நாணம்.

(வி—ரை) நாண் – எழுவாய், சொல்லாதிருப்பது – பயனிலை, செய்தது – செயப்படுபொருள். ஆம் – அசை. (கூ)

300 கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
யிடம்வீழ்ந்த துண்ணு திறக்கும்—இடமுடைய
வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மான மழுங்க வரின்.

(ப—ரை) கடமா – காட்டுப்பசுவை, தொலைச்சிய – கொன்ற, கான் – காட்டில், உறை – வாசஞ்செய்யும், வேங்கை – புலியானது, இடம் – (தனது)இடது பக்கத்தில், வீழ்ந்தது – வீழ்ந்ததை, உண்ணுது – தின்னுது, இறக்கும் – போய்விடும்; (அதுபோல)விழுமி

யோர் – பெரியோர், இடம் உடைய – இடத்தையுடைய, வான் அகம்- தெய்வலோகம், கை உறினும் – கைவசப்படினும், மானம் அழுங்க வரின் – மானங் கெடவந்தால், வேண்டார் –(அந்த இன்பத்தை) விரும்பார்.

(க–ரை) புலியானது இடது பக்கத்தில் வீழ்ந்த கடமாவைத் தின்னாது போய்விடும்; அதுபோலப், பெரியோர்கள் வானுலகம் கைவசமாயினும் மானங் கெடவந்தால் அந்தச் சுவர்க்க இன்பத்தையும் விரும்பார்.

(வி–ரை) விழுமியோர் – எழுவாய், வேண்டார் – பயனிலை. ()

மானம் முற்றிற்று.

## ௩௧-ஆம் அதிகாரம்-இரவச்சம்

[அஃதாவது யாசித்தலால் வரும் அச்சத்தைச
சொல்லுதலாம்.]

301 நம்மாலே யாவரீ நல்கூர்ந்தா ரெஞ்ஞான்றுந்
தம்மாலா மாக்க மிலரென்று—தம்மை
மருண்ட மனத்தார்பின் செல்பவோ தாமுந்
தெருண்ட வறிவி னவர்.

(ப—ரை) இ நல்கூர்ந்தார்—இந்த வறுமையை யடைந்தவர், நம்மாலே—நம்மாலேயே, ஆவர் — செல்வமுடையவராவர்; எஞ்ஞான்றும்—எந்நாளும், தம்மால்—தம்மாலே, ஆம்—உண்டாகும், ஆக்கம்—செல்வம், இலர் என்று—இல்லாதவ ரென்று எண்ணியும் சொல்லியும், தம்மை—தம்மில், மருண்ட—மயங்கிய, மனத்தார்-மனதுடையவர்களின், பின் செல்பவோ—பின்னே சென்று இரப்பார்களோ?, தாமும்—தாமும், தெருண்ட—தெளிந்த, அறிவினவர்—அறிவினையுடையவர்.

(க—ரை) தெளிந்த அறிவினையுடையவர் தெளிவிலா அறிவீனரிடத்துச் சென்று இரவார்.

(வி—ரை) அறிவினவர்—எழுவாய், செல்பவோ—பயனிலை. ()

302 இழித்தக்க செய்தொருவ னார வுணலிற்
பழித்தக்க செய்யான் பசித்த றவறோ
விழித்திமைக்கு மாத்திரை யன்றோ வொருவன்
அழித்துப் பிறக்கும் பிறப்பு.

(ப—ரை) ஒருவன்—ஒரு மனிதன், அழித்து—செத்து, பிறக்கும்—பிறக்கின்ற, பிறப்பு—சனனம், விழித்து—கண் விழித்து, இமைக்கும்—இமைக்கின்ற, மாத்திரை அன்றோ—அளவல்லவோ?, (ஆதலால்) ஒருவன் இழித்தக்க—இழிவான யாசகங்கள், செய்து ஆர—வயிறு நிறைய, உணலின்—உண்ணுதலினும், பழித்தக்க-பழிக்கத்தக்கவைகளை, செய்யான்—செய்யாதவன், பசித்தல்-பசித்திருத்தல், தவறோ—குற்றமாகுமோ?

(க—ரை) ஒருவன் யாசகஞ்செய்து உண்ணுதலைப் பார்க்கிலும் மற்றொருவன் மானத்தோடு யாசகஞ் செய்யாது பசித்திருத்தல் குற்றமாகுமோ?

(வி—ரை) பசித்தல் – எழுவாய், தவரூ – பயனிலை.

[அகத்தியம்]

"அன்று முன்னு ளசையெதிர் மறைக்கிளவி."

303 இல்லாமை கந்தா விரவு துணிந்தொருவர்
செல்லாரு மல்லர் சிறுநெறி—புல்லா
அகம்புகுமி னுண்ணுமி னென்பவர்மாட் டல்லால்
முகம்புகுத லாற்றுமோ மேல்.

(ப—ரை) இல்லாமை – வறுமையே, கந்து ஆ – பற்றுக்கோடாக, இரவு – யாசகத்தை, துணிந்து – துணிந்து, ஒருவர் – ஒருவர், சிறு நெறி – யாசக வழியில், செல்லாரும் – போகாதவரும், அல்லர் – அல்லர்; (ஆனாலும்) புல்லா – தழுவி, அகம் – எமது மனையில், புகுமின் – பிரவேசியுங்கள், உண்ணுமின் – உண்ணுங்கள், என்பவர்மாட்டு அல்லால் – என்று உபசரிப்பவரிடத்தல்லது, முகம் – மற்றவரிடத்து, புகுதல் – செல்லல், மேல் – மேன்மகன், ஆற்றுமோ – செய்வானோ?

(க—ரை) இல்லாமையாற் பிச்சைக்குச் செல்லாமல் இருந்தவரில்லை; மேலானவன், உபசரித்தழைப்பவர் வீட்டிற் சென்று உண்பான்.

(வி—ரை) மேல் – எழுவாய், ஆற்றுமோ – பயனிலை.

[அகத்தியம்.]

"ஒருவ ருயர்திணை யிருபாற் கிளவி." (ரு)

304 திருத்தன்னை நீப்பினுந் தெய்வஞ் செறினும்
உருத்த மனத்தோ டுயர்வுள்ளி னல்லால்
அருத்தஞ் செறிக்கு மறிவிலார் பின்சென்
றெருத்திறைஞ்சி நில்லாதா மேல்.

(ப—ரை) மேல் – மேன்மகனானவன், திரு-இலக்குமி, தன்னை-தன்னைவிட்டு, நீப்பினும் – நீங்கினும், தெய்வம் – தெய்வம், செறினும் – கோபிக்கினும், உருத்த – கோபித்த, மனத்தோடு – மனத்தினால், உயர்வு – உயர்வை, உள்ளின் அல்லால் – நினைப்பதல்லது, அருத்தம் – திரவியத்தை, செறிக்கும் – புதைக்கும், அறிவு இலார் – அறிவில்லாதவர், பின் சென்று – பின்னே போய், எருத்து இறைஞ்சி – தலை யிறக்கங்கொண்டு, நில்லாது – நிற்கான்.

(க—ரை) மேன்மகனானவன் அறிவிலார் பின்போய்த் தலை வணங்கி நிற்கான்.

(வி—ரை) மேல் — எழுவாய், நில்லாது — பயனிலை. (௪)

305 கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை—இரவினை
யுள்ளுங்கா, லுள்ள முருகுமா லென்கொலோ
கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு.

(ப—ரை) கரவாத — (பொருளை) ஒளிக்காத, திண் — வலிய, அன்பின் — அன்புடைய, கண் அன்னார்கண்ணும் — (தம்) கண்ணிற்கு ஒப்பானவரிடத்தும், இரவாது — யாசியாமல், வாழ்வதாம்—வாழும் வாழ்க்கையே,வாழ்க்கை — ஒருவர்க்கு வாழ்வாகும்; இரவினை-யாசகத்தை, உள்ளும்கால் — நினைக்கும்போது,உள்ளம் உருகுமால்-மனம் உருகுமாகையால், கொள்ளும்கால்—ஏற்கும்பொழுது, கொள்வார் — ஏற்பவர், குறிப்பு — மனக்குறிப்பு, என்கொலோ — எப்படிப்பட்டதோ?

(க—ரை) கண்ணிற்குக் கண்ணானவரிடத்தும் யாசியாது வாழ்தலே வாழ்வாம்.

(வி—ரை) வாழ்க்கை — எழுவாய், வாழ்வதாம் — பயனிலை. குறிப்பு — எழுவாய், என்கொலோ — பயனிலை. (௫)

306 இன்னா வியைக வினிய வொழிகென்று
தன்னையே தானிரப்பத் தீர்வதற்—கென்னைகொல்
காதல் கவற்று மனத்தினாற் கண்பாழ்பட்
டேதி லவரை யிரவு.

(ப—ரை) இன்னா — துன்பங்கள், இயைக — பொருந்தியிருக்க: இனிய — இன்பங்கள், ஒழிக என்று — நீங்குகவென்று, தன்னையே தான் — தன்னைத்தானே, இரப்ப — இரந்துகொள்க, தீர்வதற்கு— வறுமை நீங்குதற்கு, காதல் — பொருளாசை, கவற்றும் — கவலைப் படுத்தும், மனத்தினால் — மனதால், கண் பாழ்பட்டு — (துன்பத்தால்) கண்கள் பாழடைந்து, ஏதிலவரை — அந்நியரிடத்திற் சென்று, இரவு — யாசித்தல், என்னைகொல் — என்ன பயன் கருதியோ?

(க—ரை) ஒருவன் அந்நியனிடத்திற் போய் யாசித்தல் என்ன பயன் குறித்தோ?

(வி—ரை) இரவு — எழுவாய், என்னைகொல் — பயனிலை.

[அகத்தியம்]

"குச்சா ரியைச்செய்யுட் கண்ணே வினைக்குறும்." (சு)

307 என்றும் புதியார் பிறப்பினு மிவ்வுலகத்
தென்று மவனே பிறக்கலான்—குன்றின்
பரப்பெலாம் பொன்னொழுகும் பாயருவி நாட
இரப்பாரை யெள்ளா மகன்.

(ப—ரை) குன்றின் — மலையின், பரப்பு எலாம் — அகன்ற இடமெல்லாம், பொன் — பொன்னனது, ஒழுகும் — சொரிதற்குக் காரணமான, பாய் — பாயும், அருவி — யாற்றுறையும், நாட — நாட்டையுடைய பாண்டியனே!, இரப்பாரை — யாசிப்பவரை, எள்ளா மகன்- இகழாத மகன், என்றும் — எந்நாளும், புதியார் — புதியவர்கள், பிறப்பினும் — பிறந்தாலும், இ உலகத்து — இந்த வுலகத்தில், என்றும்— எந்நாளும், அவனே — அந்தமகனே, பிறக்கலான் — பிறவாதவன்.

(க—ரை) பாண்டியனே! இரப்பவரை இகழாதவன் எக்காலும் பிறவான்.

(வி—ரை) மகன் — எழுவாய், பிறக்கலான் — பயனிலை. (எ)

308 புறத்துத்தன் னின்மை நலிய வகத்துத்தன்
நன்ஞான நீக்கி நிறீஇ யொருவனை
ஈயா யெனக்கென் றிரப்பானே லந்நிலையே
மாயானோ மாற்றி விடின்.

(ப—ரை) தன் — தனது, இன்மை — தரித்திரம், புறத்து — புறம்பான (வுடலை) நலிய — வருத்த, (அதற்காக) தன் — தனது, அகத்து- மனதுள், நல் — நல்ல, ஞானம் — அறிவை, நீக்கி — தள்ளி, நிறீஇ- அறிவில்லாமையை நிறுத்தி, ஒருவனை — ஒருவனைக் குறித்து, எனக்கு — எனக்கு, ஈயாய் என்று — பொருள் கொடுப்பாயென்று, இரப்பானேல் — யாசிப்பானாகில், மாற்றிவிடின் — அவன் இல்லையென்று சொல்லில், அ நிலையே — அவ்விடத்தே, மாயானோ — இறவானோ?

(க—ரை) கொடுப்பவன் இல்லையென்று சொல்லில், இரப்பவன் இறந்தான்.

(வி—ரை) அவன் — எழுவாய், மாயானோ — பயனிலை.

[அகத்தியம்]

"ஈயெனி கிளவி யிழிந்தோ னிரப்புரை."

309 ஒருவ ரொருவரைச் சார்ந்தொழுக லாற்றி
வழிபடுதல் வல்லுத லல்லாற்—பரிசழிந்து
செய்யீரோ வென்னு மென்னுஞ்சொற் கின்னாதே
பையத்தான் செல்லு நெறி.

(ப—ரை) ஒருவர்—,ஒருவரை – மற்றொருவரை, சார்ந்து – சேர்ந்து, ஒழுகல் – நடத்தல், ஆற்றி – செய்து, வழிபடுதல் – வழிபட்டிருத்தல், வல்லுதல் – முறைமை, அல்லால் – அல்லது, பரிசு—குணம், அழிந்து – கெட்டு, என்னனும் – யாதாகிலும்(உதவி) செய்யீரோ – செய்யமாட்டீரோ?,என்னும் – என்று சொல்லும்,சொற்கு-சொல்லைப் பார்க்கிலும், பைய – மெல்ல, தாம் – தாம், செல்லும்—தவம் பண்ணப்போகும், நெறி – வழியானது, இன்னாதே – துன்பமுடையதோ?

(க—ரை) யாசிப்பதைப் பார்க்கிலுந் தவம் பண்ணும் வழி துன்பமுடையதோ?

(வி—ரை) நெறி – எழுவாய், இன்னாதே – பயனிலை. (௯)

310 பழமைகந் தாகப் பசைந்த வழியே
கிழமைதான் யாதானுஞ் செய்க—கிழமை
பொறாஅ ரவரென்னிற் பொத்தித்தந் நெஞ்சத்
தறாஅச் சுடுவதோர் தீ.

(ப—ரை) பழமை – பழமையை, கந்து ஆக – பற்றுக்கோடாக, பசைந்த – விரும்பிய, வழி – வழியில், கிழமை – உரிமையாக,தான்-தான், யாது ஆனும் – யாதாவதொருதவி, செய்க – செய்யக்கடவர்; கிழமை – அவ் வுரிமையை, அவர் பொறார் என்னில் – பொறாரானால், தம் – தமது, நெஞ்சத்து – மனதில், பொத்தி – பொதிந்து, அறா – நீங்காமல், சுடுவது – எரிவது, ஓர் – ஒரு, தீ – நெருப்பாகும்.

(க—ரை) பழமையை ஆதாரமாகச் சிநேகித்தவருக்கு யாதானும் ஒருதவி செய்யக்கடவர் அவ்வுதவியை அவர் பொறாவிடில் மனதைச் சுடு நெருப்பாகும்.

(வி—ரை) (தீ) – தோன்றா எழுவாய், செய்க–பயனிலை. ஏ—அசை.

இரவச்சம் முற்றிற்று.

---

# ஐந்தாவது—பொதுவியல்

[அரசியல் முதலியவற்றுள் அடங்கா தொழிந்தவற்றின் இயல்பைக் கூறும் பிரிவு.]

## ங உ-ஆம் அதிகாரம்-அறிவையறிதல்

[அஃதாவது சபையை யறிந்து நடக்குதலாம்.]

311 மெய்ஞ்ஞானக் கோட்டி யுறழ்வழி விட்டாங்கோ
ரஞ்ஞானந் தந்திட் டதுவாங் கறத்துழாய்க்
கைஞ்ஞானங் கொண்டொழுகுங் காரறி வாளர்முன்
சொன்ஞானஞ் சோர விடல்.

(ப—ரை) மெய் ஞானம் — மெய்ஞ்ஞான நூல்களை யறிந்த, கோட்டி — சபையில், உறழ் வழி — கலந்த வழியை, விட்டு — நீங்கி, ஆங்கு — அவ்விடத்து, ஓர் அஞ்ஞானம் — அறிவில்லாவொன்றை, தந்திட்டு — சொல்லி, அது — அதனை, ஆங்கு — அவ்விடத்தில், அற- மிகவும், துழாய் — பரப்பி, கை — கையாற் குத்தி,ஞானம் கொண்டு- தனது அஞ்ஞானத்தைக் கொண்டு, ஒழுகும்—நடக்கும், கார் அறிவு ஆளர் முன் — மயங்கிய அறிவாளர்முன், சொல் — சொல்லும், ஞானம் — அறிவை, சோரவிடல் — தளரவிடுக.

(க—ரை) கற்றோர் சபையை விட்டு அறிவீனமாய் நடப்பவர் முன் நல்லறிவைச் சொல்லாதிருப்பாயாக.

(வி—ரை) (ீவிர்) — தோன்றா எழுவாய், சோரவிடல்-பயனிலை, ஞானம் — செயப்படுபொருள்.

[அகத்தியம்]

"இட்டுவிட்டிரண்டும் வினையிடைக் கிளவி." (க)

312 நாப்பாடஞ் சொல்லி நயமுணர்வார் போற்செறிக்குந்
தீப்புலவற் சேரார் செறிவுடையார்—தீப்புலவன்
கோட்டியுட் குன்றக் குடிபழிக்கு மல்லாக்காற்
றோட்புடைக் கொள்ளா வெழும்.

(ப—ரை) நா — நாவிற்கு, பாடம் — வந்த பாடங்களை, சொல்லி- சொல்லி,நயம் — நீதியை,உணர்வார்போல் — அறிவார்போல்,செறிக்கும் — கோபிக்கும், தீ புலவன் — கெட்ட அறிவினையுடையவனை, செறிவுடையார் — அடக்க முடையார், சேரார் — சேரமாட்டார்,

தீ புலவன் — கெட்ட அறிவினை யுடையவன், கோட்டியுள் — சபையிடத்து, குன்ற — குறைய, குடி — குடியை, பழிக்கும் — பழிப்பான்; அல்லாக்கால் — அல்லாவிட்டால், தோள் — தோள்களை, புடைதட்டி,கொள்ளா — கொண்டு,எழும் — சண்டைக்குஎழுந்திருப்பான்.

(க—ரை) அடக்க முடையவர் அறிவிலாதவனைச சேரார்கள்; அறிவிலாதவன் சபையி லிகழ்ந்து பேசுவான்; இல்லாவிடில் சண்டைக்கு எழுவான்.

(வி—ரை) செறிவுடையார் — எழுவாய், சேரார் — பயனிலை, தீப் புலவன் — செயப்படுபொருள். தீப்புலவன் — எழுவாய், எழும் — பயனிலை. (௨)

313 சொற்றோற்றல் கொண்டு சுனைத்தெழுதல் காமுறுவர்
கற்றாற்றல் வன்மையுந் தாந்தேறார் — கற்ற
செலவுரைக்கு மாறறியார் தோற்ப தறியார்
பலவுரைக்கு மாந்தர் பலர்.

(ப—ரை) கற்ற ஆற்றல் வன்மையும் — மிகக் கற்ற வல்லமையும், தாம் தேறார் — தாமறியாதவர், சொற்றோற்றல் கொண்டு — சொற்றிறத்தைக் கொண்டு,சுனைத்து எழுதல் — அறிவின்மையைச் சொரிந்து வெற்றிகொண்டெழுதற்கு, காமுறுவர் — இச்சிப்பார்; கற்ற— கற்றவற்றை, செல உரைக்கும் — (அவையிற்) சொல்லும்படி சொல்லும், ஆறு அறியார் — வழியை யறியார்; தோற்பது அறியார்-தோல்வியு மறியார்; பல உரைக்கும் — பலவற்றைச் சொல்லும், மாந்தர்— மனிதர், பலர் — அநேகர் (இருக்கின்றனர்.)

(க—ரை) தாம் கற்ற கல்வி வன்மையை யறியாதவர்களாய்த் தமது அறிவில்லாமையைச சொல்லி வெற்றி கொள்ளற்கு இச்சிப்பார், வெற்றியுந் தோல்வியும் அறியாதவர் பலருளர்.

(வி—ரை) தேறார் — எழுவாய், காமுறுவர் — பயனிலை. மாந்தர்- எழுவாய், பலர் — பயனிலை. (௩)

314 கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தாற்
பெற்றதாம்பேதையோர் சூத்திர—மற்றதனை
நல்லா ரிடைப்புக்கு நாணாது சொல்லித்தன்
புல்லறிவு காட்டி விடும்.

(ப—ரை) கற்றதூஉம் இன்றி — கற்றதொன் றில்லாமல, கணக்காயர் பாடத்தால் — பள்ளியில் ஓதுவோர் பாடத்தால், பேதை— அறிவிலான், ஓர் சூத்திரம் — ஓர் சூத்திரத்தை, பெற்றது ஆம்—

பெற்றவனுவன்; மற்று – பின்பு, அதனை – அச் சூத்திரத்தை, நல்லார் – அறிவுடையோர், இடை – நடுவே, புக்கு – புகுந்து, நாணாது – வெட்கப்படாது, சொல்லி—, தன் – தனது, புல் அறிவு – அற்ப அறிவை, காட்டிவிடும் – காட்டுவான்.

(க—ரை) அறிவில்லாதவன், பள்ளிப் பாடத்தால் ஓர் சூத்திரத்தைக் கற்று அதனை அறிவுடையோர் சபையிற் சொல்லித் தன்அறிவின்மையைக் காட்டுவான்.

(வி—ரை) பேதை – எழுவாய், காட்டிவிடும் – பயனிலை, புல்லறிவு – செயப்படுபொருள். ஆம் – அசை (ச)

315 வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்
ளன்றிக் கறுத்தெழுந்து காய்வாரோ—டொன்றி [ளார்
யுரைவித் தகமெழுவார் காண்பரே கையுட்
சுரைவித்துப் போலுந்தம் பல்.

(ப—ரை) வென்றிப் பொருட்டால் – வெற்றி கொள்ளுங் காரணத்தால், விலங்கு ஒத்து – மிருகங்களை நிகர்த்து, மெய் கொள்ளார் – உண்மைப் பொருளைக் கொள்ளாதவராய், கன்றி – மனம் புழுங்கி, கறுத்து – கோபித்து, எழுந்து – எதிராக வெழுந்து, காய்வாரோடு – கோபிப்பாருடன், ஒன்றி – பொருந்தி, உரை – தன் சொல்லை, வித்தகம் – ஞானமாக, எழுவார் – காட்ட எழுவார், சுரை – சுரையினது, வித்துபோலும் – விதையைப்போலும், தம் பல் – தம்முடைய பற்களை, கையுள் – தம்முடைய கையுள், காண்பர் – காண்பார்கள்.

(க—ரை) வெற்றி காரணமாக உண்மைப் பொருளைக் கொள்ளாது கோபிப்பவருடன் எதிர்த்துத் தமது சொல்லை ஞானமாகக் காட்ட எழுபவர்கள் பல் உடைபடுவர்.

(வி—ரை) எழுவார் – எழுவாய், காண்பர் – பயனிலை, பல் – செயப்படுபொருள். ஆல், ஏ – அசைகள். (ரு)

316 பாடமே யோதிப் பயன்றெரித றேற்றாத
மூடர் முனிதக்க சொல்லுங்கால்—கேடருஞ்சீர்ச்
சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே மற்றவரை
யீன்றாட் கிறப்பப் பரிந்து.

(ப—ரை) பாடமே ஓதி – பாடங்களைப் படித்து, பயன் – அவற்றின் பொருளை, தெரிதல் – அறிதல், தேற்றாத – கூடாத, மூடர்—

அறிவில்லார், முனிதக்க — வெறுக்கத்தக்கவைகளை, சொல்லும் கால் — சொல்லும்போது, கேடு அரும் — கேடில்லாத, சீர் — சிறப்பையுடைய, சான்றோர் — அறிவுடையோர், சமழ்த்தனர் — வருத்தமுடையவராய், அவரை — அவ் வறிவில்லாரை, ஈன்றாட்கு — பெற்றவளுக்காக, இறப்ப — மிகவும், பரிந்து — இரங்கி, நிற்ப — நிற்பார்கள்.

(க—ரை) கல்வியறியா மூடர் வெறுக்கத்தக்கவைகளைச் சொல்லும்போது அறிவுடையோர், அம்மூடரைப் பெற்ற தாய்க்காக இரக்கங் கொள்வர்.

(வி—ரை) சான்றோர் — எழுவாய், நிற்ப — பயனிலை. ஏ, மற்று— அசைகள். (௬)

317 பெறுவது கொள்பவர் தோள்போ னெறிபட்டுக்
கற்பவர்க் கெல்லா மெளிய நூன்—மற்றம்
முறிபுரை மேனிய ருள்ளம்போன் றியார்க்கு
மறிதற் கரிய பொருள்.

(ப—ரை) பெறுவது — கிடைக்கப் பெறுவதை, கொள்பவர்- கொள்ளும் விலைமாதர், தோள் போல் — தோளைப்போல், நெறி பட்டு — வழிபட்டு, கற்பவர்க்கு எல்லாம் — கற்பவர்களுக்கெல்லாம், நூல் — நூல்கள், எளிய — எளியனவாம்; முறி புரை — தளிரை நிகர்த்த, அ மேனியர் — அந்த விலைமாதர், உள்ளம் போன்று — மனம் போன்று, யார்க்கும் — எவருக்கும், பொருள் — நூற் பொருள்கள், அறிதற்கு — உணர்தற்கு, அரிய — அரியனவாம்.

(க—ரை) நூல்கள்; வேசையர்கள் தோளைப்போல் வெளிப்பட்டு நிற்பனவாம்; அந்நூற்பொருள்கள் அவ்வேசையர் கன்மனத்தைப்போல அறிதற்கு அரியனவாம்.

(வி—ரை.) நூல் — எழுவாய், எளிய — பயனிலை. பொருள்—எழுவாய், அரிய — பயனிலை. மற்று — அசை.

318 புத்தகமே சாலத் தொகுத்தும் பொருடெரியார்
உய்த்தக மெல்லா நிறைப்பினு—மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருடெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

(ப—ரை) புத்தகம் — புத்தகங்களை, சால — மிகவும், தொகுத்தும் — சேர்த்து வைத்தும், பொருள் — அவற்றின் பொருள்களை, தெரியார் — அறியாதவர்களாய், உய்த்து — ஆராய்ந்து, அகம் எல்

லாம் – வீடெல்லாம், நிறைப்பினும் – நிறைத்து வைத்தாலும், அவ ற்றை – அப்புத்தகங்களை, போற்றும் – காப்பாற்றும், புலவரும்– வித்துவான்களும், வேறு – வேறுவார்; பொருள் – அவற்றின் பொ ருளை, தேற்றும் – பிறர்க்குப் போதிக்கும், புலவரும் – வித்துவான் களும், வேறு – வேறுவார்.

(க–ரை) புத்தகங்களை மிகுதியாகச் சேர்த்தும் அவற்றின் பொருள்களை யறியார். அப்புத்தகங்களைக் காப்பாற்றும் புலவர்க ளும் வேறுவர். அப்பொருள்களை யறிந்து போதிக்கும் புலவர்க ளும் வேறுவர்.

(வி–ரை) போற்றும் புலவர் – எழுவாய், வேறு – பயனிலை அவற்றை – செயப்படுபொருள். தேற்றும் புலவர் – எழுவாய், வேறு – பயனிலை, அவற்றை – செயப்படுபொருள், ஏ, மற்று- அசைகள். (அ)

319 பொழிப்பகல நுட்பநூ லெச்சமிந் நான்கிற்
கொழித்தகலங் காட்டாதார் சொற்கள்—பழிப்பி
னிரையாமா சேர்க்கு நெடுங்குன்ற நாட
உரையாமோ நூலிற்கு நன்கு.

(ப–ரை) நிரை – வரிசையாக, ஆமா – காட்டுப் பசுக்களை, சேர்க்கும் – சேர்ப்பிக்கும், நெடும் – நீண்ட, குன்றம் – மலையையும், நாட – நாட்டையுமுடைய பாண்டியனே!, நூலிற்கு – நூலுக்கு, பொழிப்பு – பொழிப்புரையும், அகலம் – விருத்தியுரையும், நுட்பம்- வினாவிடையும், நூலெச்சம் – வருவித்த வுரையும், இ நான்கின்– இந்த நான்குவகை உரைகளாலும், கொழித்து – ஆராய்ந்து, அக லம் காட்டாதார் – விரிவாக விளக்காதார், சொற்கள் – பழிப்பு, இல் – குற்றமில்லாத, நன்கு – நல்ல. உரை ஆமோ-உரையாகுமோ?

(க–ரை) பாண்டியனே! பொழிப்புரை, அகலவுரை, நுட்ப வுரை, வருவித்தவுரை ஆகிய இந் நான்காலு நூற்பொருளை விளக் காதார் சொல்லுரை நல்லுரை யாகாது.

(வி–ரை) சொற்கள் – எழுவாய், உரையாமோ – பயனிலை.

[இலக்கணக்கொத்து.]

"செய்வியென் வினையுட் செய்வினை சிலவே."

இவ்விதியால் சேர்ப்பிக்குங் குன்றமெனப் பிறவினையாகக் கொள்க என்று இப்பாடலை உதாரணங் கொடுத்தார்.

320 இற்பிறப் பில்லா ரெனைத்துநூல் கற்பினுஞ்
சொற்பிறரைக் காக்குங் கருவியரோ—விற்பிறந்த
நல்லறி வாளர் நவின்றநூ றேற்றுதார்
புல்லறிவு தாமறிவ தில்.

(ப—ரை) இல் பிறப்பு இல்லார் – நற்குடியிற் பிறவாதவர், எனைத்து நூல் கற்பினும் – எவ்வளவு நூலைக் கற்றாலும், பிறர் சொல் – பிறர் சொல்லுஞ் சொல்லை, காக்கும் – காப்பாற்றும், கருவியரோ – அறிவுடையவரோ?, இல் பிறந்த – நற்குடியிற் பிறந்த, நல் அறிவாளர் – நல்ல அறிவுடையார், நவின்ற – முன்னோர் சொன்ன, நூல் – நூலின் பொருளை, தேற்றுதார் – தெளியாதவர், புல் அறிவு – அற்பவறிவை, தாம் அறிவது இல் – அவர்தாமறிந்து கொள்வதில்லை.

(க—ரை) நற்குலத்திற் பிறவாதார் எவ்வளவு நூலைக் கற்றாலும் பிறர் சொல்லைக் காக்கும் அறிவினை யுடையவரல்லர்; நற்குலத்திற் பிறந்தவர் அறிவில்லார் புல்லறிவைத் தாங்கொள்வதிலர்.

(வி—ரை) இற் பிறப்பில்லார்-எழுவாய், கருவியரோ-பயனிலை. நல்லறிவாளர் – எழுவாய், அறிவதில் – பயனிலை. (க0)

அவையறிதல் முற்றிற்று.

# ஆறாவது பகையியல்.

[மனிதர்கட்கு உட்பகை போல நின்று அழிக்கத்தக்க புல்லறிவாண்மை முதலிய இழிகுணங்களைப்பற்றிக் கூறும் பிரிவு.]

---

## ௩௩-ஆம் அதிகாரம்-புல்லறிவாண்மை

[அஃதாவது-அற்பமான அறிவை யாளுந் தன்மையாம்.]

321 அருளி னறமுரைக்கு மன்புடையார் வாய்ச்சொற்
பொருளாகக் கொள்வர் புலவர்—பொருளல்லா
ஏழை யதனை யிகழ்ந்துரைக்கும் பாற்கூழை
மூழை சுவையுணரா தாங்கு.

(ப—ரை) புலவர் – அறிவுடையோர், அருளின் – கிருபையால், அறம் – தரும வழியை, உரைக்கும் – சொல்லும், அன்பு உடையார் – அன்புடையவர்கள், வாய் சொல் – வாயின் சொல்லை, பொருள் ஆக – நற் பொருளாக, கொள்வர் – கொள்ளுவார்கள்; பொருள் அல்லா – பொருளாகாத, ஏழை – அறிவிலான், அதனை – அச் சொல்லை, பால் கூழ் – பாற் சோற்றினது, சுவையை – ருசியை, மூழை – அகப்பை, உணராது ஆங்கு – அறியாததுபோல, இகழ்ந்து உரைக்கும் – இகழ்ந்து சொல்லுவான்.

(க—ரை) அறிவுடையோர், தருமவழியைச் சொல்லுவோர் சொல்லைப் பொருளாகக் கொள்வார்; அகப்பை பாற்சோற்றின் மதுர மறியாததுபோல, அறிவிலான் அச்சொல்லைக் கொள்ளான்.

(வி—ரை) புலவர் – எழுவாய், கொள்வர் – பயனிலை. ஏழை- எழுவாய், இகழ்ந்துரைக்கும் – பயனிலை, அதனை – செயப்படு பொருள். (க)

322 அவ்விய மில்லா ரறத்தா றுரைக்குங்காற்
செவ்விய ரல்லார் செவிகொடுத்துங் கேட்கலார்
கவ்வித்தோ றின்னுங் குணுங்கர்நாய் பாற்சோற்றின்
செவ்வி கொளறேற்றா தாங்கு.

(ப—ரை) தோல் – தோலை, கவ்வி – கடித்து, தின்னும் – தின்னும், குணுங்கர் – பறையருடைய, நாய் – நாயானது, பால் சோற்

றின் — பால் சோற்றினது, செவ்வி — சுவையை, கொளல் — கொள்ளுதல், தேற்றாது ஆங்கு — தெளியாததுபோலும், அவ்வியம் — பொறாமை, இல்லார் — இல்லாதவர், அறத்து ஆறு — தரும வழியை, உரைக்குங்கால் — சொல்லும்போது, செவ்வியர் அல்லார் — நல்லவரல்லாதவர், செவி கொடுத்தும் — காது கொடுத்தும், கேட்கலார் — கேட்கமாட்டார்.

(க—ரை) நல்லவர்கள் தரும வழியைச் சொல்லும்போது பொல்லாதவர்கள் அவற்றைக் காதுகொடுத்துங் கேளார்கள்.

(வி—ரை) செவ்வியரல்லார் — எழுவாய், கேட்கலார் — பயனிலை, அறத்தாறு — செயப்படுபொருள். (௨)

323 இமைக்கு மளவிற்றம் மின்னுயிர்போ மார்க்கம்
எனைத்தானுந் தாங்கண் டிருந்துந்—தினைத்துணையு
நன்றி புரிகல்லா நாணின் மடமாக்கள்
பொன்றிலென் பொன்றாக்கா லென்.

(ப—ரை) இமைக்கும் — விழிக்கும், அளவில் — அளவில், தம் — தமது, இன் உயிர் — இனிய வுயிரானது, போம் — போகும், மார்க்கம் — வழியை, எனைத்தானும் — எவ்வகையாலும், தாம் கண்டு இருந்தும் — தாம் அறிந்திருந்தும், தினை துணையும் — தினையளவும், நன்றி — தருமத்தை, புரிகல்லா — செய்யாத, நாண் இல் — வெட்கமில்லாத, மடம் மாக்கள் — அறிவில்லா மனிதர்கள், பொன்றில் என் — செத்தா லென்ன? பொன்றாக்கால் என் — வாழ்ந்தா லென்ன?

(க—ரை) தினையளவு தருமமுஞ் செய்யாத மனிதர்கள் இறந்தாலென்ன? இறவாதிருந்தா லென்ன. (௩)

(வி—ரை) மாக்கள் — எழுவாய், பொன்றிலென்: பொன்றாக்கா லென் — பயனிலை.

324 உளநாள் சிலவா லுயிர்க்கேம மின்றாற்
பலர்மன்னுந் தூற்றும் பழியாற்—பலருள்ளும்
கண்டாரோ டெல்லா நகாஅ தெவனொருவன்
தண்டித் தனிப்பகை கோள்.

(ப—ரை) உள நாள் — தான் வாழு நாட்கள், சில — சிலவாம்; உயிர்க்கு — தன் உயிர்க்கு, ஏமம் — காவல், இன்று — இல்லை; பலர் — பலரும், தூற்றும் — தூற்றத்தக்க, பழி — பழிச்சொற்கள், மன்னும் —

மிகுதியாம்; (இங்ஙனமாக) பலருள்ளும் — பலபேர்களுள்ளும், கண்டாரோடு எல்லாம் — கண்டவர்க ளெல்லாரோடும், நகாது — மகிழாது, ஒருவன் —, தனி — ஒன்றியாக விருந்து, தண்டி — வலிய, பகைபலர் பகையை, கோள் — கொள்ளுதல், எவன் — என்ன.

(க—ரை) ஒருவன் கண்டவருடனெல்லாம் (இனிமையோடும்) சிநேகஞ் செய்யாமல் தனித்துப் பகையைக் கொள்ளுவதென்னே.

(வி—ரை) ஒருவன் — எழுவாய், என்ன — பயனிலை. ஆல் மூன்றும் ஈற்றசை. (ச)

325 எய்தி யிருந்த வவைமுன்னர்ச் சென்றெள்ளி
வைதா னொருவ னொருவனை—வைய
வயப்பட்டான் வாளா விருப்பானேல் வைதான்
வியத்தக்கான் வாழு மெனின்.

(ப—ரை) எய்தி இருந்த — கூடியிருந்த, அவை முன்னர் — சபைக்கு முன்னே, சென்று — போய், ஒருவன் —, ஒருவனை — மற்றொருவனை, எள்ளி — இகழ்ந்து, வைதான் — வைதவன், வைய — அவன் வையத்தக்கதாக, வயப்பட்டான் — வையப்பட்டவன், வாளா — பேசாமல், இருப்பானேல் — இருப்பானானால், வைதான் — வைதவன், வாழும் எனின் — வாழ்வானாகில், விய தக்கான் — அதிசயப் படத்தக்கவன்.

(க—ரை) ஒருவன் மற்றொருவனை வைய, வையப்பட்டவன் பேசாதிருப்பானாகில் வைதவன் வாழ்வானேயாகில், அதிசயிக்கப் படத்தக்கவன்.

(வி—ரை) வைதான் — எழுவாய், வியத்தக்கான் — பயனிலை.()

326 மூப்புமேல் வாராமை முன்னே யறவினையை
யூக்கி யதன்கண் முயலாதான்—ஊக்கிப்
புறத்திரு போகென்னு மின்னாச்சொ லில்லுட்
டொழுத்தையாற் கூறப் படும்.

(ப—ரை) மூப்பு — விருத்தப்பிராயம், மேல் — மேலாக, வாராமை முன்னே — வரு முன்னே, அறம் — தருமத்தினது, வினையை — செய்கையை, ஊக்கி — மேற்கொண்டு, அதன்கண் — இளமையில், முயலாதான் — செய்யாதவன், இல்லுள் — வீட்டிலிருக்கிற, தொழுத்தையால் — வெள்ளாட்டியாலும், ஊக்கி — உறுதிகொண்டு, புறத்து-

வீட்டின் புறம்பே, இரு போகு என்னும் — இருபோ என்று சொல் லும், இன்னா சொல் — கொடுஞ் சொல், கூறப்படும் — சொல்லப் படுவான்.

(க—ரை) இளமையிலே தருமத்தைச் செய்யாதவன் வீட்டு வெள்ளாட்டியாலும் இகழப்படுவான்.

(வி—ரை) முயலாதான் — எழுவாய், படும் — பயனிலை. (௬)

327 தாமேயு மின்புறார் தக்கார்க்கு நன்றாற்றார்
ஏமஞ்சார் நன்னெறியுஞ் சேர்கலார்—தாமயங்கி
ஆக்கத்துட் டூங்கி யவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னார்.

(ப—ரை) புல் அறிவினார் - அறிவில்லார், தாமேயும் — தாங்களா கிலும், இன்பு உறார் — இன்ப மடையார்; தக்கார்க்கு — பெரியோர் க்கு, நன்று — நன்மையை, ஆற்றார் — செய்யார்; ஏமம் — தமக்குக் கோட்டையாக, சார் — அமைந்த, நல் நெறியும் — நல்ல வழியையும், சேர்கலார் — சேரார்: தாம் மயங்கி — தாங்க ளறிவு கெட்டு, ஆக்கத் துள் — செல்வத்தில், தூங்கி — தங்கி, அவத்தமே — பயனில்லாமல், வாழ்நாளை — ஆயுள்களை, போக்குவார் — நீக்குவார்.

(க—ரை) அறிவில்லார்: தாங்களு மின்பமடையார், பெரியோர் க்கு முதவி செய்யார், நல்வழியையு மடையார், செல்வத்திலே மகி ழ்ந்து வாழ்நாள் இழப்பர்.

(வி—ரை) புல்லறிவினார் — எழுவாய், போக்குவார் — பயனிலை, வாழ்நாளை — செயப்படுபொருள். (௭)

328 சிறுகாலை யேதமக்குச் செல்வுழி வல்சி [கிப்
இறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளார்—இறுகிறு
பின்னறிவா மென்றிருக்கும் பேதையார் கைகாட்டும்
பொன்னும் புளிவிளங்கா யாம்.

(ப—ரை) சிறு காலையே — இளமைப் பருவத்திலேயே, தமக்கு- தங்களுக்கு, செல் உழி — செல்லுமிடத்திற்கு, வல்சி — (தருமமா கிய) சோற்றை, இறுக இறுக — உறுதி பொருந்த, தோள் கோப்பு— தோட் சுமையாக, கொள்ளார் — கொள்ளாதவராய், இறுகி இறுகி— சிக்கெனப் பிடித்து, பின் அறிவாம் என்று — தருமத்தைப் பின் செய்வோம் என்று, இருக்கும் — எண்ணியிருக்கும், பேதையார்— அறிவில்லார், கை காட்டும் — கையாற் காட்டும், பொன்னும்—பொன்

முடிப்பும், புளி விள காய் – புளித்த விளாங்காய், ஆம் – இறக்குங் காலத்திலாகும்.

(க–ரை) இளவயதில் புண்ணியஞ் செய்யாது பின் செய்வோமென் றிருந்தவர் தாங்கள் இறக்கும்போது வாயடைத்து வைத்த பொருளைக் கையாற் காட்டுதல் அப் பொருள் 'புளித்த விளாங்கனி கேட்கிறார்' என்று பிறர் எண்ணும்படியாய்விடும்.

(வி–ரை) பொன் – எழுவாய், புளி: விளாங்காயாம் – பயனிலை.

329 வெறுமை யிடத்தும் விழுப்பிணிப் போழ்து
மறுமை மனத்தாரே யாகி—மறுமையை
யைந்தை யனைத்தானு மாற்றிய காலத்துச்
சிந்தியார் சிற்றறி வினார்.

(ப–ரை) சிறு அறிவினார் – அற்ப அறிவுடையோர், வெறுமை யிடத்தும் – வறுமையிடத்தும், விழு – சிறந்த, பிணி போழ்தும் – வியாதியிடத்தும், மறுமை – மறுபிறப்பிற்கு உறுதி செய்யும், மனத்தாரே ஆகி – மன முடையவராகி, ஆற்றிய காலத்து – செல்வம் வந்த காலத்து, ஐந்தை – கடுகு, அனைத்து ஆனும் – அளவாகிலும், மறுமையை – வருபிறப்பிற்கு உறுதியாந் தருமத்தை, சிந்தியார் – நினையார்.

(க–ரை) சிற்றறி வுடையார் செல்வம் அடைந்த காலத்தும் வருபிறப்பிற்கு உறுதியாகுந் தருமங்களைச் செய்ய நினையார்.

(வி–ரை) சிற்றறிவினார் – எழுவாய், சிந்தியார் – பயனிலை, மறுமை – செயப்படுபொருள். (கூ)

330 என்னைமற் றிவ்வுடம்பு பெற்று மறநினையார்
கொன்னே கழிப்பர்தம் வாழ்நாளை—அன்னோ
அளவிறந்த காதற்றம் மாருயி ரன்னார்க்
கொள விழைக்குங் கூற்றமுங் கண்டு.

(ப–ரை) அன்னோ – ஐயோ!, அளவு இறந்த – அளவு கடந்த, காதல் – ஆசையையுடைய, தம் – தமது, ஆர் – நிறைந்த, உயிர் அன்னார் – உயிருக்கு ஒப்பானவரை, கொள – கொண்டுபோக, இழைக்கும் – முயற்சி செய்யும், கூற்றம் – யமனது செயலை, கண்டும் – பார்த்திருந்தும், என்னே – இது என்ன அநீதி!, இ உடம்பு – இவ்வுடலை, பெற்றும் – பெற்றிருந்தும், அறம் – தருமத்தை, நினை

யார் — எண்ணாதவராய், கொன்னே — பயனில்லாமல், தம் — தம் முடைய, வாழ்நாளை — ஆயுள்களை, கழிப்பர் — போக்குவர்.

(க—ரை) ஐயோ! தமது உயிருக்கு ஒப்பானவரை யமன் கொண்டுபோகக் கண்டிருந்தும், பெறுதற்கரிய வுடலைப் பெற் றிருந்தும் தருமஞ் செய்யாது வீணாள் கழிப்ப ரறிவிலார்.

(வி—ரை) (அறிவிலார்) — தோன்றா எழுவாய், கழிப்பர் — பய னிலை, வாழ்நாளை — செயப்படுபொருள். என்னே அன்றோ — இரக் கக் குறிப்பு. மற்று — அசை. (௧0)

புல்லறிவாண்மை முற்றிற்று.

## ௩௪-ஆம் அதிகாரம் பேதைமை

[அஃதாவது-அறிவில்லாமையைச் சொல்லுதலாம்.]

331 கொலைஞ ருலையேற்றித் தீமடுப்ப வாமை
நிலையறியா தந்நீர் படிந்தாடி யற்றே
கொலைவல் பெருங்கூற்றங் கோட்பார்ப்ப வீண்டை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு.

(ப—ரை) கொலை — கொலை செய்யும், வல் — வலிய, பெருங் கூற்றம் — பெரிய யமன், கோள் — நாள், பார்ப்ப — பார்த்திருப்ப, ஈண்டை — இவ்விடத்து, வலையகத்து — சமுசார வலையில், செம் மாப்பார் — இறுமாந்திருப்பவர், மாண்பு — பெருமையானது, ஆமை-ஆமையை, கொலைஞர் — கொல்பவர், உலைஏற்றி — உலையிற்போட்டு, தீ மடுப்ப — தீ மூட்ட, ஆமை — ஆமையானது, நிலை யறியாது — தான் இறக்கு நிலை யறியாது, அ நீர் — அந்த நீரிலே, படிந்து — மூழ்கி, ஆடியற்று — விளையாடினாற் போலும்.

(க—ரை) இல்வாழக்கையி லிறுமாந்திருப்பவர் பெருமையானது, ஆமை தான் சாவதறியாமல் உலையிற் கூத்தாடினாற்போலும்.

(வி—ரை) மாண்பு — எழுவாய், ஆடியற்று — பயனிலை. ஏ — அசை.

332 பெருங்கட லாடிய் சென்றா ரொருங்குடன்
ஓசை யவிந்தபி னாடுது மென்றற்றா
லிற்செய் குறைவினை நீக்கி யறவினை
மற்றறிவா மென்றிருப்பார் மாண்பு.

(ப—ரை) இல் — வீட்டிற்கு, செய் — செய் காரியங்களை, குறை வினை நீக்கி — குறைவற முடித்து, அறவினை — தருமத்தை, மற்று — பின்பு, அறிவாம் — செய்வோம், என்று இருப்பார் — என்றிருப்பவர், மாண்பு — பெருமையானது, பெருங்கடல் — பெரியகடலில், ஆடிய- நீராடும்பொருட்டு, சென்றார் — போனவர், ஒருங்கு — ஒருமிக்க, உடன் — உடனே, ஓசை — சத்தம், அவிந்த பின் — அடங்கினபின்பு, ஆடுதும் — ஸ்நானஞ் செய்வோம், என்று அற்று — என்று சொன்னாற் போலும்.

(க—ரை) வீட்டுக் காரியங்களைக் குறைவற முடித்துப் பின்பு தருமஞ் செய்வோம் என்றிருப்பவர் பெருமை, கடலிலே முழுகச்

சென்றவர் அதன் ஓசை யடங்கின பின்பு மூழ்குவோமென்றாற் போலும்.

(வி—ரை) மாண்பு — எழுவாய், என்றற்று — பயனிலை. ஆல் — அசை. (௨)

333 குலந்தவங் கல்வி குடிமைமூப் பைந்தும்
விலங்காம லெய்தியக் கண்ணு—நலஞ்சான்ற
மையறு தொல்சீ ருலக மறியாமை
நெய்யிலாப் பாற்சோற்றி னேர்.

(ப—ரை) குலம் — குலமும், தவம் — தவமும், கல்வி — கல்வியும், குடிமை — குடிப்பிறப்பும், மூப்பு — முதுமையும், ஐந்தும் — (ஆகிய) இவ்வைந்தும், விலங்காமல் — தவறாமல், எய்தியக்கண்ணும் — ஒருவன் அடைந்தாலும், நலம் — நன்மை, சான்ற — மிகுந்த, மை அறு—குற்றமற்ற, தொல் — பழைய,சீர் — சிறப்பையுடைய, உலகம் — உலக நடையை, அறியாமை — அறியாதிருக்கை, நெய் இலா — நெய் யில்லாத, பால்சோற்றின் — பால்போன்ற சோற்றுக்கு, நேர் — ஒப்பாகும்.

(க—ரை) குலமும் தவமும், கல்வியும், குடிப்பிறப்பும், முதிர் வயதும் ஆகிய இவற்றை ஒருவன் அடைந்திருந்தாலும் உலக நடையை யறியாதிருத்தல் நெய் யில்லாத பால்போன்ற சோற்றுக் கொப்பாம்.

(வி—ரை) அறியாமை — எழுவாய், நேர் — பயனிலை. (௩)

334 கன்னனி நல்ல கடையாய மாக்களிற்
சொன்னனி தாமுணரா வாயினும்—இன்னினியே
நிற்ற லிருத்தல் கிடத்த லியங்குதலென்
றுற்றவர்க்குத் தாமுதவ லான்.

(ப—ரை) சொல் — சொற்களை, நனி — மிகவும், தாம் — கற்கள் தாம், உணரா ஆயினும் — அறியாமலிருப்பினும், இன்னினியே — இப்பொழுதே, நிற்றல் — நிற்றலுக்கும், இருத்தல் — இருத்தலுக்கும், கிடத்தல் — கிடத்தலுக்கும், இயங்குதல் — நடத்தலுக்கும், உற்றவர்க்கு — அடைந்தவர்க்கு, தாம் — கற்கள்தாம், உதவலான் — தொழில்களுக்கு உதவுதலால், கடை ஆய — கடையான, மாக்களில் — மனிதரைப் பார்க்கிலும், கல் — அந்தக் கற்கள், நனி — மிகவும், நல்ல — நல்லனவாம்.

(க—ரை) கற்களானவை சொல்லைக் கேளாவிடினு நிற்றலுக்கும், இருத்தலுக்கும், கிடத்தலுக்கும், நடத்தலுக்கும் உதவுதலால் கடையானவர்களைப் பார்க்கிலுங் கற்களே நல்லனவாம்.

(வி—ரை) கல் — எழுவாய், நல்ல — பயனிலை. என்று — இடைச்சொல். (௪)

335 பெறுவதொன் றின்றியும் பெற்றானே போலக்
கறுவுகொண் டேலாதார் மாட்டுங்—கறுவினாற்
கோத்தின்னா கூறி யுரையாக்காற் பேதைக்கு
நாத்தின்னு நல்ல சுனைத்து.

(ப—ரை) பெறுவது — தான் பெறுவது, ஒன்று இன்றியும்—ஒரு பொரு ளில்லையாயினும், பெற்றான்போல — சில பொருள் பெற்றவனைப்போல, கறுவு கொண்டு — கோபங்கொண்டு, ஏலாதார்மாட்டும் — இணங்காதாரிடத்தும், கறுவினால் — கோபத்தால், இன்னா — கொடுஞ்சொற்களை, கோத்து — சேர்த்து, கூறி உரையாக்கால்-மிகவுஞ் சொல்லாவிடில், பேதைக்கு — அறிவில்லாதவனுக்கு, நா — நாவை, நல்ல — நன்மையாகிய, சுனைத்து — தினவானது, தின்னும்-தின்னும்.

(க—ரை) அறிவில்லாதவன் கொடுஞ் சொற்களைச் சொல்லாவிட்டால் அவனது நாவைத் தினவு தின்னும்.

(வி—ரை) தினவு — எழுவாய், தின்னும் — பயனிலை, நாவை — செயப்படுபொருள். ஏ — அசை. (ரு)

336 தங்கண் மரபில்லார் பின்சென்று தாமவரை
யெங்கண் வணக்குது மென்பவர்—புன்கேண்மை
நற்றளிர்ப் புன்னை மலருங் கடற்சேர்ப்ப
கற்கிள்ளிக் கையிழந் தற்று.

(ப—ரை) நல்—நல்ல, தளிர்—தளிர்களையுடைய, புன்னை—புன்னை மரங்கள், மலரும் — அலரும், கடல் சேர்ப்ப — கடற்கரையையுடைய பாண்டியனே!, தம் கண் — தம்மிடத்து, மரபு — பொருத்தம், இல்லார் — இல்லாதவர்கள், பின் சென்று — பின்னே போய், தாம் அவரை — அவர்களை, எம்கண் — எம்மிடத்து, வணக்குதும் — வசப்படுத்துவோம், என்பவர் — என்பவர்களுடைய, புல் கேண்மை — அற்ப சிநேகச் செய்கை, கல் — கல்லை, கிள்ளி — கிள்ளி, கை— கையை, இழந்து அற்று — இழந்தாற்போலும்.

(க—ரை) பாண்டியனே! தமக்கு இணக்க மில்லாதவரைத் தம க்கு இணக்க மாக்குவோ மென்பவர்கள் சிநேகச் செய்கையானது கல்லேக் கிள்ளிக் கையை யிழந்தாற்போலும்.

(வி—ரை) புன்கேண்மை – எழுவாய், இழந்தற்று – பயனிலை, கை – செயப்படுபொருள். (௬)

337 ஆகா தெனினு மகத்துநெய் யுண்டாகிற்
போகா தெறும்பு புறஞ்சுற்றும்—யாதுங்
கொடாஅ ரெனினு முடையாரைப் பற்றி
விடாஅ ருலகத் தவர்.

(ப்—ரை) எறும்பு – எறும்புகள், ஆகாது எனினும் – தமக்கு உதவாதாயினும், அகத்து – ஒன்றனுள், நெய் உண்டாகில் – நெய் யுண்டானால், போகாது – (அதை) விட்டுப் போகாது, புறம் சுற்றும்– அதன் புறம்பாகச் சுற்றும்; (அதுபோல) உலகத்தவர் – உலகிலுள் ளோர், யாதும் – எதுவும், கொடார் எனினும் – கொடாராகிலும், உடையாரை—பொருளுடையாரை, பற்றி – பற்றிக்கொண்டு, விடார்– விட்டுப்போகார்.

(க—ரை) நெய்யுள்ளதை எறும்புகள் பற்றிச் சுற்றுதல்போலப், பொருளுள்ளவர்களே உலகத்தார் பற்றிச் சுற்றுவார்.

(வி—ரை) உலகத்தவர் – எழுவாய், விடார் – பயனிலை. (எ)

338 நல்லவை நாடொறு மெய்தா ரறஞ்செய்யார்
இல்லாதார்க் கியாதொன்று மீகலார்—எல்லா
மினியார்தோள் சேரா ரிசைபட வாழார்
முனியார்கொ லும்வாழு நாள்.

(ப—ரை) நாள் தொறும் – ஒவ்வொரு நாளும், நல்லவை – நல்ல போஜனங்களை, எய்தார் – அடையார்கள்; அறம் செய்யார் – தருமஞ் செய்யமாட்டார்கள்; இல்லாதார்க்கு – தரித்திரர்க்கு, யாது ஒன் றும் – யாதொருபொருளும், ஈகலார் – கொடார்கள்; எல்லாம்– எல்லா நலமுமுடைய, இனியார் தோள் – இனிய மாதர் தோள் களை, சேரார் – சேரமாட்டார்கள்; இசை பட – புகழுண்டாக, வாழார் – வாழமாட்டார்கள்; தாம் வாழும்நாள் – தாமும் உயிர்வாழ் நாள்களை, முனியார்கொல் – வெறுக்கமாட்டார்களோ.

(க—ரை) அறிவிலார் நல்லுணவை யுண்ணார்; தருமஞ் செய்யார்; வறியவர்க்குக் கொடார்; மாதரைப் புணரார்; கீர்த்தியாக வாழார்.

(வி—ரை) தாம் — எழுவாய், முனியார்கொல் — பயனிலை, வாழுநாள் — செயப்படுபொருள்.

[அகத்தியம்]

"அவரவ றவளித்தலா லறமெனப் படுமே." (அ)

339 விழைந்தொருவர் தம்மை வியப்ப வொருவர்
விழைந்திலே மென்றிருக்குங்கேண்மை-தழங்குகுரற்
பாய்திரைசூழ் வையம் பயப்பினு மின்னாதே
யாய்நல மில்லாதார் மாட்டு.

(ப—ரை) ஒருவர் தம்மை — ஒருவர் மற்றொருவர், விழைந்து — விரும்பி, வியப்ப — கொண்டாட, விழைந்திலேம் — விரும்பிலேம், என்று இருக்கும் — என்று நினைத்திருக்கும், ஆய் நலம் — ஆராய்ந்தறியு நன்மை, இல்லாதார்மாட்டு — இல்லாதவரிடத்து, கேண்மை — கொண்ட சிநேகம், தழங்கு — முழங்கும், குரல் — சத்தமுடைய, பாய் திரை — பாயுங் கடல், சூழ் வையம் — சூழ்ந்த வுலகத்தை, பயப்பினும் — கொடுத்தாலும், இன்னாதே — பொல்லாதேயாம்.

(க—ரை) ஒருவர் மற்றொருவரைப் புகழ அப்புகழ்ச்சியை விரும்பிலேம் என்றுநினைந்திருக்கும் நலமில்லாரிடத்திற் கொண்ட சிநேகமானது பொல்லாது.

(வி—ரை) கேண்மை — எழுவாய், இன்னாது — பயனிலை. (௯)

340 கற்றனவுங் கண்ணகன்ற சாயலு மிற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்துந் தானுரைப்பின்
மைத்துனர் பல்கி மருந்திற் றணியாத
பித்தனென் றெள்ளப் படும்.

(ப—ரை) கற்றனவும் — கற்ற கல்விகளையும், கண் அகன்ற — இடமகன்ற, சாயலும் — மேன்மையையும், இல் பிறப்பும் — குடிப்பிறப்பையும், பக்கத்தார் — அயலார், பாராட்ட — கொண்டாட, பாடு — பெருமை, எய்தும் — ஒருவனடைவான்; தான் உரைப்பின் — தான் சொன்னால், மைத்துனர் — நகைக்கு மைத்துனர், பல்கி — அதிகரித்து, மருந்தில் — ஒரு மருந்திலும், தணியாத — தீராத, பித்தன்

என்று – வெறி கொண்டவ னென்று, எள்ளப்படும் – இகழப்படு வான்.

(க–ரை) கல்வியையும், மேன்மையையும் குடிப்பிறப்பையும் பிறர் சொல்ல ஒருவன் பெருமை யடைவான். தான் சொன்னால் வெறியனென் றிகழப்படுவான்.

(வி–ரை) (ஒருவன்) – தோன்றா எழுவாய், எய்தும் – பயனிலை, பாடு – செயப்படுபொருள். தான் – எழுவாய், படும் – பயனிலை.

[அகத்தியம்]

"சாயன் மேன்மை பிறனா கும்மே."

பேதைமை முற்றிற்று.

## ௩௫-ஆம் அதிகாரம்-கீழ்மை

[அஃதாவது கீழ்மக்களைக் குறித்துச் சொல்லுதலாம்.]

341 கப்பி கடவதாக் காலைத்தன் வாய்ப்பெயினுங்
குப்பை கிளைப்போவாக் கோழிபோல்—மிக்க
கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினுங் கீழ்தன்
மனம்புரிந்த வாறே மிகும்.

(ப—ரை) காலை — உதயத்தில், கடவது ஆ — போதுமான அளவினதாக, கப்பி — தானியக் கப்பியை, தன் — தனது, வாய் — வாயில், பெயினும் — போட்டாலும், குப்பை — குப்பையை, கிளைப்பு — கிண்டுதலை, ஓவா — ஒழியாத, கோழி போல் — கோழியைப்போல, மிக்க — மிகுந்த, கனம் — மேன்மை, பொதிந்த — பொருந்திய, நூல் — தருமநூல்களை, விரித்துக் காட்டினும் — விரிவாக விரித்தாலும், கீழ் — கீழானவன், தன் — தனது, மனம் — மனது, புரிந்த — விரும்பியா, ஆறே — வழியே, மிகும் — போவான்.

(க—ரை) கோழிக்கு இரை போட்டாலும் அது குப்பையைச் சீக்கப்போகும்; அதுபோல, கீழ்மகனுக்குத் தருமநூற்பொருளை சசொன்னாலும் அவன் தன்மனம் போனவழியே போவான்.

(வி—ரை) கீழ் — எழுவாய், மிகும் — பயனிலை. (௧)

342 காழாய கொண்டு கசடற்றார் தஞ்சாரல்
தாழாது போவா மெனவுரைப்பிற்—கீழ்தான்
உறங்குவா மென்றெழுந்து போமாமஃ தன்றி
மறங்குமா மற்றொன் றுரைத்து.

(ப—ரை) காழ் ஆய — உறுதியாகிய நூல்களை, கொண்டு — கற்றுக்கொண்டு, கசடு — குற்றம், அற்றார் — அற்றவர், தம் — தமது, சாரல் — பக்கலில், தாழாது — தாமதியாமல், போவாம் என — போவோமென்று, உரைப்பின் — சொன்னால், கீழ் — கீழ்மகன், உறங்குவாம் என்று — நித்திரை செய்வோமென்று, எழுந்து — எழுந்திருந்து, போம் — போவான்; அஃது அன்றி — அஃதல்லாமல், மற்று ஒன்று — வேறொன்றை, உரைத்து — சொல்லி, மறங்கும் — மறுத்து நிற்பான்.

(க—ரை) 'குற்றமற்றவரிடத்திற் போகலாம்' வாவென்றால், கீழ்மகன், 'தூங்குவோ'ம் என்றும், இவ்வேளை நீங்குவோம்' என்றுஞ் சொல்லுவான்.

(வி—ரை) கீழ் — எழுவாய், மறங்கும் — பயனிலை. ஆம் — ஆம், தான் — அசைகள். (உ)

343 பெருநடை தாம்பெறினும் பெற்றி பிழையா
தொருநடைய ராகுவர் சான்றோர்—பெருநடை
பெற்றக் கடைத்தும் பிறங்கருவி நன்னாட
வற்றா மொருநடை கீழ்.

(ப—உரை) பிறங்கு — பிரகாசிக்கும், அருவி — யாற்றையும், நல்— நல்ல, நாட — நாட்டையுமுடைய பாண்டியனே! சான்றோர் — பெரி யோர்கள், பெரு நடை — பெருஞ் சிறப்பு, தாம் பெறினும் — தாங் கள் பெற்றாலும், பெற்றி — முன்னிருந்த பெருமையில்,பிழையாது- வேறுபடாது, ஒரு நடையர் ஆகுவர் — ஒரேதன்மை யுடையராவர்; கீழ் — கீழ்மகன், பெரு நடை — பெருஞ் சிறப்பை, பெற்றக்கடைத் தும் — பெற்றாலும், ஒரு நடை — வேறு நடை நடக்க, வற்று ஆம்— வல்லமை யுடையவனாவான்.

(க—ரை) பாண்டியனே! மேலோர் சிறப்பைப் பெற்றாலு முன் னிருந்த நிலையிலே நிற்பார்கள்; கீழானவன் சிறப்படைந்தால் வேறு நடை நடக்க வல்லவனாவான்.

(வி—ரை) சான்றோர் — எழுவாய், ஆகுவர் — பயனிலை. கீழ்— எழுவாய், வற்றாம் — பயனிலை. வல் + து = வற்று என்றாயிற்று. (௩)

344 தினையனைத்தே யாயினுஞ் செய்தநன் றுண்டாற்
பனையனைத்தா வுள்ளுவர் சான்றோர்—பனையனைத்
தென்றுஞ் செயினு மிலங்கருவி நன்னாட
நன்றில நன்றறியார் மாட்டு.

(ப—ரை) இலங்கு — பிரகாசிக்கும், அருவி — வையையாற்றை யும், நல் நாட — செந்தமிழ் நாட்டையுமுடைய பாண்டியனே!, சான்றோர் — மேலோர், தினை அனைத்து ஏ ஆயினும் — தினையளவே யாகிலும், செய்த — பிறர் செய்த, நன்றி — நன்மையானது, உண் டால் — உண்டானால், பனை அனைத்து ஆ — பனையளவாக, உள்ளு வர் — நினைப்பார்கள்; நன்றி அறியார்மாட்டு — நன்றி யறியாதவரிட த்து, பனை அனைத்து — பனையளவு நன்றியை, என்றும் — எக்காலத் தும், செயினும் — செய்தாலும், நன்று இல — நன்மை யில்லனவாம்.

(க—ரை) பாண்டியனே! மேலோர்க்கு ஒருநாள் தினையளவு உதவிசெய்தாற் பனையளவு உதவியாகக் கொள்வார்கள்; கீழோர்க்

குப் பலநாளும் பனையளவு உதவி செய்தாலும் தினையளவும் நினையார்கள்.

(வி—ரை) சான்றோர் — எழுவாய், உள்ளுவர் — பயனிலை. நன்று-எழுவாய், இல் — பயனிலை. (௪)

345 பொற்கலத் தூட்டிப் புறந்தரினு நாய்பிறர்
எச்சிற் கிமையாது பார்த்திருக்கும்—அச்சீர்
பெருமை யுடைத்தாக் கொளினுங்கீழ் செய்யுங்
கருமங்கள் வேறு படும்.

(ப—ரை) பொன் கலத்து — பொன்னலாகிய கலத்துள், ஊட்டி— உண்பித்து, புறந்தரினும் — காப்பாற்றினாலும், நாய் — நாயானது, பிறர் — அயலாருடைய, எச்சிற்கு — எச்சிற் சோற்றிற்கு, இமையாது- கண்ணிமையால், பார்த்திருக்கும் — பார்த்துக்கொண்டிருக்கும், அச் சீர் — அச் சிறப்பைப்போல, பெருமை உடைத்து ஆ — பெருமை யுடையவராக, கொளினும் — கொண்டாலும், கீழ் — கீழ்மக்கள், செய்யும் — செய்யும், கருமங்கள் — காரியங்கள், வேறுபடும் — வேறு பட்டிருக்கும்.

(க—ரை) நாயைப் பொற்கலத்திற் சோறிட்டு வளர்த்தாலும் அது பிறர் எச்சிற் சோற்றுக்குப் போகும்; அதுபோல, கீழ்மக்களை மேலாகக் கொண்டாலு மவர்கள் கீழான நிலையிற் போவார்கள்.

(க—ரை) கருமங்கள் — எழுவாய், வேறுபடும் — பயனிலை. (௫)

346 சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்
எங்காலுஞ் சொல்லார் மிகுதிச்சொல்—எங்காலு
முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை
யிந்திரனா வெண்ணி விடும்.

(ப—ரை) விழுமியோர் — பெரியோர், சக்கரம் செல்வம் — இந்திரசெல்வத்தை, பெறினும் — பெற்றாலும், மிகுதி சொல் — நெறி கடந்த சொல்லை, எ காலும் — எந்நாளும், சொல்லார் — சொல்லார்கள், கீழ் — கீழ்மகனானவன், முந்திரிமேல் — முந்திரிகைப் பொன்னுக்கு மேல், காணி — காணிப்பொன், மிகுவது எல் — மிகுமாகில், எ காலும் — எந்நாளும், தன்னை—, இந்திரன் ஆ — தேவேந்திரனாக, எண்ணிவிடும் — நினைத்துவிடுவான்.

(க—ரை) பெரியோர் பெருஞ் செல்வம் பெற்றாலும் வரம்பு கடந்துசெல்லார்; கீழ்மகன் முந்திரிகைபொன்னுக்கு மேல் காணி பொன்பெறுவானாகில் தன்னை இந்திரனாக எண்ணுவான்.

(வி—ரை) விழுமியோர் – எழுவாய், சொல்லார் – பயனிலை. மிகுதிச்சொல் – செயப்படுபொருள், கீழ் – எழுவாய்,எண்ணிவிடும்- பயனிலை, தன்னை – செயப்படுபொருள். (௬)

347 மைதீர் பசும்பொன்மேன் மாண்ட மணியழுத்திச்
செய்த தெனினுஞ் செருப்புத்தன் காற்கேயா
மெய்திய செல்வத்த ராயினுங் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்.

(ப—ரை) மை – குற்றம், தீர் – அற்ற, பசும் பொன் மேல் – பசுமையாகிய பொன்னின்மேல், மாண்ட – பெருமை பொருந்திய, மணி – நவமணிகளை, அழுத்தி – பதித்து, செய்தது எனினும் – செய்ததானாலும், செருப்பு – செருப்பானது, தன் – தன்னுடைய,காற்கே ஆம் – காலுக்கேயாம்; (அதுபோல).எய்திய – நிரம்பிய,செல்வத்தார் ஆயினும் – செல்வமுடையவ ரானாலும்,கீழ்களை – கீழ்மக்களை, செய் தொழிலால் – அவர்கள் செய்யுந் தொழிலால், காணப்படும்- அறியக்கூடும்.

(க—ரை) பொன்னின்மேல் நவமணி பதித்தாலுஞ் செருப்புத் தன் காலிற்குத்தானாகும்; அதுபோல, நிரம்பிய செல்வமுடையவ ராானாலும் செய்தொழிலினாலே கீழ்மக்களை யறியலாம்.

(வி—ரை) (ஒருவன்) – தோன்றா எழுவாய், படும் – பயனிலை, கீழ்களை – செயப்படுபொருள், படும் என்பது கூடுமென்னும் பொருள் கொள்ளும். (௭)

348 கடுக்கெனச் சொல்வற்றாங் கண்ணோட்ட மின்றா
மிடுக்கண் பிறர்மாட் டுவக்கும்—அடுத்தடுத்து
வேக முடைத்தாம் விறன்மலை நன்னாட
வேகுமா மெள்ளுமாங் கீழ்.

(ப—ரை) விறல் – பலம்பொருந்திய, மலை – மலையையும், நல்- நல்ல, நாட – நாட்டையுமுடைய பாண்டியனே!, கீழ் – கீழ்மகன், கடுக்கென – கடிய சொற்களை, சொல் – சொல்ல,வற்று ஆம் – வல்லவனாவான்; கண்ணோட்டம் – சிநேகம், இன்று ஆம் – இல்லாதவனாவான்; பிறர்மாட்டு – அயலாரிடத்து உண்டாகும், இடுக்கண்– துன்பத்திற்கு, உவக்கும் – மகிழ்ந்திருப்பான்; அடுத்து அடுத்து– மேலுமேலும், வேகம் உடைத்து ஆம் – கோபங் கொள்ளுவான்; ஏகும் – (கண்டவிடத்தும்) செல்லுவான்; எள்ளும் – (பிறரை) இகழுவான்.

(க—ரை) பாண்டியனே! கீழ்மகன் கடுஞ்சொல் சொல்லுவான்; சிநேகஞ் செய்யான்; பிறர் துன்பங் கண்டு மகிழ்வான்; கோபிப்பான், செல்லுவான், இகழுவான்.

(வி—ரை) கீழ்மகன் – எழுவாய், வற்றும், இன்றும், உவக்கும், உடைத்தாம், ஏகும், எள்ளும் – பயனிலை. ஆம் இரண்டும் அசைகள். (அ)

349 பழைய ரிவரென்று பன்னாட்பின் னிற்பின்
உழையினிய ராகுவர் சான்றோர்—விழையாதே
கள்ளுயிர்க்கு நெய்தற் கனைகடற் றண்சேர்ப்ப
எள்ளுவர் கீழா யவர்.

(ப—ரை) கள் – மதுவை, உயிர்க்கும் – பொழியும், நெய்தல்—நெய்தற்பூவையுடைய, கனை – சத்திக்கும், தண் – குளிர்ந்த, கடல் சேர்ப்ப – கடற்கரையையுடைய பாண்டியனே!, சான்றோர் – பெரியோர், உழை – தம்மிடத்து, பல் நாள் – பலநாளும், பின் – பின்னே, நிற்பின் – ஒருவ னின்றால், பழையார் – பழமையானவர், இவர் என்று – இவரென்று நினைத்து, இனியர் ஆகுவர் – இன்பமுடைய சிநேகராவர்; கீழ் ஆயவர் – கீழானவர், விழையாதே – இச்சியாமல், எள்ளுவர் – இகழ்வார்.

(க—ரை) பாண்டியனே! பெரியோர் தங்களை யடுத்தவர்களுக்குச் சிநேகமாவர்; சிறியோர் தங்களை யடுத்தவரை இச்சியா திகழ்வர்.

(வி—ரை) சான்றோர் – எழுவாய், ஆகுவர் – பயனிலை. கீழாயவர் – எழுவாய், எள்ளுவர் – பயனிலை. (க)

350 கொய்புற் கொடுத்துக் குறைத்தென்றுந் தீற்றினும்
வையம்பூண் கல்லா சிறுகுண்டை—ஐயகேள்
எய்திய செல்வத்தா ராயினுங் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்.

(ப—ரை) ஐய – பாண்டியனே!, கேள் – கேட்பாயாக, கொய்புல் – அறுக்கும் புல்லை, குறைத்து – அறுத்து, என்றும் – எப்பொழுதும், கொடுத்து – வாயிற் கொடுத்து, தீற்றினும் – ஊட்டினாலும், சிறு குண்டை – சிறிய எருதுகள், வையம் – இரதத்தை, பூண் கல்லா – பூணப்பட் டிழுக்காவாம்; (அதுபோல) எய்திய – மிகப் பொருந்திய, செல்வத்தார் ஆயினும் – செல்வமுடையவ ரானாலும்,

கீழ்களை - கீழ்மக்களை, செய் தொழிலால் - இவர்கள் செய்யுந் தொழிலால், காணப்படும் - அறியக்கூடும்

(க-ரை) பாண்டியனே! சிறிய எருதுகளுக்குப் புல்லறுத்து வாயி லூட்டினாலும் அவை இரத்தத்தை யிழுக்கமாட்டாவாம்; அது போல, நிரம்பிய செல்வமுடையவ ரானாலுஞ் செய்தொழிலிலே கீழ்மக்களை யறியலாம்.

(வி-ரை) (ஒருவன்)—தோன்றா எழுவாய், படும் - பயனிலை, கீழ் களை - செயப்படுபொருள், தீற்றல் உண்டல் இஃது தேசிகம். (௧0)

கீழ்மை முற்றிற்று.

# ௩௰௬-ஆம் அதிகாரம்-கயமை

[அஃதாவது கயவர்களி னியல்பைச் சொல்லுதலாம்.]

351 ஆர்த்த வறிவின ராண்டிளைய ராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்குப—மூத்தொறூஉந்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்
போத்தறார் புல்லறிவி னார்.

(ப—ரை) ஆர்த்த—(கல்வி கேள்விகளினால்) பிணிக்கப்பட்ட, அறிவினர்—அறிவினை யுடையவர், ஆண்டு—வயதால், இளையர் ஆயினும்—இளையராக விருந்தாலும், தம்மை—தங்களை, காத்து ஓம்பி—பாதுகாத்து, அடக்கும்—பொறிகளை யடக்குவார்கள்; புல் அறிவினார்—அறிவில்லாதவர், மூத்தொறும்—முதிர்ந்து வளருந் தோறும், தீ தொழிலிலே—தீமையாகிய தொழிலையே, கன்றி—நினைத்து,திரிதந்து—திரிந்து,எருவைபோல்—கொறுக்கைத்தண்டு போல், போத்து—உட்டுளைக் குற்றம், அறார்—நீங்கார்.

(க—ரை) அறிவுடையார் இளையராயினுங் குற்றம் வராமல் தங்களைக் காத்து நடப்பார்கள்;அறிவில்லார் முதிர் வயதுள்ளோ ராயினுங் குற்றஞ் செய்தலை விடார்கள்.

(வி—ரை) அறிவினவர்—எழுவாய், அடக்குப—பயனிலை, தம்மை—செயப்படுபொருள். புல்லறிவினார்—எழுவாய், அறார்—பயனிலை, போத்து—செயப்படுபொருள். பொத்து போத்தென நீண்டது. (க)

352 செழும்பெரும் பொய்கையுள் வாழினு மென்றும்
வழும்பறுக்க கில்லாவாந் தேரை—வழும்பில்சீர்
நூல்கற்றக் கண்ணு நுணுக்கமொன் றில்லாதார்
தேர்கிற்கும் பெற்றி யரிது.

(ப—ரை) தேரை—தவளைகள், செழும்—செழித்த, பெரும்—பெரிய, பொய்கையுள்—தடாகத்துள், என்றும்—எந்நாளும், வாழினும்—வாழ்ந்தாலும், வழும்பு—வழும்பென்னுங் குற்றத்தை,அறுக்க கில்லாவாம்—நீக்கமாட்டாவாம், (அதுபோல) வழும்பு—குற்றம், இல்—இல்லாத,சீர்—சிறப்பையுடைய,நூல்—நூல்களை, கற்றக்கண்ணும்—கற்றாலும்,நுணுக்கம்—நுட்பவறிவு,ஒன்றுஇல்லாதார்-க

மில்லாதவர், தேர்கிற்கும் – (உண்மைப் பொருள்) தெரிந்துகொள்ளும், பெற்றி – தன்மை, அரிது – அருமை.

(க–ரை) தவளைகள் பொய்கையுள் வாழ்ந்தாலும் வழும்பை நீக்கிக்கொள்ளாவாம்; அதுபோல, அறிவில்லாதார் நூல்களைக்கற்றாலும் அதன் பொருளை யறிந்துகொள்ளார்.

(வி–ரை) ஒன்றில்லாதார் – எழுவாய், அரிது – பயனிலை.

[அகத்தியம்.]

"தில்கில் லிரண்டு மெதிர்மறை யிடைச்சொல்." (உ)

353 கணமலை நன்னாட கண்ணின் றொருவர்
குணனேயுங் கூறற் கரிதாற்—குணனழுங்கக்
குற்ற முழைநின்று கூறுஞ் சிறியவர்கட்
கெற்றா லியன்றதோ நா.

(ப–ரை) கணம் மலை – கூட்டமாகிய மலைகளையும், நல் நாட – நல்ல நாட்டையுமுடைய பாண்டியனே!, கண் இன்று – முன்னின்று, ஒருவர் – ஒருவருடைய, குணன் எயும்–நற்குணத்தை யாகிலும், கூறற்கு – சொல்லுதற்கு, அரிது-அருமையாயிருக்க, குணன்-அவரது குணம், அழுங்க – கெட, குற்றம் – குற்றத்தை, உழை நின்று – அவரிடத்து நின்று, கூறும் – சொல்லும், சிறியவர்கட்கு– அறிவிலார்க்கு, நா – நாவானது, எற்றால் இயன்றதோ – எதினாற் செய்ததோ?

(க–ரை) பாண்டியனே! ஒருவரதுகுணத்தைப்புகழ்ந்து சொல்லுத லரிதாயிருக்க, அவர்கண் முன்னின்று இகழ்ந்து சொல்லுஞ் சிறியவர்கட்கு நா எதினாற் செய்ததோ?

(வி–ரை) நா – எழுவாய், எற்றாலியன்றதோ – பயனிலை. ஆல்- அசை. (௩)

354 கோடேந் தகலல்குற் பெண்டிர்தம் பெண்ணீர்மை
சேடியர் போலச் செயறேற்றார்—கூடிப்
புதுப்பெருக்கம் போலத்தம் பெண்ணீர்மை காட்டி
மதித்திறப்பர் மற்றை யவர்.

(ப–ரை) கோடு – இருகரை, ஏந்து – உயர்ந்து, அகல்-அகன்ற, அல்குல் – அல்குலையுடைய, பெண்டிர் – குலமாதர், தம் – தமது, பெண்ணீர்மை – பெண் தன்மையை, சேடியர்போல – தாதிகளைப்

போல் இருந்து, செயல் – அழகு செய்தலை, தேற்றார் – அறியார்; கூடி – சேர்ந்து, புது பெருக்கம்போல – புதிய வெள்ளம்போல, தம் – தம்முடைய, பெண்நீர்மை காட்டி – பெண் தன்மையைக் காட்டி, மற்றையவர் – பொதுமாதர், மதித்து – தம்மை மதித்து, இறப்பர் – நடப்பார்.

(க–ரை) குலமகளிர் தங்களை யலங்கரித்துக்கொள்ளார், விலை மகளிர் தங்களை யலங்கரித்துக்கொள்வார்கள்.

(வி–ரை) பெண்டிர் – எழுவாய், தேற்றார் – பயனிலை. மற்றையவர் – எழுவாய், இறப்பர் – பயனிலை. (ச)

355 தளிர்மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லா
வுளிநீரர் மாதோ கயவர்—அளிநீரார்க்
கென்னானுஞ் செய்யா ரெனைத்தானுஞ் செய்பவே
யின்னாங்கு செய்வார்ப் பெறின்.

(ப–ரை) கயவர் – கீழ்மக்கள், தளிர்மேலே – தளிரின்மேலே, நிற்பினும் – நின்றாலும், தட்டாமல் – அடியாமல், செல்லா – உள்ளிறங்காத, உளி நீரர் – உளிகளுக் கொப்பான குணமுடையராவார்; அளி நீரார்க்கு-கிருபைக்குண முடையார்க்கு, என் ஆனும்-யாதாகிலும், செய்யார் – உதவி செய்யார்; இன்னாங்கு – (தமக்கு) துன்பங்களை, செய்வார் – செய்பவர்களை, பெறின் – பெற்றால், எனைத்தானும் – யாதாகிலும் ஒருதவி, செய்ப – செய்வார்கள்.

(க–ரை) கீழ்மக்கள், கிருபையை யுடையோர்க்குக் கொடார்கள்; துன்பஞ் செய்பவர்களுக்குக் கொடுப்பார்கள்.

(வி–ரை) கயவர் – எழுவாய், செய்ய – பயனிலை, மாதோ, ஏ – அசைகள். (ரு)

356 மலைநல முள்ளுங் குறவன் பயந்த
விளைநில முள்ளு முழவன் சிறந்தொருவர்
செய்தநன் றுள்ளுவர் சான்றோர் கயந்தன்னை
வைததை யுள்ளி விடும்.

(ப–ரை) குறவன் – வேடன், மலை நலம் – மலையிலுள்ள நன்மைகளை, உள்ளும்-எண்ணுவான்; உழவன்-பயிர் செய்வோன், பயந்த – பயன் தந்த,விளை நிலம் – விளைநிலத்து நன்மைகளை,உள்ளும்–எண்ணுவான்; சான்றோர்-மேலோர், சிறந்த-சிறப்புடைய, ஒருவர்–

ஒருவர் – பிறர், செய்த நன்று – நன்மைகளை, சிறந்து – சிறப்பாக, உள்ளுவர் – எண்ணுவார்; கயம் – கீழ்மகன், தன்னை வைததை-ஒருவன் வைததை, உள்ளிவிடும் – எண்ணுவான்.

(க–ரை) வேடன், மலையின் பலனை யெண்ணுவான். உழுபவன், நிலத்தின் பலனை யெண்ணுவான். மேலோர், பிற ருதவிய பலனை யெண்ணுவார். கீழ்மகன், ஒருவன் வைததை யெண்ணுவான்.

(வி–ரை) கயம் – எழுவாய், உள்ளிவிடும் – பயனிலை, வைததை – செயப்படுபொருள். சிறந்த என்பதி னகரம் விகாரத்தாற் றொக்கது. (௬)

357 ஒருநன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர்—கயவர்க்
கெழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயின்
எழுநூறுந் தீதாய் விடும்.

(ப–ரை) சான்றோர் – மேலோர், ஒரு நன்றி செய்தவர்க்கு– ஒருதவி செய்தவர்களுக்கு, ஒன்றி – பொருந்தி, எழுந்த – உண்டாகிய, பிழை நூறும் – நூறு குற்றங்களையும், பொறுப்பர் – பொறுத்துக்கொள்வார்கள்; கயவர்க்கு – கீழ்மக்களுக்கு, எழுநூறு நன்றி– எழுநூறு நன்மைகளை, செய்து–பண்ணி, ஒன்று தீதுஆயின்-ஒன்று குற்றமாகில், எழுநூறும் – முன்செய்த எழுநூறு நன்மைகளும், தீதுஆய் விடும் – குற்றமாய்விடும்.

(க–ரை) மேலோர் தங்களுக்கு ஒரு நன்றி செய்பவர்களுக்கு உண்டான நூறு குற்றங்களையும் பொறுத்துக் கொள்ளுவார்கள்; கீழோர்க்கு எழுநூறு நன்றி செய்து ஒரு நன்றி குற்றமானால் முன் செய்த எழுநூறு நன்றியுங் குற்றமாய்விடும்.

(வி–ரை) சான்றோர்-எழுவாய், பொறுப்பர்-பயனிலை, பிழை– செயப்படுபொருள். நன்றி – எழுவாய், தீதாய்விடும் – பயனிலை.

358 ஏட்டைப் பருவத்து மிற்பிறந்தார் செய்வன
மோட்டிடத்துஞ் செய்யார் முழுமக்கள்—கோட்டை
வயிரஞ் செறிப்பினும் வாட்கண்ணாய் பன்றி
செயிர்வேழ மாகுத லின்று.

(ப–ரை) வாள் கண்ணாய் – வாள்போலுங் கண்களை யுடையவளே!, பன்றி – பன்றியானது, கோட்டு – கொம்பினிடத்து, ஐ–

அழகிய, வைரம் – வைரமானது, செறிப்பினும் – நெருங்கி யிருந்தாலும், செயிர் – கோபம் பொருந்திய, வேழம் ஆகுதல் – யானையாகுதல், இன்று – இல்லை; (அதுபோல) முழுமக்கள் – கீழ்மக்கள், எட்டைப் பருவத்தும் – தரித்திர காலத்தும், இல் பிறந்தார்– நற்குடியிற் பிறந்தார், செய்வன – செய் காரியங்களை, மோட்டிடத்தும் – செல்வத்தினிடத்தும், செய்யார் – செய்யார்கள்.

(க–ரை) கொம்பில் வைரமடைந்தாலும் பன்றியானது யானையாகாது; அதுபோல, மேலோர் வறுமையிற் செய் காரியங்களைக் கீழ்மக்கள் செல்வத்திடத்துஞ் செய்யார்கள்.

(வி–ரை) முழுமக்கள் – எழுவாய், செய்யார் – பயனிலை, செய்வன – செயப்படுபொருள். (அ)

359 இன்றாது மிந்நிலையே யாது மினிச்சிறிது
நின்றாது மென்று நினைத்திருந்—தொன்றி
யுரையின் மகிழ்ந்துதம் முள்ளம்வே றாகி
மரையிலையின் மாய்ந்தார் பலர்.

(ப–ரை) இன்று ஆதும் – செல்வம் பெறுவோம்; இ நிலையே– இப்பொழுதே, ஆதும் – பெறுவோம்; இனி – இனிமேல், சிறிது– சிறிது பொழுது, நின்று – கழிந்து, ஆதும் என்று – பெறுவோமென்று, நினைத்திருந்து – எண்ணியிருந்து, ஒன்றி – பொருந்தி, உரையின் மகிழ்ந்து – சொல்லால் மகிழ்ந்து, தம் உள்ளம் – தம்முடைய மனம், வேறாகி – வேறுபட்டு, மரையின் – தாமரை யிலைபோல், மாய்ந்தார் – இறந்தார், பலர் – அநேகர்.

(க–ரை) அனேகர் இன்று வாழ்வோம், இப்பொழுது வாழ்வோம், இனிச் சிலகாலம் சென்று வாழ்வோம் என்று நினைத்துச் சொல்லால் மகிழ்ந் திறந்தார்கள்.

(வி–ரை) பலர் – எழுவாய், மாய்ந்தார் – பயனிலை.

[நன்னூல்]

"ஒருமொழி மூவழி குறைதலு மனைத்தே"

இவ் விதியால் மரை – தாமரை வென்பதன் முதற் குறையாம். தாமரையிலையின் என்றதற்கு உரை மான்தின்ன இலை சீரணமானதுபோல எனினும் பொருந்தும். (கூ)

360 நீருட் பிறந்து நிறம்பசிய தாயினு
மீரங் கிடையகத் தில்லாகும்—ஓரும்

நிறைப்பெறுஞ் செல்வத்து நின்றக் கடைத்து
மறைப்பெருங்க லன்னா ருடைத்து.

(ப-ரை) நீருள்பிறந்தும் - நீரினிடத்திற் பிறந்தும், நிறம் பசியது ஆயினும் - நிறம் பசுமையாயிருந்தாலும், ஈரம் - ஈரமானது, கிடையகத்து - சடையினுள்ளே, இல்லாகும் - இல் ஆகும்; (அது போல) நிறை - நிறைந்த, பெரு செல்வத்து - பெரிய செல்வத்தில், நின்றக்கடைத்தும் - நின்றாலும், மறை - மறைக்கும், பெரு - பெரிய, கல் அன்னார் - கற்கொப்பானவரை, உடைத்து - உடையது (உலகம்.)

(க-ரை) சடை, நீரி லிருந்தாலும் அதனுள் ஈரமிராது; அது போல, நிறைசெல்வத் திருந்தாலும் உதவி செய்யாதாரை உலக முடையது.

(வி-ரை) உலகம் - எழுவாய், உடைத்து - பயனிலை, கல்லன்னார் - செயப்படுபொருள். ஒரும் - இடைச்சொல். (௧0)

கயமை முற்றிற்று.

---

பகையியல் முற்றிற்று.

# ஏழாவது—பன்னெறியியல்.

[அஃதாவது ஒன்றோடொன்று சம்பந்தமில்லாத
பலவகைப்பட்ட நீதிகளைச் சொல்லும்
இயல் என்று பொருள்.]

## ௩௭-ஆம் அதி. பன்னெறி

[அஃதாவது பல வழிகளைச் சொல்லுதலாம்.]

361 மழைதிளைக்கு மாடமாய் மாண்பமைந்த காப்பா
யிழைவிளக்கு நின்றிமைப்பி னென்னும்—விழைதக்க
மாண்ட மனையாளை யில்லாதா னில்லகங்
காண்டற் கரியதோர் காடு.

(ப—ரை) விழை தக்க—விரும்பத்தக்க, மாண்ட—நற்குண நற்செய்கையுடைய, மனையாளை—மனையவளை, இல்லாதான்—இல்லாதவனுடைய, இல்லகம்—வீடானது, மழை—மேகம், திளைக்கும்—தவழும், மாடமாய்—மாளிகையாய், மாண்பு—பெருமை, அமைந்த—நிரம்பிய, காப்பாய்—காவலாய், இழை—ஆபரணங்கள், விளக்கு—விளக்கைப்போல, நின்று இமைப்பின்—நின்று பிரகாசித்தால், என் ஆம்—என்ன பிரயோஜனம்? (அது) காண்டற்கு—பார்ப்பதற்கு, அரியது—கூடாத, ஓர் காடு—ஒரு காட்டுக்கு ஒப்பாம்.

(க—ரை) நற்குண நற்செய்கையுடைய மனையவளை இல்லாதவன் வீடானது எவ்வளவு சிறப்புடையதாயினுங் காட்டுக்கு ஒப்பாம்.

(வி—ரை) இல்லகம்—எழுவாய், காடுபோலும்—பயனில்லை. (௧)

362 வழுக்கெனைத்து மில்லாத வாள்வாய்க் கிடந்து
மிழுக்கினைத் தாம்பெறுவ ராயின்—இழுக்கெனைத்துஞ்
செய்குறும் பாணி சிறுதேயர் சின்மொழியார்
கையுறும் பாணி பெரிது.

(ப—ரை) வழுக்கு—தவறு, எனைத்தும்—எவ்வளவும், இல்லாத வாள்வாய்—வாள்வீரர் காவலிடத்து, கிடந்தும்—இருந்தும் இழுக்கினை—காவற் சோர்வை, தாம் பெறுவர் ஆயின்—தாங்கள் பெறு

வாராகில், இழுக்கு — அவ்விழுக்கை, எனைத்தும் — எவ்வளவாகிலும், செய்குறு — செய்யத் தொடங்காத, பாணி — காலம், சிறிது — சிறிதாம்; அ சில் மொழியார் — மெல்லிய சொற்களையுடைய அப்பெண்கள், கை — ஒழுக்கத்தை, உறு — பொருந்தாத, பாணி — காலமே, பெரிது — பெரிது.

(க—ரை) தவறென்றில்லாத வாள்வீரர் காவலுளிருந்துங் காவலின் சோர்வைச் சிறிது தாங்கள் பெறுவாராகில் எவ்வளவாகிலுங் குற்றஞ் செய்யாத காலஞ் சிறிதாம்; அப்பெண்கள் ஒழுக்கத்தை மேவாத காலம் பெரிதாம்.

(வி—ரை) பாணி — எழுவாய், சிறிது — பயனிலை. பாணி — எழுவாய், பெரிது — பயனிலை. ['பெறாராயின்' என்பதும் பாடபேதம்; இதற்கு, (கற்பொழுக்கத்தினின்று) தவறுதலைத் தாம் பெறாதவராயினும் என்பது பொருள்.] (௨)

363 எறியென் றெதிர்நிற்பாள் கூற்றஞ் சிறுகாலை
அட்டில் புகாதா ளரும்பிணி—அட்டதனை
யுண்டி யுதவாதா ளில்வாழ்பே யிம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை.

(ப—ரை) எறி என்று — அடியென்று, எதிர் நிற்பாள் — எதிரே நிற்பவள், கூற்றம் — இயமனுக்கு ஒப்பானவள்; சிறு காலை — உதய காலத்தில், அட்டில் — மடைப்பள்ளியில், புகாதாள் — நுழையாதவள், அரும்பிணி — அரிய நோவுக்கு ஒப்பானவள்; அட்டதனை - சமைத்ததை, உண்டி — உண்ணென்று, உதவாதாள் — கணவனுக்குக் கொடாதவள், இல் — வீட்டில், வாழ் — வாழ்கின்ற, பேய்-பேய்க்கு ஒப்பானவள்; இ மூவர் — இம் மூவரும், கொண்டானை-கொண்டவனை, கொல்லும் — கொல்லுகின்ற, படை — ஆயுதங்களுக் கொப்பாவார்.

(க—ரை) அடியென்று எதிர் நிற்பவள் யமனுக்கு ஒப்பானவள்; காலையில் சமையல் வீட்டுள் புகாதவள் நோவுக்கு ஒப்பானவள்; சமைத்ததைக் கணவனுக்கு இடாதவள் பேய்க்கு ஒப்பானவள்; இம் மூவரும் ஆயுதங்களுக்கு ஒப்பாவார்.

(வி—ரை) மூவர் — எழுவாய், ஒப்பர் — பயனிலை. (௩)

364 கடியெனக் கேட்டுங் கடியான் வெடிபட
வார்ப்பது கேட்டு மதுதெளியான்—பேர்த்துமோர்

இற்கொண் டினிதிருஉ மேமுறுத லென்பவே
கற்கொண் டெறியுந் தவறு.

(ப—ரை) கடி என — இல்வாழ்க்கையைக் கடியென்று, கேட்டும் — சொல்லக் கேட்டும், கடியான் — விடான்; வெடிபட — சத்தமுண்டாக, ஆர்ப்பது — பிணப்பறை யடிப்பதை, கேட்டும் — கேட்டும், அது தெளியான் — அதை யறியான்; பேர்த்தும் — மீளவும், ஓர் — ஒரு, இல் கொண்டு — மனைவியைக் கொண்டு, இனிது — இன்பமாக, இருஉம் — இருக்கும், ஏமுறுதல் — மயக்குதலை யுடையவனை, கல் கொண்டு — கல்லைக் கொண்டு, எறியும் — அடிக்கும், தவறு என்ப — குற்றஞ்செய்யும் வெறியனென்று சொல்லுவார் புலவர்.

(க—ரை) இல்வாழ்க்கையை விட்டுவிடெனக் கேட்டும் விடான்; பிணப்பறை யடிப்பதைக் கேட்டுந் தெளியான்; மீண்டும் விவாகம் பண்ணி இல்வாழ்க்கையில் மயக்க மடைபவனைப் பித்தனென்று சொல்லுவர் பெரியோர்.

(வி—ரை) (அறிவுடையோர்) — தோன்றா எழுவாய், என்ப—பயனிலை. (ச)

365 தலையே தவமுயன்று வாழ்த லொருவர்க்
கிடையே யினியார்கட் டங்கல்—கடையே
புணராதென் றெண்ணிப் பொருணசையாற் றம்மை
யுணரார்பின் சென்று நிலை.

(ப—ரை) ஒருவர்க்கு — ஒருவருக்கு, தவம் — தவத்திலே, முயன்று — முயற்சிசெய்து, வாழ்தல் — வாழுதல், தலையே — உத்தமமே; இனியார்கள் — இனிய மகளிரிடத்து, தங்கல் — தங்கி வாழ்தல், இடையே — மத்திமமே; புணராது என்று — பொருள் பொருந்தாதென்று, எண்ணி — நினைத்து, பொருள் — திரவியத்தின், நசையால் — இச்சையால், தம்மை—, உணரார்—அறியாதார், பின் சென்று— பின்னேபோய், நிலை — நிற்கின்ற நிலையானது, கடையே — அதமமாம்.

(க—ரை) ஒருவர்க்குத் தவஞ்செய்து வாழ்த லுத்தமம்; பெண்களிடத்து வாழ்தல் மத்திமம்; பொருளாசையாற் பிறரிடத்திற் சேவித்தல் அதமம்.

(வி—ரை) தலை, இடை, கடை — எழுவாய்; வாழ்தல், தங்கல், நிலை — பயனிலை. (ரு)

366 கல்லாங் கழிப்பர் தலையாயார் நல்லவை
துவ்வாங் கழிப்ப ரிடைகள் கடைகள்
இனிதுண்ணே மாரப் பெறேம்யா மென்னு
முனிவினாற் கண்பா டிலர்.

(ப—ரை) தலையாயார் — உத்தமர்கள், கல்லா — பல ஞான நூல்களைக் கற்று, கழிப்பர் — காலங் கழிப்பார்கள்; இடைகள் — மத்திமர்கள், நல்லவை — நல்ல வுணவுகளை, துவ்வா — உண்டு, கழிப்பர்— காலங் கழிப்பார்கள்; கடைகள் — அதமர்கள், இனிது — இன்பமாக, உண்ணேம் — உண்டிலேம், ஆர — நிறைய, பெறேம் — செல்வம் பெற்றிலேம், யாம் என்னும் — யாமென்று நினைக்கும், முனிவினால்—வெறுப்பால், கண்பாடு இலர் — (இரவிலும்) நித்திரை யின்றி வருந்துவார்கள்.

(க—ரை) உத்தமர்கள், கற்றுப் பொழுது போக்குவார்கள்; மத்திமர்கள், உண்டு பொழுது போக்குவார்கள்; அதமர், பொருளில்லை யென்று வெறுப்பாற் பொழுது போக்குவார்கள்.

(வி—ரை) தலையாயார், இடைகள், கடைகள் — எழுவாய்: கழிப்பர், கழிப்பர், இலர் — பயனிலை. (சு)

367 செந்நெல்லா லாய செழுமுளை மற்றுமச்
செந்நெல்லே யாகி விளைதலால்—அந்நெல்
வயனிறையக் காய்க்கும் வளவய லூர
மகனறிவு தந்தை யறிவு.

(ப—ரை) செந்நெல்லால் — செந்நெல்லினால், ஆய — உண்டாகிய, செழுமுளை — செழித்த முளை, மற்றும் — பின்னும், அ செந்நெல்லே ஆகி — அந்தச் செந்நெல்லேயாகி, விளைதலால் — விளைகின்றதால், அ நெல் — அந்தச் செந்நெல், வயல் நிறைய — வயல் முழுவதும், காய்க்கும் — விளைகின்ற, வளம் — வளப்பமுடைய, வயல்— கழனி சூழ்ந்த, ஊர — மருதநிலத்தையுடைய பாண்டியனே! தந்தை அறிவு — பிதாவின் அறிவே, மகன் அறிவு — பிள்ளை யறிவு.

(க—ரை) பாண்டியனே! பிதாவுக்குள்ள அறிவே பிள்ளைக்கு அறிவாம்.

(வி—ரை) தந்தையறிவு — எழுவாய், மகனறிவு — பயனிலை. (எ)

368 உடைப்பெருஞ் செல்வருஞ் சான்றோருங் கெட்டுப்
புடைப்பெண்டிர் மக்களுங் கீழும் பெருகிக்

கடைக்கா றலைக்கண்ண தாகிக் குடைக்கால்போற்
கீழ்மேலாய் நிற்கு முலகு.

(ப—ரை) உடை — பொருளுடைய, பெருஞ் செல்வரும் — மிக்க செல்வரும், சான்றோரும் — பெரியோரும், கெட்டு — (தங்கள் நிலைமை) அழிந்து, புடை பெண்டிர் — வைப்பாட்டிகளுடைய, மக்களும் — பிள்ளைகளும், கீழும் — கீழானவர்களும், பெருகி — பெருத்து, கடைக்கால் — கடைபிடித்தது, தலைக்கண்ணது ஆகி — முதலிடத்ததாகி, குடைக்கால்போல் — குடையினுடைய கால்போல, கீழ் — கீழானது, மேலாய் நிற்கும் — மேலானதாய் நிற்கும், உலகு — இவ்வுலகம்.

(க—ரை) செல்வர்களும் பெரியோர்களுங் கெட்டு, வைப்பாட்டி பிள்ளைகளுங் கீழ்மக்களும் பெருத்துக், குடையின் காலைப் போல முடி யடியாகி அடி முடியாகிக் கீழ்மேலா யிருக்கும் உலகு.

(வி—ரை) உலகு — எழுவாய், நிற்கும் — பயனிலை. (அ)

369 இனியார்தந் நெஞ்சத்து நோயுரைப்ப வந்நோய்
தணிபாத வுள்ள முடையார்—மணிவரன்றி
வீழு மருவி விறன்மலை நன்னாட
வாழ்வின் வரைபாய்த னன்று.

(ப—ரை) மணி வரன்றி — மணிகளை வாரிக்கொண்டு, வீழும் அருவி — விழுகின்ற யாற்றையும், விறல் — பலம் பொருந்திய, மலை — மலையையும், நல் நாட — நல்ல நாட்டையுமுடைய பாண்டியனே! இனியார் — இனிய சிநேகிதர், தம் — தம்முடைய, நெஞ்சத்து — மனத்திலுள்ள, நோய் — துன்பத்தை, உரைப்ப — எடுத்துக்கூறிய பிறகும், அ நோய் — அத் துன்பத்தை, தணியாத — மாற்றாத, உள்ளம் உடையார் — மனமுடையவர், வாழ்வின் — வாழ்வதிலும், வரை பாய்தல் — மலையிலேறி வீழ்தல், நன்று — அல்லது.

(க—ரை) பாண்டியனே! சிநேகர் துன்பத்தை நீக்காதவர்கள் வாழுகிறதிலு மலைமேலேறி வீழ்ந்திறத்தலே நல்லது.

(வி—ரை) வரை பாய்தல் — எழுவாய், நன்று — பயனிலை. (கூ)

370 புதுப்புனலும் பூங்குழையார் நட்பு மிரண்டும்
விதுப்பற நாடின் வேறல்ல—புதுப்புனலும்

மாரி யறவே யறுமே யவரன்பும்
வாரி யறவே யறும்.

(ப—ரை) புது புனலும் — புதிய நீரும், பூ குழையார் — அழகிய குண்டலத்தையுடைய வேசையர்களது, நட்பும் — சிநேகமும், இர ண்டும் — இவ்விரண்டும், விதுப்பு அற — மயக்கமற, நாடின் — ஆரா யில், வேறு அல்ல — வேறுபா டில்லை; (எவ்வாறெனின்) புது புன லும் — புதிய நீரும், மாரி அறமே — மழை நீங்கவே, அறும் — அற்றுப் போம், அவர் அன்பும் — அவ்வேசையரது அன்பும், வாரி அறவே— பொருள் வரவு நீங்கவே, அறும் — அற்றுப்போம்.

(க—ரை) புதுவெள்ளமும் வேசையர் நட்பும் ஒன்றாகும், மழை யில்லாவிடில் புது வெள்ள மில்லை; பொரு ளில்லாவிடில் வேசைய ரன்பு இல்லை.

(வி—ரை) அன்பு - எழுவாய், அறும் — பயனிலை. (௧0)

பன்னெறி முற்றிற்று.

---

இரண்டாவது பொருட்பால்
முற்றுப்பெற்றது.

---

# மூன்றாவது-காமத்துப்பால்

[அஃதாவது-பொருளைத் துணைக்காரணமாக வுடையதாய் இம்மை யின்பத்தை மாத்திரமே தரும் தன்மையை யுடைய காமத்தைக் கூறும் பாகமாம்.]

# முதலாவது-இன்பதுன்பவியல்

[அஃதாவது-ஒருசார் இன்பத்தையும், ஒருசார் துன்பத்தையும் தருவதாகிய காமத்தின் தன்மையைக் கூறும் பிரிவு.]

## ௩௮-ஆம் அதிகாரம்-பொதுமகளிர்

[அஃதாவது-யாவர்க்கும் பொதுவாகிய வேசையர் தன்மையைச் சொல்லுதலாம்.]

371 விளக்கொளியும் வேசையர் நட்பு மிரண்டுந்
துளக்கற நாடின் வேறல்ல—விளக்கொளியு
நெய்யற்ற கண்ணே யறுமே யவரன்புங்
கையற்ற கண்ணே யறும்.

(ப—ரை) விளக்கு ஒளியும் – விளக்கினது பிரகாசமும், வேசையர் நட்பும் – வேசையருடைய சிநேகமும், இரண்டும் – இவ்விரண்டும், துளக்கு அற – குற்றமற, நாடின் – ஆராயில், வேறு அல்ல – வேறு பாடில்லை, (எவ்வாறெனின்), நெய் அற்ற கண்ணே – தைலம் வற்றியபொழுதே, விளக்கு – விளக்கினுடைய, ஒளியும் – பிரகாசமும், அறும் – அற்றுப்போம்; (அதுபோல) அவர் அன்பும் – அவ்வேசைய ரன்பும், கை அற்ற கண்ணே – கைப்பொரு ளற்ற பொழுதே, அறும் – அற்றுப்போம்.

(க—ரை) தைலம் வற்றியபொழுது விளக்கினொளி யற்றுப் போம்; (அதுபோல) கைப்பொரு ளற்றபொழுது வேசையர் நட்பு அற்றுப்போம்.

(வி—ரை) நட்பு – எழுவாய், அறும் – பயனிலை. ஏ –, உம் – அசைகள். (க)

372 அங்கோட் டகலல்கு லாயிழையா ணம்மொடு
செங்கோடு பாய்துமே யென்றாண்மற்-செங்கோட்டின்
மேற்காண மின்மையான் மேவா தொழிந்தாளே
காற்கானோய் காட்டிக் கலுழ்ந்து.

(ப–ரை) அம் – அழகிய, கோடு – பக்கம்,அகல் – அகன்ற,அல்குல் – அல்குலையுடைய, ஆய் – ஆய்ந்த, இழையாள் – ஆபரணங்களைத் தரித்தவளுமான பொதுமகள், நம்மொடு – நம்முடன், செம்கோடு – செவ்விய மலைச்சிகரத்தின் மேல், பாய்தும் – எறிவிழுவோம், என்றாள் – என்று சொன்னவள், செம் கோட்டின்மேல்– செவ்விய மலைச் சிகரத்தின்மேல் எறி விழுதற்கு, காணம் – (எம்மிடத்தில்) பொருள், இன்மையால் – இல்லாமையால், கால் – தன் கால்களுக்கு,கால் – வாதத்தினால் வரும், நோய் – நோயை, காட்டி- காண்பித்து, கலுழ்ந்து – அழுது, மேவாது – உடன் வராது, ஒழிந்தாள் – நீங்கினாள்.

(க–ரை) அழகிய அல்குலையுடையவள் நம்முடன் மலைமேலேறி விழுவோமென்று சொன்னாள். பொருளில்லாமையால் மலைமேலேறி விழுதற்கு நம்முடன் வாராதிருந்தாள்.

(வி–ரை) ஆயிழையாள் – எழுவாய், ஒழிந்தாள் – பயனிலை. ஏ, மன் – அசை. (௨)

373 அங்கண் விசும்பி னமரர் தொழப்படுஞ்
செங்கண்மா லாயினு மாகமன்—தங்கைக்
கொடுப்பதொன் றில்லாரைக் கொய்தளி ரன்னார்
விடுப்பர்தங் கையாற் றொழுது.

(ப–ரை) கொய் – கொய்யும், தளிர் அன்னார் – தளிர்போலு மேனியையுடைய வேசையர், அம் – அழகிய, கண் – இடமகன்ற, விசும்பின் – சுவர்க்கத்தில், அமரர் – தேவர்களால், தொழப்படும்– வணங்கப்படும், செம் கண் – சிவந்த கண்களையுடைய, மால் ஆயினும் – இந்திரனே யானாலும், ஆக – ஆகக்கடவது,தம் கை – தமது கையில், கொடுப்பது – கொடுப்பதற்கு, ஒன்று – ஒருபொருளும், இல்லாரை – இல்லாதவரை, தம் கையால் தொழுது – தங்கையாற் கும்பிட்டு, விடுப்பர் – விட்டுவிடுவர்.

(க–ரை) வேசையர்கள், இந்திரனாகிலும் கைப்பொருளில்லாரை விட்டுவிடுவர்.

(வி—ரை) தளிரன்னார் — எழுவாய், விடுப்பர் — பயனிலை, இல்லாரை — செயப்படுபொருள். மன் — ஒழிபிசை. (ங)

374 ஆணமில் னெஞ்சத் தணிநீலக் கண்ணார்க்குங்
காணமில் லாதார் கடுவனையர்—காணவே
செக்கூர்ந்து கொண்டாருஞ் செய்த பொருளுடையார்
அக்கார மன்னா ரவர்க்கு.

(ப—ரை) ஆணம் — அன்பு, இல் — இல்லாத, நெஞ்சத்து — மனதையும், அணி — அழகிய, நீலம் — நீலோற்பலம்போலும், கண்ணார்க்கு — கண்களையுமுடைய வேசையர்க்கு, காணம் — பொருள், இல்லாதார் — இல்லாதவர்கள், கடு அனையர் — விஷத்துக் கொப்பானவராவர்; காணவே — யாருங் காண, செக்கு — செக்கை, ஊர்ந்து — செலுத்தி, கொண்டாரும் — கொண்டவரும், செய்த — தேடிய, பொருள் உடையார் — திரவிய முடையவர், அவர்க்கு — அவ்வேசையர்க்கு, அக்காரம் அன்னார் — சருக்கரைக்கு ஒப்பாவார்.

(க—ரை) வேசையர்க்குப் பொருளில்லாதார் விஷத்துக்கு ஒப்பாவார். பொருளுள்ளவர் அசுத்தராகிலும் அவ் வேசையர்க்குச சருக்கரைக்கு ஒப்பாவார்.

(வி—ரை.) இல்லார் — எழுவாய், அனையர் — பயனிலை, கடு— செயப்படுபொருள். உடையார் — எழுவாய், அன்னார் — பயனிலை, அக்காரம் — செயப்படுபொருள். (ச)

375 பாம்பிற் கொருதலை காட்டி யொருதலை
தேம்படு தெண்கயத்து மீன்காட்டு—மாங்கு
மலங்கன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்
விலங்கன்ன வெள்ளறி வினார்.

(ப—ரை) பாம்பிற்கு — (தன்னைப் பிடிக்க வரும்) பாம்பிற்கு, ஒரு தலை — ஒரு புறத்தை, காட்டி — காண்பித்து, ஒரு தலை — மற்றொரு புறத்தை, தேம் படு — தேனுண்டாகு மலர் பொருந்திய, தெள் — தெளிந்த, கயத்து — தடாகத்தில், மீன் — மீனுக்கு, காட்டும் — காண்பிக்கும், மலங்கு அன்ன — விலாங்கு மீனை யொத்த, செய்கை — செய்கையினையுடைய, மகளிர் — வேசையர், தோள்— தோள்களை, விலங்கு அன்ன — மிருகங்களை யொத்த, வெள் அறிவினார் — வெள்ளறிவுடையார், சேர்வார் — அணைவார்.

(க—ரை) அறிவில்லார் விலாங்கு மீனுக்கு ஒப்பாகிய செய்கையையுடைய வேசையரைச் சேர்வார்கள்.

(வி—ரை) வெள்ளறிவினர் — எழுவாய், சேர்வர் — பயனிலை, தோள் — செயப்படுபொருள். ஆங்கு — அசை. (ரு)

376 பொத்தநூற் கல்லும் புணர்பிரியா வன்றிலும்போல்
நித்தலு நம்மைப் பிரியல மென்றுரைத்த
பொற்றொடியும் போர்த்தகர்க்கோ டாயினாணன்னெஞ்
நிற்றியோ போதியோ நீ. [சே

(ப—ரை) நல் நெஞ்சே — நல்ல மனமே!, நூல் — நூலிற் கோக்கப்பட்ட, பொத்த — துளைத்த, கல்லும் — இரத்தினத்தையும், புணர்பிரியா — இணை பிரியாத, அன்றிலும்போல் — அன்றிற் பறவையும் போல, நித்தலும் — எந்நாளும், நம்மை பிரியலம் என்று — பிரியோமென்று, உரைத்த — சொன்ன, பொன் தொடியும் — பொன் வளையலையுடைய வேசையும், போர் தகர் — போர் செய்யும் ஆட்டுக்கடாவின், கோடு ஆயினாள் — கொம்புபோ லாயினாள்; நீ நிற்றியோ—என்னிடத்து நிற்கிறாயோ? (அல்லது) போதியோ — அவளிடத்திற் போகிறாயோ?

(க—ரை) மனமே! மணியும் நூலும் போலும், ஆணன்றிலும் பெண்ணன்றிலும் போலும், எந்நாளு நம்மைப் பிரியோமென்று சொன்ன வேசையும் பகையானாள்; நீ என்னிடத் திருக்கிறாயோ? அல்லது அவளிடத்திற் போகிறாயோ?

(வி—ரை) நீ — எழுவாய், நிற்றியோ, போதியோ — பயனிலை. ()

377 ஆமாபோ னக்கி யவர்கைப் பொருள்கொண்டு
சேமாபோற் குப்புறூஉஞ் சில்லைக்க ணன்பினை
ஏமாந் தெமதென் றிருந்தார் பெறுபவே
தாமாம் பலரா னகை.

(ப—ரை) ஆமா போல் — காட்டுப்பசுவைப்போல, நக்கி — இன்புற நக்கி, அவர் கை — அவர் கையிலிருக்கும், பொருள் கொண்டு— பொருள்களைக் கைக்கொண்டு, சேமாபோல — இடபமாகிய மிருகம் போல, குப்புறூஉம் — குதித்தோடும், சில்லைக்கண் — காமியாகிய வேசையிடத்து, அன்பினை — அன்பை, ஏமாந்து — மெய்யென் றேமாந்து, எமது என்று இருந்தார் — எம்முடையதென்றிருந்தவர்,

தாம் — தாங்கள், பலரால் — அனேகரால், நகை — இகழ்ச்சியை, பெறுப — பெறுவார்கள்.

(க—ரை) காட்டுப் பசுவைப்போல இன்புற நக்கிப் பொருளைக் கைக்கொள்ளும் வேசையரன்பை மெய்யென் றிருந்தவர் பலரா லிகழச்சி பெறுவர்.

(வி—ரை) இருந்தவர் — எழுவாய், பெறுப — பயனிலை, நகை- செயப்படுபொருள். ஆம் — அசை. (எ)

378 ஏமாந்த போழ்தி னினியார்போ னின்றாய்த்
தாமார்ந்த போதே தகர்க்கோடா—மானோக்கிற்
றந்நெறிப் பெண்டிர் தடமுலை சேராரே
செந்நெறிச் சேர்து மென்பார்.

(ப—ரை) செம் நெறி — செவ்வையான வழியில், சேர்தும் என்பார் — அடைவோமென்று சொல்லுவோர், ஏமாந்த போழ்தின்- காமுகர் பொருளேமாந்தகாலத்து, இனியார் போன்று — அவர்க்கு இன்பமுடையார்போலாகி, தாம் ஆர்ந்த போது — அவர் பொருளில் லாது இச்சித்தகாலத்து, இன்னார் ஆய் — சத்துருவாய், தகர் கோடு ஆம் — ஆட்டுக்கடாவின் கொம்புபோலாகும், மான் நோக்கின்-மான் போலும் பார்வையை யுடைய, தம்நெறி — தமது கள்ள வழியிலிருக்கும், பெண்டிர் — வேசையர்களுடைய, தட முலை — பருத்த முலையினிடத்து, சேரார் — அணையார்.

(க—ரை) நல்வழிச சேர்வோ மென்பவர்கள், காமுகர் பொருள் கொடுக்குங் காலத்து நேசமாகவும், கொடாக் காலத்துப் பகையாகவு மிருக்கும் வேசையரைச சேரார்கள்.

(வி—ரை) என்பர் — எழுவாய், சேரார் — பயனிலை, முலை — செயப்படுபொருள். ஏ — அசை. (அ)

379 ஊறுசெய் நெஞ்சந்தம் முள்ளடக்கி யொண்ணுதலார்
தேற மொழிந்த மொழிகேட்டுத்—தேறி
எமரென்று கொள்வாரும் கொள்பவே யார்க்குந்
தமரல்லர் தம்முடம்பி னார்.

(ப—ரை) ஒள் நுதலார் — ஒளி பொருந்திய நெற்றியையுடையவர், ஊறு — வருத்தம், செய் — செய்யும், நெஞ்சம் — மனதை, தம் உள் அடக்கி — தங்களுக்குள்ளடக்கி, தேற — தெளிய, மொழிந்த—

சொன்ன, மொழி – சொல்லை, கேட்டு—. தேறி – அறிந்து, எமர் என்று – எம்முடையவ ரென்று, கொள்வாரும் – கொள்பவரும், கொள்ப – கொள்ளுவர்: (அந்தப் பொதுமகளிர்), யார்க்கும் – எவர்க்கும், தமர் அல்லர் – சுற்றத்தா ரல்லர்; தம் உடம்பினூர் – தம்முடம்பைத் தமக்காக வுடையவர்.

(க–ரை) வேசையர் சொன்ன சொல்லைக் கேட்டு அவர்களைத் தம்முடையவரென்று கொள்பவர் யாவர்க்குஞ் சிநேக ரல்லர்; தம் முடம்பைத் தமக்காக வுடையவர்.

(வி–ரை) தம்முடம்பினூர் – எழுவாய், தமரல்லர் – பயனிலை. ஏ – அசை. (௯)

380 உள்ள மொருவ னுழையதா வொண்ணுதலார்
கள்ளத்தாற் செய்யுங் கருத்தெல்லாந்—தெள்ளி
யறிந்த விடத்து மறியாராம் பாவஞ்
செறிந்த வுடம்பி னவர்.

(ப–ரை) ஒள் – ஒள்ளிய, நுதலார் – நெற்றியையுடைய வேசையர், உள்ளம் – தமது உள்ளம், ஒருவன்,—உழையது ஆ – இடமாக, கள்ளத்தால் – களவால், செய்யும் – செய்கிற, கருத்து எல்லாம் – நினைவெல்லாம், தெள்ளி – ஆராய்ந்து, அறிந்த இடத்தும் – அறிந்த போதும், பாவம் – தீவினை, செறிந்த – நெருங்கிய, உடம்பினவர் – உடம்பினையுடையார், அறியார் – உண்மை அறியாதவராவார்.

(க–ரை) பாவிகள், வேசையர் மனதை யறிந்தும் அறியாதவராவர்.

(வி–ரை) உடம்பினவர் – எழுவாய், அறியார் – பயனிலை. ஆம் – அசை. (௧0)

பொதுமகளிர் முற்றிற்று.

---

இன்பதுன்பவியல் முற்றுப்பெற்றது.

---

# இரண்டாவது இன்பவியல்.

[அஃதாவது முழுவதும் மனத்திற்கு இன்பத்தையே கொடுக்கும் பிரிவு.]

## ரு௯-ஆம் அதிகாரம்-கற்புடைமகளிர்

[அஃதாவது கற்புள்ள மாதர் தன்மையைச் சொல்லுதலாம்.]

381 அரும்பெறற் கற்பி னயிராணி யன்ன
பெரும்பெயர்ப் பெண்டி ரெனினும்—விரும்பிப்
பெறுநசையாற் பின்னிற்பா ரின்மையே பேணு
நறுநுதலா ணன்மைத் துணை.

(ப—ரை) அரும் பெறல் — பெறுதற்கரிய, கற்பின் — கற்பினை யுடைய, அயிராணி அன்ன — இந்திராணிக்கு ஒப்பான, பெரும்— பெரிய, பெயர் — கீர்த்தியையுடைய, பெண்டிர் எனினும் — மனைவி யராகிலும், விரும்பி — இச்சித்து, பெறும் — அநுபவிக்கப்பெற்ற, நசை — நசைய இச்சையால், பின் நிற்பார் — தன்னழகைக் கண்டு பின்னிற்பவர், இன்மையே — இல்லாமையையே, பேணும் — பாது காக்கும், நறு நுதலாள் — பரிமள நெற்றியை யுடையாள், நன்மை— நாயகனுடைய நன்மைக்கு, துணை — துணையாவாள்.

(க—ரை) இந்திராணிக்கு ஒப்பான செல்வ முள்ளவளானாலும் தன்னைப் பிறர் இசசியாதிருக்க அலங்காரஞ் செய்யாதிருப்பவளே கற்புடையவள்.

(வி—ரை) நறுநுதலாள் — எழுவாய், துணை — பயனிலை. (க)

382 குடநீரட் டுண்ணு மிடுக்கட் பொழுதுங்
கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கையாறுங் கொள்ளு மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்.

(ப—ரை) குடம் நீர் — ஒரு குடத்து நீரை, அட்டு — காய்சசி, உண்ணும் — உண்ணும்படியான, இடுக்கண் பொழுதும் — தரித்திர காலத்தும், கடல் — கடலின், நீர் — நீரை, அற—முற்றாக, உண்ணும்- உண்ணத்தக்க (மிகப் பெருங் கூட்டமான), கேளிர் — இனத்தார்,

வரினும் — வந்தாலும், கடன் நீர்மை — செய் கடமைக் குணங்களை, கை ஆறு ஆ — ஒழுக்க வழியாக, கொள்ளும் — கொண்டிருக்கும், மட மொழி — மென்சொல்லையுடைய, மாதர் — பெண்ணே, மனை — மனை வாழ்க்கைக்குத் தக்க, மாட்சியாள் — பெருமையை யுடையாள்.

(க—ரை) ஒருகுடத்து நீரைக் காய்சசி உண்ணும் வறுமைக் காலத்தும், கடனீரை முற்றாகக் குடிக்குஞ் சுற்றத்தார் வந்தாலுஞ் செய் கடமையைக் கொண்டிருப்பவளே இல்வாழ்க்கைக் குரிய மனையவளாம்.

(வி—ரை) மாதர் — எழுவாய், மாட்சியாள் — பயனிலை. மாது என்னுஞ் சொல் மாதர் என நின்றது. (௨)

383 நாலாறு மாறாய் நனிசிறிதா யெப்புறனு
மேலாறு மேலுறை சோரினு—மேலாய
வல்லாளாய் வாழுமூர் தற்புகழு மாண்கற்பி
னில்லா ளமர்ந்ததே யில்.

(ப—ரை) நால் ஆறும் — நாலு திக்கும், ஆறு ஆய் — வழியாய், நனி — மிகவும், சிறிது ஆய் — சிறியதாய்,—எ புறனும் — எவ்விடத்தும், மேல் ஆறு — மேல் வழியாய், மேல் — தம்மேல், உறை — மழை நீர், சோரினும் — சொரிந்தாலும், மேல் ஆய — மேலாகிய தருமங்கள்செய்ய, வல்லாள் ஆய் — வலிமையுடையவளாய், வாழும் — தான் வாழும், ஊர் — ஊரார், தன் புகழும் — தன்னைப் புகழும், மாண் — பெருமை பொருந்திய, கற்பின் — கற்பினையுடைய, இல்லாள்—மனையாள், அமர்ந்ததே — பொருந்தியதே, இல் — மனையாகும்.

(க—ரை) வறுமையிலுந் தருமஞ்செய்யு மனமுடையவள் வாழ்ந்திருப்பதே வீடாகும்.

(வி—ரை) அமர்ந்தது — எழுவாய், இல் — பயனிலை. (௩)

384 கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவா
ளுட்குடையா ளூர்நா ணியல்பினா—ளுட்கி
யிடனறிந் தூடி யினிதி னுணரு
மடமொழி மாதராள் பெண்.

(ப—ரை) கட்கு — கண்ணுக்கு, இனியாள் — இனியவளாய்,— காதலன் — நாயகன், காதல் வகை — இச்சிக்கத்தக்கவைகளை, புனைவாள் — அலங்கரிப்பவளாய்,—உட்கு உடையாள் — அஞ்சத்தக்கவ

ளாய்,—ஊர் — ஊரார்க்கு, நாண் — நாணத்தக்க, இயல்பினள்-குண முடையவளாய்,—உட்கி — நாயகனுக்குப் பயந்து, இடன் அறிந்து-சமயமறிந்து, ஊடி — பிணங்கி, இனிதின் — இன்பத்துடன், உணரும் — புணர்தலை யறியும், மடமொழி-மெல்லிய சொற்களையுடைய, மாதராள் — மாதானவள், பெண் — கற்புடைப் பெண்ணவாள்.

(க—ரை) கண்ணிற் கினியவளாய், நாயகனுக்கு உவந்தவளாய், ஊரார் மதிக்கத்தக்கவளா யிருப்பவளே கற்புடையவள்.

(வி—ரை) மாதராள் — எழுவாய், பெண் — பயனிலை. (௪)

[குலமகள் விலைமகளைப் பழித்தல் கூறுகின்றது.]

385 எஞ்ஞான்று மெங்கணவ ரெந்தோண்மேற் சேர்ந்தெழினும்
அஞ்ஞான்று கண்டேம்போ னாணுதுமா—லெஞ்ஞான்று
மென்னைகொ லோஇயினர் கொல்லோ பொருணசையாற்
பன்மார்பு சேர்ந்தொழுகு வார்.

(ப—ரை) எஞ்ஞான்றும் — எந்த நாளும், எம் கணவர் — எம்முடைய நாயகர், எம் தோள்மேல் — எம்முடைய தோள்களின்மேல், சேர்ந்து எழினும் — அணைந்தெழுந்தாலும்,—அஞ்ஞான்று — விவாகஞ் செய்த அந்நாள், கண்டேம் போல — யாம் கண்டாற்போல, நாணுதும் — வெட்கத்தை யுடையோம்; (இங்ஙனமிருக்க) எஞ்ஞான்றும் — எந்நாளும், பொருள் — பொருளின், நசையால் — இச்சையால், பல் மார்பு — பலருடைய மார்புகளை, சேர்ந்து ஒழுகுவார்-சேர்ந்து நடக்கின்ற பொதுமகளிர், என்னை கொலோஇயினர் கொல் ஓ — என்னவாகத் தழுவினர்களோ?

(க—ரை) எந்நாளும் என்கணவனைத் தழுவினும் விவாகஞ் செய்த நாளிற் றழுவினாற்போல நாண மடைகிறேன்; பொருளிச்சையால் எந்நாளும் பலபேரைச் சேர்பவர்க ளெப்படித் தழுவினர்களோ? என்றாள்.

(வி—ரை) ஒழுகுவார் — எழுவாய், என்னைகொல்லோ — பயனிலை. ஆல் — அசை. (௫)

386 உள்ளத் துணர்வுடையா னோதிய நூலற்றால்
வள்ளன்மை பூண்டான்க ணொண்பொரு—டெள்ளிய

வாண்மகன் கையி லயில்வா ளனைத்தரோ
நாணுடையாள் பெற்ற நலம்.

(ப—ரை) உள்ளத்து — இதயத்து, உணர்வு உடையான் — அறிவுடையவன், ஓதிய நூல் அற்று — கற்ற நூற்பயன்போலும், வள்ளன்மை — கொடுக்குந் தன்மை, பூண்டான்கண் — கொண்டவனிடத்து, ஒள் பொருள் — ஒள்ளிய பொருளும் பயன்படும்; தெள்ளிய— தெளிந்த, ஆண்மகன் கையில் — ஆண்மகனது கையிலுள்ள, அயில் வாள் — கூறிய வாள், அனைத்து — ஒப்பாகும், நாண் உடையாள்— நாணமுடையவள், பெற்ற நலம் — பெற்றிருக்கின்ற கற்பினலம்.

(க—ரை) அறிவுடையோன் கற்ற கல்வி பயன்படுதல்போலும், கொடுப்பவன் கையிற் பொருள் பயன்படும்; நாணமுடையவள் பெற்ற கற்புச் சுத்தவீரன் கைவாள்போலும்.

(வி—ரை) நலம் — எழுவாய், அனைத்து — பயனிலை. ஆல்,அரோ— அசைகள். (சு)

[தலைவி தோழிக்குச் சொல்லியது]

387 கருங்கொள்ளுஞ் செங்கொள்ளுந் தூணிப் பதக்கென்
றொருங்கொப்பக் கொண்டானு மூர-னொருங்கொவ்வா
நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்ப னீராடா
தென்னையுந் தோய வரும்.

(ப—ரை) ஊரன் — தலைவன், ஒருங்கு ஒவ்வா — முற்று மொவ்வாத, நல் நுதலார் — நல்ல நெற்றியை யுடையாரை, தோய்ந்த— சேர்ந்த, வரை மார்பம் — மலைபோலு மார்பு, நீராடாது — நீரிலே முழுகாது, என்னையும் — என்னையும், தோய வரும் — சேரவருவான்; (இது எதுபோலெனில்) — கருங் கொள்ளும் — கறுத்த கொள்ளையும், செம் கொள்ளும் — சிவந்த கொள்ளையும்,தூணி பதக்கு என்று— பணத்துக்குத் தூணி பதக்கென்று, ஒருங்கு ஒப்ப — சரியொக்க, கொண்டானும் — கொண்டான்போலாகும்.

(க—ரை) எனது நாயகன் பலமாதரைச் சேர்ந்து நீராடாது என்னைச் சேர வருவான்; இஃது எதுபோலெனில், ஒருவன் கருங் கொள்ளையுஞ் செங்கொள்ளையும், பணத்துக்குத் தூணிப் பதக் கென்று கொண்டான்போலும்.

(வி—ரை) ஊரன் — எழுவாய், வரும் — பயனிலை. (எ)

[தலைவி பாணனுக்குச் சொல்லியது]

388 கொடியவை கூறாதி பாணநீ கூறின்
அடிபைய விட்டொதுங்கிச் சென்று—துடியின்
னிடக்கண் ணனையம்யா மூரற் கதனால்
வலக்கண் ணனையார்க் குரை.

(ப—ரை) பாண — பாணனே!, கொடியவை — கொடிய சொற்களை, கூறாதி — சொல்லாதே!, நீ கூறின் — நீ சொல்லில், யாம் — நாம், ஊரற்கு — நாயகனுக்கு, துடியின் — உடுக்கையின், இடக்கண் — இடதுபக்க பாகத்தை, அனையம் — ஒப்பானேம்; அதனால் — அதனாலே, அடி — அடியை, பைய — மெள்ள, இட்டு — வைத்து, ஒதுங்கி — பதுங்கி, சென்று — போய், வலக்கண் — அவ் வுடுக்கையின் வலது பக்கத்தை, அனையார்க்கு — ஒப்பானவர்க்கு, உரை — சொல்வாயாக.

(க—ரை) பாணனே! கொடிய சொற்களைச் சொல்லாதே நீ சொல்லில் எமது நாயனுக்கு உடுக்கையின் இடது பக்கத்தை யொப்பானேன்; அதனால் உடுக்கையின் வலது பக்கத்தை யொப்பானவருக்குச் சொல்வாயாக.

(வி—ரை) நீ — எழுவாய், உரை — பயனிலை. (அ)

[தலைவி பாங்கிக்குச் சொல்லியது]

389 சாய்ப்பறிக்க நீர்திகழுந் தண்வய லூரன்மீ
தீப்பறக்க நொந்தேனும் யானேமற்—றீப்பறக்கத்
தாக்கி முலைபொருத தண்சாந் தணியகல
நோக்கி யிருந்தேனும் யான்.

(ப—ரை) சாய் பறிக்க — கோரையைப் பிடுங்கின மாத்திரத்தில், நீர் திகழும் — நீர் விளங்கும், தண் வயல் — குளிர்ந்த வயலையுடைய, ஊரன்மீது — நாயகன்மேல், ஈ பறக்க — ஈயானது பறக்க, நொந்தேனும் — நொந்தவளும், யானே — நானே; தீ — தீப்பொறி, பறக்க — பறக்கும்படி, முலை — வேசையர்முலையால், தாக்கி — மோதி, பொருத — போர் செய்த, தண் சாந்து — குளிர்ந்த சந்தனத்தை, அணி அகலம் — அணிந்த மார்பை, நோக்கி — பார்த்து, இருந்தேனும் — இருந்தவளும், யான் — நானே.

(க—ரை) எமது நாயகன்மேலே ஈப் பறக்க நொந்தவளும் நானே.

(வி—ரை) யான் — எழுவாய், நொந்தேன் — பயனிலை. யான்— எழுவாய், இருந்தேன் — பயனிலை. மன் — அசை. (௯)

[தலைவி பாணனுக்குச சொல்லியது]

390 அரும்பவிழ் தாரினா னெம்மருளு மென்று
பெரும்பொய் யுரையாதி பாண—கரும்பின்
கடைக்கண் ணனையநா மூரற் கதனால்
இடைக்கண் ணனையார்க் குரை.

(ப—ரை) பாண — பாணனே! அரும்பு அவிழ் — முகை விரிந்த, தாரினான் — மாலையை யுடையவன், எம் அருளும் என்று — எமக்கு அருள் செய்வானென்று, பெரும் பொய் — பெரிய பொய்யை, உரையாதி — சொல்லாதே!; நாம்—, ஊரற்கு — நாயகனுக்கு, கரும்பின்— கரும்பினது, கடைக்கண் — கடையிடத்தை, அனையம் — ஒப்பானேம்; அதனால்,—(இப் பேச்சை) இடைக்கண் — கரும்பினடுவிடத்தை, அனையார்க்கு — ஒப்பானவர்க்கு, உரை — சொல்வாயாக.

(க—ரை) பாணனே! நாயகன் அருள் செய்வானென்று பொய் சொல்லாதே; நாயகனுக்கு நாம் கரும்பின் கடையிடத்தை ஒப்பானேம்; அதனாலே கரும்பி னடுவிடத்தை யொப்பானவர்க்குச் சொல்வாயாக.

(வி—ரை) நீ — எழுவாய், உரை — பயனிலை. (௧0)

கற்புடைமகளிர் முற்றிற்று.

# ௪0-ஆம் அதிகாரம்-காமநுதலியல்

[அஃதாவது-காமத் தன்மையைச் சொல்லுதலாம்.]

[தலைமகற்கு வாயில் நேர்ந்த தோழி தலைமகள் புலவி நீங்கச சொல்லியது.]

391 முயங்காக்காற் பாயும் பசலைமற் றூடி
உயங்காக்கா லுப்பின்றாங் காமம்—வயங்கோத
நில்லாத் திரையலைக்கு நீள்கழித் தண்சேர்ப்ப
புல்லாப் புலப்பதோ ராறு.

(ப—ரை) வயங்கும் – பிரகாசிக்கும், ஓதம் – கடலோசை, நில்லா – நில்லாமல், திரை – அலைகளால், அலைக்கும் – அலைக்கின்ற, நீள்—நீண்ட, கழி – கழிபொருந்திய, தண் – குளிர்ந்த, சேர்ப்ப – கரையையுடைய பாண்டியனே!, முயங்காக்கால் – புணராவிடில், பசலை— தேமல், பாயும் – மெய்யி லுண்டாம்; ஊடி – பிணங்கி, உயங்காக் கால் – வருந்தாவிடில், காமம் – காமமானது, உப்பு – இன்பம், இன்று ஆம் – இல்லையாம், புல்லா – முதலிற் கூடி, புலப்பது – பிறகு பிணங்குவது, ஓர் ஆறு – ஒருவழி யின்பமாம்.

(க—ரை) பாண்டியனே! புணராவிட்டால் தேமலுண்டாகும்; பிணங்கிச சேராவிடி லின்ப மில்லை; சேர்ந்து பிணங்குத லொரு வழி யின்பம்.

(வி—ரை) பசலை, காமம் – எழுவாய்; பாயும், உப்பின்றாம் – பயனிலை. (க)

[பருவங் கண்டு ஆற்றாளாகிய தலைவி தோழிக்கு உரைத்தது.]

392 தம்மமர் காதலர் தார்சூ ழணியகலம்
விம்ம முயங்குந் துணையில்லார்க்—கிம்மெனப்
பெய்ய வெழிலி முழங்குந் திசையெல்லா
நெய்த லறைந்தன்ன நீர்த்து.

(ப—ரை) தம் – தம்மால், அமர் – இச்சிக்கப்பட்ட, காதலர்— நாயகரது, தார் சூழ் – மாலை சூழ்ந்த, அணி அகலம் – அழகிய மார்பை, விம்ம – அழுந்த, முயங்கும் – தழுவும், துணை இல்லார்க்கு— துணை யில்லாதவர்க்கு, இம்மென – இம்மென்னு மோசையாய், பெய்ய – பொழிய, எழிலி – மேகம், முழங்கும் – சத்திக்கும், திசை

எல்லாம் — திக்குகளி னெல்லாம், நெய்தல் — சாப்பறை, அறைந்து அன்ன — அறைந்தாற்போலும், நீர்த்து — குணமுடையது.

(க—ரை) தோழியே! நாயகர் மார்பை யணையுந் தொழி லில்லாதவர்க்கு மேகஞ் சத்திக்குந் திசை யெல்லாம் சாப்பறை யடித்தாற்போலும்.

(வி—ரை) முழக்கம் — எழுவாய், நீர்த்து — பயனிலை, இம்மெனல் — ஓசைக்குறிப்பு. (உ)

[தலைமகன் செல வுடன்படாமையைத் தலைமகற்குத் தோழி சொல்லியது.]

398 கம்மஞ்செய் மாக்கள் கருவி யொடுக்கிய
மம்மர்கொண் மாலை மலராய்ந்து பூத்தொடுப்பாள்
கைம்மாலை யிட்டுக் கலுழ்ந்தா டுணையில்லார்க்
கிம்மாலை யென்செய்வ தென்று.

(ப—ரை) கம்மம் — கம்மியத் தொழிலை, செய் — செய்யும், மாக்கள் — மக்கள், கருவி — தம்முடைய கருவிகளை, ஒடுக்கிய — அடக்கிய, மம்மர் — மயக்கம், கொள் — கொண்டிருக்கிற, மாலை — மாலைக்காலத்து, மலர் — மலரை, ஆய்ந்து — தெரிந்து, பூ — பூவை, தொடுப்பாள்— தொடுக்குமவள், துணை — துணைவரை, இல்லார்க்கு — இல்லாதவர்க்கு, இ மாலை — இந்த மலர்மாலையானது, என் — என்ன பயன், செய்வது என்று — செய்குவதென்று, கை — கையிலுள்ள, மாலை — மாலையை, இட்டு — போட்டு, கலுழ்ந்தாள் — அழுதாள்.

(க—ரை) தலைவனே! மாலைக் காலத்திலே பூத்தொடுத்த தலைவியானவள் நாயக னில்லாதவர்க்கு இம்மாலை யென்ன செய்வதென்று கைம்மாலையைப் போட்டு அழுதாள்.

(வி—ரை) தொடுப்பள் — எழுவாய், கலுழ்ந்தாள் — பயனிலை.()

[வினைமுற்றி மீண்ட தலைமகன் பாகன்கேட்பச் சொல்லியது.]

394 செல்சுடர் நோக்கிச் சிதரரிக்கண் கொண்டநீர்
மெல்விர லூழ்தெறியா விம்மித்தன்—மெல்விரலி
னுள்வைத்து நங்குற்ற மெண்ணுங்கொ லந்தோதன்
றோள்வைத் தணைமேற் கிடந்து.

(ப—ரை) செல் — படுகின்ற, சுடர் — சூரியனை, நோக்கி — பார்த்து, சிதர் — சிந்திய, அரி — செவ்வரி பரந்த, கண் — கண்கள், கொ

ண்ட — கொண்டிருக்கிற,நீர் — நீரை, மெல் — மெல்லிய, விரல் — விரலால், ஊழ் — முறை முறையாக, தெறியா — வாங்கித் தெறித்து, விம்மி — அழுது, தன் — தன்னுடைய, மெல் — மெல்லிய, விரலின்— விரலால்,நாள் — (நாம் பிரிந்த)நாள்களை,வைத்து — வைத்தெண்ணி, அணைமேல் — அணைமேலே, தன் — தனது, தோள் — தோளை, வைத்து — வைத்து, கிடந்து — படுத்து, அந்தோ — ஐயோ!, நம் — நம்முடைய, குற்றம் — குற்றங்களை, எண்ணுங்கொல் — நினைப்பாளோ.

(க—ரை) பாகனே! தலைவியானவள் நாம் பிரிந்துவந்த நாள்களை யெண்ணிக் கண்ணீர் விட்டு அழுவாளோ என்றான்.

(வி—ரை) தலைவி — எழுவாய், எண்ணுங்கொல் — பயனிலை,குற்றம் — செயப்படுபொருள். (௪)

[தலைமகன் தானுற்றதைப் பாங்கற்குச் சொல்லியது.]

395 கண் கய லென்னுங் கருத்தினாற் காதலி
பின்சென்ற தம்ம சிறுசிரல்—பின்சென்றும்
ஊக்கி யெழுந்து மெறிகல்லா வொண்புருவங்
கோட்டிய வில்வாக் கறிந்து.

(ப—ரை) கண் — நாயகி கண்களை, கயல் என்னும் — சேலென்று சொல்லும், கருத்தினால் — கருத்தால், சிறு சிரல் — சிறிய சிச்சிலிக் குருவியானது, காதலி — அந்நாயகி, பின் சென்றது — பின்னே தொடர்ந்தது; ஒள் புருவம் — ஒள்ளிய புருவம், கோட்டிய — வளைத்த,வில் வாக்கு — வில் வளைந்தாற்போ லிருந்ததை,அறிந்து — தெரிந்து, பின் சென்றும் — பின்னே தொடர்ந்தும், ஊக்கி — உறுதிகொண்டு எழுந்தும், எறிகல்லாது — குத்தித்தின்னமாட்டாதிருந்தது.

(க—ரை) பாங்கனே! தலைவி கண்களைச் சேலென்று சொல்லுங் கருத்தால் சிச்சிலிக் குருவி அந்நாயகி பின்னே சென்றது; சென்றும் புருவத்தை வில்லென் றறிந்து குத்தாமல் விட்டது.

(வி—ரை) சிரல் — எழுவாய், எறிகல்லா — பயனிலை. அம்ம— இடைச்சொல். (ரு)

[மகட் போக்கிய தாயர் செவிலிக்குச் சொல்லியது.]

369 அரக்காம்ப றாறும்வா யம்மருங்கிற் கன்னோ
பரற்கான மாற்றின கொல்லோ—வரக்கார்ந்த

பஞ்சிகொண் டூட்டினும் பையெனப் பையெனவென்
றஞ்சிப் பின்வாங்கு மடி.

(ப—ரை) அரக்கு ஆம்பல் — செவ்வல்லிப் பூப்போலும், நாறும்-மணம் வீசும், வாய் — வாயையும், அம் — அழகிய, மருங்கிற்கு-இடையினையுமுடைய (எனது) மகளுக்கு,—அரக்கு — முன்னே சிவப்பு, ஆர்ந்த — தோய்ந்த, பஞ்சி கொண்டு — பஞ்சைக்கொண்டு, ஊட்டினும் — ஊட்டி யழகு செய்யினும், பையென பையென என்று—(அதற்கு நொந்து) மெல்ல மெல்லவென்று, அஞ்சி — ஊட்டுதற் கஞ்சி, பின் — பின்னே, வாங்கும் — வாங்கிப்போகும், அடி — பாதங்கள், பரல் — பருக்கைக் கற்களையுடைய, கானம்—காட்டுவழி போக, அன்னோ — ஐயோ!, ஆற்றின கொல் ஓ — பொறுத்தனவோ!

(க—ரை) செவிலியே! நமது மகளுடைய மெல்லடிகளுக்குச் செம்பஞ்சூட்டில் மெல்ல மெல்ல வென்பாளே. அவள் பாதங்கள் பருக்கன் கற்களையுடைய காட்டிற் செல்லச் சகித்தனவோ!

(வி—ரை) அடி — எழுவாய், ஆற்றினகொல்லோ — பயனிலை. ()

[தலைமகள் பிரிவுடன்படாமையைத் தோழி
தலைமகற்குச் சொல்லியது.]

397 ஓலைக் கணக்க ரொலியடங்கு புன்செக்கர்
மாலைப் பொழுதின் மணந்தார் பிரிவுள்ளி
மாலை பரிந்திட் டழுதாள் வனமுலைமேற்
கோலஞ்செய் சாந்தந் திமிர்ந்து.

(ப—ரை) ஓலை — ஓலை யெழுதும், கணக்கர் — கணக்கரது, ஒலி-ஓசை, அடங்கும் — ஒடுங்கும், புல் — புல்லிய, செக்கர் — செம்மையையுடைய, மாலை பொழுதில் — மாலைக்காலத்திலே, மணந்தார் — கூடினவர், பிரிவு — பிரிவை, உள்ளி — நினைத்து, மாலை — பூமாலையை, பரிந்திட்டு — அறுத்தெறிந்து, வனம் — அழகிய, முலைமேல் — முலைமேல், கோலம் — அழகு, செல் — செய்திருக்கிற, சாந்தம் — சந்தனத்தை, திமிர்ந்து — அழித்து, அழுதாள் — புலம்பினாள்.

(க—ரை) தலைவனே! தலைவி மாலைக் காலத்திலே உமது பிரிவை நினைந்து மலர் மாலையை யறுத்தெறிந்து, முலைமீது அணிந்த சந்தனக் கோலத்தையும் அழித்து அழுதாள்.

(வி—ரை) தலைமகள் — எழுவாய், அழுதாள் — பயனிலை. (எ)

[உடன் போக்குப் பொருந்திய தலைமகள்
தோழிக்குச் சொல்லியது.]

398 கடக்கருங் கானத்துங் காளைபின் னாளை
நடக்கவும் வல்லையோ வென்றி—சுடர்த்தொடீஇ
பெற்றா னொருவன் பெருங்குதிரை யந்நிலையே
கற்றா னஃதூரு மாறு.

(ப—ரை) கடக்க அரும் — கடத்தற்கரிய, கானத்து — காட்டிலே, காளை — நாயகனாகிய காளை, பின் — பின்னால், நாளை — நாளைத்தினம், நடக்கவும் — நடந்துபோகவும், வல்லையோ — வல்லமையையுடையையோ?, என்றி — என்று என்னை வினவினாய்; சுடர்—விளங்கிய, தொடீஇ — வளையல்களை யுடையவளே!, ஒருவன் — ஒருத்தன், பெரும் — பெரிய, குதிரை — குதிரையை, பெற்றான்—அடைந்தான், அ நிலையே — அப்பொழுதே, அஃது — அக் குதிரையை, ஊரும் ஆறு — செலுத்து முறையினையும், கற்றான் — கற்று வல்லவனானான், (அதுபோலக் காதலன் பின் சேறற்கு அருமையில்லை.)

(க—ரை) தோழியே! "நாளை காட்டிலே நடக்க வல்லமையுடையவளோ?" என்று கேட்டாய். ஒருவன், குதிரை கொண்டால் அதன்மேல் ஏறவுங் கற்றிருப்பான் என்றாள்.

(வி—ரை) (அருமை) — தோன்றா எழுவாய், (இல்லை) — தோன்றாப் பயனிலை. (அ)

[மகளைப் போக்கிய தாயானவள் கவலை யடைந்து
சொல்லியது.]

399 முலைக்கண்ணு முத்து முழுமெய்யும் புல்லு
மிலக்கணம் யாது மறியேன்—கலைக்கணம்
வேங்கை வெரூஉ நெருசெலிய போலுமென்
பூம்பாவை செய்த குறி.

(ப—ரை) முலைக் கண்ணும் — முலைக் கண்களையும், முத்தும்—முத்துமாலைகளையும், (நன்கு பதியும்படி) முழு மெய்யும் — எனது

சரீர முழுமையும், புல்லும் – தழுவிக்கொண்ட, இலக்கணம்–அடையாளத்தை, யாதும் – எதுவும், அறியேன் – நேற்று அறிந்திலேன்; என் – எனது, பூம்பாவை – அழகிய பெண்ணானவள், செய்த-பண்ணின, குறி – அந்த அடையாளம், கலை கணம் – மான் கூட்டங்கள், வேங்கை – வேங்கைக்கு, வெரூஉம் – பயந்தோடும், நெறி – வழியை, செலிய போலும் – செல்வாள்போலும்.

(க–ரை) முலைக்கண்களும் முத்துமாலைகளும் என் மெய்யிலழுந்த என் மெய்யைத் தழுவிக்கொண்ட குறிகளை நேற்றறிந்திலேன், என் மகள் காட்டுவழிச் சென்றாள்போலும்.

(வி–ரை) (யான்) – தோன்றா எழுவாய்,அறியேன் – பயனிலை.

[தலைமகள் பிரிவாற்றாமையைத் தோழிக்குச் சொல்லியது.]

400 கண்மூன் றுடையானுங் காக்கையும் பையரவும்
என்னீன்ற யாயும் பிழைத்ததென்—பொன்னீன்ற
கோங்கரும் பன்ன முலையாய் பொருள்வயிற்
பாங்கனார் சென்ற நெறி.

(ப–ரை) பொன் ஈன்ற – பொன்போலு நிறமுடைய, கோங்கு அரும்பு அன்ன – கோங்கரும்புக்கு ஒப்பான, முலையாய் – கனதனங்களையுடைய தோழியே!, பொருள் வயின் – பொருளினிடத்து ஆசையால், பாங்கனார் சென்ற நெறி – (எனது) தலைவர் சென்ற வழிக்கு, கண் மூன்று உடையானும் – மூன்று கண்களையுடைய பரமசிவனும், காக்கையும் – காகமும், பை அரவும் – படமுடைய (இராகுவென்னும்) சாப்பமும், என் ஈன்ற – என்னைப் பெற்ற, யாயும் – தாயும், பிழைத்தது என் – எனக்குப் பிழைசெய்ததுயாது.

(க–ரை) தோழியே! தலைவர் பொருள்மேற் பிரிந்த வழிக்கு எனக்குப் பிழை செய்தது மன்மதனை யுருவழித்துப்பின்னும் உயிராக்கிவிட்ட சிவனும், குயிலை வளர்த்துவிட்ட காகமும் சந்திரனை விழுங்கிவிட்ட பாம்பும், பெற்ற காலத்து என்னைக் கொல்லாது விட்ட தாயுந்தான் என்றாள்.

(வி—ரை) கண்மூன்றுடையான், காக்கை, அரவு, யாய் – எழுவாய், பிழைத்தது – பயனிலை. (௧௦)

காமத்துப்பால் முற்றிற்று.

இன்பவியல் முற்றிற்று.

---

ஆக பால் ௩-க்கு, அதிகாரம் ௪௦-க்குக் கூடிய செய்யுள்-௪௦௦.

நாலடியார் மூலமும் உரையும்

முற்றுப்பெற்றன.

---

சென்னை-1

# நாலடியார்.

## செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| பாட்டு | பக்கம் |
|---|---|
| அ | |
| அகத்தாரே | ௩௧ |
| அக்கேபோ | ௮௪ |
| அங்கண்-னக | ௧௦௦ |
| அங்கண்-னம | ௨௨௭ |
| அங்கோட் | ௨௨௭ |
| அச்சம் | ௬௧ |
| அடுக்கன்மலே | ௧௨௭ |
| அடைந்தார் | ௧௧௨ |
| அத்திட்ட | ௧௭௩ |
| அம்பலயலெடு | ௬௪ |
| அம்புமழலு | ௬௫ |
| அரக்காம்ப | ௨௪௦ |
| அருகல | ௧௬௧ |
| அரும்பவிழ் | ௨௩௭ |
| அரும்பெறல் | ௩௨ |
| அரும்பெறற் | ௩௨ |
| அருளினற | ௧௯௬ |
| அலகுசால் | ௯௩ |
| அவமதிப்பு | ௧௦௭ |
| அவ்வியமில் | ௧௯௬ |
| அழன்மண்டு | ௧௨௬ |
| அள்ளிக்கொ | ௧௬௧ |
| அறம்புகழ் | ௬௧ |
| அறிமினற | ௧௧௧ |
| அறியாப்பரு | ௧௧௧ |
| அறியாரு | ௭௫ |
| அறிவதறிந் | ௫௭ |
| அறுசுவை | ௧௩ |
| ஆ | |
| ஆகாதெனி | ௨௦௫ |
| ஆடுகோடாகி | ௧௨௧ |
| ஆட்பார்த் | ௨௩ |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| ஆணமினெ | ௨௨௮ |
| ஆமாபோ | ௨௨௯ |
| ஆர்த்தபொறிய | ௧௭௭ |
| ஆர்த்தவறிவின | ௨௧௪ |
| ஆவாநாமாக்க | ௩௧ |
| ஆவேறுருவின | ௮௦ |
| ஆற்றுந்துணை | ௧௨௩ |
| ஆன்படுநெய் | ௧௪௮ |
| இ | |
| இசைந்த | ௧௧௯ |
| இசையாதெ | ௧௨௨ |
| இசையாவொரு | ௭௭ |
| இசையுமெனி | ௧௦௦ |
| இடம்பட | ௭௯ |
| இடும்பைகூர் | ௭௪ |
| இட்டாற்று | ௧௭௬ |
| இமைக்குமளே | ௧௯௭ |
| இம்மியரிசி | ௬௮ |
| இம்மைபயக் | ௮௯ |
| இம்மையு | ௧௮௦ |
| இரவலர்கன் | ௧௭௧ |
| இருக்கையெ | ௯௬ |
| இரும்பார்க்குங் | ௮௩ |
| இலங்குநீர் | ௧௪௧ |
| இல்லமிளமை | ௪௪ |
| இல்லாமை | ௧௮௬ |
| இல்லாவிடத்து | ௬௭ |
| இழித்தக்க | ௧௮௫ |
| இழைத்தநா | ௧௬ |
| இளையானடக்க | ௫௧ |
| இறப்பச்சிறி | ௭௧ |
| இறப்பநினே | ௧௧௨ |
| இறப்பவே | ௧௩௧ |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| இற்சார்வி | ௧௬௧ |
| இற்பிறப்பில் | ௧௯௫ |
| இற்பிறப்பெ | ௧௩௨ |
| இனநன்மை | ௯௭ |
| இனியார்தந் | ௨௨௪ |
| இன்பம் | ௫௯ |
| இன்றுதுமிந் | ௨௭௮ |
| இன்றுகொ | ௩௩ |
| இன்னாரினைய | ௧௨௮ |
| இன்னுசெயினு | ௫௮ |
| இன்னு-விட | ௧௪௦ |
| இன்னு-விடு | ௧௪௦ |
| இன்னுவியைக | ௧௮௭ |
| ஈ | |
| ஈட்டலுந் | ௧௭௧ |
| ஈண்டுநீர் | ௭௫ |
| ஈதலிசையா | ௧௧௬ |
| ஈனமாயில் | ௧௨௪ |
| உ | |
| உடாஅது | ௧௮ |
| உடுக்கை | ௯௫ |
| உடைப்பெரு | ௨௨௩ |
| உடையாரிவ | ௧௦௪ |
| உணரவுணரு | ௧௫௨ |
| உண்டாய் | ௧௭௪ |
| உண்ணுனெளி | ௧௭ |
| உபகாரஞ் | ௫௩ |
| உயிர்போயார் | ௪௨ |
| உருவிற்கமை | ௧௪௮ |
| உருவுமிளமை | ௭௨ |
| உலகறிய | ௧௨௭ |
| உலநாள்சில | ௧௯௭ |
| உள்கூர்பசி | ௧௭௫ |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| உள்ளத்தா | ௮௬ |
| உள்ளத்துணர் | ௨௩௪ |
| உள்ளமோருவ | ௨௩௧ |
| உறக்குந் | ௩௫ |
| உறற்பால | ௭௩ |
| உறுபுலி | ௧௨௨ |
| உறுபுனறந் | ௧௧௮ |
| உறைப்பருங் | ௧௧௭ |
| ஊ | |
| ஊக்கித்தாங் | ௪௬ |
| ஊரங்கணநீ | ௧௧௩ |
| ஊருளெழுந் | ௬௬ |
| ஊறியுவர்த் | ௪௦ |
| ஊறுசெய் | ௨௩௩ |
| எ | |
| எஞ்ஞான்று | ௨௩௪ |
| எத்துணையா | ௧௬௭ |
| எந்நிலத்து | ௧௫௦ |
| எம்மையறி | ௧௦௮ |
| எய்தியிரு | ௧௯௮ |
| எரிநீர்ப் | ௧௬௯ |
| எறியென் | ௧௨௨ |
| எற்றொன்று | ௯௯ |
| எனக்குத்தா | ௨௧ |
| எனதென | ௧௬௯ |
| என்பாயுகினு | ௧௭௯ |
| என்றும்புதி | ௧௮௮ |
| என்னுனு | ௧௫ |
| என்னேமற் | ௨௦௦ |
| ஏ | |
| ஏட்டைப்பரு | ௨௧௭ |
| ஏதிலார்செய் | ௧௪௧ |
| ஏமாந்தபேழ் | ௨௩௦ |
| ஏற்றகை | ௭௦ |
| ஒ | |
| ஒண்கதிர் | ௧௧௩ |
| ஒருநன்றி | ௨௧௭ |
| ஒருநீர்ப் | ௧௪௬ |
| ஒருபுடை | ௯௮ |
| ஒருவரொருவ | ௧௮௯ |
| ஓக்கியவொள் | ௮௭ |
| ஓதியுமோதா | ௧௬௫ |
| ஓலைக்கணக்க | ௨௪௧ |
| க | |
| கடகஞ்செறி | ௧௭௭ |
| கடக்கருங் | ௨௪௨ |
| கடமாதொ | ௧௮௩ |
| கடல்சார்ந்து | ௧௫௧ |
| கடித்துக் | ௧௦௨ |
| கடிப்பிடு | ௭௧ |
| கடியெனக் | ௨௨௧ |
| கடுக்கியொரு | ௧௨௦ |
| கடுக்கெனச் | ௨௧௧ |
| கடையாயார் | ௧௩௪ |
| கடையெலாங் | ௧௮௨ |
| கஞ்சினியாள் | ௨௩௩ |
| கணங்கொண்டு | ௨௭ |
| கணமலை | ௨௧௫ |
| கண்கயலென் | ௨௫௦ |
| கண்ணூன் | ௨௪௩ |
| கப்பிகடவதா | ௨௦௮ |
| கம்மஞ்செய் | ௨௩௯ |
| கரவாததிண் | ௧௮௭ |
| கருங்கொள் | ௨௩௫ |
| கருத்துணர்ந்து | ௧௩௨ |
| கருமமு | ௧௫௩ |
| கருமவரிசை | ௧௫௩ |
| கரும்பாட்டி | ௩௩ |
| கல்லாக்கழிப் | ௨௨௩ |
| கல்லாதுநீண்ட | ௧௫௬ |
| கல்லாதுபோ | ௧௧௦ |
| கல்லாமை | ௯௬ |
| கல்லாரேயா | ௯௩ |
| கல்லெறியா | ௫௧ |
| கல்லென்று | ௧௫௬ |
| கல்லோங்கு | ௧௭௪ |
| கல்விகரையில் | ௯௧ |
| கழிந்தாரிடு | ௪௧ |
| கழுநீருட் | ௩௫ |
| களர்நிலத்து | ௯௦ |
| கள்ளார்கள் | ௧௦௩ |
| கற்றதூஉ | ௧௯௧ |
| கற்றறிந்த | ௧௫௭ |
| கற்றனவுங் | ௨௦௬ |
| கற்றாருரை | ௧௫௯ |
| கனைகடற்றண் | ௯௨ |
| கன்னனிநல்ல | ௨௦௩ |
| கா | |
| காணிற் | ௬௨ |
| காதலார்சொல் | ௫௬ |
| காலாடுபோ | ௭௮ |
| காவாதொரு | ௫௦ |
| காழாயகொ | ௨௦௮ |
| கு | |
| குஞ்சியழகுங் | ௮௯ |
| குடநீரட்டுலை | ௨௩௨ |
| குடருங்கொழு | ௪௦ |
| குலந்தவங் | ௨௦௩ |
| குற்றமுமே | ௧௪௨ |
| கூ | |
| கூர்த்துநாய் | ௫௪ |
| கே | |
| கேளாதேவந் | ௩௦ |
| கொ | |
| கொடியவை | ௨௩௬ |
| கொடுத்தலுந் | ௧௬௮ |
| கொய்புற் | ௨௧௨ |
| கொலைஞருலை | ௨௦௨ |
| கொல்லையிரு | ௧௧௪ |
| கொன்னே | ௪௫ |
| கோ | |
| கோடேந்த | ௨௧௫ |
| கோட்டுப்பூ | ௧௩௪ |
| கோதையருவி | ௫௫ |
| கோளாற்றக் | ௧௨௧ |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| ச | |
| சக்கரச்சொல் | ௨௧௦ |
| சா | |
| சாய்ப்பறிக்க | ௨௩௬ |
| சான்றாண்மை | ௯௫ |
| சான்றோரென | ௮௫ |
| சி | |
| சிதலைதினப் | ௧௨௪ |
| சிறுகாபெருகா | ௭௬ |
| சிறுகாலையே | ௧௯௯ |
| சீ | |
| சீரியார் | ௧௪௪ |
| செ | |
| செந்நெல்லா | ௨௨௩ |
| செம்மை | ௬௩ |
| செய்கையழி | ௯௭ |
| செய்யாத | ௧௪௬ |
| செல்சுடர் | ௨௩௯ |
| செல்லாவிட | ௯௮ |
| செல்வர்யா | ௧௭ |
| செல்வழி | ௧௦௧ |
| செழும்பெரும் | ௨௧௪ |
| செறிப்பில் | ௧௪௪ |
| செறுத்தோ | ௧௩௮ |
| சென்றே | ௨௬ |
| சொ | |
| சொற்றளர்ந்து | ௨௦ |
| சொற்றாற்றல் | ௧௯௧ |
| த | |
| தக்காரும் | ௭௭ |
| தக்கோலம் | ௩௮ |
| தங்கண்மர | ௨௦௪ |
| தண்டாச் | ௪௯ |
| தமரென்று | ௪௨ |
| தம்மமர்காத | ௨௩௮ |
| தம்மையிகழ்ந் | ௬௭ |
| தம்மையிகழ்வா | ௮௦ |
| தலையேதவ | ௨௨௨ |
| தவலரும் | ௯௨ |
| தளிர்மேலே | ௨௧௬ |
| தனதாகத் | ௧௭௦ |
| தா | |
| தாஞ்செம் | ௮௧ |
| தாமேயுமின் | ௧௯௯ |
| தாழாத்தளரா | ௨௦ |
| தான்கெடி | ௬௦ |
| தி | |
| திருத்தன்னை | ௧௮௬ |
| திருமதுகை | ௧௭௯ |
| தினைத்துணை | ௭௩ |
| தினையனைத் | ௨௦௯ |
| தீ | |
| தீங்கரும் | ௧௨௪ |
| து | |
| துகடீர் | ௧௪ |
| துக்கத்துட் | ௮௩ |
| துய்த்து | ௧௬௮ |
| துன்பமே | ௪௮ |
| துன்பம்பல | ௪௪ |
| தெ | |
| தெண்ணீர்க் | ௩௮ |
| தெரியத்தெரி | ௧௦௯ |
| தெளிவிலார் | ௧௩௬ |
| தொ | |
| தோணியியக்கு | ௯௧ |
| தோற்போர்வை | ௩௭ |
| தோற்றஞ்சான் | ௧௬ |
| ந | |
| நசசியார் | ௧௮௩ |
| நடுக்குற்று | ௬௮ |
| நடுவூருள் | ௬௯ |
| நட்டார்க்கு | ௧௬௭ |
| நட்புநார | ௧௯ |
| நம்மாலே | ௧௮௫ |
| நயவார்க | ௧௬௪ |
| நரம்பெழுந்து | ௧௦௧ |
| நரைவருமெ | ௧௯ |
| நல்லகுல | ௧௨௩ |
| நல்லர்பெரி | ௧௮௨ |
| நல்லவைசெய் | ௯௬ |
| நல்லவைநா | ௨௦௫ |
| நல்லாரெனத் | ௧௩௮ |
| நல்லார்நயவ | ௧௬௩ |
| நல்லாலின் | ௭௯ |
| நளிகடற்றண் | ௧௪௯ |
| நளிகடற்றண் | ௧௦௮ |
| நறுமலர்த் | ௧௩௦ |
| நன்னிலைக் | ௧௫௨ |
| நா | |
| நாப்பாடஞ் | ௧௯௦ |
| நாய்க்காற் | ௧௩௫ |
| நார்த்தொடு | ௨௭ |
| நாலாறுமா | ௨௩௩ |
| நாள்வாய் | ௧௨௯ |
| நாறூத்தகடே | ௧௬௩ |
| நி | |
| நிலநலத்தா | ௧௧௫ |
| நிலையாமை | ௪௩ |
| நிறையனநின் | ௧௫ |
| நீ | |
| நீரினுநுண் | ௧௭௩ |
| நீருட்பிறந்து | ௨௧௮ |
| நீர்மையே | ௧௭௬ |
| நு | |
| நுண்ணுணர் | ௧௪௫ |
| நுண்ணுணர் | ௧௫௫ |
| நெ | |
| நெடுங்கால | ௫௩ |
| நெருப்பழற் | ௮௪ |
| நே | |
| நேரல்லார் | ௫௬ |
| நேர்த்து | ௫௦ |
| ப | |
| பகைவர்பணி | ௧௪௯ |
| படுமழை | ௨௮ |
| பண்டமறி | ௪௧ |
| பரவாவெளிப் | ௬௬ |
| பராஅரைப் | ௧௫௧ |
| பருவமெனை | ௨௨ |
| பலநாளும் | ௧௩௩ |
| பல்லாரறிய | ௯௪ |
| பல்லாவு | ௯௨ |
| பல்லான்ற | ௧௫௫ |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| புல்லான்ற | ௭௪ |
| பழமைகந்தாக | ௧௮௯ |
| பழையரிவ | ௨௧௨ |
| பணிபடு | ௨௨ |
| பன்றிக்கூழ் | ௧௫௮ |
| பன்னாளுஞ் | ௧௦௪ |
| பா | |
| பாடமே | ௧௯௨ |
| பாம்பிற்கொரு | ௨௨௮ |
| பாலாற்கழீஇ | ௧௫௮ |
| பாலோடளாய | ௧௧௪ |
| பாவமுமே | ௧௮௧ |
| பி | |
| பிறந்தகுல | ௧௭௫ |
| பிறர்மறை | ௧௦௩ |
| பு | |
| புக்கவிடத் | ௬௨ |
| புணர்கடல் | ௧௬௨ |
| புதுப்புன | ௨௨௪ |
| புத்தகமே | ௧௯௩ |
| புல்லாப்புன் | ௧௫௭ |
| புல்லாவெழூ | ௧௦௨ |
| புறத்துத் | ௧௮௮ |
| புன்னுனிமேல் | ௨௯ |
| பெ | |
| பெயற்பான் | ௭௦ |
| பெரியவர் | ௮௫ |
| பெரியார்பெரு | ௫௮ |
| பெரியார்பெரு | ௧௧௦ |
| பெருகுவது | ௧௪௫ |
| பெருங்கட | ௨௦௨ |
| பெருநடை | ௨௦௯ |
| பெருமுத்த | ௧௨௫ |
| பெருவரைநாட | ௧௧௮ |
| பெறுவது | ௧௯௩ |
| பெறுவதொன் | ௨௦௪ |
| பொ | |
| பொறுத்தநூற் | ௨௨௯ |
| பொழிந்தினிது | ௧௯௫ |
| பொழிப்பகல | ௧௯௪ |
| பொறுப்பனென் | ௧௦௯ |
| பொற்கலத்து | ௧௨௮ |
| பொற்கலத்தூ | ௨௧௦ |
| பொன்னிறச் | ௧௬௫ |
| பொன்னே | ௧௦௬ |
| ம | |
| மக்களாலாய | ௩௪ |
| மடிதிரை | ௧௩௯ |
| மதித்திறப் | ௪௯ |
| மரீஇப்பல | ௧௩௬ |
| மலைநலமுள் | ௨௧௬ |
| மலைமிசை | ௨௫ |
| மல்குதிரைய | ௧௬௨ |
| மல்லன்மா | ௧௮௧ |
| மழைதிளைக்கு | ௨௨௦ |
| மறுமைக்கு | ௧௧௭ |
| மறுமையு | ௬௯ |
| மற்றறிவா | ௨௩ |
| மனத்தான் | ௧௧௫ |
| மனைப்பாசங் | ௮௭ |
| மன்றங்கறங்க | ௨௬ |
| மன்னர்திருவு | ௧௯௦ |
| மா | |
| மாக்கேழ்மட | ௩௭ |
| மாண்டகுண | ௪௬ |
| மாற்றாராய் | ௫௨ |
| மானவருங்கல | ௩௬ |
| மு | |
| முட்டிகை | ௧௨௯ |
| முட்டுற்ற | ௧௪௭ |
| முயங்காக்காற் | ௨௮௮ |
| முலைக்கண்ணு | ௨௪௨ |
| முல்லைமுகை | ௩௯ |
| முற்றற்சிறு | ௧௪௭ |
| முற்றுத்துங் | ௧௨௦ |
| முன்னரே | ௬௭ |
| மூ | |
| மூப்புமேல் | ௧௯௮ |
| மெ | |
| மெய்ஞ்ஞான | ௧௯௦ |
| மெய்வாய்கண் | ௪௭ |
| மெல்லியநல் | ௧௧௬ |
| மை | |
| மைதீர்பசும் | ௨௧௧ |
| யா | |
| யாஅருலகத் | ௮௧ |
| யாஅரொருவ | ௮௬ |
| யாக்கையை | ௨௮ |
| யாமாயினெம் | ௧௮௦ |
| யானையனைய | ௧௩௩ |
| யானையெரு | ௧௪ |
| வ | |
| வடுவிலா | ௭௮ |
| வயாவும் | ௧௨௬ |
| வலவைக | ௧௬௪ |
| வழங்காத | ௧௭ |
| வழுக்கெனை | ௨௨ |
| வளம்பட | ௭௩ |
| வற்றிமற் | ௫௯ |
| வா | |
| வாழ்நாட் | ௨௫ |
| வானிடுவில் | ௧௧ |
| வி | |
| விரிநிற | ௧௦௭ |
| விருப்பிலா | ௧௩௦ |
| விழைந்தொரு | ௨௦௬ |
| விளக்குப் | ௪௩ |
| விளக்கொளி | ௨௨௧ |
| வினைப்பயன் | ௩௨ |
| வெ | |
| வெறியயர் | ௨௧ |
| வெறுமையிட | ௨௦ |
| வென்றிப் | ௧௯௨ |
| வே | |
| வேம்பினிலை | ௧௫௦ |
| வேற்றுமை | ௫௭ |
| வைகலும் | ௩௫ |
| வைப்புழி | ௯ |


௧௫௯.

நாலடியார் செய்யுள் முதற்குறிப்பு அகராதி முற்றிற்று.